சிந்தனை

தொகுதி XII 2000 இதழ் I

2000 சிந்தனை 2000

கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதி XII- இதழ் I 2000

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

சிந்தனை

ஆசிரியர்.
சோமேசசுந்தரி- கிருஷ்ணகுமார்

கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்,
மார்ச் 2000.
வெளியீடு 2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CINTANAI

The Journal of the Faculty of Arts, University of Jaffna is published in March, July and September every year.

CINTANAI is a refereed Journal, Its referees come from University scholars and the National scholarly community.

Editior

Mrs. S. Krishnakumar,
B.A (Hons); M.A
Dept. of History.

Associate Editor

Mr.K.Sivananthamoorthy.

Managing Editor

Dr.S.Soosai

Editorial Board

Prof. S. Krishnarajah
Prof. R. Sivachandran
Mrs.N.Selvanayagam
Rev.Fr.G.Pilendran
Mr.K.Suthagar
Mrs. S. Jeganathan
Mrs. A. Sathiaseelan
Miss. P. Nadarajah.

Published by

The Faculty of Arts, University of Jaffna, Sri Lanka.

Printed at

S.S.R. Computer and Offset Printers 537, Sivankovil Road, Thirunelvely.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை ஆசிரியர்கள்

1. சி.க. சிற்றம்பலம் B.A, M.A, Ph.D	பேராசிரியர் தலைவர்- வரலாற்றுத்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
2. சோ. கிருஷ்ணராசா B.A Hons, Ph.D.(Moscow)	இணைப் பேராசிரியர் தலைவர், மெய்யியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழம்.
3. ம. இரகுநாதன் B.A(Hons); M.A; Ph.D.	சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
4. சாமிநாதன்- விமல் B.A(Hons)	விரிவுரையாளர், மொழியியல், ஆங்கிலத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
5. க. சிவானந்தமூர்த்தி B.A Hons; M.A	சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I மெய்யியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
6. மா. சின்னத்தம்பி M.A(Eco), M.Phil(Edu)	சிசேஷ்ட விரிவுரையாளர் தரம் II கல்வியியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
7. ச. சகாயசீலன் B.A (Hons); M.Phil.	விரிவுரையாளர், அரசறிவியல், சமூகவியல் துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
8. ஆ. சூசை B.A(Hons) M.A. Ph.D.	சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II புவியியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
9. கருணாகரன் - சுதாகர் B.A (Hons), M.A; Dip. in GIS & RS (Dehradun)	சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II புவியியல் துறை, யாழப்பாணப் பல்கலைக்கழகம்.
10. செல்வரஞ்சிதம்- சிவசுப்பிரமணியம் B.A (Hons);M.A;	விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழம்.
11. ஜெ. இராசநாயகம் B.A. (Hons), M.Phil;	விரிவுரையாளர், கல்வியியல் துறை, யாழ்ப்பாணப்ப பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப் பீடத்தின் ஆய்விதழாகும். இவ்விதழ் ஆண்டுக்கு மும்முறை மார்ச், ஜூலை, நவம்பர் மாதங்களில் வெளியிடப்படுகின்றது.

சிந்தனையில் வெளியாகும் கட்டுரைகள் அரசியல், பொருளியல், புவியியல், வரலாறு, தொல்லியல், சமூகவியல், மானிடவியல், மெய்யியல், மொழியியல், கல்வியியல், தமிழியல், மதபண்பாட்டியல் முதலிய துறைகள் சார்ந்தனவாகும்.

சிந்தனையில் வெளியாகும் கட்டுரைகளின் தகுதி பல்கலைக்கழக மட்டத்திலும் அதற்கு வெளியேயும் உள்ள தகுதி வாய்ந்த மூத்த ஆய்வாளர்களால் நிர்ணயிக்கப்படுகின்றது.

சிந்தனையில் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட விரும்புவோர் கட்டுரையின் இருபிரதிகளைத் தட்டச்சில் பதிப்பித்து ஆசிரியருக்கு அனுப்புதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

1. ஈழமும் சங்ககால முதுமக்கள் தாழிகளும்
ஓர் ஆய்வு
பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் 01

2. மார்க்ஸினது மெய்யியலின் ஊற்றும் 14
போயாபார்க் கருத்துரைகளும்
பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா

3. ஈழத்துப் புனைகதைகள் பற்றிய ஆய்வு முயற்சிகள் 24
கலாநிதி. ம. இரகுநாதன்

4. இலங்கைத் தமிழ் சிங்கள நாவல்களின் தோற்றம் 35
சாமிநாதன்– *விமல்*

5. அந்நியமாதல் பற்றிய பிரச்சினை ஓர் ஆய்வு 42
க.சிவானந்த மூர்த்தி

6. வளர்முக நாடுகளில் பெண்கல்வி 52
விருத்திக்கான மீள் சிந்தனை
மா. சின்னத்தம்பி

7. தமிழ்ப் பிரதேசத்தில் குடியேற்றத் திட்டங்களும் அவற்றின்
அரசியல் பரிமாணங்களும் 60
ச. சகாயசீலன்

8. யாழ். குடாநாட்டில் மீன்பிடித் தடைகளும்
மீனவர் எதிர் நோக்கும் பிரச்சினைகளும் 69
ஆ .சூசை

9. தொலை உணர்வுத் தொழில் நுட்பம் ஊடாக 78
மேற்பரப்பு நீர் நிலைகளைப் படமாக்கல்.
கருணாகரன் – சுதாகர்

10. ஈழத்தில் தமிழ் மொழிபெயர்ப்பும் கலைச் சொல்லாக்கமும் 87
செல்வி. செல்வரஞ்சிதம். சிவசுப்பிரமணியம்.

11. இந்து மரபுக் கல்வியின் ஆன்மீக சிந்தனைகள் 97
திருமதி. ஜெ. இராசநாயகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஈழமும்சங்ககால முதுமக்கள்தாழிகளும்" -ஓர் ஆய்வு-

பேராசிரியர். சி. க. சிற்றம்பலம்,

வரலாற்றுப் பின்னணி

இன்றைய தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திரா ஆகிய மாநிலங்கள் திராவிட மொழிகளான தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகியன பேசப்படும் பிரதேசங்கள் ஆகும். இவை மிக நீண்ட ஆனால் தனித்துவமான ஒரு வரலாற்றுப் பாரம்பரியத்தினையுடையன. இதனைப் பழங்கற்காலந்தொட்டுக் காணப்படும் தொல்லியற் சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன. பழைய கற்காலத்தில் வேட்டையாடுபவனாக அலைந்து திரிந்தமனிதன் ஒரிடத்தில் நிரந்தரமாக வசித்து உணவு உற்பத்தியில் ஈடுபட்ட காலப்பகுதி புதிய கற்காலமாகும். இம்மாநிலங்களில் இதன்ஆரம்பம் கி.மு.3500 எனக்கொள்ளப் படுகின்றது.[1] இக்கலாசாரத்தில் மையப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின்போது கிடைத்த எலும்புக் கூடுகளை ஆராய்ந்த அறிஞர் இன்று இங்கு வாழும் திராவிட மொழிகளைப் பேசுவோரின் மூதாதையினரே இவர்கள் என இனங்கண்டு கொண்டுள்ளனர்.[2]

சங்க இலக்கியங்கள் பேசும் பழந்தமிழரின் அடக்க முறைகளிலொன்றாகிய தாழி அடக்கமும் நீளக்கிடத்தி அடக்கஞ் செய்தலும், புதிய கற்காலத்திலிருந்தே திராவிடமொழிகளைப் பேசும் மாநிலங்களில் வழக்கிலிருந்ததைப் பிக்லிகால்[3], பிரமகிரி[4],நரசிப்பூர்[5], கல்லூர்[6] ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன. அத்துடன் இவ் வீமக்குழிகளில் ஞாபச் சின்னமாக நாட்டப்பட்ட கற்கள், இவற்றுடன் காணப்படும் கறுப்பு-சிவப்பு நிற மட்பாண்டங்கள் ஆகியன இக்காலத்தைத் தொடர்ந்து வந்த பெருங் கற்காலம் புதிய கற்காலத்தின் வளர்ச்சியே என்பதை எடுத்துக் காட்டியுள்ளன. பெருங்கற்காலமென்பது திராவிடர்களின் பிரதேசத்தில் ஏற்பட்ட ஒரு புதிய கலாசார வளர்ச்சியையே குறித்து நின்றது. அதாவது புதிய கற்காலத்தில் வசிப்பிடங்களில் இறந்தோரை அடக்கஞ் செய்த மக்கள் பெருங்கற்காலத்தில் வசிப்பிடங்களுக்கு அப்பால், பயிர்ச்செய்கைக்குப் பயன்படாத இடங்களில் பெரிய கற்களைப் பயன்படுத்தி ஈமச்சின்னங்களை அமைத்ததால் இது இவ்வாறு பெயர் பெறலாயிற்று. புதிய கற்காலத்தில் வழக்கிலிருந்த தாழி அடக்கம், நீளக்கிடத்தி அடக்கஞ் செய்தல் ஆகிய வழக்கங்களோடு பெரிய கற்களால் அமைக்கப்பட்ட இச் சின்னங்களான கல்வட்டங்கள், கற்பதுக்கைகள் போன்றனவற்றை அமைக்கும் முறைகளையும் வெளி உலகத்தொடர்பினால் இவர்கள் இக்காலத்தில் கற்றுக் கொண்டனர். இக்கருத்தினை உறுதி செய்வதாகப் புதிய கற்கால ஈமச் சின்னங்களில் ஞாபகச்சின்னங்களாக அமைக்கப்பட்ட கற்கள் விளங்குகின்றன.

வெறும் ஈழச் சின்னங்கள் மட்டுமன்றி, நீரைத் தேக்கி வைத்து விவசாயத்திற்குப் பயன்படுத்துதல், வயல்கள் ஆகியனவும் புதிய கற்காலத்திலிருந்து ஏற்பட்ட வளர்ச்சியையே எடுத்துக்காட்டுகின்றன. இதனால் பெருங்கற்காலத்தின் பிரதான அம்சங்களாகிய மக்கள் வாழ் வசிப்பிடங்கள், இடுகாடுகள், குளங்கள், வயல்கள் என்பன புதிய கற்கால மக்கள் ஏற்படுத்திய கலாசார வளர்ச்சியையே எடுத்தியம்புகின்றன. அத்துடன் பெருங்கற்காலத்தின் பிரதான முத்திரையாக விளங்கிய கறுப்புச்-சிவப்பு நிற மட்பாண்டங்களும் புதிய கற்காலத்திலேயே தோன்றிவிட்டன. அத்துடன் இக்காலத்தில் முக்கிய உலோகமாக விளங்கிய இரும்பின் உபயோகத்தினையும் புதிய கற்கால மக்கள் கற்றுக் கொண்டதைப் புதிய கற்காலக் கலாசார அம்சங்கள் பல பெருங்கற்காலத்திலும் நீடித்திருந்ததற்கான சான்றுகள் எடுத்தியம்புகின்றன.[7] இவ்வாறு இரும்பின் உபயோகம் பெருங்கற்காலக் கலாசார வளர்ச்சியைத் துரிதப்படுத்தியதோடு அம் மக்களை நாகரிக வளர்ச்சிக்கும் இட்டுச் சென்றது. இந்நாகரிக வளர்ச்சிதான் வரலாற்றின் ஆரம்பகாலம் எனப்படுகின்றது. இவ்வாறு புதிய கற்காலம், பெருங்கற்காலம், வரலாற்றுக் காலம் ஆகியன ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் கூட்டத்தினரின் கலாசார வளர்ச்சியே என்பதனை 1946 இல் பிரமகிரியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின்போது இனங்காணப்பட்ட புதிய கற்காலம், பெருங்கற்காலம், வரலாற்றுக்காலம் ஆகியனவற்றின் கலாசாரப்படைகளுக்கு இடையே இழைவிட்டோடும் ஒற்றுமையும் எடுத்துக் காட்டியுள்ளது.[8]

தமிழகத்தினைப் பொறுத்தமட்டில் ஏனைய திராவிடமொழிகள் பேசப்படும் மாநிலங்கள் போன்று இப்பகுதியில் விரிவான அகழ்வுகள் மேற்கொள்ளப் படாவிட்டாலுங்கூடக் கிடைக்கும் சான்றுகள் தாழி அடக்கத்தின் தொன்மையை எடுத்துக்காட்டி யுள்ளதோடு தென் தமிழகத்தில் குறிப்பாகத் திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுர மாவட்டங்களில் கிடைத்த சான்றுகள் பழந்தமிழரின் அடக்க முறைகளில் இது காலத்தால் முற்பட்ட முறை என இனங்காட்டியுள்ளன. இவ்வடக்க முறை பற்றி ஆராய்ந்த சௌந்தரராஜன் குறிப்பாகத் தென்பெண்ணை ஆற்றுக்குத் தெற்கே காணப்படும் தாழிகள் காலத்தால் மிகப் பழைமை வாய்ந்தவை என எடுத்துக் காட்டியுள்ளார்.[9]

தாழி அடக்கத்தின் பழைமையைக் கூறும் சங்க நூல்கள்

இத்தகைய பழைமையான அடக்க முறையான தாழி அடக்கம் பற்றிச் சங்க இலக்கியங்களில் காலத்தால் முந்திய புறநானூறு[10]

'

.................நெடுமாவளவன்
தேவருலக மெய்தின னாதலின்
அன்னோற் கலிக்குங் கண்ணகன்றாழி'

(பாடல் 228)

கலஞ் செய் கோவே கலஞ் செய் கோவே
அச்சுடைச் சாகாட்டாரம் பொருந்திய
சிறு வெண் பல்லி போலத் தன்னோடு
சுரம் பல வந்த வெமக்கு மருளி
லியன் மல ரகன் பொழி வீமத்தாழி
அகலி தாக வனைமோ
நனந்தலை மூதூர்க் கலஞ் செய் கோவே

(பாடல் 256)

நிலம்பக வீழ்ந்த வலங்கற் பல்வேர்
முதுமரப் பொத்திற் கதுமென வியம்பும்
கூகைக் கோழி யானாத்
தாழிய பெருங் காடெய்திய ஞான்றே

(பாடல் 364)

நற்றிணை[11]

மாயிருந் தாழி கவிப்பத்
தாவின்று கழிக எற் கொள்ளாக் கூற்றே

(பாடல் 271)

ஆகியன மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளமை, இதன் பழைமைக்குச் சிறந்த உரைகல்லாகின்றது.

தமிழகத்தின் தாழியடக்க மையங்கள்

தமிழகத்திலுள்ள தாழி அடக்கத்தின் தனித்துவத்திற்குச் சிறந்த உரைகல்லாக அமைவது தாம்ரவர்ணிப் படுக்கையில் காணப்படும் ஆதிச்சநல்லூராகும். கடந்த நூற்றாண்டின் இறுதியிலும் இந்நூற்றாண்டின் ஆரம்பத்திலும் இங்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் இத்தாழிக்காடு பற்றி விரிவான சான்றுகளைத் தராவிட்டாலுங் கூட இது பற்றி ஓரளவுக்கு அறிந்து கொள்ள உதவியுள்ளன.[12] இதன் பரப்பு 116 ஏக்கராகும். இந்தியாவிலுள்ள மிகப் பெரிய தாழிக்காடு இஃதாகும். சாதாரணமாகத் தாழிகள் ஒரு மீற்றர் உயரமானவை. மங்கல் சிவப்பு நிறமுடையவை. பருமனான கரடு முரடான மண் சேர்க்கையாலானவை. தாழிகளின் விளிம்புகள் உருண்டு திரண்டுள்ளன. தாழிகளின் மேல் விளிம்புப்பகுதியில் கைவிரல் அலங்கார வேலைப் பாடுகளும் காணப்படுகின்றன. இத்தாழிகளை மூடுவதற்குப் பெரிய சட்டிகள் மட்டுமன்றிச் சட்டிகளின் உடைந்த பாகங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. சில இடங்களில் சிறிய கற்களும் தாழிகளின் மூடிகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. தாழிகளில் நிவேதனப் பொருட்களாகப் பல்வேறு நிறத்தினாலான மட்பாண்டங்கள் காணப்படுகின்றன. கறுப்பு, சிவப்பு, ஆகிய நிறங்களில் இவை உருவாக்கப்பட்டுள்ளன. அத்துடன் இவை பல்வேறு ரகத்தினைச் சேர்ந்தவையாகவுமுள்ளன. கிண்ணங்கள், வட்டில்கள், பானைகள், குண்டான்கள், கூசாக்கள், தாங்கிகள் போன்றன இவற்றுட் குறிப்பிடத்தக்கன. நிவேதனப் பொருட்களின் வரிசையில் வெண்கலம், இரும்பு ஆகிய ஊலோகங்களிலமைந்த கருவிகள் மட்டுமன்றி வெண்கலத்தினாலான சிற்பங்களும் அடங்கும். இவ்வாறே கொற்கை காயல்பட்டினம் ஆகிய இடங்களில் கடந்த நூற்றாண்டின் இறுதியில் கால்வெல்ட் மேற் கொண்ட ஆய்வுகளின் மூலமாகத் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன.[13] அண்மைக் காலத்தில் தமிழ் நாட்டுத் தொல்பொருட்டுறையினர் இங்கு அகழ்வை மேற்கொண்டிருந்தனர். இப் பகுதியில் இவ்வடக்க முறையின் தோற்றம் கி.மு. 9ஆம் நூற்றாண்டாக (கி.மு.785/805) இனங் காணப்பட்டுள்ளது.[14] மதுரை மாவட்டத்திலுள்ள பெருமாள்மலை[15] பாண்டிச்சேரி[16] ஆகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசங்களிலும் வடக்கே அமிர்தமங்கலம் [17] போன்ற இடங்களிலும் இத்தகைய சான்றுகள் கிடைத்துள்ளன. சங்க இலக்கியங்கள் பேசும் மிகப்பழைய அடக்க முறையாகிய தாழி அடக்க முறையும் நீளக் கிடத்தி அடக்கஞ் செய்யும் வழக்கமும் பாண்டி நாட்டின் தென்பகுதியில் குறிப்பாக மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் விரவிக் காணப்பட்டுள்ளன. இவ்வாறே வடமேற்கு ஈழத்திலும் தாழி அடக்கமும், நீளக்கிடத்தி அடக்கஞ் செய்யும் மரபும் சிறந்து விளங்கியிருக்கலாம் என்பதைப் பொம்பரிப்பு போன்ற தாழிக்காடுகள் மட்டுமன்றி, கரம்பன்குளம், தெக்கம், ஆனைக்கோட்டை போன்ற இடங்களிற் கிடைத்த தாழி அடக்கத்திற்குரிய சான்றுகளும் மாந்தை [18], ஆனைக்கோட்டை [19], சத்திராந்தை [20] ஆகிய இடங்களில், நீளக்கிடத்தி அடக்கஞ் செய்யப்பட்டதற்கான சான்றுகளும் உறுதி செய்கின்றன.

ஈழமும் தாழியடக்கமும்

ஈழத்தைப் பொறுத்தமட்டில் கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகள் ஈழத்தின் நாகரிகத்தின் உதயம் பற்றிப் பல புதிய தரவுகளைத் தந்துள்ளன. 1969 இல் அநுராதபுரத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு ஈழத்தில் புதிய கற்கால மனிதன் உணவு உற்பத்தியிலீடுபட்டதற்கான தடயங்களுக்குப் பதிலாக இடைக்கற்கால மனிதனே இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்ததை உறுதி செய்துள்ளன.[21] இக்காலததை அடுத்துப் பெருங்கற்காலக் கலாசாரம் தென்னிந்தி -யாவிலிருந்து ஈழத்திற் புகுந்ததை இங்கு கிடைத்த பெருங்கற்காலக் கலாசாரத்தின் எச்சங்களுக்கும் தென்னிந்தியப் பெருங் கற்கால கலாசாரத்தின் எச்சங்களுக்குமிடையே இழை விட்டோடும் ஒற்றுமை உறுதி செய்துள்ளது.[22] இதனால் தென்னிந்தியப் பெருங்கற்காலக் கலாசாரம் மேவிப்பாய்ந்த இடமாகவும்,[23] அதன் தென் எல்லையாகவும் ஈழம் கொள்ளப்படுகின்றது.[24] 1946இல் தென்னிந்தியாவிலுள்ள பிரமகிரியில் சேர் மோற்றிமர் வீலரினால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வானது பெருங்கற்காலக் கலாசாரமே வரலாற்றுக்காலக் கலாசாரத்திற்கு வழிவகுத்தது என்பதை எவ்வாறு உறுதிப்படுத்தியதோ அவ்வாறே அநுராதபுர அகழ்வும் ஈழத்து நாகரிக வளர்ச்சிக்குப் பெருங்கற்காலக் கலாசாரமே வித்திட்டது என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

மேற்கூறிய பின்னணியிற்றான் ஈழத்திற் காணப்படும் பெருங்கற் காலத் தாழி அடக்கங்கள் பற்றி ஆராய்வது அவசியமாகின்றது. ஈழத்திலே தாழி அடக்கத்திற்கான ஆதாரங்கள் ஆனைக்கோட்டை, வெட்டுக்காடு,[25] தெக்கம், கரம்பன்குளம், பொம்பரிப்பு, கதிர்காமம் ஆகிய இடங்களிற் காணப்பட்டாலும் பொம்பரிப்பிற்றான் கிட்டத்தட்ட முக்கால் நூற்றாண்டுக் காலமாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின் மூலமாக முப்பதிற்கு மேற்பட்ட தாழிகள் இனங்காணப்பட்டுள்ளதால் பொம்பரிப்பை மையமாக வைத்துக் கொண்டே ஈழத்துத் தாழி அடக்கம் பற்றி ஆராய வேண்டியுள்ளது. (படம்-1)

பொம்பரிப்புப்பகுதி புத்தளம்-மன்னார் வீதியில் 21ஆவது மைற்கல்லில் உள்ளது. மன்னாருக்குத் தெற்கே 89 கிலோ மீற்றர் தூரத்திலும் புத்தளத்திலிருந்து வடக்கே 30 கிலோ மீற்றர் தூரத்திலும் அமைந்துள்ளது. கடற்கரையிலிருந்து $6^1/_2$ கிலோமீற்றர் தூரத்திலமைந்துள்ள இத் தாழிக்காடு கால ஓயா நதி தீரத்தில் அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. இவ்வடமேற்குப் பகுதியிற்றான் ஆதி ஈழத்தில் சிறந்து விளங்கிய துறைமுகங்களும் நகரங்களும் காணப்பட்டன. இவற்றுள் அருவி ஆறாகிய மல்வத்து ஓயாக் கரையில் அமைந்துள்ள மாந்தைத் துறைமுகம், மொதரகம் ஆற்றங்கரையில் காணப்பட்ட மகன என்ற நகரம், கலாஓயா முகத்துவாரத்திற் காணப்பட்ட உருவெல ஆகிய இடங்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும். அதுமட்டுமன்றி, தமிழகத்திலுள்ள புகழ்பூத்த தாழிக்காடாகிய ஆதிச்ச நல்லூருக்கு எதிரே இது அமைந்துள்ளதும் இவ்விடத்திற்குரிய இன்னோர் முக்கிய அம்சமாகும்.

1924இல் முதல் முதலாகக் கோகாட் இவ்விடத்தில் அகழ்வை மேற்கொண்டிருந்தார்.[26] இவ்வகழ்வின்போது ஒரு தாழி இவரால் வெளிக் கொணரப்பட்டது. இதன் பின்னர் ஈழத்துத் தொல்லியற்றிணைக்களம் 1956, 1957 ஆம் ஆண்டுகளில் மேற்கொண்ட அகழ்வின் மூலமாகப் பல தாழிகள் அகழந்தெடுக்கப்பட்டன.[27] 1965 இல் கொட்றிங்ரன் இப்பகுதியில் மேற்கொண்ட ஆய்வின் பயனாக ஒரு தாழி வெளிக் கொணரப்பட்டது.[28] எனினும் 1970 இல் பென்சில் வேனியாப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விமலா பேக்லேயின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தான் இவ்விடம் பற்றிய பல விரிவான தகவல்களைத் தந்தன. இவரின் ஆய்வுகள் இத்தாழிக் காட்டிற்கும் ஈழத்திலுள்ள பிற பெருங்கற்கால மையப் பிரதேசங்களிற் கிடைத்த சான்றுகளுக்குமிடையே இழைவிட்டோடும் ஒற்றுமையை எடுத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டியுள்ளன.[29] அதுமட்டுமன்றி இச்சின்னங்கள் பொம்பரிப்புக் கலாசாரமக்கள் மாந்தைக் கரையோரமாக வடக்கே கந்தரோடையுடனும், அநுராதபுரத்தினுடனும் தொடர்பு கொண்டிருந்ததற்கான சான்றுகளை எடுத்துக் காட்டியுள்ள பேக்லே ஈழத்தின் வரண்ட வலயப் புவியியற் பண்புகள் தமிழகப் புவியியற் பண்புகளுடன் ஒத்துக் காணப்பட்டதாலும், தமிழக மக்கள் தமது பிராந்தியத்திற் தமக்குப் பரீட்சயமான புவியியற் பண்புகளை ஒத்த இன்னோரிடத்திற்குப் பரவுவது இலகுவாயிற்று எனக் குறிப்பிட்டுள்ளார்.

தாழிகளும் நிவேதனப் பொருட்களும்

1970 இல் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகள் இத்தாழிக்காடு 3 - 4 ஏக்கர் பரபபில் அமைந்துள்ளதை எடுத்துக் காட்டினாலுங்கூட நமது மேலாய்வுகள் இதனை விடக்கூடிய பரப்பளவில் இது காணப்பட்டிருக்கலாம் என எடுத்துக்காட்டியுள்ளன. 1970 ஆம் ஆண்டின் ஆய்வின்போது 1.5 அல்லது 2 சதுர மீற்றர் இடைவெளியில் 8000 தாழிகள்வரை புதைக்கப்பட்டு இவற்றுள் 10-12 ஆயிரம் மக்கள் அடக்கஞ் செய்யப்பட்டிருக்கலாமெனவும் கணக்கிடப்பட்டுள்ளது. பெரும்பாலும் தாழிகள் 1- 1/4 மீற்றர் உயரமும் 40-90 செ.மீற்றர் விட்டமும் உடையன. இவை உருண்டு திரண்ட விளிம்புகளுடனும் இவற்றின் மேற் பகுதி அலங்கார வேலைப்பாடுகளைக் கொண்டும் காணப்படுகின்றன. இத்தாழிகள் கரடுமுரடான சேர்க்கையையுடையன. செம்மண், சாம்பல் நிறத்தினாலான இத்தாழிகளின் பாகங்கள் சரியான முறையிற் சுடப்படவில்லை என்பதை அவை எடுத்துக் காட்டியுள்ளன. தாழிகளின் உடைந்த பகுதிகளை ஆராய்ந்தபோது இவற்றின் மண் சேர்க்கையில் நெல் உமிகளும் இனங்காணப் பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது. முழுமையான முறையில் இத்தாழிகள் வெளியே கொணரப்படாவிட்டாலும் இவற்றின் பாகங்கள் இவற்றின் அடித் தளங்கள் கூர்மையான அல்லது தட்டையான அல்லது வளைந்த முனையை உடையன என்பதை எடுத்துக் காட்டியுள்ளன.

1970 இல் இவ்விடத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வானது இவ்வடக்க முறைபற்றி மேலும் பல தகவல்களைத் தந்துள்ளது. பொதுவாக நிலத்திலிருந்து 1/2 மீற்றர் ஆழத்திற் புதைக்கப்பட்ட இத்தாழிகளில் இறந்தோரின் முழு எலும்புகளும் காணப்படவில்லை. முக்கிய எலும்புகளான தலை, கை, கால் எலும்புகளே இவற்றுள் உள. மண்டையோடுகள் பெரும்பாலும் வட்டில்களில் வைக்கப்பட்டுள்ளன. மனித எலும்புக்கூடுகளின் பகுதிகளோடு நிவேதனப் பொருட்களாக இவர்கள் பயன்படுத்திய பொருட்களும் இத்தாழிகளில் இடப்பட்டிருந்தன. மட்பாண்டங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில் சில தாழிகளில் ஆகக் கூடியதாக 13 மட்பாண்டங்களும் ஆகக் குறைந்ததாக இரு மட்பாண்டங்களும் காணப்படுகின்றன. தாழிகளுக்குள்ளேயே மட்பாண்டங்களில் நிவேதனப் பொருட்களை இடும் வழக்கம் பொதுவாகக் காணப்பட்டாலுங்கூடத் தாழிகளுக்கு வெளியே மட்பாண்டங்களில் நிவேதனப் பொருட்களை அளித்ததற்கான தடயங்களும் உள. தாழிகளில் நிவேதனப் பொருட்களாக வெண்கல மைக்குச்சிகள், வெண்கலக்காப்புகள், வெண்கல மணிகள், கல்லினாலான பல்வேறு மணிகள், பறவை, மிருகங்கள் ஆகியனவற்றின் எலும்புகள் ஆகியனவும் காணப்படுகின்றன. இந்நிவேதனப் பொருட்கள் தாழிகளின் உள்ளே காணப்படும் போது அவை அடிப்பாகத்திற்றான் இடப்படுவது வழக்காகும்.

பொதுவாக ஒரு குழியில் ஒரு தாழியை மட்டும் அடக்கஞ் செய்யும் மரபு காணப்பட்டாலுங்-கூடப் பல்வேறு தாழிகளை ஒரே குழியில் அடக்கஞ் செய்ததற்கான சான்றுகளும் உள. அத்துடன் ஒரே தாழியில் ஒருவரின் எலும்பு மட்டுமன்றி ஒன்றுக்கு மேற்பட்டோரின் எலும்புகளும் காணப்படுகின்றன. இவ்வெலும்புகளில் முதியோர், இளையோர் ஆகியோரின் எலும்புகள் காணப்படுவதானது ஒரே குடும்பத்தினர் பல்வேறு காலங்களில் இறந்தாலுங்கூட அவ்வெலும்புகளை ஒன்றாகச் சேர்த்து அடக்கஞ் செய்யப்பட்டதை இவை எடுத்துக் காட்டலாம். அல்லது சமகாலத்தில் முதியோர் இளையோர் இறந்ததன் விளைவாகவும் இவ்வெலும்புகள் இத்தாழிகளில் இடப்பட்டிருக்கலாம். பெரும்பாலும் ஒருவர் இறந்தவுடன் கிராமத்தின் ஒதுக்குப் புறமான இடத்தில் அவரின் உடலை வைத்துப் பின்னர் ஒரு குறிப்பிட்ட தினத்தில் அவற்றைச் சேகரித்து இத்தாழிகளில் இட்டனர் எனத் தெரிகின்றது.

இத்தாழிகள் தோற்ற அமைப்பில் ஆதிச்சநல்லூர் [30], கொற்கை[31], பெருமாள்மலை [32], போர்க்களம் [33], அமிர்தமங்கலம்[34], ஆகிய இடங்களிலுள்ள தாழிகளோடு ஒத்துக் காணப்படுவது அவதானிக்கத்தக்கது. உதாரணமாக ஆதிச்ச நல்லூரில் பல்வேறு தோற்றங்களைக் கொண்ட தாழிகள் இனங் காணப்பட்டுள்ளன. இவை யாவும் திரண்ட வாய்ப்பகுதியையுடையனவாகக் காணப்படுவது மட்டுமன்றி இவற்றின் மேற்பகுதியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொம்பரிப்பிற் காணப்படுவது போன்று கைவிரல் அலங்கார வேலைப்பாடுகளும் உள. (படம்-2). தோற்ற அமைப்பில் ஆதிச்ச நல்லூரிற் காணப்படும் தாழிகள் பல்வேறு பரிமாணங்களில் உள. இவை 0.66மீ-0.91மீற்றர் உயரமும் 1.6 மீற்றர் -2.24 மீற்றர் சுற்றளவுமுடையவை. தாழிகள் தட்டையான அல்லது வளைந்த அடிப்பாகத்தையுடைய பெரிய சட்டிகளால் மூடப்பட்டுள்ளன. கொற்கை போன்ற இடங்களில் இத்தகைய மூடிகளுக்குப்பதிலாகத் தேங்காய் அளவு பரிமாணமுள்ள கற்காளாலும் தாழிகளின் வாய்ப் பகுதி மூடிக் காணப்பட்டன. சில சமயம் தாழி அடக்கங்களுக்கு மேலே கற்குவியல்களும் காணப்படுவதுண்டு. மேற் கூறிய அம்சங்கள் யாவும் பொம்பரிப்புத்தாழி அடக்கத்திற் காணப்படுவதும் ஈண்டு நினைவு கூரற்பாலது.

மட்பாண்டங்கள்

அடுத்து முக்கியம் பெறுவது இத்தாழிகளினுள் காணப்படும் மட்பாண்டங்களாகும். இவற்றுள் சிறப்பானவை கறுப்பு-சிவப்பு நிறத்திலமைந்த கிண்ணங்களும், வட்டில்களுமாகும். (படம்-3). இவற்றோடு பல் வேறு தோற்றத்தினையுடைய சிவப்பு, கறுப்பு நிறங்களிலமைந்த மட்பாண்டங்களும் ஈழத் தாழிகளிலே கிடைத்துள்ளன. இத்தகைய மட்பாண்டங்களின் செய்கை முறையை அவதானிக்கும் போது குறிப்பாக இவற்றுக்குப் பயன்படுத்திய மண்சேர்க்கை கரடு முரடான மண் சேர்க்கையுடன் காணப்படுவதும், இவற்றை ஆக்குவதில் ஒரு வளர்ச்சியடையாத நிலையையே இவை எடுத்துக் காட்டுவதால், இத்தகைய மட்பாண்டங்களை ஆக்குவோரின் ஆரம்ப முயற்சியாகவே இவை அமைந்துள்ளமை தெளிவாகின்றது. இத்தகைய போக்கே தமிழகத்தில் கிடைத்துள்ள மிகப்பழைய பெருங்கற்காலக் கலாசார மையப் பிரதேசங்களிற் கிடைத்துள்ள மட்பாண்டங்களில் காணப்படுவதும் ஈண்டு அவதானிக்கத் தக்கது. இதனால் ஈழத்து மட்பாண்டங்களும் தமிழகத்தை ஒத்த காலத்தில் ஈழத்துக்கு வந்து குடியேறிய மக்களின் செயற்பாடுகளையே உணர்த்துகின்றன என யூகிக்கலாம். அத்துடன் பொம்பரிப்பிற் கிடைத்த மட்பாண்டங்கள் தோற்ற அடிப்படையில் ஒரு புறத்தில் ஈழத்திற் காணப்பட்டுள்ள பிற பெருங் கற்கால மையப் பிரதேசங்களான திவுல்வேவ, ஆனைக்கோட்டை, காரைநகர், பின்வேவ, குருகல்கின்ன, அஸ்மடால, முக்கறுக்கொட, மக்கேவிற்ற, கொல்லன்கனத்த, திஸ்ஸமகாராம, கந்தரோடை, அநுராதபுரம் ஆகிய இடங்களிற் காணப்பட்டுள்ள மட்பாண்டங்களோடும் மறு புறத்தில் தமிழகப் பெருங்கற்கால மையப் பிரதேசங்களிற் கிடைத்த மட்பாண்டங்களோடும் ஒத்துக் காணப்படுவது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

பொம்பரிப்பிற் கிடைத்த மட் பாண்டங்களைத் தோற்ற அடிப்படையில் கிண்ணங்கள், வட்டில்கள், பானைகள் என மூன்று பிரிவாக வகுக்கலாம். முதலிற் கிண்ணங்களை நோக்குவோம். தோற்ற அடிப்படையில் இவற்றை இரு கூறுகளாகப் பிரிக்கலாம். முதலாவது ரகத்தினைச் சேர்ந்தவை விட்டத்தில் 10.செ.மீற்றருக்குக் குறைந்தவையாகும். அத்துடன் இக் கிண்ணங்கள் சிலவற்றின் பக்க விளிம்புகள் நேராகவும், உள்குவிந்தும், வெளிக்குவிந்தும் காணப்படுவதோடு அடிப்பாகங்கள் தட்டையாகவும் வளைந்த நிலையிலும் காணப்படுகின்றன. முதலாவது ரகத்தினைச் சேர்ந்த கிண்ணங்கள் தமிழகத்தில் ஆதிச்சநல்லூர்[35], அரிக்கமேடு[36], சானூர்[37], அமிர்தமங்கலம்[38], பழைய சேர நாடாகிய இன்றைய கேரள மாநிலத்திலுள்ள போர்க்களம்[39], மச்நாட்[40] ஆகிய இடங்களிற் கிடைத்த கிண்ணங்களை ஒத்துக் காணப்படுகின்றன. இரண்டாவது ரகத்தினைச் சேர்ந்தவை அளவிற் சிறியனவாகக் காணப்படுவதால் ஆதிச்ச நல்லூரில் இவற்றை அகழ்ந்தெடுத்த ஆராய்ச்சியாளரான அலெக் சாண்டர் றீ இவற்றை மைக் கிண்ணங்கள் என அழைத்துள்ளார்.[41] இதே போன்ற கிண்ணங்கள் அமிர்த மங்கலத்தில் காணப்படுவதும் ஈண்டு நினைவு கூரற்பாலது.[42]

கிண்ணங்களைப் போலவே வட்டில்களும் நேரான, உள்குவிந்த, வெளிக்குவிந்த பக்கங்களுடன் காணப்படுகின்றன. இவற்றின் அடிப்பாகங்களும் சற்று வளைந்த, சற்று அதிகம் வளைந்த, தட்டையான தோற்றத்துடன் காணப்படுகின்றன. பொதுவாக வட்டில்கள் சற்று வளைந்த அடிப்பாகத்தையுடையனவாகவே காணப்படுகின்றன. இத்தகைய மட்பாண்டங்கள் ஆதிச்சநல்லூர்[43], அரிக்கமேடு[44], சானூர்[45], திருக்காம்புலியூர்[46] ஆகிய இடங்களிற் காணப்படுகின்றன. சற்று அதிகம் வளைந்த வட்டில்கள் அரிக்கமேடு[47], சானூர்[48] போன்ற இடங்களிற் கிடைத்துள்ளன. தட்டையான அடித்தளத்தினையுடைய வட்டில்கள் அரிக்கமேடு[49], ஆதிச்சநல்லூர்[50] ஆகிய இடங்களிற் கிடைத்துள்ளன.

மட்பாண்டங்களும் பல்வேறு தோற்றத்துடன் காணப்படுகின்றன. இவற்றை எல்லாமாகப் பத்து வகையாகப் பிரிக்கலாம். முதலாவது வகையைச் சேர்ந்த மட்பாண்டங்கள் குட்டையாகக் குறுகிய கழுத்தையும், வெளிக்குவிந்த விளிம்பையும், சற்று வளைந்த அடிப்பாகத்தையும் உடையன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்திலுள்ள அரிக்கமேடு[51], திருக்காம்புலியூர்[52] ஆகிய இடங்களிற் கிடைத்த மட்பாண்டங்கள் இத்தகைய ரகத்தினைச் சேர்ந்தவையே. வளைந்த குறுகிய கழுத்தையும் விசாலமான பக்கத்தினையும் உடையவை இரண்டாவது ரகத்தினைச் சேர்ந்தவையாகும். இதே போன்ற மட்பாண்டங்கள் தமிழகத்திலுள்ள செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள பெருங்கற்காலக்கலாசார மையப் பிரதேசங்களில் காணப்படுகின்றன.[53] மூன்றாவது ரகத்தினைச் சேர்ந்த மட்பாண்டங்கள் குறுகிய விளிம்பையும் விசாலமான அடிப்பாகத்தையுமுடையன. இத்தகைய மட்பாண்டங்கள் ஆதிச்ச நல்லூரில் உள.[54] விசாலமான அடிப்பாகத்தையும் ஒடுக்கமான கழுத்தையும் வெளிக்குவிந்த விளிம்பையு-முடையன நான்காவது ரகத்தினைச் சேர்ந்தவையாகும். இவற்றை ஒத்த மட்பாண்டங்கள் ஆதிச்சநல்லூர்[55], அரிக்கமேடு[56] ஆகிய இடங்களிற் கிடைத்துள்ளன. ஐந்தாவது ரகத்தினைச் சேர்ந்த நீண்ட கழுத்தையும் விசாலமான அடிப்பாகத்தினையுமுடைய மட் பாண்டங்கள் அமிர்தமங்கலம்,[57] திருக்காம்புலியூர்[58] ஆகிய இடங்களிற் கிடைத்துள்ள மட்பாண் டங்களை ஒத்துக் காணப்படுகின்றன. வளைந்து விரிந்த கழுத்தையும் பானையின் மேற் பகுதியில் அலங்கார வேலைப்பாடுகளையுமுடைய மட் பாண்டங்கள் ஆறாவது ரகத்தினைச் சேர்ந்தவையாகும். இத்தகைய மட்பாண்டங்கள் ஆதிச்சநல்லூரிலும் வேறு சில இடங்களிலும் கிடைத்துள்ளன.[59] ஏழாவது ரகத்தினைச் சேர்ந்தவை உலைமூடிகள் ஆகும். இத்தகைய உலைமூடிகள் அரிக்கமேடு[60], திருக்காம்புலியூர்[61], அமிர்தமங்கலம்[62] ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. மூடிகள் எட்டாவது ரகத்தினைச் சேர்ந்தவையாகும். இத்தகைய மூடிகள் ஆதிச்ச நல்லூரிலும் கிடைத்துள்ளன.[63] மட்பாண்டங்களை வைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட நீண்ட தாங்கிகள் ஒன்பதாவது ரகத்தினைச் சார்ந்தவையாகும். இவற்றை ஒத்த தாங்கிகள் ஆதிச்ச நல்லூர்[64], அழைகரை[65] ஆகிய இடங்களிலும் கிடைத்துள்ளன. இறுதியானவை அரைவட்டம் போன்ற பக்கங்களையும் ஆங்கில எக்ஸ் வடிவமுள்ள மட்பாண்டங்களை வைப்பதற்கப் பயன்படுத்தப்பட்ட தாங்கிகளாகும். ஆதிச்சநல்லூர்[66], போர்க்களம்[67], சானூர்[68] ஆகிய இடங்களில் இத்தகைய தாங்கிகள் கிடைத்துள்ளன.(படம்-4)

இம்மட்பாண்டங்களிற் காணப்படும் குறியீடுகள் தமிழக மட்பாண்டங்களிற் காணப்படும் குறியீடுகளை ஒத்துக் காணப்படுகின்றன. இக்குறியீடுகளில் நேரான கோடுகள், தர அடையாளங்கள், ஆங்கில எழுத்தாகிய M வடிவத்தையும், Z வடிவத்தையும் ஒத்த அடையாளங்கள், பிராமி 'ம' வடிவ அடையாளங்கள், பெட்டியிலமைந்த மரத்தையுடைய அடையாளம், இருதலைச்சூலம், நான்கு வளைந்த கோடுகள் மூலம் பெண் தெய்வத்தினை உருவகப்படுத்தும் குறியீடுகள், குதிரையின் கடிவாளத்தைச் சித்திரிக்கும் குறியீடு ஆகியன குறிப்பிடத்தக்கன. குதிரையின் கடிவாளம் தமிழகத்திலுள்ள ஆதிச்சநல்லூர் போன்ற இடங்களிற் கிடைத்தது போன்று ஈழத்திற் கிடைக்காவிட்டாலுங்கூட ஈழத்தின் பெருங்கற்கால மையப் பிரதேசங்களிற் குதிரையின் எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டதானது குதிரையின் உபயோத்தினை ஈழத்துப் பெருங்கற்கால மக்களும் அறிந்திருந்ததை எடுத்துக்காட்டுகின்றது. ஈழத்துப் பாளி நூல்கள் கி.மு.2ஆம் நூற்றாண்டில் தமிழகத்திலிருந்து ஈழத்தின் மீது படையெடுப்பை மேற் கொண்டோராகச் சேனன், குத்திகன் என்ற இரு குதிரை வணிகரின் புத்திரர்பற்றிக் குறிப்பிடுவதும் ஈண்டு நினைவு கூரற்பாலது.[69]

மக்களின் வாழ்வும் வளமும்

ஈழத்துப் பெருங்கற்கால மக்களின் எலும்புக்கூடுகள் பொம்பரிப்பு[70], மாந்தை[71], ஆனைக்கோட்டை[72], சத்திராந்தை[73] ஆகிய பகுதிகளில் கிடைத்துள்ளன. இவ்வாறே தமிழகம் உட்பட்ட தென்னிந்தியாவிலும் இக் கலாசாரத்திற்குரிய மக்களின் எலும்புக் கூடுகள் கிடைத்துள்ளன. இவற்றை ஆராய்ந்த கென்னடி தற்காலத்தில் தென்னிந்தியாவில் வாழும் மக்கள் பெருங்கற்கால மக்களின் வழித் தோன்றல்களே என்பதை உறுதி செய்துள்ளார்[74] ஈழத்திலுள்ள பொம்பரிப்புத் தாழிக் காட்டிற் கிடைத்த எலும்புகளை ஆராய்ந்த இவர் இவற்றுக்கும், தமிழகத்துப் பெருங்கற்கால மக்களின் மையப் பிரதேசங்களிற் கிடைத்துள்ள எலும்புகளுக்குமிடையே இழைவிட்டோடும் ஒற்றுமையை இனங்கண்டுள்ளார்.[75] இவ்வாறே மாந்தையிற் கிடைத்த எலும்புக்கூடும் தென்னிந்திய வர்க்கத்தினைச் சார்ந்தது என இனங்காணப்பட்டுள்ளது.[76] ஆனைக் கோட்டை எலும்புக்கூடு மானிடவியலாளரால் ஆராயப்-படாவிட்டாலுங்கூட இவ்வெலும்புக் கூட்டுடன் கிடைத்துள்ள முத்திரையின் வாசகம் பழந்தமிழ் வடிவமாகிய கோவேத/கோவேதன் /கோவேந்த/ கோவேதம் என இனங்காணப் பட்டமையானது[77] இவ்வெலும்புக்கூடும் பழந்தமிழருடையதே என்பது மேலும் உறுதியாகின்றது.[78] பாளிநூல்களில் கிறிஸ்தாப்த காலத்திற்கு முன்னருள்ள காலப் பகுதியில் தமிழகத்திலிருந்து ஈழத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட படை எடுப்புக்கள் பற்றிக் காணப்படும் குறிப்புகள், ஈழத்திற்கு மிகக் கிட்டிய தூரத்தில் தமிழகம் காணப்படுவது ஆகியன தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் ஈழத்தில் பரவுவதற்கான வாய்ப்பை அளித்தன. இதனை மனதிற் கொண்டுபோலும் பரணவித்தான ஈழத்துப் பெருங்கற்காலக் கலாசாரத்திற்குரிய மக்கள் பழந்தமிழர்(திராவிடர்) எனக் கூறியுள்ளார்.[79]

தமிழகத்தைப் போல ஈழத்திலும் குளங்களில் நீரினைத் தேக்கி நெல் உற்பத்தியில் பெருங்கற்கால மக்கள் ஈடுபட்டிருந்ததற்கான தடயங்கள் கிடைத்துள்ளன. அநுராதபுரத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் போது பெருங்கற்காலக் கலாசாரப் படையில் செயற்கையாக உருவாக்கப்பட்ட குளத்திற்கான தடயங்கள் கிடைத்தது மட்டுமன்றி[80] பிற பெருங்கற்காலக் கலாசார மையங்களும் குளங்களை அண்மித்தே காணப்படுவதும் இத்தகைய கருத்தினை உறுதி செய்கின்றது. பொம்பரிப்புப் பகுதியிலும் காணப்படும் குளங்களின் காலம் பற்றித் திட்டவட்டமாகக் கூற முடியாவிட்டாலும் இவை கிறிஸ்தாப்த காலத்திற்கு முந்தியவை என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.[81] நெல் உற்பத்தியில் இக்கால மக்கள் ஈடுபட்டிருந்ததை பொம்பரிப்புத் தாழிகளில் இனங்காணப்பட்ட நெல்லுமியின் எச்சங்களும் அநுராதபுரம், கந்தரோடை ஆகிய இடங்களில் கிடைத்துள்ள இதற்கான ஆதாரங்களும் எடுத்துக் காட்டியுள்ளன.[82]

பல்வேறு பறவைகளையும் மிருகங்களையும் இக்கால மக்கள் பயன்படுத்தியதை எடுத்துக் காட்டுவனவாகப் பொம்பரிப்பு, அநுராதபுரம், கந்தரோடை போன்ற இடங்களிற் கிடைத்துள்ள இவற்றின் எலும்புகள் எடுத்துக் காட்டியுள்ளன.[83] மிருகங்களில், குறிப்பாக மாட்டின் எலும்புகள் அநுராதபுரம், ஆனைக்கோட்டை, கந்தரோடை ஆகிய இடங்களிற் கிடைத்துள்ளன. அநுராதபுரத்தில் குதிரை, எருமை ஆகியனவற்றின் எலும்புகள் கிடைத்துள்ளன. இவற்றில் குறிப்பாக மாட்டெலும்புகள் கூரிய கருவிகளால்வெட்டப்பட்டுக் காணப்படுவதைக் கருத்திற் கொண்டு இவற்றை மக்கள் உணவுக்காகவும் பயன்படுத்தினார்கள் எனக் கருதப்பட்டாலுங்கூட மக்களின் விவசாய நடவடிக்கைகளில் இம் மிருகங்கள் முக்கிய பங்கினை வகித்ததும் குறிப்பிடத்தக்கது. இம் மக்களின் விவசாய முயற்சியை எடுத்துக் காட்டுவதாகப் பொம்பரிப்பிற் கிடைத்த கொழுவின் பகுதி விளக்குகின்றது. இத்தகைய கொழுக்கள் பின்வேவ, திவுல்வேவ போன்ற ஏனைய பெருங் கற்காலக் கலாசார மையங்களிலும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.[84] விவசாயத்துடன் வேட்டை ஆடுதல், கடல் படு திரவியங்களை உணவாகப் பயன்படுத்தல் ஆகியனவும் காணப்பட்டன. பொம்பரிப்பு அமைந்துள்ள பிரதேசம் முத்துக்கள் விளையும் கடற் பிரதேசமாகக் காணப்படுவதால் முத்துக்குளித்தலும் இக்கால மக்களின் தொழில்களில் ஒன்றாக விளங்கியது எனலாம்.

இக்கால மக்கள் நூல் நூற்று ஆடைகளைத் தயாரித்ததை உறுதிப் படுத்துவதாகப் பொம்பரிப்பிற் கிடைத்துள்ள வெண்கல மைக்குச்சியிலுள்ள ஆடையின் படிவங்கள் அமைந்துள்ளன.[85] ஆதிச்ச நல்லூரிற் கிடைத்த கருவிகளிலும் ஆடையின் படிவங்கள் காணப்படுகின்றன. பொம்பரிப்பு அமைந்துள்ள பகுதியில் விஜயன் குவேனியைச் சந்தித்தபோது அவள் நூல்நூற்றுக் கொண்டிருந்தாள் என மகா வம்சம் கூறும் ஐதீகமும் இப் பகுதியில் இத் தொழில் அக்காலத்தில் சிறந்து விளங்கியதை மேலும் உறுதி செய்கின்றது.[86] மக்கள் தம்மை அலங்கரிக்கப் பல்வேறு வகையான மணிகளினால் ஆக்கப்பட்ட மாலைகளைப் பயன்படுத்தினர் என்பதைப் பொம்பரிப்பு உட்பட ஈழத்திலும், தமிழகத்திலும் கிடைத்துள்ள பல்வேறு வகையான மணிகளின் எச்சங்கள் உறுதி செய்துள்ளன.[87]

பொம்பரிப்புத் தாழிக் காடு இரும்புக் காலப் பகுதிக்குரியதொன்றாயினும் ஆதிச்ச நல்லூரைப் போன்று இங்கும் வெண்கலக் கருவிகள் மிகுந்து காணப்படுகின்றன. இவற்றுள் வெண்கலத்தினாலான மைக்குச்சிகள், பல்வேறு வளைவுகளோடு அமைந்த காப்புகள், பல்வேறு வளைவுகளுடன் இறுதியில் திரட்சியான முனையையுடைய காப்புகள், ஊசிகள். வெண்கல மணிகளினாலமைந்த கழுத்து மாலைகள், மோதிரங்கள் ஆகியன குறிப்பிடத்தக்கன.[88] வெண்கல மைக்குச்சிகள் தமிழகத்திலுள்ள ஆதிச்ச நல்லூர்,[89] திருக்காம்புலியூர்[90] ஆகிய இடங்களிலும் கிடைத்துள்ளன. ஊசிகள், வெண்கலத்தினாலான மணிகள், பல்வேறு வளைவுகளுடன் முனைகளிற் திரட்சியுள்ள காப்புகள் ஆகியனவும் ஆதிச்ச நல்லூரிற் கிடைத்துள்ளன.[91] ஈழத்தின் பிற பெருங்கற்கால மையப் பிரதேசங்களில் இரும்பினாலான கருவிகள் காணப்பட்டாலுங்கூட, பொம்பரிப்பில் இவற்றின் எண்ணிக்கை மிகக் குறைந்தே காணப்படுகின்றது. ஒரு சமயம் இதுவரை அகழ்வு மேற்கொள்ளப்பட்ட பகுதியில் வெண்கலத்தினாலான கருவிகள் மிகுந்து காணப்பட்டமையும் இதற்கு ஒரு காரணமாக அமைந்திருக்கலாம். இங்கு கிடைத்த இரும்பினாலான கருவிகளில் ஆணிகள், கொழுக்கள், முருகனது வேல் ஆகியன குறிப்பிடத்தக்கன.(படம்-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈமத்தாழிகளின் காலம்

நாம் ஏற்கனவே குறிப்பிட்ட வண்ணம் சங்க இலக்கியங்களில் மிகப்பழைய அடக்க முறையாகத் தாழி அடக்கம் காணப்படுவதும், தமிழகத்தில் மிகப் பெரிய தாழிக்காடான ஆதிச்சநல்லூரிற் கிடைத்த சான்றுகளை ஈழத்திற் கிடைத்த சான்றுகள் ஒத்துக் காணப்படுவதும் இவற்றின் பழைமையை உறுதி செய்கின்றன. ஆதிச்சநல்லூரின் காலம் கி.மு.1200 என இனங்காணப்பட்டாலுங்கூட, கொற்கையில் கிடைத்துள்ள சான்றுகளை C_{14} காலக் கணிப்புக்கு உள்ளாக்கியதன் மூலம் இதன் காலம் கி.மு.9ஆம் நூற்றாண்டு(கி.மு.785/905) என்பது நிரூபணமாகியுள்ளது.[92] மேற்கூறிய இடங்கள் தமிழகத்தின் தாம்ரவர்ணி நதிப்படுக்கையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தாம்ரவர்ணி என்ற வடமொழி வடிவம் பாளியில் தம்ப பண்ணி என்ற வடிவமாக வழங்கப்பட்டது எனக் கூறும் அறிஞர் தண்பொருணை என்ற தமிழ் வடிவத்தின் திரிபுகளே இவை எனவும் எடுத்துக் காட்டியுள்ளனர்.[93] இதனால் தமிழகத்திலிருந்து தாம்ரபர்ணி ஆற்றோரத்திலிருந்து ஆதியில் ஈழத்திற் பரந்த பெருங்கற்கால மக்கள் ஈழத்திற்கும் அப்பெயரை இட்டதாற்போலும் ஈழத்திற்கு நாகரிகத்தினைப் புகுத்திய விஜயன் கூட்டத்தினர் இப் பெயரை இந்நாட்டுக்கு இட்டனர் என்கின்றன பாளிநூல்கள். அண்மைக் காலத்தில் அநுராதபுரம், கந்தரோடை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பலனாகக் கிடைத்த சான்றுகள் இப் பகுதியில் பெருங்கற்காலக் கலாசாரம் கி.மு. 1000 ஆண்டளவில் உருவாகிவிட்டதென எடுத்துக் காட்டுவதால்[94] ஈழத்துத் தாழி அடக்கமுறையும் ஏறக்குறையச் சமகாலத்தில் இங்கு மேற்கொள்ளப் பட்டது எனலாம்.

தமிழகத்தில் பாண்டி நாட்டுக்கும் ஈழத்திற்குமிடையே காணப்பட்ட தொடர்பு பாளிநூல்களில் ஐதீகங்களாக விஜயன்-பாண்டிய இளவரசி திருமணமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.. இவ்வாறே கி.மு.6 ஆம் நூற்றாண்டில் ஈழத்திற்கு வந்ததாகக் கூறப்படும் விஜயனின் பின் அரசாட்சி செய்த மன்னர்கள் பலர் பாண்டியரை நினைவுகூரும் 'பண்டு' என்ற பெயரைத் தாங்கி நின்றமையும் மேற்கூறிய தொடர்பை உறுதி செய்கின்றது.[95] பண்டுவாசுதேவ, பண்டுகாபய போன்ற பெயர்கள் இதற்கான உதாரணங்களாகும். இவ்வாறே பாண்டிய அரசரின் நாணயங்களும் வடபகுதியிற் கிடைத்துள்ளமை மேற்கூறிய தொடர்பை மேலும் உறுதி செய்கின்றது.[96] அத்துடன் ஈழத்துப் புலவரான ஈழத்துப் பூதந்தேவனாரின் பாடல்கள் சங்க நூல்களாகிய நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு ஆகியவற்றுள் இடம் பெற்றுள்ளமையும்,[97] யாழ்ப்பாணப் பகுதியில் இன்றும் வழக்கிலிருக்கும் பல சங்ககாலச் சொற் பிரயோகங்கள்[98] தமிழக - ஈழத் தொடர்புகளுக்குச் சிறந்த உதாரணங்களாகின்றன. அத்துடன் ஈழத்துப் பிராமி வரிவடிவத்திலும் இருபடைகள் இனங்காணப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்று பௌத்தம் ஈழத்திற்குக் கி.மு.3 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் புகுந்தபோது இங்கு அறிமுகமான வட இந்திய வரிவடிவம். மற்றது இதற்கு முன் தமிழகம் ஈழம் ஆகிய பகுதிகளில் வழக்கிலிருந்த பழைய திராவிட வரிவடிவம்.[99] ஆகும். இவ்வரிவடிவம் காலகதியில் பௌத்தத்துடன் வந்த வட இந்திய வரிவடிவத்தில் அமிழ்ந்தியது. எனினும், இப் பிராமிக் கல்வெட்டுகளில் காணப்படும் தமிழகத் தொடர்பினை எடுத்துக் காட்டும் தமிழகத்தோரைக் குறிக்கும் 'தமேட' என்ற பதம்,[100] பருமக[101] (பருமகன்/பெருமகள்) போன்ற விருதுப் பெயர்கள், ஆய்,[102] வேள்[103] பரத[104] போன்ற இனக்குழுக்களின் பெயர்கள் ஆகியன தமிழகத்தை ஒத்த சமூக அமைப்பே ஈழத்திலும் காணப்பட்டதை எடுத்துக் காட்டுகின்றன. பாளி நூல்களில் தமிழகத்தோர் கிறிஸ்தாப்த காலத்திற்கு முன்னர் ஈழத்தின் மீது மேற்கொண்ட படையெடுப்புகள் பற்றிக் காணப்படும் குறிப்புகள் பண்டைய தமிழகம்-ஈழம் ஆகிய பிராந்தியங்களுக்கு இடையே காணப்பட்ட உறவை மேலும் உறுதி செய்கின்றன.

முடிவுரை

ஒட்டுமொத்தமாக நோக்கும்போது தமிழகம் போன்று ஈழத்திலும் பழைய ஈமச் சின்னங்களிலொன்றான தாழியடக்கமுறை காணப்பட்டதைத் தொல்லியற் சான்றுகள் நிரூபித்துள்ளன. தமிழகத் தாழிகளுக்கும் பொம்பரிப்பு போன்ற இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்ட தாழிகளுக்குமிடையே தோற்றத்தில் மட்டுமன்றி இவற்றிலிடப்பட்ட பொருட்களுக்குமிடையேயும் ஒற்றுமையுண்டு. ஈழத்தில் சங்க இலக்கியத்தை ஒத்த இலக்கியப் பாரம்பரியம் காணப்படாவிட்டாலுங்கூட ஈழத்துப் புலவரின் செய்யுட்கள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றிருப்பதும், தமிழகத்துத் தமிழர் ஈழத்துடன் கொண்டிருந்த தொடர்பினை எடுத்துக் காட்டுவனவாகப் பாளி நூல்கள், கல்வெட்டாதாரங்கள் ஆகியவற்றில் செய்திகள் காணப்படுவதும் ஈழத்து நாகரிகம் தென்னிந்திய கலாசாரத்தின் ஓர் அங்கமாகவே ஈழத்திற்குப் பௌத்தம் புக முன்னர் விளங்கியமையைத் தெளிவாக்குகின்றது. தென்னிந்தியாவில் எவ்வாறு பெருங்கற்காலக் கலாசாரத்திலிருந்து தற்காலத் தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசங்களில் வழக்கிலிருக்கும் கலாசாரங்கள் உருவாகினவோ அவ்வாறே அதே பெருங்கற்காலக் கலாசாரத்திலிருந்து தற்காலத் தமிழ், சிங்கள மொழிகளைப் பேணுவோரின் கலாசாரமும் உருவாகியது எனலாம். தற்காலச் சிங்கள மொழியின் ஆதி வடிவமாகிய எலுமொழி கி.மு.3 ஆம் நூற்றாண்டில் பௌத்தத்துடன் வந்த பாளி மொழியினதும் வட இந்தியக் கலாசாரத்தினதும் செல்வாக்கால் தனித்துவ அம்சங்களுடன் வளர்ச்சி பெற, ஆரம்பத்தில் ஒரே அடித்தளத்திலிருந்து துளிர்த்த சிங்கள-தமிழ் கலாசாரங்கள் தனித்துவமான வேறுபட்ட கலாசாரங்களாக வளர்ந்தாலும் இன்றும் இவ்விரு கலாசாரங்களுக்கிடையே நிலவும் அடிப்படை ஒற்றுமைகள் இவற்றின் தொன்மையையும் தொடர்பினையும் எடுத்தியம்புகின்றன.[105]

உசாவியவை

1 சிற்றம்பலம், சி.க. பண்டைய தமிழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு (திருநெல்வேலி) 1991, பக்.27-41.

2. Kennedy.K.A.R. The Physical Anthropology of the Megalith Builders of South India and Sri Lanka(Canberra), 1975.

3 Allchin, F.R. Piklihal Excavations (Hyderabad), 1960, பக். 20-24

4. Wheeler, R.E.M, Brahmagiri and Chandravalli-Megalithic and other cultures in Mysore state, Ancient India, No.4, 1948, பக் 180-310

5. Seshadri , K.Report on Excavations at Narasipur(Mysore) 1971, பக்13-25

6. Nagaraja Rao, M.S. Proto-Historic cultures of the Tungabhadra River.(Dharwar), 1971, பக் 13-25

7. சிற்றம்பலம், சி.க., மே.கூ.நூல், 1991. பக் 78-114

8. Wheeler, R.E.M., மே.கூ.க., 1948.

9. Soundararajan, K.V. The Iron Age culture provinces of India ,Bharathiya Vidya, Vol.23, Nos.1-4, 1963, பக்.1-21

10.புறநானூறு, (பதிப்பு) துரைசாமிப்பிள்ளை, து.சைவசித்தாந்தக் கழக வெளியீடு, (திருநெல்வேலி), 1962-64.

11.நற்றிணை, நாராயணசாமிஐயர் உரை (சென்னை), 1956.

12.Rea,A.Catalogue of the Pre-historic Antiguities from Adichanallur and Perumbair (Madras), 1915.

13 Caldwell, R. Explorations at Korkei and Kayal, Indian Antiquary, Vol.6, 1877. பக்80-83

14 Damilica (Journal of the Archaeological Department of Tamil Nadu), No.I, 1970, பக்.50

15 Allchin, F.R. Pottery from graves in the Perumal Hills near Kodaikanal, Perspectives in Palaeoanthropology(ed) Chosh, A.K. (Calcutta),பக் 299-308

16.Sahney, V. The Iron Age of South India, Ph.D., Dissertation, University of Pennisylvania, (Philadalphia), 1965.

17.Banerjee, N.R, Ramachandran, K.S. and Bose , H.K. `Amirthamangalam 1955, A megalithic Urn Burial site in district Chingleput, Tamil Nadu, Ancient India, No.22, 1966, பக் 3-46.

18 Chanmugam, P.H. and Jeyawardena, F.L.W.Skeletal remains from Thirukkethiswaram, Ceylon Journal of Science, Section. G. Vol.V. Part 2. பக். 65-68

19.Ragupathy.P. Early Settlements in Jaffna-An Archaeological survey (Madras)1987, பக் 117-122.

20.மேற்படி பக்.127-132.

21 Deraniyagala, S. The Citadel of Anuradhapura 1969. Excavations in the Gedige Area. Ancient Ceylon, No.2, 1972, பக்48-169.

22 Sitrampalam, S.K. The Megalithic Culture of Sri Lanka, Ph.D., Dissertation University of Poona, (poona), 1980.

23.Allchin B. and Allchin F.R., The Birth of Indian Civilization, (Penguin Series), 1968, பக். 223.

24.Paranavithana, S. Sinhalayo, (Colombo), 1967, பக் 8-9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 புஷ்பரட்ணம்.ப.பூநகரி-தொல்பொருளாய்வு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, (திருநெல்வேலி), 1993, பக். 22-23.
26.Hocart, A.K., Archaeological Summary, Ceylon Journal of Science, Vol.I, Part I, 1924-28, பக் 50-51
27.Paranavitana, S. Archaeological Investigations near Pomparippu, Ceylon Today, Vol.5, No.iii, 1956, பக் 13-15, Deraniyagala, P.E.P., Report of the Archaeological survey of Ceylon for 1956 Part IV, 1957, Report of the Archaeological Survey of Ceylon for 1957 part IV. (1958)
28.Codakumbura, C.E., Administrative Report of the Archaeological Commissioner for the Financial Year 1964-65, பக்94.
29.Begley, V. Excavations of Iron Age burials at Pomparippu-1970. Part I, Ancient Ceylon, Vol 4, பக். 52-96. Sitrampalam.S.K. மே.கூ.நூல்.1980
30.Rea, A. மே.கூ. நூல் 1915
31.Caldwell, மே.கூ.நூல் 1877
32.Allchin, F.R. மே.கூ.நூல் 1974
33.Thapar, B.K. Porkalam 1948. Excavations of a Megalithic Urn burial, Ancient India, No.8, 1952, பக்3-16
34.Banerjee, N.R., Ramachandran, K.S and Bose N.K. மே.கூ.நூல் 1966
35.Rea, A. மே.கூ.நூல் 1915, பக்.22-27; 30-38, படம் VI இல் 4, 15, 28-35.
36.Wheeler R.E.M. Arikamedu 1946. An Indo-Roman trading station on the east of India, Ancient India, No.2, 1946, பக்.56,
உரு. 16 வகை 9.
37.Banerjee, N.R. and Soundararajan, K.V. Sanur 1950-52. A Megalithic site in District Chingleput Ancient India, No.15, பக்.4-42
38.Benerjee, N.R. et.al மேற்படி.1996, உரு.3., இல 1,2,7,8.
39.Thapar, B.K. மே.கூ.நூல் 1952, ப.10, இல.1-2
40.Mehta, K.N and George, K.M. Megaliths at Machad and Pazhayanur, Talppally Taluka, Trichur District, Kerala State, (Baroda) 1978 உரு.4, இல.1-3, 5-6.
41.Rea, A. மே.கூ.நூல் 1915, பக்.30,31,34,35,இல 212-218; 264-271; 364-365; 455-462.
42.Banerjee, N.R., et.al, 1966 உரு 3, இல. 5-6
43.Rea, A. மே.கூ.நூல் படம் VIII, இ.16.
44.Banerjee, N.R.et. al, 1959, உரு 15, வகை.7-81
45.Banerjee, N.R.et. al, 1959, உரு.2, இல. 1-3
46.Mahalingam, T.V. Report on the excavations in the lower Kaveri-Valley, (Madras), 1970.
47.Wheeler, R.E.M. மே.கூ.நூல் 1946, உரு.15-16, வகை.8m
48.Banerjee, N.R et.al, 1959, உரு.2, வகை.1-2
49.Wheeler, R.E.M. மேற்படி 1946, உரு.14, இல.4; இல.2-3F, 5, உரு.15, இல.6-6F
50.Rea,A, மே.கூ.நூல், படம் VIII, இல.11.
51.Wheeler, R.E.M. மே.கூ.நூல், 1946, உரு.19
52.Mahalingam, T.V. மே.கூ.நூல், 1970, உரு.6T1
53.Banerjee, N.R. The Megalithic Problem of Chingleput in the light of recent exploration, Ancient India, No.12, 1956, பக். 21-34. உரு.2.
54.Rea, A.மே.கூ.க. 1915, படம் VI இல.17,22,29,30.
55.Rea, A. மே.கூ.நூல் 1915, படம் VII, இல.19.
56.Wheeler, R.E.M. மே.கூ.க. உரு 24-44
57.Banerjee, N.R.et. al, மே.கூ.க. 1966, உரு.3. இல. 16,23,24.
58.Mahalingam, T.V. மே.கூ.நூல் 1970, உரு 6a, வகை.16.
59.Rea, A. மே.கூ.நூல், 1915, படம்.VII:பக்.24.
60.Wheeler, R.E.M.மே.கூ.க. 1946, உரு.23, வகை. T.32-34
61.Mahalingam, T.V. மே.கூ.நூல். உரு.60 வகை T 59, 60, 60A-60
62.Banarjee, et, al மே.கூ.க 1966, உரு 3.இல.12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63.Rea, A. மே.கூ.க. 1915, படம் VIII, இல.30
64.மேற்படி, படம் VIII, இல.28.
65.Mahalingam, T.V. மே.கூ.நூல், 1970, உரு 18, வகை. T-45.
66.Rea, A. மே.கூ.நூல், 1915, VIII, இல. 4,7,10,13,16,21,23,26,27.
67.Thapar, B.K. மே.கூ.க. 1952, உரு.2.
68.Banerjee, N.R.et. al மே.கூ.க. 1959, உரு.3, இல. 14-17,20-23.
69.Mahavamsa,(ed) Geiger,W(Colombo) 1950, அதி. XXI. செய்.10-11.
70.Kennedy, K.A.R. மே.கூ.நூல், 1975.
71.Chanmugam. P.K. and Jeyawardena, F.L.N. மே.கூ.க. 1954.
72.Ragupathy,P. மே.கூ.நூல், 1987, பக். 119-122.
73.மேற்படி, பக்.127-130.
74.Kennedy.K.A.R. மே.கூ.நூல்., 1975.
75.மேற்படி, பக்.75-80; Luckas, John, R and Kennedy Kenneth A.R.Biological Anthropology of Human remains from Pomparippu, Ancient Ceylon, No.4, 1981, பக்.97-142.
76.Chanmugam, P.K. et. al. மே.கூ.க. 1954
77.Ragupathy.P. மே.கூ.நூல், பக்.200-203.
78.Sitrampalam, S.K. Ancient Jaffna-An ArchaeologicalPerspective, Journal of South Asian Studies, Vol.3, Nos 1 & 2, 1984, பக். 1-16.
79.Paranavitana, S. மே.கூ.நூல், 1967, பக் 8-9
80.Deraniyagala, S. மே.கூ.க 1972, ப. 159.
81.Nicholas, A short account of the history of irrigation works upto the 11th century' J.R.A.S.C.B.N.S. Vol. VII, 1960, பக்.43-64.
82.Sitrampalam, S.K. மே.கூ.க. 1980. பக்.208-209.
83.மேற்படி, பக். 209-210.
84.மேற்படி, பக். 210-211
85.மேற்படி. பக். 209.
86.Mahavamsa, மே.கூ.நூல், அதி.VII, செ.11.
87.Sitrampalam, S.K. மே.சு.நூல்.1980, பக்.215-216.
88.மேற்படி பக். 211-212.
89.Rea, A. மே.கூ.நூல், 1915, பக்.13, இல.121.
90. Mahalingam, T.V. மே.கூ.நூல், பக். 52.
91.Rea, A. மே.கூ.நூல், 1915,பக்.13,இல.122.
92.Damilica, மே.கூ.நூல். No.1, 1970, பக்.50; Indian Archaeology-A Review, 1969-70 பக் 68.
93.Champakalakshmi, R. Archaeology and Tamil Literary Tradition', Puratattva, No.8. 1975-76, பக்.120, அடிக்குறிப்பு 6.
94.Deraniyagala, S.U. The Proto-and Early Historic Radiocarbon Chronology of Sri Lanka, Ancient Ceylon, No.12, 1990, பக். 251-292.
95.சிற்றம்பலம், சி.க. தமிழர் பற்றிக் கூறும் 'ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுகள் பற்றிய சில கருத்துக்கள்' தமிழோசை, தமிழ் மன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (திருநெல்வேலி) 1988-89, பக். 29-36
96.சிற்றம்பலம், சி.க. யாழ்ப்பாணம்-தொன்மை வரலாறு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு(திருநெல்வேலி), 1993, பக்.699, படம்-51.
97.சதாசிவம், ஆ.(தொகுப்பாசிரியர்) ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், (கொழும்பு), 1966, பக்.3-7.
98.திருநாவுக்கரசு.க.த. இலங்கையிற் தமிழ்ப் பண்பாடு, (சென்னை), 1978.
99.Fernando P.E. The beginnings of Sinhala Script. ' Education in Ceylon-A centenary Volume (Colombo), 1969, பக். 19-24
100. Sitrampalam, S.K. Tamils in Early Sri Lanka- A Historical Perspective. Presidential Address to the Jaffna Science Association, Section D. ;(Social Science-Annual Session-1993; சிற்றம்பலம், சி.க. ஈழத்தமிழர் வரலாறு, கி.பி. 1000 வரை (சாவகச்சேரி இந்துக் கல்லூரி வெளியீடு (கைதடி)1994.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

101.Sitrampalam, S.K. The Title Parumaka found in Sri Lankan Brahmi Inscriptions-A Reappraisal 'Sri Lanka Journal of South Asian Studies, No.1 (N.S). 1986/1987.
102. The Title Aya of Sri Lankan Brahmi Inceriptions-A Reappraisal: Summary of the paper submitted to the Archaeological Congress(Colombo) 1998.
103. The form Velu of Sri Lankan Brahmi inscriptions-A Reappraisal; Paper presented at the XVIII Annual Congress of Epigraphical Society of India, Tamil University (Thanjavur), in February 2-4, 1991.
104. Sitrampalam, S.K. மே.கூ.க. 1980, பக். 373-374.
105. Sitrampalam, S.K. Proto-historic, Sri Lanka-An Interdisciplinary Perspective' Journal of the Institute of Asian Studies
Vol. VIII, No 1, 1990, பக். 1-18.



பல்வேறு தோற்றங்களிலமைந்த தாழிகள் (பொம்பரிப்பு) படம் 1



தாழிகள் மூடப்பட்ட சட்டிகள், (பொம்பரிப்பு)



அலங்கார வேலைப்பாடுள்ள தாழி
(பொம்பரிப்பு)

படம் 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிண்ணங்களும் வட்டில்களும் (பொம்பரிப்பு)

படம். 3.



குதிரையின் கடிவாளக் குறியீடுகளுடனான பானைகள்.
(பொம்பரிப்பு)



மூடியும் தாங்கிகளும்.(பொம்பரிப்பு)

படம் 4

வேல்



கொழுவின்
பாகம்



மைக்குச்சிகள்



பல்வேறு வளைவுகளுடனான காப்புகள்
(பொம்பரிப்பு)

படம் 5

2793CP) PL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக்ஸின் மெய்யியலும் போயபார்க் கருத்துரைகளும்

பேராசிரியர். சோ. கிருஷ்ணராஜா

19ஆம் நூற்றாண்டுச் சிந்தனையாளரான மாக்ஸின் கருத்துக்கள் 19ம் நூற்றாண்டின் இறுதியில் மாக்ஸிச மெய்யியலாக விருத்திசெய்யப்பட்டதுடன், 1931, 1945 ஆண்டுகளின் பின்னதாக கம்யூனிஸ்ட்கட்சிகளால் நிறுவனமயப்படுத்தப் பட்டது. சோஸலிச இயக்கத்தின் உலகநோக் காகவும்,உழைக்கும் மக்களின் வரலாற்றுப் பார்வையாகவும் மாக்ஸினது சிந்தனைகள் ஒழுங்குபடுத்தியமைக்கப்பட் டதுடன்,மாக்ஸே இதனது ஸ்தாபகராகவும் ஏற்றுக்கொள்ளப் பட்டது.எவ்வாறாயினும் சோஸலிசகருத்துநிலையும் மாக்ஸினது சிந்தனையும் மேற்குறித்தமுயற்சியில் சரிவர இணைக்கப்பட்டதென்பதற்கில்லை. மாக்ஸினது படைப்புகளிற்கும் அவரது பெயரால் செயற்பட்ட அரசியல் இயக்கங்களிற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக எடுத்துக்காட்ட பலமுயற்சிகள் எடுக்கப்பட்டன. எவ்வாறாயினும் மாக்ஸிச மெய்யியலென இன்றுகூறப்படுவதை மாக்ஸினது எழுத்துக்களிற் காணமுடியாது. மாக்ஸினால் பயன்படுத்தப்பட்ட மிகப்பொதுவானதும், மிகஅரூபமானதுமான சொற்களின் அர்த்தம், அடிப்படை, சர்வவியாபகமான குணாம்சம் என்றவகையில் சோஸலிச இயக்க ஸ்தாபகர்களினால் மாக்ஸினது சிந்தனைகள் விரித்துரைக்கப் பட்டதுமல்லாது, மாக்ஸிச மெய்யியலென்ற கோட்பாட்டுருவமும் கொடுக்கப்பட்டது. மாக்சினது எழுத்துக்களிற் காணப்படுகின்ற மெய்யியற் சிந்தனைக்கும், பிற்காலத்தில் மாக்ஸிசமெய்யியல் என அறியப்பட்டதற்கும் இடையில் மிகப்பாரிய வேறுபாடுண்டு.

உதாரணமாக இயக்கவியற் பொருள் முதல்வாதம் என்ற கருத்தாக்கத்தைக் கவனிக்கலாம். கம்யூனிஸ்ட் கட்சிகளின் அதிகாரபூர்வமான மெய்யியலை இப்பதம் குறிக்கிறது. ஹென்றி லிபிவ்ரெ(Henri Lefebvre) போன்றவர்களாலும் இப்பதம் பயன்படுத்தப்பட்டது. *இயக்கவியல் முறை* என்றே மாக்ஸ் தன்முறையியலைக் குறிப்பிட்டார். ஏங்கல்ஸ் பொருள்முதல்வாத இயக்கவியல் என்ற சொல்லைப் பயன்படுத்தினார்.1887ல் மாக்ஸினது சகசோஸலிச பிரசாரகராயிருந்த யோஸேப் டையட்ஜென் (Joseph Dietzgen) என்பாரே இயக்கவியல் பொருள்முதல் வாதம் என்றசொல்லை உருவாக்கியிருந்தார். எவ்வாறாயினும் ஏங்கல்ஸினது படைப்புகளை ஆதாரமாகக் கொண்டு, *பொருள்முதல்வாதமும் அனுபவமுதல்வாத விமரிசனமும் (1909)* (Materialism and Empirio-Criticism) என்றநூலை லெனின் எழுதினார். கேகலிய இயக்கவியலின் பொருள்முதல்வாத விளக்கம், ஒழுக்கவியற் தத்துவங்களை வர்க்கப்போராட்டத்துடன் தொடர்புபடுத்திய வரலாற்றுப் பார்வை, பௌதீகத்தில் கேல்ம்கோல்ட(Helmholtz), உயிரியலில் டார்வின்(Darwin), அரசியற் பொருளாதாரத்தில் கால் மாக்ஸ் ஆகியோரால் முன்மொழியப்பட்டவற்றை ஆதாரமாகக் கொண்டு மேற்படி கருத்தாக்கம் லெனினால் உருவாக்கப்பட்டது. வரலாற்றுவாத மாக்ஸிசம்(Labriola), கவுட்ஸ்கியின் (Kautsky) சமூக பரிணாமவாதத்தை ஒத்த நிர்ணயவாத மாக்ஸிசம் என்பனவற்றிற் கிடையிலானதொரு நிலைப்பாட்டை லெனின் எடுத்திருந்தார். சோவியத்புரட்சியின் பின் அந்நாட்டின் மெய்யியலானது இயக்கவியல் வாதிகள் (திபோரின்=Deborin), பொறிமுறையாளர் (Bukharin) என்ற இரு முகாம்களாகப் பிரிந்திருந்தது. இவ்விரு பகுதியினருக்கும் இடையிலான கருத்துமுரண்பாடுகள் 1931ல் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராயிருந்த ஸ்டாலினால் தீர்த்து வைக்கப்பட்டது. இயக்கவியல் பொருள் முதல்வாதத்தை மாக்ஸிச லெனினிஸ்சமாக ஸ்டாலின் எடுத்துரைத்தார். ஏழுவருடங்களின்பின் அது *இயக்கவியல் வரலாற்றுப்பொருள்முதல் வாதம்(1938)* என்ற கட்டுரையாக எழுதப்பட்டது. இயக்கவியல் விதிகளை தனித்ததொரு ஆய்வுத் துறையாக அக்கட்டுரை ஸ்தாபித்ததுடன், சிறப்புத்துறை விஞ்ஞானங்களிற்கான அதிலும் குறிப்பாக வரலாற்றிற்குரிய விஞ்ஞானப்பார்வையாகவும், உழைக்கும் மக்களின்சார்பில் அவ்வரலாற்றைச் சரியானமுறையில் விளங்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதற்கான முன்னது ஏதுவான உத்தரவாதத்தையும் தருமொன்றாகவும் எடுத்துக்காட்டப்பட்டது. பல்வேறு எதிர்ப்புக்களின் மத்தியிலும் சோசலிஸநாடுகளின் முழுஅறிவுப்புலத்தின்மீதும் அந்தந்த நாடுகளின் கம்யூனிஸ்ட்கட்சிகளால் அக்கட்டுரைக் கருத்துக்கள் சுமத்தப்பட்டன. இது சோசலிஸநாடுகளின் விஞ்ஞானவளர்ச்சியிலும் பாதிப்புகளை ஏற்படுத்தியது. கம்யூனிஸ்ட்கட்சியரசு இயற்கைவிஞ்ஞான ஆராய்ச்சிகளைக் எவ்வாறு கட்டுப்படுத்தியதென்பதற்கு ஆதாரமாக லைசென்கோவின் போலிக் கண்டுபிடிப்புகளை உதாரணம் காட்டலாம். ஓருமுகமான செல்கதியைக் கொண்ட மாக்ஸிச மெய்யியலின் வளர்ச்சியில் இருவேறுதிருப்புமுனைகள் காணப்பட்டமைபற்றியும் இங்கு குறிப்பிடல் வேண்டும். மாவோ 1937ல் *முரண்பாடுகள்பற்றி* என்ற கட்டுரையில் இயக்கவியல் விதிகள் என்பதற்குப் பதிலாக முரண்பாட்டுத் தத்துவத்தின் சிக்கற் தன்மைபற்றிக் குறிப்பிட்டார். இத்தாலியில் கைமொண்ட்(Geymonat) என்பார் இயக்கவியற்பொருள் முதல்வாதத்தை வரலாற்றியலான அறிவாராய்ச்சியியலின் தொடக்கப் புள்ளியாகக் கொண்டார்.

இன்று மாக்ஸிசம் நிறுவனமயப்படுத்தப்பட்டதொரு கோட்பாடாக இல்லாதபொழுதும், 1890லிருந்து 1990வரை நிறுவனமயப்படுத்தப்பட்ட இயக்கமாகவும், சோசலிசஇயக்கத்தின் உலகநோக்காகவும் இருந்திருக்கிறது. மாக்ஸினது கோட்பாட்டுரீதியான சிந்தனை பல்வேறுசந்தர்ப் பங்களில் மெய்யியலாக இல்லாது, எதிர் மெய்யியலாக, நவீனகாலத்து மெய்யியற்சிந் தனைக்கு எதிரானதொரு போக்காகக் காணப்படுகிறது. மாக்ஸின் மெய்யியற் பயிற்சியானது பிளேட்டோ முதல் கேகல் ஈறானதாக இருந்தாலும், பொருள்முதல்வாத நிலைப்பாடுடையதாக, எப்பிகூறஸ் முதல் போயபார்க் வரையிலான பொருள்முதல்வாதிகள் உலகை எவ்வாறு விளக்கினார்கள், மெய்யியலை எவ்வாறு பயன் படுத்தினார்கள், புரிந்து கொண்டார்கள் என்பது பற்றியதாகவே இருந்தது. மாக்ஸினது சமூகவரலாற்றுப் பகுப்பாய்வுகளும், அரசியல் நடவடிக்கைகளிற்கான அவரது முன்மொழிவுகளும் புலனறிவாத மெய்யியலாளர்களால் போதுமான அளவிற்கு விமர்சிக்கப்பட்டமை நாமறிந்ததே.

மாக்ஸினதுசிந்தனைகள் எந்தவொரு ஒழுங்குபடுத்தியமைக்கப்பட்ட மெய்யியற் தளத்திலும் இயங்க வில்லை. மெய்யியலிற்கு அப்பால் மேற்கொண்டு எவ்வாறுசெயற்படுவது என்ற தளத்தையே இலக்காகக் கொண்டிருந்தது. *18ம் புருமெர் லூயி போனப்பாட்* என்ற மாக்ஸினது நூலில் வருகிறதொரு குறிப்பே மாக்ஸஸின் வரலாற்றுப்பொருள்முதல்வாதத்திற்கு சான்றாக பலராலும் எடுத்துக்காட்டப்படும் வாக்கியமாகும்[1].

மனிதர் தமதுவரலாற்றைத் தாமாகவே உருவாக்கிக் கொள்கிறார்கள், இவ்வுருவாக்கம் அவர்களது சொந்தவிருப்பத்தின் பேரிலோ அல்லது தாமாகத் தெரிவு செய்துகொண்ட சூழ்நிலையிலோ அல்ல, தாம் எதிர்கொள்ளும் புறச்சூழ்நிலையின் அடிப்படைக்கேற்பவே தமதுவரலாற்றை அமைத்துக் கொள்கிறார்கள்.

மேற்படி மாக்ஸினது கூற்றை அவரது நிலைப்பாட்டிலிருந்து புரிந்துகொள்ள முயற்சிப்போமாயின் புறச் சூழலினாலே எல்லாமனிதர்களினதும் நடத்தை தீர்மானிக்கப்படுகிறதென்றும்,சமூகமுரண்பாடுகளில் எந்தப்பக்கம் அவர்கள் நிற்கிறார்களோ அப்பக்கத்திற்கேற்பவே அவர்கள் எவ்வாறு நடந்துகொள்வார்கள்என்பது தீர்மானிக்கப் படுமென்ற முடிவையடையலாம். மேலும் இத்தகையபுரிந்துகொள்ளல் மூலமே மாக்ஸினது மெய்யியல் பற்றிய விளக்கத்தையும், அதன் உள்ளடக்கம், பாணி, முறையியல், அதன் அறிவார்ந்ததும் புத்திபூர்வமான செயற்பாடுகள் பற்றிய விளக்கத்தையும் பெறலாம். மெய்யியலின் நடைமுறையை மாற்றியமைப்பது பற்றியே மாக்ஸ் பேசுகிறார். இதனாலேயேதான் மெய்யியல் மாக்ஸிற்குமுன் இருந்தபோல அவரின் பின்னில்லை என்ற முடிபிற்கு நாம் வருகிறோம். இவ்வாறு ஒருபயில்துறையின் அடிப்படையை முழுமையாக மாற்றியமைத்தது மாக்ஸ் மட்டுமல்ல, பிராய்ட்கூட அத்தகைய தொருமாற்றத்தை உளவியலில் ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. மாக்ஸினது எதிர்-மெய்யியல் நிலைப்பாடு மெய்யியலை இறந்துபோகச் செய்யவில்லை, மாறாக மெய்யியலிற்கொரு புதிய பாதையைச் செப்பனிட்டுத் தந்தது. மெய்யியலின் நோக்கத்தையும், அதுஆராயும் பிரச்சனைகளின் தன்மையையும் பாரம்பரியநிலைப்பாட்டிலிருந்து இடம்மாற்றி வைத்தமையே மாக்ஸினது பங்களிப்பாகும்.

மாக்ஸினது எதிர்மெய்யியல் நிலைப்பாட்டிற்கு ஆதாரமாயிருந்த சிந்தனை எதுவென்பது பதிலளிக்க முடியாத நிரந்தரப் பிரச்சனையாகும். மாறாத நிலைப்பாடுகளென மெய்யியலில் எதுவுமில்லை. திருப்பு முனைகள் பல மெய்யியல் வரலாற்றில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டுள்ளனவென்பது உண்மையே எனினும் மெய்யியலாளர்கள் மீண்டும் பின்நோக்கி தொடக்கநிலைக்குச் செல்வதில்லை. *நதிகள் பின்நோக்கிப் பாய்வதில்லை* என்பதுபோலவே மாக்ஸின் சிந்தனைக்கான மூலத்தை அவருக்கப்பால் தேடுவதும் அபத்தமானது. மெய்யியலை மாக்ஸ் இடம்மாற்றிவைத்த துமல்லாது, மெய்யியலின் நோக்கம், அது ஆராயும் பிரச்சனைகள் எல்லாமே அவரால் மாற்றமடைந்தது. மெய்யியலாளர் இதனை ஏற்கலாம் அல்லது நிராகரிக்கலாம், ஆனால் பாராமுகமாயிருத்தல் இயலாது.

மாக்ஸினது மெய்யியலின் மூலம் யாதென்பது தொடர்பாக மாக்ஸிஸ்ட்டுக்களிடையே நிகழ்ந்த வாதப் பிரதிவாதங்கள் மிகவும் சுவையானவை. மாக்ஸிஸம் ஒரு உலகநோக்கு என்ற வகையில் அது ஜேர்மானியமெய்யியல், பிரெஞ்சுசோசலிஸம், பிரித்தானிய அரசியற் பொருளாதாரம் என்ற மூன்று கூறுகளைக் கொண்டதாக மாக்ஸிஸ்டுக்களால் விளக்கப்பட்டது. டூறிங்க்கு மறுப்பு (Anti-Duhring)என்ற நூலில் பொருள்முதல்வாதம்-இலட்சியவாதம், பௌதீகவதிதம்-இயக்கவியல் என்பனவற்றிற்கிடையிலான முரணிசைவின் வரலாற்றுரீதியான தன்மையை வரலாற்றுப் பொருள்முதல்வாதம் பற்றிய தனதாய்விற்காக மேலெழுந்தவாரியாக மாக்ஸ் ஆராய்ந்திருந்தார். இவ்வாய்வு கவுட்ஸ்கி என்பாரால் 1907ல் ஒருவிரிவுரையின் பொழுது ஒழுங்குபடுத்தப்பட்டு, மாக்ஸிஸத்தின் மூன்று ஊற்றுக்களெனப் பெயரிடப்பட்டது. வரலாற்று முக்கியத்துவம் பெற்ற மாக்ஸினது படைப்பு சமூகம்பற்றிய விஞ்ஞானமென்றும், அது பாட்டாளி மக்களின் நிலைப்பாட்டிலிருந்து ஆரம்பிக்கிறதென்றும், ஜேர்மானிய,பிரெஞ்சு,பிரித்தானிய சிந்தனை களிலிருந்து தோற்றம் பெறுகிறதென்றும் குறிப்பிட்டார். ஐரோப்பியக் (சர்வதேசிய) குணாம்சம் மாக்ஸிஸத்திற்கு உண்டென்பதை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடனேயே கவுட்ஸ்கி இவ்வாறு குறிப்பிட்டார். அதாவது ஐரோப்பியவரலாற்றின் ஒட்டுமொத்தமான வளர்ச்சியின் பெறுபேறே பாட்டாளி வர்க்கக் கோட்பாடென கவுட்ஸ்கியினால் எடுத்துக்காட்டப்பட்டது. இதனை லெனின் மாக்ஸிஸத்தின் மூன்றுஅடிப்படைகளும் மூன்று கூறுகளுமென 1913ல் ஒருவிரிவுரையின் பொழுது வியாக்கியானம் செய்தார். முப்பெரும் நாடுகளின் பொதுப்பண்பை ஐரோப்பியப் பண்பாடாக உருவகிக்கும் இவ்வைதீகம், கவுட்ஸ்கியினால் உருவாக்கப்பட்ட புதியதொருதோற்றப்பாடல்ல, ஐரோப்பாவின் முப்பெரும்நாடுகளைச் சுட்டும் மேற்படி ஐதீகத்தை ஏலவே 1841ல் மோஸஸ் கேஸ்(Moses Hess) என்பாரும் பயன்படுத்தியுள்ளார்.

மாக்ஸினது சிந்தனைக்கு சூட்டப்பட்ட இவ்வைதீகத்தினாலேயே அவரது சிந்தனையின் *தோற்றுவாய்*
பிரச்சனையாகிறது. அதாவது முந்திய கோட்பாடுகளிற் இல்லாத சிறப்புரிமை மாக்ஸ்ஸினது சிந்தனைக்கு கிடைத்திருக் கிறதென்ற வாதத்தை மேற்படிகருத்து முன்னிறுத்துகிறது. ஆனால் இதுவொரு தீர்க்கப்படமுடியாப் பிரச்சனையாகும். உதாரணமாக 1990ல் கொன்ஸ்ரானோ பிரீவ் (Constanzo Preve) என்பார் மாக்ஸ்ஸினது சிந்தனைக்கு மூன்றுஅடிப்படைகளல்ல, மாறாக நான்கு ஆசான்களே உதவியிருந்தனரென்ற வாதத்தை முன்மொழிந்தார்[2]. இவரது அபிப்பிராயப்படி எப்பிகூரஸ் (மாக்ஸ்ஸினது கலாநிதிப்பட்ட ஆய்வு எப்பிகூரஸ் டெமோக்கிரட்டீஸ் என்போர்களது இயற்கைமெய்யியல் பற்றியது), ரூஸோ (மேட்டுக்குடிகளின் சனநாயகம் அல்லது பிரசைகளின் பொதுச்சித்தத்தின் பேறான நேரடிப்பங்குபற்றல் என்ற கருத்து), அடம்ஸ்மித் (உழைப்பாளியே சொத்தின் அடிப்படை உன்ற கருத்து), கேகல் (வளர்ச்சி பற்றிய இயக்கவியற் சிந்தனை) என்ற நால்வரினதும் பங்களிப்பு உண்டென்றார். மேற்படி பிரீவினது ஆய்வுகள் மாக்ஸினது படைப்புக்களின் உள்ளார்ந்த சிக்கற்தன்மையை நாமறிந்துகொள்ளவும், மெய்யியல் மரபுடன் அவர் கொண்டிருந்த விமரிசனப்பாங்கிலான அணுகுமுறையில் ஏற்பட்ட பாச்சல்களையும் புரிந்துகொள்ள உதவும்.

எவ்வாறாயினும், மாக்ஸினது எழுத்துகளை மெய்யியல் சார்ந்தது, வரலாறுசார்ந்தது, பொருளாதாரம் சார்ந்ததென பிரித்துப்பார்த்தல் தவறாகும். மேலும் அவ்வாறு பிரித்துப்பார்த்தல் மாக்ஸ் பற்றிய சரியான பார்வையையும் தராது. அதுமட்டுமல்ல, மாக்ஸ் சார்ந்திருக்கும் மெய்யியல் மரபையும், அவரது புரட்சிகர நிலைப்பாட்டையும் புரிந்து கொள்வதற்கு இது இடையூறாகவிருக்கும். 1843ல் கேகலின் *உரிமையின் மெய்யியல் (Philosophy Of Right)*[3] என்ற நூலின் பக்கங்களில் சமூகம்,அரசு, என்பனபற்றிய கேகலின் கருத்துக்கள் தொடர்பாக தனது விமரிசனங்களையும், புரட்சிகர ஜனநாயகம் பற்றிய தனது கருத்துக்களையும் மாக்ஸ் எழுதியிருந்தார். இக்குறிப்பு பின்னர்கட்டுரையாக சர்வதேச உழைக்கும் மக்கள் அமைப்பின் உட்கட்சிக் கலந்துரையாடலிற்காக வெளியிடப்பட்டது. மாக்ஸினது ஆக்கங்களில் மிகவும் காரசாரமான விவாதங்களைத் தோற்றுவித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கட்டுரையில், முதலாளித்துவ பொருளாதார வளர்ச்சி பற்றிய கோட்பாட்டுரீதியான நிலைப்பாட்டிற்கும், பூர்சுவாசமூகத்தின் மெய்யான வரலாற்றிற்கும் இடையிலான தொடர்பை அவதானித்ததில் இருந்து இயக்கவியல் பற்றிய தனது விளக்கத்தை மாக்ஸ் வெளியிட்டிருந்தார். இவ்விளக்கம் கேகலின் வளர்ச்சி பற்றிய இயக்கவியலின் மறுபதிப்பாக இல்லாது, மாக்ஸினது சுயவிளக்கமாகவே இருந்தது.

அடிப்படையில் மாக்ஸ் ஒருபுதிய சகாப்தத்தின் மெய்யியலாளராகவே இருந்தார். பூர்த்தியுறா வரைவுகளையும், திட்டங்களையும் அவர்விட்டுச் சென்றுள்ளார். அவரது நிலைப்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்களைப் புறந்தள்ளி அவரது சிந்தனையின் உள்ளடக்கத்தை விளங்கிக்கொள்ள முடியாது. இதன்காரணமாகவே மாக்ஸின் சிந்தனைகளை அருபநிலைப்பட்ட மெய்யியலாகப் பயிலமுடிவதில்லை. எனவே அவரது மெய்யியலை, அவரது சிந்தனையில் ஏற்பட்ட முறிவு, மாற்றம் வேறுபாடு என்பனவற்றை உள்ளடக்கியே புரிந்துகொள்ள வேண்டும்.

மாக்ஸினது சிந்தனைகளில் 1845ஐ அண்டியகாலப்பகுதியில் ஒருஇடைவெளி அல்லது முறிவு காணப்படுகிறதென்ற அபிப்பிராயம் அல்தூஸர் தொடக்கிவைத்த விவாதங்களின் பயனாக 1960-70களில் ஏற்பட்டது[4]. சிலர் இதனை ஆதரித்தும் வேறுசிலர் இதனை மறுதலித்தும் வாதிடலாயினர். 1845ளிற்கு முந்தியகாலப் பகுதியில் மாக்ஸினது சிந்தனையில் மானிடநலவாதமே முதன்மை பெற்ற சிந்தனையாக இருந்தது. ஆனால் 1845ளிற்கு பிந்தியகாலப்பகுதியிலோ சமூகஉறவு என்ற கருத்தாக்கமே மாக்ஸின் சிந்தனையில் முதலிடத்தைப் பெற்றது. இக்காலத்தில் மாக்ஸ் நேரடியாகப்பெற்ற அரசியலனுபவங்களால் - குறிப்பாக ஜேர்மனி-பிராண்ஸ் ஆகிய நாட்டுப்பாட்டாளிகளின் நிலைநின்று சமூகப் போராட்டங்களில் செயலூக்கமுடன் ஈடுபட்டார். (ஏங்கல்ஸ்க்கு ஆங்கிலநாட்டுப் பாட்டாளிகளின் நிலைமை இத்தகைய அனுபவத்தைத் தந்தது). இது அவரது புலமைசார் மெய்யியல் ஆர்வத்திற்கு முற்றிலும் எதிரானதாயிருந்தது. எவ்வாறாயினும், மாக்ஸினது வாழ்க்கைக்காலத்தில் ஐரோப்பாவில் இடம்பெற்ற இருசம்பவங்களிற்கும் அவரது சிந்தனையிலேற்பட்ட மாற்றத்திற்கும் தொடர்பிருந்தது. மாக்ஸ்ஸினது நிலைப்பாட்டிற்கு இச்சம்பவங்கள் சவாலாயிருந்தாலும், அதனை எதிர்கொள்ளும் நம்பிக்கை அவரிற்கிருந்தது. தனதுசிந்தனையின் அடிப்படைகளை மீள்பரிசீலனை செய்ததன்மூலம் அவற்றைப் பாதுகாக்க முடிந்தது.

மாக்ஸினது சிந்தனையில் ஏற்பட்ட முதலாவது நெருக்கடி 19ம் நூற்றாண்டுச் சிந்தனையிற் காணப்பட்ட சகாப்தமாற்றத்துடன் அதாவது 1848ம் ஆண்டுப்புரட்சியின் தோல்வியுடன், பக்கம்பக்கமாக நிகழ்ந்தது. முதலாளித்துவத்தின் நெருக்கடி தவிர்க்கமுடியாதென்ற நிலைப்பாட்டுடன் மாக்ஸ் முழுஉடன்பாடு கொண்டிருந்தார். இதனை 1847ல் எழுதப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கையை வாசிப்பதன்மூலம் கண்டுகொள்ளலாம். பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் எல்லாநாடு களிலுமுள்ள அனைத்து வர்க்கங்களும் ஒன்றுதிரண்டு புரட்சிகரஜனநாயகத்தை ஸ்தாபிக்கவும், அதன்மூலம் வர்க்கபேதங்கள் ஒழிக்கப்பட்டு கம்யூனிசம் ஸ்தாபிதமாகுமெனவும் நம்பினார். தனது திட்டத்தை சமூகக் குடியரசுவாதிகளினதும் மக்களினதும் ஆட்சிமாற்றத்திற்கான ஆர்வச்செறிவு அமுலாக்குமென மாக்ஸ் நம்பியிருந்தார்.

ஆனால் பிரான்ஸில் நடந்தேறிய நிலைமைகளோ மாக்ஸிற்குப் பெரும் அதிருப்தியைத் தந்தது. பிரெஞ்சு சோசலிஸ்டுக்களில் ஒருபிரிவு ஆட்சியாளர்க்குச் சாதகமாகப் பிரிந்து சென்றமையும், சதிப்புரட்சியின்போது தொளிலாளர்களின் செயலற்ற நிலைமையும், யூன் படுகொலைகளின்பொழுது அவர்கள்பாதிக்கப்பட்ட நிலையும், நம்பிக்கையற்ற நிலைமையைத் தோற்றுவித்தது, இதனால் பாட்டாளி மக்களினதும்,அவர்களது வரலாற்றுப்பாத்திரமும் பற்றிய மாக்ஸினது நிலைப்பாடு ஆட்டம் கண்டது. மேற்படி வரலாற்றுநிலைமைகள் அவரது கோட்பாட்டுரீதியான சிந்தனையில் பாரியதாக்கத்தை ஏற்படுத்தியது. வர்க்கசமூக அமைப்பிலிருந்து வர்க்கபேதமற்ற சமூகத்தை அடைவதற்கான உள்ளார்ந்தமாற்றத்தை வெளிப்படுத்தும் 'நிரந்தரப்புரட்சி' என்ற கருத்தாக்கத்தையும், முதலாளித்துவ சர்வாதிகாரத்திற்குப் பதிலாக பாட்டாளிகளின் சர்வாதிகாரம் என்ற அரசியற் திட்டத்தையும் கைவிடச்செய்தது. அதாவது மாக்ஸை அவரது கருத்து நிலை தொடர்பான மயக்கத்திலிருந்து விடுவித்ததுமட்டுமல்லாது, பொருளாதார நிர்ணயிப்பிலான அரசியலூாகங்கள் பற்றியும், சமூகபரிணாமத்தின் நீண்டகாலப்போக்குகள் பற்றியும் திட்டவட்டமான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் உதவியது. அரசியற் பொருளாதாரம் பற்றிய விமரிசனரீதியான அணுகுமுறை பற்றியும், அதற்கான கோட்பாட்டடிப்படைகளை முழுமைப்படுத்து வதற்குமான முயற்சிகள் மாக்ஸினால் தொடங்கப்பட்டன. 1867ல் மூலதனத்தின் முதலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
சிங்பாது சன நூலகம்
யாழ்ப்பாணம்

பாகம் வெளிவரும்வரை மாக்ஸினது முயற்சி தொடர்ந்தது.

1870ல் பிராண்ஸ்-பிரஸ்ஸியா யுத்தம் பரிஸ் கம்யூனைத் தொடர்ந்து நடைபெற்றது. வரலாற்றின் துயரம்மிக்க பக்கமாக அதனை வருணித்தார். காரணமில்லாக் காரணமும், யுத்தத்தின் பிற்போக்குத் தனமான பாதிப்புகளும், அதற்கான மனித இழப்புகளும் மாக்ஸ்சை மிகவும் பாதித்தது (யுத்தத்தில் 10,000 பேர் இறந்தனர். பிறிதொரு 10,000 பேர் கொல்லப்பட்டனர். இவைதவிர பெருந்தொகையானோர் நாடுகடத்தப்பட்டனர்). ஒரு25ஆண்டுகளிற்குள் இரண்டாவது தடவையாக புரட்சிகர உழைப்பாளிகள் பிராண்ஸில் கொலைசெய்யப்பட்டமையும் ஏனையநாடுகளில் அவர்கள் எதிர்கொண்ட அச்சவுணர்வும் மாக்ஸைப் பாதித்தது. அரசியல் முரண்பாடுகளையும், அம்முரண்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் சக்திகள் தொடர்பாகவும் மாக்ஸ் கொண்டிருந்த கருத்துக்களிற்கு நேரெதிராக ஐரோப்பாவில் நடந்தேறியநிகழ்ச்சிகள் காணப்பட்டன. இதன்காரணமாக ஒப்பீட்டளவில் வர்க்கப்போராட்டத்தின் முதன்மைஸ்தானம் குன்றியதுடன் ஏனைய அம்சங்களின்பால் மாக்ஸ் அதிகஅக்கறை கொண்டது போலத் தெரிகிறது. மூலதன வாக்கத்தினால் தோன்றும் நெருக்கடி காரணமாக எழவேண்டிய தொழிலாளர்புரட்சி பிரித்தானியாவில் ஏற்பட வேண்டியதற்குப் பதிலாகப் பிராண்ஸில் ஏற்பட்டமை தனது தருக்கத் திட்டத்திற்கு முரண்பட்டதாயிருந்தமையும் மாக்ஸினால் உணரப்பட்டது. பலாத்காரத்தைப் பயன்படுத்துவதிலும், அரசியற் தந்திரோ பாயங்களிலும் பாட்டாளிவர்க்கத்திலும் பார்க்க பூர்சுவாக்களின் ஆற்றல் மேலோங்கிய நிலையுடையதென்ற பாடம் பாரிஸ் கம்யூன் நசித்தொழிக்கப் பட்டமையிலிருந்து கிடைத்தது.

மாக்ஸ் இதனையெல்லாம் எதிர்கொண்டா ரென்பதில் எதுவித ஐயமுமில்லை. பாட்டாளிகளின் அரசு தோற் கடிக்கப்பட்டாலும், குறுகியகாலத்துப் பரிசோதனையாக அவர்களது ஆட்சி இருந்தபொழுதும், அவை பற்றிய படிப்பினைகளினூடாக உழைக்கும் மக்களின் அரசு என்ற தனதுகண்டுபிடிப்பு நிறுவனரீதியாக வல்லதிகாரக் குறைபாடுடையதாயிருந்ததை உணர்ந்துகொண்டார். அக்காலத்தில் சோஸலிசக் கட்சிக் கூட்டங்களிலெல்லாம் *பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரம்* என்ற புதியதொரு கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு அதன்மூலம், பாரம்பரியமாக ஸ்தாபிதமாகி வளர்ந்துவந்த அரசயந்திரத்தைத் தகர்ப்பதன் மூலம் பூர்சுவாக்களின் உரிமையென்பதற்கெதிராக *கம்யூனிசதத்துவத்தை* முன்மொழிந்தார். அதிருப்திதரும் உள்முரண்பாடுகளால் முதலாவது அகிலம் மாக்ஸால் 1852ல் கலைக்கப்பட்டது. மூலதனம் என்ற நூலின் முதல்வரைவு இடைநிறுத்தி வைக்கப்பட்டதுடன், தனது சமூகப்பரிணாமக் கோட்பாட்டை திருத்தியமைத்துக்கொள்வதற்காக மேலதிகவாசிப்புகள் தேவைப்பட்டதால் அதில் மாக்ஸ் ஈடுபட்டார். அத்துடன் ரஷ்சியமொழி, கணிதம் என்பனவற்றையும் பயிலத்தொடங்கினார். இதனால் மாக்ஸினது அரசியல் நடவடிக்கைகளும் இடைநிறுத்திவைக்கப்பட்டன.

பாரம்பரியமாக மெய்யியலை அதன் தோற்றுவாயான சூழலிருந்து பிரித்துப்பார்க்கும் முயற்சிக்கெதிராக மாக்ஸ் போராடியதை அவரது நூல்கள் அனைத்திலும் காணக்கூடிய தாயிருப்பதுடன், இம்முயற்சியே மாக்ஸினது மெய்யியலின் விதிவிலக்கான தன்மையை வெளிக்காட்டுகிறது, ஒருவகையில் அவரது அனுபவமுமாக இது இருந்தது. மெய்யியல் பற்றிய பாரம்பரிய விளக்கத்திலிருந்து மாக்ஸ் எவ்வாறு வேறுபடுகிறாரென்பதை போயபார்க் பற்றிய மாக்ஸினது கருத்துரைகளிலிருந்து அறிந்து கொள்ளலாம்[5].

இக்கருத்துரைகள் பிரசுரத்திற்காக எழுதப்பட்டவையல்ல. நடைமுறைக்கு முக்கியத்துவம் கொடுத்தல், உலகைமாற்றுதல், சமுகத்தைமுன்னிலைப்படுத்தல், புரட்சிகர நடைமுறைக்குப்பதிலாக வேறுவழி முறைகள் மெய்யியலிற்கில்லை என மெய்யியல் தொடர்பான புரட்சிகரசிந்தனையைக் கொண்டவராக மாக்ஸ் காணப்படுகிறாரென்பதையே இக்கருத்துரைகள் புலப்படுத்துகின்றன. சமூகத்தை இருந்தவாறு விளக்குவதல்ல, அதனை மாற்றுவதே முக்கிய பணியாகும் சூத்திரங்களின் வடிவிற் தரப்பட்ட இக்கருத்துரைகள் விமரிசனரீதியான வாதங்களிற்கான புறவரைவுகளாயுள. இக்கருத்து-ரைகள் தமதமைப்பில் ஜெர்மானிய மெய்யியலின் கலைச்சொற்களைப் பயன்படுத்துவதால், தற்காலமெய்யியலாளர்க்கு சிரமத்தைத் தருவதாயிருப்பினும், புரட்சிகரநடை முறைக்கான கோட்பாட்டுரீதியான பாய்ச்சலாகவுளது. 1845 மாச்சளவில் இக்கருத்துரைகள் எழுதப்பட்ட காலை, மாக்ஸ் ஒருஇளம் புத்திஜீவியாகவும், ரைன் பத்திரிகையின் ஆசிரியருமாயிருந்தார். பொலிஸ் கண்காணிப்பிற்குட்பட்டவராயுமிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவகையில் தொடர்ச்சியான உந்தல்களைத் தருவதற்கான மாக்ஸின் ஞாபகக்குறிப்புகளாய் இக்கருத்துரைகள் உளதெனலாம். இதற்குச் சிறிதுமுந்தியகாலத்திலேயே 1844ம் ஆண்டின் பொருளாதார-மெய்யியற் கையெழுத்துப்பிரதி என்றபெயரில் பிரசுரமான கையெழுத்துப்பிரதியை எழுதுவதில் மார்க்ஸ் ஈடுபட்டிருந்தார். மனித உழைப்பானது கூலியுழைப்பு என்றவடிவத்தில் உழைப்பாளியிலிருந்து எவ்வாறு அன்னியப்பட்டுள்ளது என்ற விடயம் இந்நூலில் ஆராயப்பட்டுள்ளது. ரூஸோ, போயபார்க், புருதோன், கேகல் ஆகியோரின் மெய்யியற்சிந்தனைகளும், அடம்ஸ்மித், றிக்காடோ ஆகியோரின் பொருளியற் சிந்தனைகளும் இக்கால மாக்ஸில் செல்வாக்குச்செலுத்தியது. இதன்காரணமாக இயற்பண்புவாதம், மானிடவாதம் ஆகியவற்றின் செல்வாக்குக்குட்பட்ட கம்யூனிஸ நிலைப்பாடுடையவராகக் மாக்ஸ் காணப்பட்டார். இயற்கை, உழைப்பு என்பனவற்றிலிருந்து மனிதன் அன்னியப்படுதலை இல்லாதொழிப்பதற்கு தனிச்சொத்துடமை இல்லாதொழிக்கப்பட வேண்டுமென்ற முடிவிற்கு இக்காலப்பகுதியில் வந்தார்.

இதேகாலப்பகுதியில் ஏங்கெல்ஸ்சுடன் இணைந்து The German Ideology என்றநூலை எழுதவேண்டி இருந்ததால், கையெழுத்துப்-பிரதியில் குறிப்பிட்ட முன்வரைவுத்திட்டத்தில் காணப்பட்ட விடயங்கள் பற்றிய விரிவானஆய்வு இடைநிறுத்தப்பட்டது. The German Ideology முக்கியமாக இளம் கேகலியவாதிகளிற்கு எதிரான விமரிசனமாயிருந்தது. குறிப்பாக லுட்விக் போயபார்க், புரூணோ, போர், மார், ஸ்ரேயினர் என்பவர்களிற்கெதிரானதாய் இருந்தது. போயபார்க் பற்றிய கருத்துரைகள் இத்தகைய-சந்தர்ப்பத்திலேயே எழுதப்பட்டது. இதனாலேயே அது The German Ideologyயின் பின்னி-ணைப்பாக வெளியிடப்பட்டிருத்தல் வேண்டும். அல்துாஸரின் அபிப்பிராயப்படி மானிட வாதத்திலிருந்து மாக்ஸ் மாறுகிற காலகட்டத்தை மேற்படிகருத்துரைகள் குறிப்பிடுகின்றன. இவரது அபிப்பிராயப்படி 1844ம் ஆண்டுக் கையெழுத்துப்பிரதி மாக்ஸின் மானிடவாத நிலைப்பாட்டிற்குரிய சிந்தனைகளை வெளியிடுகிறது. ஆனால் The German Ideology என்ற நூலோ மானிடவாத நிலைப்பாட்டிலிருந்து விடுபட்டு, சொத்து, அரசு என்பனபற்றிய ஆய்வுகளினூடாக உழைப்புப்பிரிவினைக் கோட்பாடு பற்றிய ஆய்வுகளிற்கு மாக்ஸ் செல்லுவதைப் புலப்படுத்துகிறது. ஜேர்மானியக் கருத்தியல் பற்றிய ஆய்வுகளிலிருந்தே வரலாறு பற்றிய மாக்ஸினது விஞ்ஞான அணுகுமுறை ஆரம்பமாகிறதென அல்துாஸர் வாதிடுகிறார். போயபார்க் கருத்துரைகள் இம்மாற்றத்தை தொடக்கிவைக்கிறதெனவும் குறிப்பிடுகிறார்.

போயபார்க் கருத்துரைகளையும், அவற்றின் வியாக்கியானங்களையும் ஒருசேர ஆராய்ந்தால் இக்கருத்துரைகள் ஒரு புதியநடைமுறைப் பொருள்முதல்வாதம்பற்றிப் பேசுவதை நாம் அவதானிக்கலாம். இலட்சியவாதம் பொருள்முதல்வாதம் எனப் பாரம்பரியமாக இரண்டுபட்டு நின்ற மெய்யியலாய்வில் பொருள்முதல்வாத நிலைநின்று இலட்சியவாதத்தை அதிலும் குறிப்பாக கேகலிய இலட்சியவாதத்தை விமர்சிக்கிற அதேவேளை பாரம்பரிய பொருள்முதல்வாதத்தை விமரிசனரீதியாக அணுகியதன் மூலம் அதன் குறைபாடுகளை அகற்றியதொன்றாகவும் காணப்படுகிறது.

The Essence of Christianity (1841) என்ற நூலில் சமயம் எவ்வாறு மனிதனைத் தன்னியல்பிலிருந்து அன்னியமாக்கிறதென்ற விளக்கத்தை போயபார்க் எடுத்துக்காட்டினார். பூரணத்துவம், இரட்சிப்பு என்ற தன்னியல்புகளை புலன்கடந்த உலகின் பொருளொன்றில் எறியப்படுத்தி, அக்கற்பனைப் பொருளை மனிதன் வழிபடுகிறான். (அதாவது சமயம் மனிதனை அன்னியப்படுத்துகிறது). இத்தவறினை மனிதன் உணர்ந்துகொள்வதன்மூலம் தன் சாராம்சத்தை மீளமைத்துக்கொள்ளலாம். இறைவனிடம் கொடுத்ததை மீளப்பெறுவதன் மூலம் மனிதர்[6] சகோதரத்துவத்துடன் பூமியில் வாழலாமென போயபார்க் எழுதினார். சமயத்தால் அன்னியமான மனிதன் என்ற போயபார்க்கினது கருத்தைக் காட்டுருவாகக் கொண்டு மாக்ஸ் முதலான விமரிசனமெய்யியலாளர்கள் அனைவரும் பிறதுறைகளில் எவ்வாறு மனிதசாராம்சம் அன்னியப்பட்டுப் போய்விட்டதென ஆராயத்தலைப்பட்டனர். கற்பனாவாத சோசலிஸ்டுக்களும் சமூகத்திலிருந்து அன்னியப்படுத்தப்பட்ட முறையிலேயே அதாவது மனிதஇயல்பை அன்னியப்படுத்திய முறையிலேயே இலட்சியசமூகம் பற்றிப் பேசினர்.

மாக்ஸ் சமூகத்தைத் தொடர்புபடுத்தி அன்னியமாதல்பற்றிப் பேசினார். போயபாக் கருத்துரைகளில் இது புலனாகிறது. சமூகத்தில் ஒருபிரிவினர் பிறிதொருபிரிவினர்க்கெதிராக செயற்படுவதும், அரசியல் முரண்பாடுகளுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதரைச் சமயத்தில் அடைக்கலம் தேடவைக்கிறது. ஒருபிரிவினர் மறுபிரிவினரில் தங்கியிருக்கும் நிலையை புரட்சிகர நடைமுறைமூலம் மாற்றுவதே அன்னியமாதல் நீங்குதற்குரிய ஒரேவழிமுறையாகும். அன்னியமாதலிற்கு முடிவுகட்ட மெய்யியலால் முடியாது. அதுபுரட்சியின் மூலமே சாத்தியமாகும். தனிமனிதர்களின் பொருளாதார நிலைப்பாடுகளும், அவர்களின் சமூகஉறவுகளும் புரட்சிகர நடைமுறைமூலம் மாற்றப்படுவதாலேயே அன்னியமாதல் அகன்றுவிடுமென போயபார்க் கருத்துரைகள் உணர்த்திநிற்கின்றன.

மெய்யியலாளர்கள் இதுவரை உலகை விளக்கினார்கள். அதனைமாற்றுவதே எம்முன்னுள்ள பிரச்சனையாகுமென்ற கருத்துரை ஒருபுறம் பாரம்பரியமான மெய்யியல் அணுகுமுறையைக் கண்டிப்பதுடன், மாக்ஸின் அபிப்பிராயப்படி புரட்சிக்கு இட்டுச்செல்வதைத் தவிர வேறுவழி மெய்யியலிற்கில்லை என்பதால், புரட்சியும் மெய்யியலும் ஒன்றிற்கொன்று நேரெதிரானவையென்ற முடிவிற்கு மாக்ஸை இட்டுச்சென்றது.

போயபார்க் பற்றிய கருத்துரையில் மாக்ஸ் புரட்சிபற்றிப் பேசுகிறாரே ஒழிய, வர்க்கப்போராட்டம் பற்றி எத்தகையகுறிப்பையும் தரவில்லை. புரட்சிபற்றிய மாக்ஸினது கண்ணோட்டத்தை ஜெர்மானிய மெய்யியலின் பெறுபேறாகவே கருதவேண்டும். அது மாக்ஸினால் புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்ட தொன்றல்ல. புரட்சிபற்றிய மாக்ஸினது மனதிலிருந்த கருத்து அக்கால பிரெஞ்சு மரபிற்குரியதென தற்கால ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன[7]. இளமைப் பருவத்தில் தீவிர சனநாயகவாதியாகவிருந்த மாக்ஸ், சமூகமறுமலர்ச்சி இயக்கங்களின் புனரெழுச்சி பூர்சுவாக்களின் குடியரசிற்கெதிரான சக்திகளாலும், குறிப்பாக நெப்போலியனின் சர்வாதிகாரத்தினாலும், தொடர்ச்சியான எதிர்ப்புரட்சிச் சக்திகளால் முறியடிக்கப்பட்டமையைக் கருத்திற்கொண்டு, அதனை மாற்றியமைக்க முயற்சியெடுத்தார். புரட்சிகர இயக்கம் உரியபலனைத் தரவேண்டின் அது முழுஐரோப்பிய அளவில் நடைபெறவேண்டுமெனவும், இடதுசாரிகளின் ஆர்வமும் ஆற்றலும் திரட்டப்பட வேண்டுமென்பதிலும் நம்பிக்கை கொண்டிருந்தார். 19ம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே கம்யூனிஸம் பற்றிய கருத்து முளைவிட ஆரம்பித்திருந்தது. கம்யூனிஸத்தை ஒருஊகமாகவோ, இலட்சியமாகவோ அன்றி பரிசோதனையாகவோ கருதாது புரட்சியின் தத்துவங்களைச் சரியாகப்புரிந்துகொண்டு செயற்படுத்துவதன்மூலம் அதனை அடைந்து கொள்ளலாமென்ற முடிவிற்கு மாக்ஸ் வந்தார். எல்லாவற்றிற்கும் மேலாக நடுவழிப்பாதையென ஒன்றில்லையென்ற முடிவிற்கு அவர் வந்திருந்தார். புரட்சி இடைநிறுத்தப்படுமாயின் பிற்போக்குச் சக்திகளே அதனால் நன்மையடையும். ஏலவேயுள்ள அரச இயந்திரத்தையே அவை பாதுகாக்க முயலு-மென்பதுவும் மாக்ஸின் கருத்தாக இருந்தது. எனவே சறுகலில்லாது புரட்சியை முன்னெடுத்து அதனை முழுமைப்படுத்தவேண்டின், அப்புரட்சி சமூகப்புரட்சியாயிருத்தல் வேண்டுமென மாக்ஸ் அபிப்பிராயம் கொண்டிருந்தார்.

ஆனால் புரட்சியை முன்னெடுப்பவர் யார்? 1844ல் இங்கிலாந்து உழைப்பாளிகளின் நிலமை பற்றி ஏங்கல்ஸ் ஒருநூலை எழுதியிருந்தார். றைன் பத்திகையாசிரியராயிருந்த காலத்து மாக்ஸ் சிசிலிய நெசவாளிகளிடையே பெருமளவு நேரத்தைச் செலவழித்திருந்ததடன், அவர்களின் பிரச்சினை தொடர்பாக கட்டுரைகள் எழுதியிருந்தார். இவர்களெல்லோரும் கைத்தொழிற்புரட்சியினால் தொழிலாளர்களாக மாறியவர்கள். நகரங்களில் மிகநெருக்கமாக வறுமையின் பிடியில் சீவித்தனர். வேலை நிறுத்தங்களினால் ஆட்சியின் எதிர்ப்பாளர்களாகவும் மாறத் தெடங்கியிருந்தனர் அரசு கூடியசனநாயக தன்மையுடையதாய் இருத்தல் வேண்டுமென்ற ஆர்வத்தால் இத்தகையமக்களை, விமரிசன அணுகுமுறையுடைய அக்காலப் புத்திஜிவிகள் ‘பொதுமக்கள்”, என்ற பெயரால் அழைக்கத்தொடங்கினர். இப்பொதுமக்கள் ஏலவே அரசிற்கெதிரான போராட்டங்களைத் தொடங்கியிருந்ததால் அரசிற்கெதிரான அப்போராட்டங்களை புரட்சியாக மேற்கொள்ளுமாறு புத்திஜிவிகள் சிபார்சுசெய்தனர்.

மேற்குறித்தநிலைப்பாடு The Holy family (1844) என்றநூல் எழுதப்பட்டகாலத்திலிருந்து Communist Manifesto(1847) என்ற நூல் எழுதப்பட்டகாலம் வரையிலான மாக்ஸினது சிந்தனையிற் காணப்படுகிறது. பூர்சுவா அல்லது சிவில் சமூகம் கலைந்துபோவதை தொழிலாளர்கள் பிரதிபலிப்பதாக மாக்ஸ் இக்காலத்தில் கருதினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சமூகம்பற்றிக் கூறும் அனைத்துத் தத்துவங்களுடனும் தொழிலாளர்களின் நிலமை முரண்படுவதும்,
2. தனிச்சொத்து,இலாபம், தேசப்பற்று, பூர்சுவா தனிமனிதவாதம் என்பனவற்றுடன் ஒத்திசையா விழுமியங்களை தொழிலாளர் கொண்டிருப்பதுவும்,
3. தொழிலாளர்களின் அரசிற் கெதிராக வளர்ந்துவரும் எதிர்ப்புணர்வும் மேற்படி முடிவிற்கு மாக்ஸ் வரக்காரண-மாயிற்றெனலாம்.

மாக்ஸ் தனதுசிந்தனையில் செயல் அல்லது நடைமுறைக்கு முக்கியத்துவம் கொடுத்தார். இதன் காரணமாக கற்பனாவாத நிலைப்பாட்டிற்கெதிரானவராய் இருந்தார். தனது கருத்துரையில் புரட்சிகரநடைமுறைக்கு முதன்மைஸ்தானத்தைக் கொடுத்தார். இதனாலேயே தனதுகாலத்தில் பிரபல்யமாயிருந்த மெய்யியல், சமூகவியல் கோட்பாடுகளிற்கு உரியவாறு சமூகமாற்றம் பற்றிச் சிந்திக்காது, நடைமுறைக்கே முக்கியத்துவம் கொடுப்பவராய்க் காணப்பட்டார். செயற்படுதலை நடைமுறையாக அர்த்தப்படுத்தியதுமட்டுமல்ல, வரலாறுபற்றிய பாரம்பரிய அணுகுமுறையான கடந்தகாலத்தின் அர்த்தத்தைத் தேடுதல் என்பதற்குப்பதிலாக செயற்படுவதற்கான மெய்யியலில் அக்கறை கொண்டிருந்தார். செயற்படுதற்கான மெய்யியலானது மோஸஸ் ஹேஸ்(Moses Hess) மற்றும் இளைய கேகலியவாதிகளின் சிந்தனையாகவிருந்தது. போயபார்க் எதிர்காலத்திற்கான மெய்யியல் என்றதொரு அறிக்கையையும் இக்காலத்தில் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. மாக்ஸ் இதற்கப்பாற் சென்று செயற்படுதலென்பது நிகழ்காலத்திற் செயற்படுவதேயன்றி, செயற்படுதல் பற்றிய பிரகடனத்துடன் நின்று விடுவதில்லையென விமரிசனம் செய்தார். மெய்யியலை செயற்படுதல் பற்றிய மெய்யியலென கூறிக் கொண்டிருப்பதுடன் நின்றுவிடாது, நடைமுறையில் செயலாக வெளிப்படுதல் வேண்டுமென்றார். அத்தகையசெயற்பாடு புரட்சிகரத் தேவைகளுடனும், புரட்சிகர இயக்கங்களுடனும் நேரடியான தொடர்பைக் கொண்டிருக்க வேண்டுமென வாதிட்டார்.

காண்டினுடைய கடமையைச்செய்தல் என்ற நிலைப்பாட்டை பொருளுலகிற் செயற்படுதல் என அர்த்தப்படுத்தியதுடன், 'இருப்பற்றது உண்மையற்றது' என்ற கேகலின் தோற்றப்பாட்டியல் என்ற நூலிற் தெரிவிக்கப்பட்ட கருத்துடன் அதனை இணைத்து மாக்ஸ் பொருள்கொண்டார். மனிதனதும் பிரசைகளினதும் உரிமைகள்பற்றிய நவீனகால மெய்யியலாளர்களின் பிரகடனத்தை அரசியல்ரீதியாக இனங்கண்டு கொண்டதுடன், சமூகக் கோட்பாடுகளில் உள்ளடங்கிய இத்தத்துவங்களை பூர்சுவாசமூகம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், ஒன்றில் அதனைப் புறக்கணித்தோ, அல்லது அதனுடன் முரண்பட்டோ வந்திருக்கிறதென்றும், இதனை மாற்றுவதாயின் இலட்சியவாதத்தை பொருள்முதல் வாதமாக தலைகீழாக மாற்றுவதன் மூலமே சாத்தியமாகுமெனக் கருதினார். இதனை விமரிசனம் என்ற ஆயுதத்தைப்பயன்படுத்தி மெய்யியலை விமர்சிப்பதனால் மாக்ஸ் நடைமுறைப்படுத்தினார். சடத்தின் நேரடித் தொடர்பின்றியதாகவே மாக்ஸினுடைய பொருள்முதல்வாதச் சிந்தனை காணப்பட்டது. மெய்யியல் பற்றியதும், சமூகம் பற்றியதுமான மாக்ஸினுடைய இப்பொருள் முதல்வாத நிலைப்பாடு 19ம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதியில் ஏங்கல்ஸினால் இயற்கைவிஞ்ஞான ஆய்வுகளின் ஊடாக சடப் பொருள் உலகுடன் இணைக்கப்பட்டது. இலட்சியவாத விமரிசனத்தினூடாகவே மாக்ஸினது பொருள் முதல்வாதச்சிந்தனை பெறப்பட்டதால், பாரம்பரிய பொருள்முதல்வாதச் சிந்தனையிலிருந்து வேறுபட்ட ஒன்றாக இருந்தது. இயற்கை, வரலாறு என்பன தொடர்பான இலட்சியவாதிகளுடைய வியாக்கியானங்கள் ஆன்மா, நியாயம், பிரக்ஞை, கருத்து என்பனவற்றை உள்ளடக்கியதாயிருந்தது. நடைமுறையில் இத்தத்துவங்கள் எத்தகைய புரட்சிக்கும் இட்டுச்செல்வதாய் இல்லை. போதனை சார்ந்த தொன்றாகவே இருந்தது (பிளேட்டோவின் இலட்சியஅரசு அரசர்களிற்கான ஆலோசணையாகவே மொழியப்பட்டதை இங்குநாம் கவனத்திற் கொள்ளலாம்). ஆனால் மாக்ஸினது பொருள்முதல்வாதமோ நடைமுறையென்ற தன்புரட்சிகர கருத்தாக்கத்தினால் பாரம்பரியமெய்யியற் சிந்தனைகள் அனைத்திலுமிருந்து வேறுபட்டிருப்பது மட்டுமல்ல, முற்போக்கான சிந்தனையாகவும் இருக்கிறது.

தொகுத்துநோக்கும்பொழுது, மாக்ஸினது பொருள்முதல் வாதச்சிந்தனையும், மெய்யியல் பற்றிய அவருடைய கண்ணோட்டமும் மெய்யியல் பற்றிய பாரம்பரிய விளக்கத்தினதும், போயபாக்கினது பொருள் முதல்வாதச் சிந்தனையினதும் விமரிசனமாகவே அமைந்திருப்பதைக் கண்டுகொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்குறிப்புக்கள்

[1] கால் மாக்ஸ், லூயீ பொனபார்ட்டின் 18ம் புருமோர், முன்னேற்றப்பதிப்பகம், மாஸ்கோ, 1983, பக்12.

[2] Etienne balibar's book 'The Philosphy of Marx, Verso1995. P.7.

[3] Karl Marx, A Contribution to the Critique of Hegel's Philosophy of Right, Progress pub., Moscow1979.

[4] அல்துாஸர் 1918ல் அல்ஜீரியாவில் பிறந்து, பிராண்ஸில் 1990வரை வாழ்ந்தவராவார். மாக்ஸிசம் தொடர்பான தனது கோட்பாட்டுரீதியான ஆய்வுகளால் பிரபல்யமானவர். 1960-70 களில் For Marx, Reading Capital ஆகியநூல்களின் வெளியீட்டைத்தொடர்ந்து இவரதுகோட்பாடு மெய்யியலரங்கில் முக்கியவிவாதப் பொருளாயிற்று. இக்காலத்தில் அமைப்பியல்வாதப் பிரபல்யஸ்தர்களான லெவி ஸ்ரொசஸ், லக்கான், பூக்கோ ரோலன்ட் பர்த் என்பவர்களுடன் அல்துாஸரும் ஒருவராக வைத்து எண்ணப்படுகிறார். மாக்ஸிஸம் நெருக்கடிக்குள்ளாயிருக்கிறதென்பதை ஏற்றுக்கொண்டாலும் அந்நெருக்கடி சித்தாந்தரீதியான நெருக்கடியல்ல எனக்கொண்டு, மாக்ஸிஸத்தை மீள்வாசிப்பிற்கு உட்படுத்தினார். கோட்பாட்டுரீதியான மானிடவாதம், வரலாற்றுநிர்ணயவாதம் போன்ற சிந்தனைகளிற்கேதிராகவே மாக்ஸின் அரசியற்பொருள் முதல்வாதத்திற் கெதிரானவிமரிசனம் என்ற கட்டுரை உளதாக வாதிட்டார். அத்துடன் அக்கட்டுரையே விஞ்ஞானபூர்வமான வரலாற்றின் அடிப்படையெனவும் எடுத்துக்காட்டினார். மாக்ஸினது விஞ்ஞானமுறை பூர்சுவாக் கருத்தியலிற்கு எதிரானதாயிருக்கிற அதேவேளை, கருத்தியலின் பொருளியலானதும், வரலாற்று ரீதியானதுமான பாத்திரத்தை வகிக்கிறதெனவும் எடுத்துக்காட்டினார். வரலாற்றிற்கு எவ்வாறு முடிவில்லையோ அதேபோல கருத்தியலிற்கும் முடிவில்லையென்றார். அல்துாஸர் லெனினது மெய்யியல் தொடர்பான கருத்துரைகளை மீள்மதிப்பீடு செய்து வர்க்கப் போராட்டம் பற்றிய கோட்பாட்டுரீதியான விளக்கமேன Lenin and Philosophy and Other Essays என்றநூலில் வரையறுத்தார். இதனை பொருள்முதல்வாத செல்நெறி, இலட்சியவாதசெல்நெறி என்பனவற்றிற்கிடையிலான முரண்பாடாக Philosophy and the Spontaneous Philosophy of the Scientists என்றநூலில் எடுத்துக்காட்டினார். சீனக்கலாச்சாரப்புரட்சி, 1968ல் பிராண்ஸில் எழுந்த மாணவ-தொழிலாளர் இயக்கங்களின் என்பனவற்றின் செல்வாக்குக் காரணமாக பிற்காலத்தில் அல்துாஸரின் சிந்தனையில் மாற்றங்கள் ஏற்பட்டன. Essays on Self Criticism என்ற அவரது பிற்காலநூல் ஸ்பினோஸாவின் செல்வாக்கிற்கு உட்பட்டது. எவ்வாறாயினும் மாக்ஸிசத்துற்கும் மானிடவாதத்திற்கும் இடையிலான வேறுபாட்டை மீளவலியுறுத்தியதுடன், கருத்துநிலை பற்றிய பொதுக்கொள்கை யொன்றை அல்துாஸர் முன்வைத்தார். சமூகஉறவுகளின் மீளுட்பத்தியை உறுதிசெய்யுமுகமாக தனியார்/பொது நிறுவன அமைப்பிற்கும் தனிநபர்களிற்குமிடையிலான உறவாக கருத்துநிலை பற்றிய பொதுக்கொள்கை உளதென Essays on Ideology என்றநூலில் அல்துாஸர் எடுத்துக்காட்டினார்.

[5] போயபாக் கருத்துரைகள் பின்வருமாறு:

அ. இதுவரைகாலமும் உள்ள பொருள் முதல்வாதத்தின் பிரதான குறைபாடு புலன்வழிபெறப்படும் அறிவானது மனித நடைமுறைக்குரிய செயல் நோக்க முடையதென்பதை உணராது இருந் -தமையேயாகும். மனிதஅறிவென்பதே நடைமுறைப் பயன்பாடுடையது. போயபார்க் இதனை உணரவில்லை.

ஆ. தற்சார்பற்ற உண்மை மனிதசிந்தனைக்குப் பயன்படுமோ அல்லவோ என்பது கோட்பாடுசார்ந்த பிரச்சனையல்ல, அது நடைமுறைப் பிரச்சனையாகும்.

உண்மைநடைமுறைரீதியாக நிறுவப்படல் வேண்டும். உண்மையின் உலகிய-லானதன்மை நடைமுறைரீதியாகச் சிந்திப்பதிலேயே தங்கியுள்ளது. உண்மையை நடைமுறையிலிருந்து தனிமைப்படுத்தியாராய்வது ஒருபுலமை சார் முயற்சியேயல்லாது வேறல்ல.

இ. சூழ்நிலை மனிதனாலேயே மாற்றப்படுகிறதென்பதை மறந்தவர்களிற்கே சூழ்நிலையை மாற்றுவது தொடர்பான பொருள்முதல்வாத கோட்பாடுபற்றிப் போதித்தல் வேண்டும். சூழ்நிலையை மாற்றுதலும், தமது நடத்தையை மனிதர்கள் தாமே மாற்றிக் கொள்வதும் ஏககாலத்தில் நிகளுமென்பதை புரட்சிகரநடவடிக்கையால் மட்டுமே புரிந்து கொள்ளமுடியும்..

ஈ. சமயத்தை நிஜஉலகு, சமயஉலகென இரண்டாகப்பிரிப்பதிலிருந்து போயபார்க் தொடங்குகிறார். ஆனால் நிஜஉலகோ முரண்பாடுகள் நிறைந்ததென்பதை அவர் கவனிக்கத் தவறிவிட்டார். இம்முரண்பாட்டை புரட்சிகரநடைமுறையால் மட்டுமே மாற்றுதல் முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ.புலன்வழிக்கருத்து நடைமுறைக்குரிய தென்பதை போயபார்க் ஏற்கவில்லை.

ஊ. சமூக உறவுகளினடியாகவே மனிதசாராம்சம் பெறப்படுகிறது.

எ. சமயஉணர்வென்பதே சாராம்சத்தில் ஒருசமூகஉட்பத்திப்பொருளேன்பதை போயபார்க் உணரத்தவறிவிட்டார்.

ஏ. சமூகவாழ்க்கையென்பதே அடிப்படையில் நடைமுறைசார்ந்தது.

ஐ. பொருள்முதல்வாதத்தை நடைமுறைசார்ந்த கொள்கையாகக் கருதாமையும்,சிவில் சமூகத்தில் தனிமனிதன் என்ற கற்பனையும் கற்பனாவாத பொருள்முதல்வாதமாகும்.

ஒ. பண்டைய பொருள்முதல்வாதத்தின் நிலைப்பாடு சிவில் சமூகமாகும், புதிய பொருள்முதல் வாதத்தின் நிலைப்பாடு மனிதசமூகம் அல்லது ஒன்றிணைந்த மானிடம் என்பதாகும்.

ஓ. இதுவரைகாலமும் உள்ளமெய்யியலாளர்கள் உலகைப் பலவாறுவிளக்கினார்கள்,ஆனால் அதனை மாற்றுவதென்பதே முக்கியமானது.

[6] Etienne balibar's book 'The Philosphy of Marx,Verso1995. P.20.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துப் புனைகதைகள் பற்றிய ஆய்வு முயற்சிகள்

கலாநிதி ம. இரகுநாதன்

மேற்குநாட்டவரின் ஆட்சியின் விளைவாக 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவிலும் இலங்கையிலும் ஏற்பட்ட நிலவுடைமை அமைப்பின் சிதைவினாலும் முதலாளித்துவ பொருளாதார அமைப்பின் தோற்றத்தினாலும் ஆங்கில ஆட்சியினர் அறிமுகப்படுத்திய ஆங்கிலக்கல்வி, மேலைநாட்டு நவீன இலக்கிய அறிமுகம் முதலிய காரணங்களாலும் தமிழ் இலக்கியப் போக்கில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. இத்தகைய மாற்றங்களின் விளைவாகவே 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நாவல், சிறுகதை ஆகிய இரண்டையும் உள்ளடக்கி நிற்கும் புனைகதை (Fiction) என்னும் இலக்கிய வடிவம் தமிழுக்கு அறிமுகமானது.

தமிழ்மொழியிலே முதன்முதலாக எழுதி வெளியிடப்பட்ட உரைநடை நவீனம் மாயூரம் வேதநாயகம்பிள்ளையின் பிரதாப முதலியார் சரித்திரமே என்பது பொதுவான கருத்தாகும். 1879இல் வெளிவந்த பிரதாப முதலியார் சரித்திரத்தைத் தொடர்ந்து இலங்கையிலும் இம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த வகையில் 1885இல் சித்திலெப்பையினால் வெளியிடப்பட்ட அசன்பேயுடைய கதை என்னும் உரைநடை நவீனமே இலங்கையில் வெளிவந்த முதலாவது தமிழ் நாவலாகும் எனப் பலரும் கருதுவர். ஆனால் இதற்கு முன்னரே காவலப்பன் கதை என்ற மொழிபெயர்ப்பு நாவல் யாழ்ப்பாணத்தில் 1856இல் வெளியிடப்பட்டிருக்கின்றது என்ற செய்தியை திரு.மு. கணபதிப்பிள்ளை கூறுகின்றார்.[1] எனினும் இந்நூல் இதுவரை கிடைக்காததால் இது பற்றி உடனடியாக எதுவும் கூறமுடியாத நிலையே உள்ளது. எவ்வாறாயினும் ஈழத்துத் தமிழ்ப் புனைகதை இலக்கியத்திற்கு சுமார் ஒரு நூற்றாண்டு காலத்திற்கு மேற்பட்ட வரலாறு உண்டு என்பதில் கருத்து வேறுபாட்டிற்கு இடமில்லை.

கடந்த ஒரு நூற்றாண்டு காலத்திற்கு மேலாக ஈழத்தில் எழுதப்பட்டுவந்த புனைகதைகளின் ஆய்வு முயற்சிகள் பற்றி எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். ஆய்வு வசதிக்காக புனைகதை ஆய்வு முயற்சிகளை பின்வருமாறு வகுத்து நோக்கலாம்.

1. ஈழத்துப் புனைகதை ஆய்வு பற்றிய தனிநூல்கள்.
2. தமிழ்ப் புனைகதை பற்றிய ஆய்வு நூல்களில் காணப்படும் ஈழத்துப் புனைகதைகள் பற்றிய ஆய்வு முயற்சிகள்.
3. இலக்கிய வரலாற்று ஆய்வுடன் ஈழத்துப் புனைகதை ஆய்வு பற்றியும் கூறும் நூல்கள்
4. ஆய்விதழ்களில் வெளிவந்த ஈழத்துப் புனைகதைகள் பற்றிய ஆய்வு முயற்சிகள்.
5. ஆய்வரங்குகளில் படிக்கப்பட்ட ஈழத்துத் தமிழ்ப் புனைகதைகள் பற்றிய ஆய்வுகள்
6. சிறுசஞ்சிகைகள் பத்திரிகைகள் முதலியவற்றில் வெளியான ஈழத்துப் புனைகதை ஆய்வு முயற்சிகள்.
7. ஈழத்துத் தமிழ்ப் புனைகதைகள் பற்றிய பட்டமேற்படிப்பு ஆய்வு முயற்சிகள்.
8. ஈழத்துத் தமிழ்ப்புனைகதைகளுக்கு எழுதப்பட்ட ஆய்வு முன்னுரைகள்.

1. ஈழத்துப் புனைகதை ஆய்வுபற்றிய தனிநூல்கள்

ஈழத்துப் புனைகதை ஆய்வு பற்றிய தனிநூல்கள் என்ற வகையில் முதலில் குறிப்பிடப்பட வேண்டியது சில்லையூர் செல்வராஜனின் ஈழத்தில் தமிழ் நாவல் வளர்ச்சி[2] என்னும் சிறு நூலேயாகும். இந்நூலிலுள்ள கட்டுரைகள் 1962இல் எழுதப்பட்டு 1967இல் நூல்வடிவம் பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துத் தமிழ் நாவலின் தோற்றத்தையும் நாளதுவரையிலுள்ள அதன் வளர்ச்சியையும் முழுமையாக ஆராயும் தீவிரமான முயற்சி எதுவும் இதுகாலவரை நடைபெற்றதில்லை எனக்கூறும் செல்வராஜன் ஈழத்துத் தமிழ் நாவல்கள் தோன்றிய நாள்தொட்டு இற்றைவரை அது அடைந்துள்ள மாற்றம் வளர்ச்சி முதலியவற்றை அரசியல், சமூக கலாசார, பொருளாதார காரண காரியத் தொடர்பம்சங்களை முன்வைத்து விமர்சிப்பதற்கு வசதியாக ஈழத்தில் வெளிவந்த நாவல்களின் கையிருப்புக்குக் கணக்கு விபரம் தெரியாத நிலையைச் சுட்டிக்காட்டி, இந்நிலையில் தனது முயற்சியும் விஸ்தாரமான விமர்சனச் சார்பில்லாமல் ஒரு பட்டியல் தொகுப்பைப் போலத் தோன்றக்கூடும் என்கின்றார்.

இவர் 1891இல் வெளிவந்த ஊசோன் பாலந்தை கதை முதல் 1962இல் வெளிவந்ததென்புலோலியூர் செ. நடராஜனின் காலேஜ் காதல்வரை ஏறத்தாள 150 ஈழத்துத் தமிழ் நாவல்கள் பற்றிய விபரத்தைத் தருகின்றார்.

செல்வராஜனின் முயற்சியைத் தொடர்ந்து ஈழத்துப் புனைகதை ஆய்வு தொடர்பாக வெளிவந்த தனிநூல் என்ற வகையில் குறிப்பிடக் கூடியது. நா. சுப்பிரமணியத்தின் ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம் [3] என்னும் நூலாகும். 1970, 72களில் எழுதி 1978இல் வெளியிடப்பட்ட இந்நூல் ஈழத்திலே தமிழ் நாவல் இலக்கியம் தோன்றி வளர்ந்த வகையினை ஆய்வு செய்வதாக அமைகின்றது.

இவர், ஈழத்துத் தமிழ் நாவலின் தோற்றம், சமுதாய சீர்திருத்தக் காலம், எழுத்தார்வக்காலம், சமுதாய விமர்சனக் காலம், பிரதேசங்களை நோக்கி என்ற ஐந்து தலைப்புக்களில் 1885இல் வெளிவந்த அசன்பேயுடைய கதை தொடக்கம் 1977இல் வெளிவந்த ஞானரதனின் புதிய பூமி வரை ஏறத்தாள 450 நாவல்களின் பண்புகளை ஆராய்கின்றார்.

இவர் தனது ஆய்வில் ஈழத்துத் தமிழ் மக்களது சமுதாயப் பிரச்சினைகளைப் பொருளாகக் கொண்டு எழுதப்பட்ட முதல் நாவலாக 1914இல் வெளிவந்த மங்களநாயகம் - தம்பையாவின் நொறுங்குண்ட இருதயம் என்ற நாவலையே குறிப்பிடுகின்றார். மேலும் ஐம்பதுகளில் ஈழத்துத் தமிழ் நாவலுக்கு புதியதொரு பரிமாணத்தைக் கொடுத்து சமூகப் பிரச்சினைகளுக்கான அடிப்படைகளை அணுகித் தீர்வுகூற விழைந்த முதல் நாவலாசிரியராகவும் ஈழத்துத் தமிழ் நாவலுக்கு தேசியச் சாயல் தரமுயன்ற முதல்வராகவும் இளங்கீரனை எடுத்துக் காட்டியுள்ளார்.

1960களின் நடுப்பகுதியிலிருந்து ஏறத்தாழ பதினைந்து ஆண்டுக் காலப்பகுதியில் சமுதாயப் பிரச்சினைகளையே கதைப் பொருளாகக் கொண்டு நாவல்கள் எழுதப்பட்டதாகக் கூறும் நா.சுப்பிரமணியம் இக்காலநாவல்களைப் பொருளடிப்படையில்

1. சாதிப்பிரச்சினை நாவல்கள்
2. அரசியல், பொருளாதாரப் பிரச்சினை நாவல்கள்
3. தோட்டத் தொழிலாளர் பிரச்சினை நாவல்கள்
4. பாலியற் பிரச்சினை நாவல்கள்

என நான்கு பிரிவுகளாகப் பகுத்து ஆய்வு செய்கின்றார்.

நிறைவுரையில், ஈழத்துத் தமிழ் நாவல்களின் பாத்திரப் படைப்பு, மொழிநடை ஆகியவை பற்றிய விரிவான ஆய்வுக்கு இடமுண்டு எனக் கூறியதுடன் அத்தகைய ஆய்வு முயற்சிகள் நடைபெற ஆரம்பித்திருப்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார். மேலும் இவர் தனது நாவலின் பின்னிணைப்பாக ஈழத்துத் தமிழ் நாவல்கள் தொடர்பான விபரப்பட்டியல் ஒன்றையும் இணைத்துள்ளார்.

நா.சுப்பிரமணியம் 1885-1976 வரை வெளிவந்த ஈழத்துத் தமிழ் நாவல்களின் விபரப் பட்டியல்[4] ஒன்றையும், வீரகேசரி பிரசுர நாவல்கள்[5] தொடர்பான பட்டியல் ஒன்றையும் தனித்தனியாக வெளியிட்டுள்ளார். இத்தகைய முயற்சிகளினால் சில்லையூர் செல்வராஜனின் மனக்குறை தீரவாய்ப்பு ஊண்டாகின்றது எனலாம்.

நா. சுப்பிரமணியத்தின் ஆய்வினைத் தொடர்ந்து ஈழத்துப் புனைகதை ஆய்வுபற்றி வெளிவந்த தனிநூல் சி. வன்னியகுலத்தின் ஈழத்துப் புனைகதைகளில் பேச்சுவழக்கு [6] என்பதாகும். நான்கு இயல்களைக் கொண்டு அமைந்துள்ள இந்நூலின் முதலாவது இயலில் இலக்கியத்திற்கும் மொழிக்கும் உள்ள தொடர்பு பற்றியும், பேச்சுமொழியின் முக்கியத்துவம். ஈழத்துப் பேச்சு வழக்கின் பொதுப் பண்புகள், அவை இந்தியப் பேச்சுவழக்குடன் வேறுபடும் தன்மைகள் ஆகியன பற்றி விரிவாக ஆராயப்படுகின்றது. இரண்டாவது. இயலில் ஈழத்துப் புனைகதைகளில் பேச்சு வழக்குக் கையாளப்பட்ட வரலாறு கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது இயலில் பிரதேசக் கிளை மொழிகள் எவ்வாறு அவ்வப் பிரதேசங்களில் எழுந்த புனைகதைகளிலே கையாளப்பட்டுள்ளன என விபரிக்கப்பட்டுள்ளது. நான்காவது இயலில் எத்தகைய புனைகதைகளுக்கு எத்தகைய கிளைமொழி உபயோகிக்கப்பட வேண்டும் என ஓரளவுக்கு வரையறை செய்ய ஆசிரியர் முனைகின்றார். மேலும் பேச்சு வழக்கினை இலக்கியத்திலே கையாளும்போது எழுத்தாளர்கள் எதிர் நோக்கக்கூடிய பிரச்சினைகளையும் இவர் முன்வைக்கின்றார்.

இந்நூலின் வெளியீட்டுரையில் பேராசிரியர் அ. சண்முகதாஸ். "ஈழத்துப் பேச்சு மொழிபற்றி மொழியியல் விஞ்ஞான அடிப்படையிலே ஏற்கெனவே பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாய்வுகளை மேற்கொண்டவர்கள் தத்தம் பேச்சினை அடிப்படையாகக் கொண்டு அல்லது வெளிக்கள ஆய்விலே தாம்பெற்ற தரவுகளை அடிப்படையாகக் கொண்டே ,ஈழத்துப் பேச்சு வழக்கினை ஆராய்ந்தனர். ஆனால் ஈழத்து நவீன இலக்கியங்களிலே பிரதிபலித்துள்ள பேச்சு மொழியினை இலக்காக வைத்து எவருமே விரிவான ஆய்வினை மேற்கொள்ளவில்லை. இந்த வகையில் இந்நூல் இத்துறையிலே முதன் முதலாக மேற்கொள்ளப்பட்ட முயற்சியாக அமையும் சிறப்பினைப் பெற்றுள்ளது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

2. தமிழ்ப் புனைகதை பற்றிய ஆய்வின்போது ஈழத்துத் தமிழ்ப் புனைகதை பற்றியும் கூறும் நூல்கள்

1954இல் வீரகேசரிப் பத்திரிகையின் ஞாயிறு இதழில் 'தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற தலைப்பில் க. கைலாசபதி கட்டுரைத் தொடர் ஒன்றினை எழுதியிருந்தார். எனினும் இவர் இக்கட்டுரையில் ஈழத்துத் தமிழ் நாவல்கள் பற்றி விரிவாக எதையும் குறிப்பிடவில்லை. 1925 இல் நீலகண்டன் அல்லது ஓர் சாதி வேளாளன் என்ற நாவலை எழுதிய இடைக்காடர்வரை அறிவியற் போதனையைப் பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தனர் என்றும் இடைக்காடர் நீதிபுகட்டும் முது மொழிகளையே அத்தியாயத் தலைப்புக்களாகக் கொண்டார் என்றும் மட்டுமே இவர் கூறிச்செல்கிறார்.. ஆனால் இத் தொடர் கட்டுரைகள் 1968இல் நூல் வடிவம் பெற்றபோது நூலின் இறுதியில் இயற்பண்பும் யதார்த்த வாதமும் என்ற தலைப்பில் இளங்கீரனின் நீதியே நீகேள், செ. கணேசலிங்கனின் செவ்வானம் ஆகிய இரு ஈழத்து நாவல்கள் மேற்படி பண்புகளுக்கு உதாரணமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.[7]

தமிழ்நாட்டில் நாவலிலக்கியத்தின் ஏற்ற இறக்கங்களை யொட்டியே ஈழத்துத் தமிழ் நாவலும் வளர்ந்தது. எனக் கூறும் க. கைலாசபதி 1950ஆம் ஆண்டிற்குப் பின்னர் சுதந்திரமடைந்த ஒரு நாட்டிற்குரிய பிரத்தியேகப் பிரச்சினைகள் மெல்ல மெல்லத் தலை தூக்கின, தேசியம், ஜனநாயகம் முதலிய கோட்பாடுகள் தொழிற்படத் தொடங்கின, என்றும் இதனைத் தொடர்ந்து 1956ஆம் ஆண்டின் பின்னர் சோஷலிச இயக்கம் வேகம் பெற்றது என்றும் குறிப்பிட்டுள்ளார். இம்மாற்றப் போக்கு இந்தியாவிலும் நிகழ்ந்ததாயினும் தமிழிலக்கியத்தைப் பொறுத்தவரையில் ஈழத்தில் இது நாவல், சிறுகதை, கவிதை முதலிய துறைகளில் பிரதிபலித்த அளவுக்குத் தமிழகத்தில் இடம்பெறவில்லை என்கின்றார்.

க. கைலாசபதியின் கட்டுரைகள் நூலாக வெளிவருவதற்கு முன்னர் 1967இல் பேராசிரியர் கா. சிவத்தம்பியின் கட்டுரைத் தொகுதியொன்று தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் [8] என்ற தலைப்பில் வெளிவந்தது. தமிழ் இலக்கியத்தினுள் சிறுகதை வளர்ந்து இணைந்த முறைமையினை அதாவது தமிழ்ச் சிறுகதையின் முழுமையான வளர்ச்சியைக் கூறமுற்படும் இந்நூலில் அம்முழுமையான வளர்ச்சியில் இலங்கை எழுத்தாளர் பெறும் இடத்தினை நிர்ணயிக்கும் பொருட்டு இலங்கையில் தமிழ்ச் சிறுகதை பற்றியும் ஆராய்கின்றது. இந்த ஆய்வினூடாக 1930 தொடக்கம் சிறுகதை ஈழத்தில் உருவப் பிரக்ஞையுடன் எழுதப்படலாயிற்று: சி.வைத்திலிங்கம் ', இலங்கையர்கோன், சம்பந்தன் ஆகிய முதல் மூவரது முயற்சியாலும் இலங்கை சிறுகதைத்துறையில் தமிழ்நாட்டுடன் இணைக்கப் பெற்றது. எனக்கூறப்பட்டுள்ளது. மேலும் 1940 - 1945ஆம் ஆண்டு வரை முக்கிய இலக்கிய நிறுவனமாக விளங்கிய மறுமலர்ச்சிக்குழு ஈழத்துச் சிறுகதைகள் ஈழத்துப் பிரச்சினைகளைப் பற்றியனவாக இருத்தல் வேண்டும். என்னும் மரபை உண்டாக்கியது என்றும் 1956இல் இலங்கையில் நடைபெற்ற சமூகப் புரட்சியுடன் தேசிய விழிப்புணர்வு நாடெங்கும் பரவியது என்றும் இக்காலத்திலேயே சிறுகதை தோன்றக்கூடிய சமுதாய மாற்ற நிலை இலங்கைத் தமிழ் மக்களிடையே ஏற்பட்டது. என்றும் இதனைத் தொடர்ந்து தேசிய இலக்கியக் கோட்பாடு தோற்றம் பெற்றதையும் இலங்கை எழுத்தாளர்கள் தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டிலும் கணிக்கப் பெற்றனர் என்றும் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 1960க்குப் பின்னர் பழமைவாதிகளால் சிறுகதை இழிசினர் இலக்கியமெனக் கூறப்பட்டதையும் முற்போக்கு அணியினர் இதற்கு எதிராக யதார்த்த வாதத்தை முன்வைத்ததையும் எடுத்துக்கூறி எவ்வாறாயினும் இலங்கையில் சிறுகதை பூரணப்பபட்ட ஓர் இலக்கிய வடிவாக வளர்ந்துள்ளது என்ற கருத்தும் இந்நூலில் முன்வைக்கப்பட்டுள்ளது.

1977இல் பெ. கோ. சுந்தரராஜனும் சோ.சிவபாத சுந்தரமும் இணைந்து தமிழ் நாவல் நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும் என்ற நூலை வெளியிட்டனர். [9] இந்நூலில் அசன்பேயுடைய கதையிலிருந்து அருள் சுப்பிரமணியத்தின் நான் கெடமாட்டேன் என்ற நாவல் வரையிலான ஈழத்துப் படைப்புக்கள் ஆராயப்படுகின்றன. 1973இல் வெளியான அவர்களுக்கு வயது வந்துவிட்டது. என்ற நாவல் ஈழத்து நாவல் இலக்கியத்துக்குப் பெருமைதருவதோடு ஈழத்துத் தமிழ் நாவலுக்கும் 'வயது வந்துவிட்டது என்பதற்குச் சான்றாக விளங்குகின்றது என்றும் அருள் சுப்பிரமணியம் அ.பாலமனோகரன் மற்றும் இவர்களுக்கு முன்னோடிகளாயிருந்த இளங்கீரன், தேவன், செங்கை ஆழியான், செ. கணேசலிங்கன், எஸ். பொன்னுத்துரை போன்றவர்கள் நாவல்துறைக்கு ஆற்றியுள்ள பணியை அளவிட்டுப் பார்க்கும்போது தமிழ் நாவலின் எதிர்கால வளர்ச்சிக்கு ஈழத்திலிருந்து கணிசமான பங்கு கிடைக்குமென்று தெரிகின்றது என்றும் கூறியுள்ளனர்.

இந்நூலினையடுத்து 1978இல் கா. சிவத்தம்பியின் மற்றொரு நூலான நாவலும் வாழ்க்கையும் என்ற நூல் வெளிவந்தது.[10] இந்நூலில் நாவலின் சமூகவியற் பண்புகள் என்ற கட்டுரையில் யாழ்ப்பாணத்து நிலவுடைமை அமைப்பின் தன்மைகள் எடுத்துக் கூறப்படுகின்றன. மேலும் இலங்கையில் எழுந்த நாவல்கள் வரலாற்று நிலைப்பட்ட சமூக பொருளாதார அரசியல் இயக்கங்களின் பிரதிபலிப்பாக அமைவதாகக்கூறும் கா. சிவத்தம்பி அசன்பேயுடைய கதையிலிருந்து அருள் சுப்பிரமணியம் முதலியோரின் நாவல்கள் வரை அவற்றினூடே காணப்படும் பொருள் மரபினை மட்டிடும்போது இந்த உண்மை புலனாகும் என்று கூறுகின்றார். நூலின் ஆய்வு நோக்கம் வேறாகையால் ஈழத்துத் தமிழ் நாவல்கள் பற்றிய விரிவான ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை.

1980 இல் "தமிழ் நாவல்களில் மனித உரிமைகளும் மக்கள் போராட்டமும் என்ற நூலை தி.பாக்கியமுத்து பதிப்பித்திருந்தார். [11] இந்நூலில் பேராசிரியர் க. கைலாசபதியின் முன்னுரையுடன் தமிழ் நாவல்கள் பற்றிய எட்டுக் கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இதில் ஈழத்து எழுத்துக்களில் மனித உரிமைகளும் மக்கள் போராட்டங்களும் என்ற கட்டுரையொன்றினை ஆர். எஸ். சுகிர்தராஜா எழுதியுள்ளார். இவர் செ. யோகநாதன் செங்கை ஆழியான், டானியல் ஆகியோரின் ஒரு சில படைப்புக்களை மையமாகக் கொண்டு மேற்கொண்ட ஆய்வின் விளைவாக 'பொழுது போக்கிற்காக எழுதப்படும் இந்த நாவல்களில் ஆழமான இலட்சியத் தெளிவை எதிர்பார்ப்பதில் பயனில்லை..... இன்றைய சமுதாயத்தைக் கசக்கிப் பிழியும் பிரச்சினைகளை இவர்கள் இனங்கண்டுகொண்டது பாராட்டத்தக்கதாயினும் அவைகளை இந்த எழுத்தாளர்கள் அணுகிய முறையில் ஒரு கூர்த்த அரசியல், பொருளாதார சமூகப் பார்வை இல்லை, அவைகளைச் சரியான முறையில் எடுத்துச் சொல்லத் துணிவு இல்லை" என்ற கருத்தை முன்வைத்துள்ளார்.

க. கைலாசபதியின் நீண்ட முன்னுரையில் தமிழ் நாவலின் வளர்ச்சி எடுத்துக் கூறப்படுகின்றது. ஏற்ற இடங்களில் ஈழத்துத் தமிழ் நாவல்களும் தொட்டுக் காட்டப்பட்டுள்ளன.

1980 இல் பெ. கோ. சுந்தரராஜனும் சோ. சிவபாதசுந்தரமும் இணைந்து தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும் என்ற நூலை வெளியிட்டனர். [12] இந்நூலில் "ஈழத்தில் தளர்ச்சி" என்ற தலைப்பில் கைலாசபதி, துரை மனோகரன் முதலியோரின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு எழுபதுகள் வரை ஈழத்தில் சிறுகதைத்துறையில் வளர்ச்சி குன்றி இருந்ததை எடுத்துக் காட்டியுள்ளனர். அத்துடன் 1958இல் ஆரம்பித்து 1971, 1977, 1983 ஆகிய ஆண்டுகளில் ஈழத்தில் பரவிய இனக்கலவரத்தீ கடைசி நாள்களில் பிரளயமாகித் தமிழினமே அந்த நாட்டில் அழிக்கப்படும் நிலையில் இலக்கியத்துக்கு மாத்திரம் விடிவுகாலம் எப்போது என்று ஈழத்தமிழர் ஏங்குகின்றனர். என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

3. இலக்கிய ஆய்வின் ஒரு பகுதியாக இடம்பெறும் ஈழத்துப் புனைகதை ஆய்வு முயற்சிகள்

ஈழத்துத் தமிழலக்கிய வளர்ச்சி பற்றி எழுதிய ஆய்வாளர்கள் சிலர் ஈழத்துப் புனைகதை வளர்ச்சி பற்றியும் எழுதியுள்ளார்கள். இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் முதலில் குறிப்பிடத்தக்கது. 1964இல் வெளிவந்த கனக செந்திநாதனின் ஈழத்து இலக்கிய வளர்ச்சி என்னும் நூலாகும். [13] இதன் கண் ஈழத்து இலக்கிய முயற்சிகளினதும் அவற்றின் வளர்ச்சிகளினதுமான வரலாற்றை எழுதியுள்ளேன். முயற்சிகள் நடைபெறுவதற்கான பின்னணியைச் சரித்திர நோக்குடனேயே அணுகியுள்ளேன்.

ஆனால், இலக்கிய வளர்ச்சியின் சரிதத்தைச் சொல்லும் அளவிற்கு மட்டுமே எழுத்தாளர்களுடைய சிருட்டிகளைப் பற்றிய விமர்சனம் இந்நூலில் இடம்பெறுகின்றது. விரிவான விமர்சன முறையைப் பிரக்ஞை பூர்வமாகவே தவிர்த்துள்ளேன் எனக்கூறும் கனக. செந்திநாதன் 1922-1960கள் வரை ஈழத்து இலக்கிய வளர்ச்சியினை ஒவ்வொரு காலகட்டங்களாக வகுத்து நோக்கியுள்ளார்.

1941-50 காலகட்டத்தில் சிறுகதை முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டதை எடுத்துக்காட்டி நவீன சிறுகதை உத்திகளைக் கொண்ட கவர்ச்சிகரமான படைப்புக்களைப் படைத்து ஈழத்துச் சிறுகதைத்துறைக்கு வழிவகுத்த முதல்வர் என்று சி. வைத்திலிங்கத்தைக் குறிப்பிடுகின்றார். மேலும் இவர்களின் படைப்புக்களை மதிப்பிடுவதற்கு மேல்நாட்டு விமர்சன அளவுகோல்கள் பொருத்தமானவையல்ல என்பதும் இவரது கருத்தாகும்.

1951- 60 காலகட்டத்தில் சிறுகதைத் துறையில் பெருமளவு முயற்சிகள் நடைபெற்றதை எடுத்துக் காட்டியதுடன் கதை சொல்லும் உத்திமுறைகளிலே பலவிதப்பட்ட பரிசோதனைகள் நடத்தப்பட்டதையும் குறிப்பிட்டுள்ளார்.

நாவல்கள் என்ற தலைப்பில், ஈழத்திலே நாவல் இலக்கிய முயற்சிகள் மிகவுங்குறைவானது எனக் கூறுவதுடன் ஈழத்து நாவல்கள் பொதுப்படையாக சாய்வு நாற்காலியில் இருந்துகொண்டு, பொழுபோக்குக்காக வாசிப்போருக்கு ஏற்றவையாகவே இருக்கின்றன. மனித சமூகத்தின் அடிப்படை உணர்ச்சிகளையும் எழுச்சிகளையும் இன்ப துன்பங்களையும் பிரதிபலிப்பனவாக அவை அமையவில்லை என்ற கருத்தையும் முன்வைத்துள்ளார்.

1977 இல் அ. சண்முகதாஸ் பதிப்பித்த ஆக்க இலக்கியமும் அறிவியலும் [14] என்ற நூலில் இடம்பெறுகின்ற சிலகட்டுரைகளில் ஈழத்துப் புனைகதைகள் பற்றிய கருத்துக்களும் இடம்பெறுகின்றன. எடுத்துக்காட்டாக: ஆக்க இலக்கியமும் மொழியியலும் என்ற கட்டுரையில் அ. சண்முகதாஸ், இந்த நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து ஈழத்து ஆக்க இலக்கியங்களில் மக்கள் தமிழ் இடம்பிடித்துக்கொண்டு வருவதை எடுத்துக் கூறியதுடன் இன்று ஈழத்து ஆக்க இலக்கியகாரர் மொழியை எப்படி உபயோகிக்க வேண்டும் என்று சிந்திக்க வேண்டியதன் அவசியத்தினை சில படைப்புக்களில் காணப்படும் மொழிப்பிரயோக வழுக்களைச் சுட்டிக்காட்டி விளக்கியுள்ளார்.

ஆக்க இலக்கியமும் பாலியலும் என்ற கட்டுரையில் என். கே. ரகுநாதன் ஈழத்து முற்போக்கு எழுந்தாளர்களில் பிரபலமான ஒருவரான டானியலின் படைப்புக்களில் ஆபாசத்தன்மை இருப்பதை எடுத்துக் கூறி அளவுக்கு மிஞ்சிய பழிவாங்கும் உணர்ச்சிதான் இதற்குக் காரணம் என்று கருதவேண்டியுள்ளதாகவும் கூறியுள்ளார்.

1978 இல் கா. சிவத்தம்பியின் ஈழத்தில் தமிழ் இலக்கியம் என்ற நூல் வெளிவந்தது. [15] இந்நூலில் ஈழத்து ஆக்க இலக்கிய முயற்சிகள் பற்றியும் முற்போக்கு இலக்கியத்தின் தோற்றம் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

1979இல் சி.மௌனகுரு, மௌ. சித்திரலேகா, எம்.ஏ.நு∴மான் ஆகியோர் இணைந்து இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம் என்ற நூலை வெளியிட்டனர். [16] இந்நூலில் ஈழத்து நாவல், சிறுகதை ஆகியவற்றின் வளர்ச்சி பற்றிய தனித்தனிக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. 1970கள் வரையிலான புனைகதை வளர்ச்சியினை இக்கட்டுரைகளில் காணலாம்.

1982இல் எஸ். சிவலிங்கராஜாவும் மயிலங்கூடலூர் பி. நடராசனும் இணைந்து பதிப்பித்த தமிழியற் கட்டுரைகள் [17] என்ற தொகுப்பு நூலில் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகள் என்ற தலைப்பில் கலாநிதி க.அருணாசலத்தின் கட்டுரையும் ஈழத்துத்தமிழ் நாவல் என்ற தலைப்பில் நா. சுப்பிரமணியத்தின் கட்டுரையும் இடம்பெற்றுள்ளன. 1960கள் வரையான ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை வரலாற்றினைக் கூறும். க.அருணாசலம் "தமிழ்நாட்டு எழுத்தாளர்களைவிட இலங்கை எழுத்தாளர்களின் பொருளாதாரக் கண்ணோட்டததின் எதார்த்தநிலை மிக ஆழமானது நுணுக்காமானது என்று சொல்லலாம். இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாளர்களின் தனித்தன்மையே சமுதாயப் பார்வைதான்'' எனத் தமிழ்நாட்டுத் திறனாய்வாளர் ஒருவர் கூறியதை எடுத்துக்காட்டித் தனது கட்டுரையினை முடித்துள்ளார்.

ஈழத்துத் தமிழ் நாவல் பற்றி எழுதிய நா. சுப்பிரமணியம் தனது ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம் என்ற நூலில் கூறப்பட்ட கருத்துக்களை அடியொற்றியே இக்கட்டுரையினை எழுதியுள்ளார். கட்டுரையின் இறுதியில் அண்மைக்காலத்தில் தீவிரமடைந்துள்ள (சிங்கள - தமிழ்) இன உணர்வும் அதன் சமகால விளைவுகளும் தமிழ் நாவலுக்குப் பொருளாகத் தொடங்கியுள்ளன என்பதை எடுத்துக்காட்டி இவ்வகை நாவல்கள் ஈழத்துத் தமிழ் நாவலின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கான திசையை உணர்த்தி நிற்கின்றன என்று கொள்ளலாம். எனக் குறிப்பிட்டுள்ளார்.

1984இல் வெளிவந்த மு.தளைய சிங்கத்தின் ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி [18] என்னும் நூலில் 1956-1963 வரையுள்ள காலப்பகுதியில் இயங்கிய ஈழத்துத் தமிழ் இலக்கியப் போக்குகளை - சமூக - பொருளாதார-அரசியல் வரலாற்றுப் பின்னணிகளுடன் ஆராயப்படுகின்றது (இந்நூலிலுள்ள கட்டுரைகள் திரு. ஆர். எம் நாகலிங்கம் என்பவரை ஆசிரியராகக் கொண்டு கண்டியிலிருந்து சில ஆண்டுகள் வெளிவந்த செய்தி என்ற பத்திரிகையில் 26-01-1964 முதல் 17-01-1965 வரையிலான ஓராண்டு காலம் வாராவாரம் வெளிவந்ததாக இந்நூலின் முன்னுரையில் இருந்து அறிய முடிகின்றது புனைகதைகள் பற்றி நேரடியாக ஆய்வு செய்யப்படாவிடினும் அவற்றின் பின்னணிகளை விளக்கும் வகையில் இந்நூல் முக்கியத்துவமுடையதொன்றாகும்.

1987இல் வெளிவந்த எம். ஏ.நு.்.மானின் மார்க்சியமும் இலக்கியத் திறனாய்வும் [19] என்ற நூலில் ரகுநாதனின் பஞ்சும் பசியும், இளங்கீரனின் நீதியே நீகேள், கணேசலிங்கனின் செவ்வானம் முதலிய நாவல்களை யதார்த்தவாத நாவல்களுக்கு உதாரணமாகக் காட்டிய கைலாசபதியின் கருத்து மறுக்கப்படுகின்றது.

1974இல் கே. எஸ் சிவகுமாரன் எழுதிய Tamil writing in Sri Lanka என்னும் நூலிலும் தமிழ்ப் புனைகதைகள் பற்றிய சில குறிப்புக்கள் இடம்பெறுகின்றன. இவர் ஈழத்துத் தமிழ் நாவல்கள் பற்றிய சில அறிமுகக் குறிப்புக்களை அவ்வப்போது பத்திரிகைகளில் எழுதி வந்துள்ளார். இக்குறிப்புரைகளின் தொகுதியொன்று அண்மையில் நூலாக வெளிவந்துள்ளது.[20]

4. ஆய்விதழ்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட வெளியீடான சிந்தனை ஆய்விதழில் மௌ. சித்திரலேகா ஈழத்துத் தமிழ் நாவல்களில் சமுதாய உணர்வின் தோற்றம் என்ற தலைப்பில் கட்டுரை எழுதியுள்ளார்.[21] மனோன்மணி சண்முகதாஸ் பெண்களும் தமிழ் நாவலும் என்ற கட்டுரையில் ஈழத்து நாவல்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். [22] ம. இரகுநாதன் நடையியல் நோக்கில் ஈழத்து நாவல்களான நிலக்கிளி- காட்டாறு ஆகியவற்றை ஒப்பிட்டு ஆய்வு செய்துள்ளார். [23]. இவரின் மற்றொரு கட்டுரை செங்கை ஆழியானின் நாவல்களில் வரும் உரையாடல்களின் மொழிபற்றி ஆராய்கின்றது.[24]

ம.இரகுநாதன் யாழ்ப்பாணத்துப் புனைகதைகளில் சைவம் என்ற தலைப்பில் தமிழ்நாடு தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற ஆறாவது அனைத்துலக சைவ மாநாட்டில் வாசித்த கட்டுரையின் சுருக்கம் ஆய்வுச் சுருக்க இதழில் வெளியாகியுள்ளது.[25]

5. ஆய்வரங்குகள்

1977இல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற தமிழ் நாவல் நூற்றாண்டுவிழா ஆய்வரங்கில் ஈழத்துத் தமிழ் நாவலின் தோற்றம் பற்றி. ஆ. சிவநேசச்செல்வனும், ஈழத்து நாவல்கள்-ஒரு பொதுமதிப்பீடு என்ற தலைப்பில் சி.தில்லைநாதனும், ஈழத்துத் தமிழ் நாவல்களின் மொழிபற்றி எம்.ஏ.நு.்.மானும் ஈழத்து நாவல்களின் வளர்ச்சிக் கட்டங்கள் பற்றி மௌ. சித்திரலேகாவும் கட்டுரைகள் வாசித்தனர். இவை நூல்வடிவம் பெறவில்லை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1976இல் நடைபெற்ற தென்னாசியவியல் கருத்தரங்கில் 1970க்குப் பின் ஈழத்துத் தமிழ் நாவல்கள் பற்றி. நா. சுப்பிரமணியமும்[26] யாழ்ப்பாணப் பிரதேச நாவல்கள் பற்றி துரை மனோகரனும் [27]. வாசித்த கட்டுரைகள் சிந்தனை இதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ் மன்றம் நடாத்தும் டானியல் நினைவு ஆய்வரங்கில் த.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாமணி, நா.சுப்பிரமணியம், க. தணிகாசலம், செங்கை ஆழியான், ம.இரகுநாதன் ஆகியோர் டானியலைப் பல்வேறு கோணங்களில் ஆய்வு செய்துள்ளனர். இவ்வாய்வுகள் நூல்வடிவம் பெறவில்லை.

6. பத்திரிகைகள் சஞ்சிகைகளில் வெளியான ஆய்வுகள்.

பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் காலத்திற்குக் காலம் ஈழத்துப் புனைகதைகள் பற்றிய ஆய்வுகள் வெளிவந்திருக்கின்றன. இவை பெரும்பாலும் ஆறிமுகக் குறிப்புக்களாகவே அமைந்துள்ளன. ஒருசில கட்டுரைகள் கதைப்பண்பு, நாவல் வளர்ச்சி, மொழி என்பன தொடர்பாகவும் வெளிவந்துள்ளன.

7. பட்டமேற்படிப்பு ஆய்வுகள்

போராதனைப் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்திற்காக க. அருணாசலம் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகள் பற்றி ஆய்வு செய்துள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் திருமதி.மௌ. சித்திரலேகா இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் தேசியவாதம் (1830-1930) என்ற பொருளிலும் துரை மனோகரன் ஈழத்தத் தமிழ் நாவல்களில் கதைத் தலைவன் பாத்திரப் படைப்பு என்ற பொருளிலும் திருமதி .வி.வேலுதாசன் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் சமூகப் பெறுமானங்கள் (1970-90) என்ற பொருளிலும் ஆய்வு செய்துள்ளனர். இவை நூல்வடிவம் பெறவில்லை.

8. ஆய்வு முன்னுரைகள்

1980 களின் தொடக்கத்திலிருந்து ஈழத்தில் ஏற்பட்ட அரசியல், சமூகப் பிரச்சினைகளால் இலக்கிய வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டது. இதனால் புனைகதைகளும் பாதிக்கப்பட்டன. புனைகதைகளுக்கான ஆய்வு முயற்சிகளும் பாதிக்கப்பட்டன. இத் தேக்க நிலையினால் இக்காலத்தில் புனைகதை ஆய்வு முயற்சிகள் புனைகதைகளின் முன்னுரைகளாக, திறனாய்வுரைகளாக வெளிவந்தன. எடுத்துக்காட்டாக சோமகாந்தனின் விடிவெள்ளி பூத்தது (1989) தெணியானின் மரக்கொக்கு (1994) ரஞ்சகுமாரின் மோகவாசல் முதலிய புனைகதைகளுக்கு பேராசிரியர் கா.சிவத்தம்பி எழுதிய முன்னுரைகள் இக்கால ஈழத்துத் தமிழ்ப் புனைகதைகளின் போக்கை எடுத்துக்காட்டுவனவாக அமைந்துள்ளன.

முடிவுரை

ஈழத்திலே புனைகதைகள் தோன்றி ஒரு நூற்றாண்டைக் கடந்துவிட்டாலும் புனைகதைகள் பற்றிய ஆய்வு முயற்சிகள் விரிவான அளவில் மேற்கொள்ளப்படவில்லை. ஆரம்பத்தில் புனைகதைகளின் அறிமுகக் குறிப்புக்களாக ஆரம்பித்த ஆய்வு முயற்சி பின்பு சமூக வரலாற்றுப் பின்னணி, உள்ளார்ந்த பண்பு, மொழிநடை ஆகியவை பற்றிய ஆய்வாக வளர்ச்சியடைந்திருந்தாலும் விரிவான தனி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். ஆய்வு வசதிகளுக்கு ஏற்ற சூழல் - பிரசுர வசதிக்குறைவு முதலிய காரணங்களால் இத்தேக்க நிலை உருவாகியிருக்கலாம். எனினும் பாரபட்சமற்ற ஆய்வு முயற்சிகளின் மூலமே காத்திரமான புனைகதைகள் உருவாகமுடியும் என்பதால் புனைகதை ஆய்வாளர்கள் தமது பணியைத் திறம்பட மேற்கொள்ளவேண்டியது அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்குறிப்புக்கள்

1.	கணபதிப்பிள்ளை, மு.	ஈழநாட்டின் தமிழ்ச்சுடர் மணிகள் 1967, பாரிநிலையம், சென்னை
2.	சில்லையூர் செல்வராஜன்	ஈழத்தில் தமிழ் நாவல் வளர்ச்சி, 1967, சென்னை
3.	சுப்பிரமணியம், நா	ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம், ஜுன் 1978, யாழ்ப்பாணம்
4	....	ஈழத்துத் தமிழ் நாவல்களின் நூல் விபரப் பட்டியல், 1978, யாழ்ப்பாணம்
5	....	வீரகேசரி பிரசுர நாவல்கள், 1980, யாழ்ப்பாணம்.
6.	வன்னியகுலசிங்கம், சி.,	ஈழத்துப் புனைகதைகளில் பேச்சுவழக்கு, 1986, யாழ்ப்பாணம்.
7.	கைலாசபதி, க.	தமிழ் நாவல் இலக்கியம், 1968, சென்னை.
8.	சிவத்தம்பி, கா.,	தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், 1967, சென்னை.
9.	சுந்தரராஜன், பெ.கோ, சிவபாதசுந்தரம், சோ.,	தமிழ் நாவல்-நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும் 1977, சென்னை.
10.	சிவத்தம்பி, கா.,	நாவலும் வாழ்க்கையும், 1978, சென்னை.
11.	பாக்கியமுத்து,தி., (பதிப்பாசிரியர்)	தமிழ் நாவல்களில் மனித உரிமைகளும் மக்கள் போராட்டமும், 1980, சென்னை.
12.	சுந்தரராஜன், பெ.கோ, சிவபாதசுந்தரம், சோ.,	தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும், 1989, சென்னை.
13.	செந்திநாதன், கனக.,	ஈழத்து இலக்கிய வளர்ச்சி, 1964, கொழும்பு.
14.	சண்முகதாஸ், அ., (பதிப்பாசிரியர்)	ஆக்க இலக்கியமும் அறிவியலும், 1977, யாழ்ப்பாணம்.
15.	சிவத்தம்பி, க.	ஈழத்தில் தமிழ் இலக்கியம், 1978, சென்னை.
16.	மௌனகுரு. சி., சித்திரலேகா, மௌ., நு·மான், எம்.ஏ.,	இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத்தமிழ் இலக்கியம், 1979, கல்முனை, இலங்கை.
17.	சிவலிங்கராஜா, எஸ், நடராஜன், பி., (பதிப்பாசிரியர்கள்)	தமிழியற் கட்டுரைகள், 1982, யாழ்ப்பாணம்.
18.	தளையசிங்கம், மு.,	ஏழாண்டு இலக்கிய வளர்ச்சி, 1984, சென்னை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. நு.்.மான், எம்.ஏ, — மார்க்சியமும் இலக்கியத் திறனாய்வும், 1987 சிவகங்கை, தமிழ்நாடு.

20. .... — ஈழத்து தமிழ் நாவல்களிற் சில திறனாய்வுக் குறிப்புகள்., 1999, கொழும்பு.

21. சித்திரலேகா, மௌ., — ஈழத்துத் தமிழ் நாவல்களில் சமுதாய உணர்வின் தோற்றமும், சிந்தனை, தொகுதி 1, இதழ் 1, 1976, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழப்பாணம்.

22. மனோன்மணி சண்முகதாஸ்., — பெண்களும் தமிழ் நாவலும், சிந்தனை, 1976, மேலது.

23. இரகுநாதன், ம., — நடையியல் நோக்கில் நிலக்கிளி - காட்டாறு ஒப்பாய்வு, சிந்தனை, தொகுதி,IV இதழ் I,II1994., மேலது.

24. .... — செங்கை ஆழியானின் நாவல்களில் வரும் உரையாடல்களின் மொழிபற்றிய சில குறிப்புக்கள், சிந்தனை, இதழ்III 1994.

25. .... — யாழ்ப்பாணத்துப் புனைகதைகளில் சைவம், ஆறாம் உலகச் சைவமாநாடு, ஆய்வுச் சுருக்கம், 1997, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

26. சுப்பிரமணியம், நா. — 1970 க்குப் பின் ஈழத்துத் தமிழ் நாவல்கள், சிந்தனை, தொகுதி I, இதழ், 1976.

27. மனோகரன், துரை, — யாழ்ப்பாணப் பிரதேச நாவல்கள், சிந்தனை 1976, மேலது.

பின்னிணைப்பு

பத்திரிகைகளிலும் சிறு சஞ்சிகைகளிலும் வெளியான ஈழத்துப் புனைகதை ஆய்வு முயற்சிகள் பற்றிய விபரங்கள்.

1. செ. கணேசலிங்கனின் செவ்வானம்.- — அரங்கராஜன், தாமரை, 1969.

2. ஈழத்தில் சிறுகதை வளர்ச்சி — -க.கைலாசபதி, இளங்கதிர், 1962 பேராதனை.

3. நொறுங்குண்ட இருதயம் கதையும் கதைப்பண்பும் — - ஆ. சிவநேசச் செல்வன், பாவலர் துரையப்பாபிள்ளை நூற்றாண்டு விழா மலர், 1972, தெல்லிப்பழை.

4. பஞ்சமர் புதிய நாவல் — -பெருமாள், குமரன் 18, டிசம்பர் 1978, கொழும்பு.

5. காலங்கள் சாவதில்லை. — தெளிவத்தை ஜோசெப், குமரன் 41, 1974, கொழும்பு.

6. காலங்கள் சாவதில்லை. — -யுவன், தாயகம், இதழ் 5., கார்த்திகை 1974, யாழ்ப்பாணம்.

7. 1970களுக்குப் பின் ஈழத்துத் தமிழ் நாவல்கள் — செ.யோகராசா, அலை, 1975, கார்த்திகை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. இலங்கையர்கோனும் வழக்குத் தமிழும்	சு. இராஜநாயகன், மல்லிகை, நவம்பர் 1975.
9. அ.நாகலிங்கம்பிள்ளை- ஈழத்து நாவலாசிரியர்	-ம.சண்முகதாஸ், மல்லிகை 93, 1976 மார்ச்.
10. முப்பதுகளில் சிறந்த நாவலாசிரியர்	கலா. பரமேஸ்வரன், மல்லிகை 104, 1976 மார்ச்.
11. ஈழத்து மண்ணின் முதல் நாவல், சி.வை.சின்னப்பபிள்ளையின் வீரசிங்கன் கதை.	நா..சுப்பிரமணியம், மல்லிகை 105, ஜனவரி 1977.
12. அழகவல்லி	-கனக.செந்திநாதன், மல்லிகை 106, பெப்ரவரி 1977.
13. கடந்த கால்நூற்றாண்டுக்கால ஈழத்துத் தமிழ் நாவல் வளர்ச்சி	-துரை மனோகரன், மல்லிகை 106, பெப்ரவரி,1977
14. தமிழ் நாவலும் தத்துவமும்	- ம.சண்முகதாஸ், மல்லிகை 106, 1977.
15. ஒருகூடைக் கொழுந்து - சில குறிப்புக்கள்	- அந்தனி ஜீவா, மல்லிகை 112, 1981.
16. ஈழத்துச் சிறுகதைத்துறையில் மலையகத்தின் பங்களிப்பு	மாத்தளை கார்த்திகேசு, மல்லிகை 152, 1981.
17. 1983 ஆம் ஆண்டு ஈழத்துப் புனைகதைகள்	ச. முருகானந்தன், மல்லிகை, பெப்ரவரி, 1984.
18. நாளை- நாவல் மதிப்பீடு	- சி.தில்லைநாதன், மல்லிகை, பெப்ரவரி, 1984.
19. டானியலின் படைப்புக்களில் பேச்சுமொழி	அ.சண்முகதாஸ், தமிழோசை, 1987. தமிழ்மன்றம், யாழ். பல்கலைக்கழகம்.
20 1978க்குப் பின் ஈழத்தின் தமிழ் நாவலிலக்கியம்	- நா. சுப்பிரமணியன், மல்லிகை, யூன், யூலை 1988.
21. நானும் எனது நாவல்களும்	செங்கை ஆழியான், மல்லிகை, செப்ரம்பர், ஒக்ரோபர் 1989 முதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைகள்

1. தமிழில் வெளிவந்த முதலாவது சரித்திர நாவல் மோகனாங்கி -சோ.சிவபாதசுந்தரம், தினகரன், 1972, கொழும்பு.
2. பஞ்சப்பட்ட மக்களின் வாழ்வைச் சித்திரிக்கும் பேரோவியம் - க. கைலாசபதி, தினகரன், 1972.
3. அசன்பே கதைக்கோர் அறிமுகம். -கமாலுதீன், தினகரன், 1974.
4. வ.அ.இராசரத்தினம் எழுதிய கிரௌஞ்சப் பறவைகள் - குணசிங்கம், வீரகேசரி, 1976, கொழும்பு.
5. போராளிகள் காத்திருக்கின்றனர். -அ.சண்முகதாஸ், வீரகேசரி, 1976.
6. ஆரம்பகால நாவல்களில் சமுதாய நோக்கம் -கலா பரமேஸ்வரன், தினகரன் 1976.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தமிழ் சிங்கள நாவல்களின் தோற்றம்

சாமிநாதன் விமல்

1. நாவல்: ஒரு சொல்லியல் அடிப்படையிலான (Etymological Sense) வரைவிலக்கணம்.

ஆங்கில இலக்கியத்தில் "Novel" எனப்படும் இலக்கிய வகையைக் குறிக்க தமிழ் இலக்கியத்தில் நாவல் என்ற பெயரும் சிங்கள இலக்கியத்தில் நவகதா என்ற பெயரும் வழக்கத்திலுள்ளன. ஆங்கில மொழிக்கு "Novel" என்னும் சொல் 'புதியது' என்ற பொருளுள்ள இத்தாலியச் சொல்லான "Novella" என்ற சொல்லில் இருந்து வந்து சேர்ந்துள்ளது.[1] இலத்தீன் மொழி "Novellus" என்ற சொல்லிருந்து இத்தாலி மொழிச் சொல்லான "Novella" என்ற சொல் பிரிந்துள்ள தாகவும் அதிலும் 'புதிய' என்ற பொருளை உள்ளடக்குவதாகவும் R.Dhandayudhan கூறுகிறார்.

"The word "novel" is derived from the latin adjective "novellus" deminutive of nouns meaning now. Thus when applited to fiction it means a new tale or Story. The English word "novel" stemming from the Italian "Navella" suggests a new kind of anecodotal narrative that claims to be both recent and ture:[2]

நாவல் இலக்கியத்தைக் குறிக்கச் சிங்கள மொழியில் பயன்படுத்தப்படும் சொல்லான "நவகதா" என்ற சொல்லின் பொருளும் "புதிய கதை" என்பதேயாகும். எனவே சிங்கள இலக்கியத்திலும் நாவல் இலக்கியத்தை அறிமுகப்படுத்தும் போது "புதிய" (New) என்ற கருத்துக்கு முக்கியத்துவம் வழங்கியுள்ளமை தெளிவு. தமிழ் மொழியில் "Novel" என்பதைக் குறிக்க ஆங்கிலத்தில் நாவல் என்ற சொல்லே கூடுதலாகப் பயன்படுத்தப் பட்டாலும் "நவீனம்" "புதினம்" என்ற சொற்களும் வழக்கத்தில் உள்ளன. "நாவல் என்னும் சொல்லே புதுமை என்ற பொருளுடையது. இதனாலேயே நாவலைப் 'புதினம்' என்று குறிக்கும் வழக்கம் தமிழில் எழுந்தது " என மா. இராமலிங்கம் கூறுகிறார்.[3]

ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் "Novel" என்பதைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சொல் ஒட்டு மொத்தமாகப் "புதிய" என்ற பொருளை உள்ளடக்கியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. நாவல் இலக்கியத்தில் உள்ளடங்கும் இப்புதிய தன்மை, உலக இலக்கியத்தில் புதியதோர் இலக்கியமாக நாவல் இலக்கியத்தைத் தோற்றம் பெறவைத்ததோடு, சமூகச் சூழலுடன் தொடர்புறுத்தியுமுள்ளது.

1.2 புதியதோர் இலக்கியவடிவமாக நாவல் இலக்கியத்தின் தோற்றம்.

"Novel" என்ற சொல்லுக்குள் உள்ளடங்கும் பொருளின்படி நாவல் என்பது "புதிய" என்ற பண்பினை முதன்மையாகக் கொண்டுள்ள புதியதோர் இலக்கியமாகும். புதியதோர் இலக்கியத்தின் தோற்றம் என்பது புதியதோர் சமூக மாற்றத்தின் விளைவாகும். பெரும் சமூக மாற்றங்களுடன் சில கலை இலக்கியங்கள் புதிதாகத் தோற்றம் பெறுவதையும் சில கலை இலக்கியங்களில் முக்கியமான மாற்றங்கள் ஏற்படுவதையும் இன்னும் சில கலை இலக்கியங்கள் அழிந்து போவதையும் கலை இலக்கியங்களின் வரலாற்றில் காணமுடியும். புதியதோர் இலக்கியமான நாவல் இலக்கியத்தின் தோற்றமும் முக்கியமானதொரு சமூக மாற்றத்தின் விளைவாகும்.

நாவல் இலக்கியம் என்பது மேலை நாட்டு இலக்கியங்களில் நவீன இலக்கிய காலகட்டத்துடன் தோற்றம் பெற்ற இலக்கியமாகும். எதார்த்த வாதத்தினை (Realism) முதன்மையாகக் கொண்டுள்ள நவீன இலக்கியங்களுள் நாவல் இலக்கியத்திற்கு முக்கிய இடமுண்டு. இலக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றில் இந்த நவீன (Modern) காலகட்ட மேலைத்தேச தத்துவ மரபில் நவீன காலகட்டத்துடன் தொடர்புடையது, கைத்தொழில் வளர்ச்சியுடன் ஏற்பட்ட முதலாளித்துவ புரட்சியின் விளைவாக நவீன தத்துவத்தின் ஆரம்பம் நிகழ்ந்தது. கி.பி 15ஆம் நூற்றாண்டில் இருந்து ஆரம்பமாகும் இந்த நவீன தத்துவத்தின் (Modern Philosophy) சமூகப் பின்னணியை அ. மார்க்ஸ் இவ்வாறு விவரிக்கிறார்.

“பிரபுத்துவத்தின் வீழ்ச்சி முதலாளித்துவத்தின் தோற்றம் ஆகியவற்றோடு நவீன காலம் தொடங்குகிறது. ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவத்தின் ஏதேச்சதிகாரம் புரட்டஸ்டன்ட் மதத்தால் கேள்விக்குள்ளாக்கப்பட்ட சூழலில் பிரபஞ்ச முழுமைக்கான சிந்தனைகள் என்பதற்குப் பதில் தேசிய அளவில் சிந்தனைகள் முன்வைக்கப்படடிருந்த பின்னணியில் மதவியலிலிருந்து மேலைத்தத்துவம் தன்னை விடுவித்துக் கொண்டது.

விசுவாசத்தின் பிடியிலிருந்து தன்னை விலக்கிக் கொண்டு பகுத்தறிவு கோலோச்சிய காலகட்டமாகவும் இதனைச் சொல்லலாம். இயற்பியல், கணிதம், வானியல், உடற்கூற்றியல் முதலிய துறைகளில் மிக முக்கியமான அறிவியற் கண்டுபிடிப்புகள் 16, 17 ஆம் நூற்றாண்டுகளில் தோன்றியதை நாம் அறிவோம். நியூட்டன், தெகார்தே, கெப்ளர், வெசாலியஸ் போன்றோர் இத்துறையில் குறிப்பிடத்தக்க கருத்துரு வாக்கங்களுக்கு காரணமாயிருந்தனர். துப்பாக்கி மருந்து, அச்சுத் தொழில் நுட்பம், திசைகாட்டி ஆகிய கருவிகளின் தோற்றத்தோடு நவீன தத்துவத்தை இணைத்துரைப்பது மேலைத் தத்துவ வரலாற்றை எழுதுபவர்களின் வழக்கம். பிரபுத்துவக் கோட்டைகளின் தகர்விற்கும், கருத்துப் பரவல் விகசிப்பிற்கும் அதிகாரச் செயற்பாடுகளுக்கும் புதிய புவியற் புலங்களைக்காணும் பராக்கிரமச் செயற்பாடுகளுக்கும் இவை வழிவகுத்தன.

இந்தச் சமூகச்சூழலில் நாவல் இலக்கியத்தின் தோற்றம் என்பது நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பை உடைத்துக் கொண்டே முதலாளித்துவ சமுதாயத்தின் தோற்றத்துடன் தொடர்புபட்டது. கி.பி. 18ஆது நூற்றாண்டில் ஐரோப்பியச் சமூகங்களில் இந்த முதலாளித்துவ சமூக அமைப்பு தோற்றம் பெற்றது. நாவல் இலக்கியததின் தோற்றம் புதிய சமூக அமைப்பினால் முன்வைத்த அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் அமைந்தது.

முதலாளித்துவ சமூக அமைப்பில் நாவல் இலக்கியம் தோன்றும் வரையில் நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் காவிய இலக்கியமே முதன்மையான கலை இலக்கியமாக இருந்தது. நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பில் மதிப்பீடுகள் (Values) நோக்கங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அச்சமுதாயத்தின் அரசுகள் மேற்குடியினர் ஆகியவர்களின் நலன் பேணுவதாக இந்தக் காவிய மரபை அமைத்திருந்தது. அரசர், மேற்குடியினர் போன்றோரைக் காவிய நாயகர்களாகக் கொண்ட காவிய மரபின் படி தெய்வாம்சம் பெற்ற காவிய நாயகர்களும், கற்பனைவாதமும் (Romanticism) நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் முதன்மைக் கலையாகிக் காவிய இலக்கியத்தில் வீழ்ச்சியடைந்து எதார்த்த வாதம் (Realidsm) கலை இலக்கிய அம்சங்களில் உள்ளடக்க வேண்டிய முக்கிய பண்பாகியது. இந்த எதார்த்த வாதமே நாவல் இலக்கியத்தின் முக்கிய பண்பாகும். புராதன இலக்கியத்தில் இருந்து நவீன இலக்கியத்தை வேறுபடுத்தும் பிரதான அம்சமும் இந்த எதார்த்த வாதமே ஆகும்.

நாவல் இலக்கியத்தின் தோற்றத்திற்கு நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பை உடைத்துக் கொண்டு வளர்ந்த முதலாளித்துவ சமுதாயத்தில் ஏற்பட்ட பல மாற்றங்கள் காரணங்களாகின. கைத்தொழில் வளர்ச்சியுடன் சமூகத்தில் ஏற்பட்ட மனிதாபிமான நோக்கங்களைக் கொண்ட சீர்திருத்தங்கள், கல்வி முறை ஆகியவை நாவல், இலக்கியத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் வழிவகுத்தன. என Ian watt கூறுகிறார்.

“The Following Changes in Society paved the way for the novel: Democracy and abolition of privileges humantarian reform return to nature movements, education reforms and glorication of feeling” [5]

இந்த சாதகமான காரணங்களின் செல்வாக்கினைப் பெற்றுத் தோன்றிய நாவல் இலக்கியத்தின் முதல் நாவலாக கருதப்படுவது சாமுவேல் றிசட்சன் எழுதிய “pamela” ஆகும்.

“Samuel Richardson`s “ Pamela” which appeared in January 1741 is considered to be the frist Novel” 6

இவ்வாறு உலக இலக்கியங்களுள் நாவல் இலக்கியத்தின் தோற்றம் என்பது ஐரோப்பிய சூழலில் நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைத்துக் கொண்டு முதலாளித்துவ சமூக அமைப்பின் தோற்றத்துடன் கலை இலக்கியத் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவாக நிகழ்ந்துள்ளது.

1:3 இலங்கைத் தமிழ் சிங்கள இலக்கியங்களில் நவீன இலக்கிய காலகட்டத்தின் ஆரம்பம்.

ஐரோப்பிய சமூகங்களில் முதலாளித்துவ சமூக அமைப்பின் தோற்றம் நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பை வெடித்துக் கொண்டு புரட்சிகரமாக நிகழ்ந்தது. புராதன இலக்கியக் காலகட்டத்தில் இருந்து நவீன மாற்றங்களின் விளைவாகவே நிகழ்ந்தது. எனினும் இலங்கைச் சமுதாயத்தின் முதலாளித்துவம் அவ்வாறான சமூகப் புரட்சியின் விளைவாக தோன்றவில்லை. நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பு முற்றாக அழிந்து முதலாளித்துவம் பிறக்கவில்லை. அதற்கு மாறாக நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பில் சிற்சில மாற்றங்கள் காலனித்துவ ஆட்சியின் கீழ் ஏற்பட்டன. நிலப்பிரபுத்துவ சமூகத்தின் மேற்குடியினரே காலனித்துவ ஆட்சியின் கீழ் முதலாளித்துவ சமூகத்திலும் மேற்குடியினராகினர். எனவே இலங்கையில் முதலாளித்துவம் வளர்ச்சியடைந்ததில்லை. அதற்குப் பதிலாக வளர்ச்சியடையாத முதலாளித்துவ அமைப்பொன்று இலங்கையில் தோன்றியது. இலங்கைச் சமூக அமைப்பிற்குள் இருந்து வெடித்த புரட்சிகர சமூக மாற்றமாக முதலாளித்துவம் பிறக்காமல் காலனித்துவ ஆட்சியின் கீழ் வெளியில் இருந்து கொண்டு வந்து சேர்க்கப்பட்ட அம்சமாக முதலாளித்துவ சமூகப் பண்புகள் இலங்கைத் தமிழ் சிங்கள இலக்கியங்களில் புராதன இலக்கியத்திற்கும், நவீன இலக்கியத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் காலனித்துவ சமுதாயத்தில் தொடர்பாக ஆராயும் போது மேற் குறிப்பிட்ட சமூக மாற்றங்களையும் இலங்கைச் சமுதாயத்தில் அம்மாற்றங்கள் ஏற்பட்ட முறை பற்றியும் கவனத்தைச் செலுத்துவது மிகவும் முக்கியமாகும்.

இலங்கை ஆட்சி அதிகாரத்தை ஐரோப்பிய காலனித்துவத்தின் கீழ்க் கொண்டு வந்த பின் அதுவரை காலம் இலங்கைத் தமிழ் சிங்கள இலக்கியங்களில் செல்வாக்குப் பெற்ற இலக்கியமாக இருந்த இந்திய இலக்கியத்தை நீக்கி அந்த இடத்தை ஐரோப்பிய இலக்கியங்கள் குறிப்பாக ஆங்கில இலக்கியங்கள் பெற்றுக் கொண்டன. ஆங்கில மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களாகிய பிரித்தானியர்களின் காலனித்துவ ஆட்சியின் கீழ் இலங்கையர் வாழவேண்டி நேர்ந்ததால் ஆங்கில மொழியே அரச மொழியாகியது, எனவே ஆங்கில மொழி ஊடாக ஆங்கில இலக்கியச் செல்வாக்குகள் இலங்கைத் தமிழ் சிங்கள இலக்கியங்களுக்குக் கிடைக்கத் தொடங்கின. இவ்வாறு ஆங்கில மொழி ஊடாக நவீன இலக்கியங்களின் செல்வாக்குகளைப் பெற்றதன் காரணமாக இலங்கைத் தமிழ் சிங்கள இலக்கியங்களில் மாற்றங்கள் ஏற்பட்டன. இலங்கைத் தமிழ் சிங்கள நாவல்களின் தோற்றமும் அவ்வாறான மாற்றங்களின் விளைவாகும்.

1:4 இலங்கைத் தமிழ் சிங்கள நாவல் இலக்கியங்களின் தோற்றத்திற்குச் சாதகமான சமூகப்பின்னணி

1.4.1 பத்திரிகை, வார சஞ்சிகைகளின் தோற்றம்

கைத்தொழிற்றுறைகளின் வளர்ச்சியின் விளைவாக அச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்தமை கலை இலக்கியத் துறைகளில் பெரும் வளர்ச்சிக்குக் காரணமாகியது. கலை இலக்கிய இரசனை பெரும் கூட்டத்திற்குச் சென்றடைய அச்சு இயந்திரம் மிக முக்கிய பங்களித்தது. நவீன இலக்கியத்தின் வளர்ச்சிக்கு அச்சு இயந்திரம் இன்றியமையாத பொருளாகியது. நாவல் இலக்கியத்தின் வளர்ச்சிக்கு அச்சு இயந்திரத்தின் பங்களிப்புத் தொடர்பாக R.Dhandayudam இவ்வாறு கூறுகிறார்.

" Men while a new reading public had been preparing in numbers of sufficient to encourage a democratic Literary from the Technological perfiting also promised them for more number of copies"[7]

இந்த அச்சு இயந்திரத்தின் பயன்பாடு கிறிஸ்தவ சமயப்பிரசார நடவடிக்கைகளின் விளைவாக இலங்கைக்குக் கிடைத்தது. முதன் முதலாக சிங்கள அச்சு எழுத்துகள் 1734 இல் கிறாபியெல் என்பவரால் உருவாக்கப்பட்டன எனவும், முதலாவது சிங்கள அச்சகசாலை ஒல்லாந்த ஆட்சியில் 1736 இல் அமைக்கப்பட்டது எனவும் எதிரிவீர சரத்சந்திரா கூறுகிறார். 8 இந்த அச்சகத்தில் அச்சிட்ட 41 பக்கங்கள் கொண்ட ஐந்து மன்றாடுகள், பத்துக் கட்டளைகள், பன்னிரண்டு வழிபாடுகள் ஆகியவை உள்ளடங்கிய நூலே இலங்கையில் அச்சிடப்பட்ட முதற் சிங்கள நூலாகக் கருதப்படுகிறது. இந்த அச்சகம் ஒல்லாந்தர்களிடமிருந்து ஆங்கிலேயர்களுக்கு மாறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பும் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பும் நோக்கத்துடன் தொடராகச் சிங்களப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. கிறிஸ்தவ சமயத்தைப்பரப்ப இத்தகைய அச்சகங்கள் பல அமைக்கப்பட்டதன் விளைவாகக் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பும் நோக்கமாகக் கொண்டுள்ள வெளியீடுகளும் அதிகரித்தன. அதற்கு எதிராகப் பௌத்தர்களின் அனுசரணையுடன் அச்சகங்கள் அமைக்கப்பட்டுப் பௌத்த சமய மறுமலர்ச்சி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. 1862இல் அமைக்கப்பட்ட "லோகோபாகார யந்திராலய" எனப்படும் அச்சகம் அவ்வாறு பௌத்த சமயத்தைப் பரப்பும் நோக்கமாகத் தொடங்கப்பட்ட முதற் சிங்கள அச்சகமாகும்.

இலங்கைத் தமிழ் இலக்கியத்திற்கும் அச்சு இயந்திர பயன்பாடு கிறிஸ்தவ சமயம் பரப்பும் நடவடிக்கைகளின் விளைவாகவே கிடைத்தது.

"மிசனரிமாரே முதலில் யாழ்ப்பாணத்தில் அச்சுக் கூடங்களை நிறுவினர். சமயத் தேவைக்காகப் பத்திரிகைகள், துண்டுப் பிரசுரங்கள் முதலிய தகவற் தொடர்புச் சாதனங்களை அவர்கள் பயன்படுத்தினர். 1923ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாணத்துண்டுப்பிரசுர சங்கம் (Jaffna Tract Society) நிறுவப்பட்டது. இதன் மூலம் கிறிஸ்தவ மதம் சம்பந்தமான பல்வேறு துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. சமய உண்மைகளின் விளக்கங்கள் சமய கண்டனங்கள் ஆகிய பலவும் இத்துண்டுப் பிரசுரங்களில் இடம் பெற்றன. கிறிஸ்தவ மதம் சம்பந்தமான பல்வேறு துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. சமய உண்மைகளின் விளக்கங்கள், சமய கண்டனங்கள் ஆகிய பலவும் இத்துண்டுப் பிரசுரங்களில் இடம் பெற்றன. கிறிஸ்தவரின் இதே வழியினைச் சைவரும் கைக் கொண்டனர். ஆறுமுகநாவலரும் அவரைத் தொடர்ந்து சங்கரபண்டிதர், செந்திநாதையர், தாமோதரம்பிள்ளை, கைலாயபிள்ளை போன்ற சைவப் பெரியார்களும் சிறு பிரசுரங்கள் பலவற்றை வெளியிட்டுள்ளனர்.[9]

அச்சு இயந்திரத்தை உபயோகித்துக் கொண்டு பத்திரிகைகளும், வார சஞ்சிகைகளும் வெளிவரத் தொடங்கியதன் காரணமாக உரை நடை இலக்கியத்தின் வளர்ச்சி தீவிரமடைந்தது. கிறிஸ்தவமிசனரிகள் தம் அச்சக வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டு கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பும் நோக்கத்துடன் இலங்கையில் தமிழ், சிங்கள பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும் ஆரம்பித்தனர். இலங்கையில் முதலாவது தமிழ் பத்திரிகையாக, அமெரிக்க மிசனரி சார்பில் 1841இல் இருந்து 'உதய தாரகை' எனப்படும் பத்திரிகை வெளிவந்தமையும்[10] முதற் சிங்களப் பத்திரிகையாக 1860 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் இருந்து 'லங்கா லோகய' பத்திரிகை வெளிவந்தமையும் இதற்கு உதாரணங்களாகும்''[11] கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பும் நோக்கத்துடன் இவ்வாறான தமிழ், சிங்கள பத்திரிகைகள் ஆரம்பித்ததால் பௌத்த, சைவ, இஸ்லாம் சமயங்களைப் பரப்பும் நோக்கத்துடன் 1862இல் 'லக்மினி பஹன' எனப்படும் சிங்களப் பத்திரிகையும், சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள் சார்பில் இலங்கை நேசன், சைவாபிமானி, சைவ உதயபானு, இந்து சாதனம், ஆகிய தமிழ்ப் பத்திரிகைகளும், முஸ்லிம் நேசன், சைபுல் இஸ்லாம் ஆகியன இஸ்லாமிய சமயத்தை முதன்மையாகக் கொண்டு தமிழில் ஆரம்பிக்கப்பட்டன. முதற் சிங்கள சஞ்சிகையாக' மாசிக தேக்க (மாதாந்த பரிசு)' எனப்படும். சஞ்சிகை 1832இல் இருந்து வெளிவரத் தொடங்கியது. கிறிஸ்தவ வேத புத்தகத்தில்வரும் கதைகள் இதில் மொழி பெயர்ப்புக்களாகப் பிரசுரமாயின. பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் பயன்படுத்தப்பட்டு கிறிஸ்தவ மிசனரிகளும், பௌத்த, சைவ, இஸ்லாம் சமயங்களைச் சார்ந்தவர்களும் மேற்கொண்ட சமயப் பிரசார நடவடிக்கைகள் உரைநடை இலக்கியங்களின் வளர்ச்சிக்கும், நாவல் இலக்கியத்தின் தோற்றத்திற்கும் முக்கிய காரணமாகவே அமைந்தன.

1.4: சமயப் பிரசார நடவடிக்கைகளும் உரைநடை இலக்கியத்தின் வளர்ச்சியும்

காலனித்துவ ஆட்சியின் கீழ் இலங்கைச் சமுதாயத்தில் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிராகப் பௌத்த சைவ, இஸ்லாமிய சமயங்களைப் பரப்பும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படத் தொடங்கின. இந்த சமய பிரசார நடவடிக்கைகள் உரைநடை இலக்கியத்தின் வளர்ச்சிக்கும், நாவல் இலக்கியத்தின் தோற்றத்திற்கும் தமிழ் உரைநடை இலக்கியத்தின் வளர்ச்சிக்கும் சாதகமாக அமைந்தன. தமிழ் உரைநடை இலக்கியத்தின் வளர்ச்சிக்கும் நாவல் இலக்கியத்தின் தோற்றத்திற்கும் சமயப் பிரசார நடவடிக்கைகளின் செல்வாக்கினை கா. சிவத்தம்பி இவ்வாறு விவரிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வரலாற்று ரீதியாகப் பார்க்கும் பொழுது வசன வியாப்தியில் முதற் கட்டமாக அமைவது கிறிஸ்தவ தொடர்பு முயற்சிகளே. கிறிஸ்து பற்றி தொடர்பினை ஏற்படுத்த விரும்பிய பாதிரிமாரது உரைநடை முயற்சிகளும், அத்தொடர்பினை வெறுத்தும், மறுத்தும் புதிய இந்து மதத் தொடர்பினை ஏற்படுத்த விரும்பிய நாவலர் முதலியோரது உரைநடை முயற்சிகளும் உரைநடையை உயர் இலக்கிய நிலையில் இருந்து சர்வ ஜனச்சொத்தாக்கும் பணியைச் செய்தன. நாவலர் பால பாடங்களிற் காணப்படும் மொழி நடைக்கும் யாழ்ப்பாணச் சமய நிலைத்துண்டுப் பிரசுரத்திற் காணப்படும் மொழி நடைக்குமுள்ள வேறுபாடு இவ்வுண்மையை உணர்த்தும், மதத் தொடர்பு காரணமாகவே பத்திரிகைகள் சஞ்சிகைகள் அறிமுகப்படுகின்றன. [13]

சிங்கள சமூகத்திலும் இத்தகைய கிறிஸ்தவ சமயப் பிரசார நடவடிக்கைகளும் அதற்கு எதிராக பௌத்த சமயத்தை பிரசாரிக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படத் தொடங்கின. கிறிஸ்து இலக்கிய சங்கத்தால் (The Christian Literature Society) வெளியிட்ட கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்த கதைகளும் கிறிஸ்தவ பாதிரிமார்களின் சரித்திரக் கதைகளும் 19 ஆம் நூற்றாண்டின் கடைசிக் கட்டத்தில் கூடுதலாக வெளிவந்தன. விசேடமாகக் கிறிஸ்தவ வேத புத்தகம் சிங்கள மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு நூல் வடிவில் வெளிவந்தது. இந்த மொழிபெயர்ப்பாளர்கள் சிங்கள பேச்சு வழக்கின் செல்வாக்கினைப் பெற்றதன் காரணமாக உரைநடை இலக்கியத்தில் மொழி நடையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. சிங்கள நாவல் இலக்கியத்தின் தோற்றத்திற்குச் சாதகமாகிய உரைநடை தோன்றியது. கற்பனைக் கதைகளில் (Prose romances) முதற்கதையாக சிங்கள இலக்கியத்தில் காணப்படும் பவுல் தெக (இரு குடும்பங்கள்) என்ற நூல் சமயப் பிரசார நடவடிக்கைகளின் விளைவாக வெளிவந்த நூலாகும். 'ரூவன் மல்தம்' என்ற சஞ்சிகையில் தொடர் கதையாக 1866இல் இருந்து 1883 வரை காலகண்ணி அயிசெக்டி சில்வா என்பவர் எழுதிய 'வாசனாவந்த பவுல் சகா காலகண்ணி பவுல' (அதிஷ்டமுள்ள குடும்பமும் துரதிஷ்டமுள்ள குடும்பமும்) என்ற கதை இவ்வாறு 'பவுல் தெக' என்ற பெயரில் கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தால் 1883இல் வெளியிடப்பட்டுள்ளது. கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பும் நோக்கத்துடன் எழுதியுள்ள இக் கதையில் கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்த குடும்பத்தைச் துரதிஷ்டமுள்ள குடும்பமாகவும் காட்டியுள்ளது.

பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகிய தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்திக் கொண்டு இவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ள சமயப் பிரசார நடவடிக்கைகள் இலங்கைத் தமிழ் சிங்கள இலக்கியங்களில் உரைநடை இலக்கியத்தின் வளர்ச்சிக்கும் மொழிநடையில் மாற்றங்கள் ஏற்படவும் காரணமாகின. மேலும் சமயப் பிரசார நடவடிக்கைகள், வாதப் பிரதிவாதங்கள் ஆகியவை பத்திரிகை, வார சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்டதால் வாசகர் கூட்டமொன்று உருவாக்கப்படவும் வழிவகுக்கப்பட்டது.

1.4.3 ஆங்கில மொழி பெயர்ப்பு இலக்கியங்களின் செல்வாக்குகள்.

ஆங்கில மொழிக் கல்வி முறையைப் பயன்படுத்திக் கொண்டு காலனித்துவ ஆட்சியின் கீழ் இலங்கைச் சமூகத்தில் புதிதாக நடுத்தர வர்க்கமொன்று தோற்றம் பெற்றது. இலங்கைத் தமிழ் சிங்கள இலக்கியங்களின் நவீன இலக்கியத்தின் முன்னோடி எழுத்தாளர்கள் இந்த வர்க்கத்தைச் சார்ந்தவர்கள் ஆவர். இவ்வெழுத்தாளர்கள் ஆங்கில மொழியிலிருந்து மொழி பெயர்ப்பு இலக்கியமொன்று இலங்கைத் தமிழ் சிங்கள இலக்கியங்களுடன் சேர்க்கப்பட்டமை இலங்கைத் தமிழ் சிங்கள நாவல் இலக்கியங்களின் தோற்றத்திற்கு முக்கிய காரணமாகியது. "Pilgrim's Progress" என்ற ஆங்கில நாவலில் சொல்மன் பிராந்து என்பவரால் சிங்கள மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு "வந்தனாகாரயாகே கமன" என்ற பெயரில் 1886இல் வெளிவந்துள்ளது. [14] மேலும் Quliver`s Travels" என்ற ஆங்கில நாவல் ஏ. ஜெ டப்லியு மாறம்பே என்பவரால் சிங்களாக்கம் செய்யப்பட்டு 1888இல் வெளிவந்துள்ளது. சிங்கள நாவல் இலக்கியத்தின் தோற்றத்திற்கும், சிங்கள உரை நடை இலக்கியத்தின் வளர்ச்சிக்கும், நாவல் இலக்கியத்திற்குப் பொருத்தமான மொழி நடையொன்று வளர்ந்ததாகவும் இத்தகைய மொழி பெயர்ப்பு இலக்கியங்கள் சிங்கள நாவல் இலக்கியத்திற்குப் பெரிதும் உதவின. சிங்கள நாவல் இலக்கியத்தின் தோற்றத்திற்கு மிகவும் சாதகமாக அமைந்த மொழி பெயர்ப்பு இலக்கியங்களில் அராபிய இரவுக் கதைகள் (Arabian Nights) முக்கியமென்பது மொழி பெயர்க்கப்பட்ட அராபிய இரவுக் கதைகளையும் சில முற்காலச் சிங்கள நாவல்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது தெளிவுபடுத்தப்படுகிறது. பெந்தோட்ட எல்பிறட் சில்வா என்பவரால் ஆங்கிலத்தில் இருந்து சிங்களாக்கம் செய்யப்பட்ட இந்த அராபிய இரவுக் கதைகள் 1894இல் வெளிவந்துள்ளது.[15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தமிழ் நாவல் இலக்கியம் தோற்றம் பெற்ற சமூக பின்னணியிலும் இவ்வாறான ஆங்கில மொழி பெயர்ப்புகளைக் காண முடியும். உஹன்னா மூர் (Hanna More) என்பவருடைய Parley the Porter" என்ற ஆங்கில நூலின் தமிழாக்கமாக 1856 இல் வெளிவந்த "காவலப்பன் கதை"யும் Orson and Valantine கதையை ஊ சோன் பாலந்தை கதை" என்ற பெயரில் 1891 இல் வெளிவந்ததையும் இதற்கு சான்றாகும்.[16] இந்த மொழி பெயர்ப்புகள் பிற்காலத் தமிழ் சிங்கள நாவல்களின் தோற்றத்திற்குக் கூடுதலான செல்வாக்கினை வழங்கின.

இவ்வாறு சமயத்தைப் பரப்பும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் சிங்கள சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் அவற்றினை ஊடகங்களாகக் கொண்டு மேற் கொண்ட சமயப் பிரசார நடவடிக்கைகளும், மொழிபெயர்ப்பு இலக்கியங்களும் இலங்கைத் தமிழ் சிங்கள நாவல்களின் தோற்றத்திற்குச் சாதகமாகிய சமூகப்பின்னணியாக இருந்தன.

முதற் சிங்கள நாவலாகக் கருதப்படும் அலுத்கமமே சயிமன்டி சில்வா என்பவர் எழுதிய 1905 இல் வெளிவந்த ''மீனா'' நாவலும். இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் முதற்றமிழ் நாவலாகக் கருதப்படும் சித்திலெப்பை மரைக்கார் எழுதிய 1885இல் வெளிவந்த "அசன்பேயுடைய கதை'' நாவலும் மேற்குறிப்பிட்ட சமூகப் பின்னணியில் தோற்றம் பெற்றன. இதில் கவனிக்க வேண்டிய மிகவும் முக்கியமான விடயம் என்னவென்றால் இலங்கைத் தமிழ் சிங்கள நாவல்களின் தோற்றம் என்பது கலை அம்சமாக இடம் பெறாமல், சமய கலாசார கருத்துக்களைப் பிரசாரிக்கும் கருவியாக அமைந்தமையாகும். கிறிஸ்தவ சமயக் கலாசாரத்தினைப் பரப்பும் கருவியாகவோ, அல்லது பௌத்த, சைவ, இஸ்லாமிய சமய கலாசாரத்தினைப் பரப்பும் கருவியாகவோ இலங்கைத் தமிழ் சிங்கள நாவல்களின் செயற்பாடுகள் அமைந்தன. கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்த நாவல்களிலும், அதற்கு எதிராக எழுச்சி பெற்ற "மறுமலர்ச்சி" இயக்கங்களால் வழிகாட்டிய பௌத்த, சைவ, இஸ்லாமிய சமய கலாசாரங்களைப் பரப்பும் நோக்கம் கொண்ட நாவல்களும் நாவல் என்ற கலை அம்சமாக இல்லாமல் பிரசாரக் கருவிகளாக அமைந்துள்ளன. தமிழ் நாவல் இலக்கியத்தில் "நொறுங்குண்ட இதயம்'' (1914) வீரசிங்கன் கதை அல்லது சன்மார்க்க ஜெயம் (1905) ஆகியவற்றை முதன்மையாகக் கொண்டுள்ள நாவல்களையும் சிங்கள நாவல் இலக்கியத்தில் சைமன் சில்வாவின் "தெறிசா" (1907) எல்பிரட் சில்வாவின் "டிவசாக்தா தயா" (1894) பியதாச சிறிசேனாவின் "வானாவந்த விவாஹய ஹெவத் ஜெயதிஸ்ஸ சகா ரொசலின்" (1906) இல் இருந்து தொடங்கும் நாவல்களையும், சமய கலாசார கருத்துகளைப் பிரசாரிக்கும் கருவியாகச் செயற்படத் தக்கதாக நாவல் இலக்கியத்தின் வழியை வகுத்தன.

நாவல் இலக்கியம் பிரசாரக் கருவியாக இலங்கைத் தமிழ் சிங்கள இலக்கியத்தில் தோற்றம் பெற்றமையினாலும், பயன்படுத்தப்பட்டமையினாலும் நாவல் இலக்கியத்தின் முக்கிய பண்பான எதார்த்தவாதத்திற்கு முரணான கலையாக அதன் வளர்ச்சி நிகழ்ந்துள்ளது. ஐரோப்பிய சமூகச் சூழலில் பெரும் சமூக மாற்றத்தின் விளைவாகத் தோற்றம் பெற்ற இலக்கியமான நாவல் இலக்கியம் அவ்வாறான சமூக மாற்றமொன்று ஏற்படாத சமூகச் சூழலில் காலனித்துவ ஆட்சியின் கீழ்ப் பிரசாரக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டமையினால் இலங்கைத் தமிழ், சிங்கள நாவல் இலக்கியத்தினை எதார்த்த பூர்வமாக மனித வாழ்க்கையைச் சித்திரிக்கும் கலையாக வளராமல் கருத்துக்களைப் போதிக்கும் கருவியாக, பிரசார நோக்கத்திலே கூடுதலாகப் பயன்படுத்தியுள்ளமை இலங்கைத் தமிழ் சிங்கள நாவல் இலக்கியங்களின் வரலாற்றில் தெளிவாகக் காணப்படும் பண்பாகும்.

அடிக்குறிப்புகள்

01). The oxford companion to the English Language. Edited by tomme Arthur. (1992) Oxford University Press. P.711.

02. Dhandayudham R. (1977) A study of the Sociological Novel in Tamil, University of Madras. P.03.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. இராமலிங்கம் மா. (1975 இரண்டாம் பதிப்பு) நாவல் இலக்கியம், தமிழ் புத்தகாலயம், சென்னை. பக் 21.

04 மார்க்ஸ், அ. (1996) பின் நவீனத்துவம், இலக்கியம், அரசியல், விடியல் பதிப்பகம், கோவை. பக் 11-12

05). Watt, Ian. (1963) The Rise of the Novel. Meddlese Penguin Book. p.09.

06. Dhandayudham R. ....P. 05

07. Dhandayudham R. ....P. 05

08). சரத்சந்திர எதிரிவீர, (1962) சிங்கள நவகதா இதிகாசய சகா விசாரய, சமன் முத்ரனாலய மஹரகம. பக் 159.

09. மௌனகுரு சி, சித்திரலேகா மௌ, நு∴மான் எம்.ஏ. (1979) இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம், வாசகர் சங்க வெளியீடு - 9, கல்முனை. பக் 9-10.

10. - மேற்படி - பக் 10.

11. விக்கிரமசிங்க, கே.டி.பி. (1965) நூதன சிங்கள சாகித்ய. குணசேன. கொழும்பு. பக் 95.

12. மௌனகுரு சி, சித்திரலேகா மௌ., நு∴மான் எம். ஏ., - மேற்படி- பக் 10.

13. சிவத்தம்பி கா., (1978) நாவலும் வாழ்க்கையும், தமிழ் புத்தகாலயம், சென்னை. பக் 116-117.

14. சரத்சந்திர எதிரிவீர., - மேற்படி- பக் 31.

15. - மேற்படி - பக் 32.

16. சுப்பிரமணியம் நா. (1978) ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம், முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், யாழ்ப்பாணம் பக் 9-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நியமாதல் பற்றிய பிரச்சனை - ஓர் ஆய்வு

கே. சிவானந்தமூர்த்தி

இக்கட்டுரையின் நோக்கம் வேறுபட்டதும் குறிப்பிடத்தக்கதுமான மெய்யியற் புலங்களிலும், ஏனைய அறிவுசார் புலங்களிலும் 'அந்நியமாதல்' என்கிற எண்ணக்கரு பிரயோகத்திலும் நடைமுறையிலும் எவ்வாறாயிருந்ததென்பதனை நோக்குதலாகும். வரலாற்றில் மெய்யிலாளர்கள் இதனைச் சொல்லின் பொருள் பற்றியதோர் பிரச்சனையாகவும் நேர்வாகவும் (Fact) இனங்கண்டனர் காலங்காலமாக அந்நியமாதல் என்கிற எண்ணக்கருவினை பலதரப்பட்டதும் வேறுபட்டதுமான வியூகங்களில் மெய்யிலாளர்கள் எடுத்துக்கொண்டு ஒப்பிட்டும் தனியாகவும் ஆய்வு செய்தனர்.

தமிழ்மொழியில் அந்நியமாதல் என்ற கருத்தாக்கம் நீண்டகாலமாகப் பிரயோகத்திலிருந்து வருகிறது. அந்நியமாதல் என்கிற பதத்திற்கு ஒத்த கருத்துச் சொல்லாக 'பராதீனப்படல்' என்கிற பதப்பிரயோகம் இருந்துவருகிறது. அந்நியமாதல் என்பது ஒருவரை உறவுகளிலிருந்து, பொருட்களிலிருந்து, மரபுவழிப்பட்ட வாழ்விலிருந்து உலகம் விடுபட்டுச் செல்லுகிறதோர் நிலைப்பாட்டினைக் குறிப்பதாய் அழுத்தப்படுகிறது இதுவோர் செயலாகவும் செயலின் விளைவாகவும் கருதப்படுகிறது அந்நியமாதல் என்பது உருவாக்கப்படும் ஒன்றல்ல, உள்ளார்ந்த உணர்வாகவிருந்து அகப்புறத் தூண்டல்களின் பேறாக பிரவாகமாகிறது என்ற கருத்தும் நிலவுகிறது எனினும் அந்நியமாதல் என்கிற எண்ணக்கரு ஓர் எதிர்க்கணிய விளைவைச் சுட்டுவதாகவே காணப்பெறுகிறது தன்னை அலைக்கழிக்கும் உலக வாழ்வில் தன்னிலையை, தன்னாளுமையை உறுதிசெய்யமுடியாதபோது தோற்றம் பெறுகிறதோர் உணர்வுநிலையே அந்நியமாதல் என்கிற முடிவுநிலைக்குக் கொண்டுசெல்கிற உந்து எனக் கருதப்படுகிறது. அந்நியமாதல் ஒருவித சுய இழப்பு நிலையேயாம்.

சமகாலத்தில் இவ்வெண்ணக்கரு முதன்மை பெற்றதொன்றாக பிரச்சனைக்குரியதொன்றாகக் காணப்படுகிறது மெய்யியலாளர்கள் உளவியலாளர்கள் சமயவியலாளர்கள் பொருளியளாளர்கள் சட்டவியலாளர்கள் சமூகவியலாளர்கள் மற்றும் பலதரப்பட்ட கைத்தொழில் சமூகங்கள் பயன்படுத்துகிறதோர் எண்ணக்கருவாக அமைகிறது. பூகோளரீதியான கைத்தொழில் விஞ்ஞான வளர்ச்சிகள் மனித விழுமியங்களை மிகையான பெறுமதிக்குட்படுத்தி மனிதனைத் தான் வாழுகின்ற சமூகத்திலிருந்து தனிமைப்படவைக்கும் நிலைக்கு உள்ளாக்கிவிட்டதனால் அந்நியமாதல் உணர்வு நவீன சமூகத்தில் மிகவும் விரைவாகப் பரவுகிறதோர் நோய், இதனைக் கட்டுப்படுத்தவதற்கான மருந்து (தீர்வு) இல்லை என்கிறார் யக்கூஸ் இலூஸ்)

அந்நியமாதல் குறித்த பாரம்பரிய கருத்திற்கெதிராக ஜோன் டியூயி அந்நியமாதல் என்பதோர் நடைமுறைச் செயலுருவே தவிர அதுவோர் பௌதீகவதீத சிந்தனையைக் கொண்டதல்ல என்கிறார். 2. இந்தவகையில் அந்நியமாதல் குறித்த ஆய்வுகள் இன்றைய காலகட்டத்தில் அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் அபிவிருத்தியடைந்து வருகிற நாடுகளிலும் பொதுவாகப் பெருகி வருகிற தொழிநுட்பக் கலாச்சார வளர்ச்சியின் ஆழத்தை நிலைப்பாடுகளை முதன்மைப்படுத்தி ஆராயப்படுகிறது.

அந்நியமாதல் (Alienation) பெயர்ச் சொல்லாகவும் (Noun) பெயரிடைச் சொல்லாகவும் (Adjective) பிரயோகிக்கப்படுகிறது. பெயரிடைச் சொல்லாக வருகிற போது ஒருவனுக்குச் சொந்தமானதல்ல (Not ones own) அந்நியமானதொன்றென்றும் பெயர்ச் சொல்லாக வருகிறபோது அந்நியமான (Aline) பரீட்சயமில்லாத (Strangrer) என்றவாறாகவும் பெயர்கொள்ளும். மேலும் அதிகாரமல்லாத (powerlessness) மனஸ்தாபப்படு (Esteangement) விதியின்மை (Normlseeeness) என்ற கருத்தாக்கங்களை இச்சொல் வெளிப்படுத்தி நிற்கும். 3 சட்டத்துறையில் அந்நியமாதல் ஒருவரிடமிருந்து பிறிதொருவருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொத்துப் பாராதீனப்படுத்தலைக் குறிக்கும். 4 அந்நியமாதல் என்பதற்கு ஓக்ஸ்போட் அகராதி எதிர்க்கணியப் பொருளினையே தருகிறது அவை முறையே இயல்பான நிலையிலிருந்து மாறுதல் , சொத்துரிமையை ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு மாற்றுதல், சாதாரண மனநிலையிலிருந்து விலகுதல் என்பனவாகும்.5

அரிஸ்டோட்டில் முதலாய், இடைக்கால மெய்யியலாளர்கள் வரையில் பௌதீக வதீத அழுத்தத்தின் அடிப்படையிலேயே அந்நியமாதலை விளக்க முற்பட்டனர். இத்தகையதோர் பாங்கே இந்திய மெய்யியல், இறையியல் போக்குக்களிலும் காணப்பெறுகிறது. இந்திய இறையியலின் பிரகாரம் பொருள்வழி வரும் மகிழ்வும் புலன்வழி வரும் இன்பமும் சாசுவதமற்றவை. மேலும் மேலும் துன்பத்துக் குள்ளாக்குவன இந்நிலையை உணர்ந்து இவற்றிலிருந்து நீங்கிப் போகிற நிலையைக் குறிப்பதாயே அந்நியமாதல் காணப்படுகிறது. வேத உபநிடதங்களின் பிழிசாறாகக் காணப்பெறுகிற பன்னிரு திருமுறைகளில் வரும் பாடல்களிலும், மெய்கண்ட சாஸ்திரங்களில் வரும் சூத்திரங்களிலும் உலகிலிருந்தும் உலகியலிலிருந்தும் மனிதன் அந்நியப்பட்டுப் போக வேண்டிதன் அவசியத்தை வற்புறுத்தும் கருத்தாக்கங்கள் காணப்பெறுகின்றன.6 இறையியலில் அந்நியமாதல் என்கிற பதம் பிரயோகிக்கப்படுகிற போது உலகியல் வாழ்வினைகாட்டிலும் ஓர் உன்னத வாழ்வின் அவசியத்தை உறுதிப்படுத்துகிற நோக்கத்தினை உட்கிடையாகக் கொண்டே காணப்படுகிறது. உறுதிப்படுத்துகிற நோக்கத்தினை உட்கிடையாகக் கொள்கின்றது. இல்வாழ்க்கை துன்பம் நிறைந்ததென்கிற போது மனிதன் உயிர்துறக்க வேண்டுமென வற்புறுத்தப்பட-வில்லை. படிமுறை வளர்ச்சிக் கிரமத்தில் கட்டு, பந்தம், பாசம், மலம் என்பனவற்றைத் துறந்து பரலோக வாழ்விற்கு மனிதன் தன்னைத் தயார்படுத்த வேண்டிய செயல் முறையை அந்நியமாதல் குறிக்கின்றது.

வைஷ்ணவ திவ்யப் பிரபந்தங்களும் உலகியல் வாழ்விலிருந்து அந்நியப்பட்டு பேரானந்தப் பெருவாழ்வொன்றினைப் பெற வேண்டும் என்கிற அடிப்படையில் செயல்வடிவொன்றினைக் குறிப்பதாய் அமைகிறது. (7) தமிழில் எழுந்த அறநூல்களும் குறிப்பாக திருக்குறளும் செயலுரு (Action) வடிவமாகவே அந்நியமாதலைக் காண்கின்றன.

கிறிஸ்தவ இலக்கியங்களும் அரிஸ்டோட்டில் அக்குவைனஸ் போன்றவர்களது மெய்யியலும் மானிடப் பிரச்சினைகளுக்குத் தீர்வாகவும் அந்நியமாதல் என்கிற உணர்விலிருந்து மனிதனுக்கு விடுதலையளிக்கக் கூடியதொன்றாகவும் சமயவழிப்பட்ட வாழ்க்கை முறையினை வலியுறுத்தினர். (Mandasic) இலக்கியங்களிலும்Hellenes கலாச்சாரத்துடன் பின்னியிருந்த Manchaic இலக்கியங்களிலும் குறிப்பிடப்பட்டிருந்த மறைபொருள் உண்மையை விளக்கவே அந்நியமாதல் என்கிற பதத்தினைப் பிரயோகித்தனர் மேலும் கிறிஸ்தவ இறையியலாளர்களான பிளட்டினஸ் (9) அகஸ்ரீன் அக்குவானஸ், மெஸ்ரா எக்கார்ட் அந்நியமாதல் என்கிற பதத்தினை இறையியல் கருத்துக்களை விளக்கும் உடன்பாட்டு ரீதியில் பயன்படுத்துகின்றனர்.

உலகியலில் பிரத்தியட்சப்படும் உயிரினை 'அந்நியமானதோர் உயிர் வெளிச்சம் என கிறிஸ்தவம் கருதுகிறது, இவ் வெளிச்சம் அல்லது உயிர் தனக்குரியதல்லாததோர் உலகில் புகுந்து அதனூடாக பிரயாணம் செய்கிறது. எனினும் மண்ணுலகிற்கப்பாற்பட்ட விண்ணுலகம் குறித்து இச்சை கொண்ட இவ் உயிர் இவ்வுலகவாழ்வினைக் காட்டிலும் அவ்வுலக வாழ்வு ஒளி கூடியதொன்றெனக் காண்கிறது இவ்வகைத்தான சிந்தனையின் பிரிணாமமே உலகிலிருந்து உயிரினை அந்நியமாதல் நிலைக்கு உடன்படுத்துகிறது தான் படைக்கப்பட்ட உலகில் இருந்து உயிர் அந்நியப்படுகிறது எனவே வாழும் நிஜ உலகிலிருந்து உயிர் அந்நியப்படுத்தலே அந்நியமாதலாகும்.

உயிர் என்கிற வெளிச்சம் உலகிலிருந்து அந்நியப்படுகின்ற உணர்வினைப் பெறுகிறபோது இறைவன் தன் மக்கள் மீதாய் அன்பு கூர்ந்து தன் ஒரேயொரு பேறான மகனை அனுப்பி அவர் மூலம் தன் மக்களை மீட்கிறார் என விவிலிய வேதம் குறிப்பிடுகிறது (யோவான் 3. 16) இதுவே அந்நியமாதல் குறித்த கிறிஸ்துமத நிலைப்பாடாகும் யேசுகிறீஸ்துவின் மீது நம்பிக்கை கொள்வதனால் உலகப் பொருள் மீதிருந்த ஆசையிலிருந்து மனிதன் அந்நியப்படுகின்றான் அந்நியப்படுகிற போது இறைவனோடு ஒன்றித்த வாழ்விற்கு மீண்டும் திரும்புகிறான் உலகியற் பற்றுக்களிலிருந்து விடுபடுதல் என்கிற நிலையினை சுட்டவே அந்நியமாதல் என்கிற சொற்பிரயோகம் பயன்படுத்தப்படுகிறது என்பதற்கு மேலும் விவிலிய வேதமும் அகஸ்ரீனது பக்திப் பாடல்களும் சான்றாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.0 அந்நியமாதலுக்கான காரணங்களை விளக்க முற்பட்ட கோட்பாடுகளுள் ஐந்து குறிப்பிடத்தகுந்தன பொருளியல் அடிப்படையில் மனித சாரம்சத்தை முதன்மைப்படுத்தியவாறாய் மார்க்சும் வழிவருவோரும் உளவியற் காரணங்களை முதன்மைப்படுத்தியவாறாய் பிராயிட்டும் பின்வருவோரும் சமூகவியற் காரணங்களை முதன்மைப்படுயவாறாய் டூர்க்கியமும் றைஸ்மென்னும் Durkheim and Riesmen முதன்மைப் படுத்தியவாறாய் ஜய்க்கூஸ் இலூலும் (Jacques Ellul) மனிதன் தன் சாராம்சத்தை இழப்பதனால் என் சோரன் கீர்த்தக்காட்டும் பிற்பட்ட இருப்பியல் வாதிகளும் கோட்பாடுகளை வகுத்துள்ளனர்.

2.1 அந்நியமாதல் குறித்த உளவியல் நோக்கு நினைவு, நினைவிலி மனங்களுக்கிடையிலான (split) வெடிப்பு நிலையையொட்டியதாய் அமைகிறது நனவு நனவலி மனங்களுக் கிடையிலான வெடிப்பு நிலைகள் மனித ஆளுமையில் தாக்கங்களை ஏற்படுத்தி அந்நியமாதலிற்கு நிலைக்கு வழிசமைக்கிறது இந்நிலையில் வெளிப்படுத்துகிற உணர்வு சிநேகிதமற்ற தொன்றாக அமைந்து அவன் சார்ந்த சமூகத்திலும் கலாச்சாரத்திலுமாய் வெளிப்படுத்தப்படும் இத்தகைய நிலைகளைப் பாதுகாப்பு பொறிமுறை வழியாக (Defence Machanism) சரிசெய்து கொள்ளலாம் எனபிராயிட் போன்ற உளவியலாளர்கள் நம்பினர். உளவியலின் பிற்கால வளர்ச்சி நிலையில் எரிக்போம் போன்றோர் (Erice Fromn) நவீன கலாச்சாரம் மனிதனது ஆக்கத்திறனை (Creative Power) அதன் இயல்பினை வெளிக்கொணரத் தவறியதால் அந்நியமாதல் உணர்வு தோற்றம் பெறுகிறதென்றனர்.

2.2 சமூகவியலாளர்கள் நோக்கில் அந்நியமாதல் ஏற்படுத்துவதற்கு சமூக ஒழுங்குகளே முக்கியமான காரணிகளாக அமைகின்றன. குறிப்பாக கலாச்சாரம் (Culture) சமூக அமைப்பு (Social Structure) தனியாள் ஆளுமை (The Personality of the individual) போன்றனவே அந்நியமாதல் உணர்விற்குப் பின்புலமாய் அமைகின்றன. மேலும் மனிதப் படிநிலையினையும் (Human condition) ஓர் சக்திவாய்ந்த பின்புலமானக குறிப்பிடலாம் எனினும் இதனைக்கலாச்சாரம் என்கிற பின்புலத்துள் உள்வாங்கி விடலாம். மனிதப்படிநிலை என்பது கூடுதலாக பௌதீகஅதீத சிந்தனைகளுடன் தொடர்புடையதாய் அமையும் (13) சமூகவியல் காரணிகளைப் பொறுத்தவரையில் வரலாற்று நோக்கில் குறிப்பாக, மனிதன் பாரம்பரிய வழிநடாத்துதலின் அடிப்படையிலேயே செல்லுகிற பாங்கே இறுதியில் அவனை அந்நியமாதல் நிலைக்குட்படுத்திவிடும். (14) இத்தகைய பாரம்பரிய வழிகாட்டல் அகம் நோக்கியவாறான வழிகாட்டல் புறம் நோக்கியவாறான வழிகாட்டல் என்கின்ற முறையில் செயல்ப்படும். கலாச்சாரம் சமூக அமைப்பு என்கிற பின்புலங்களால் கட்டுண்ட மனிதன் யதார்த்த நிலைகளைச் சந்திக்க தயக்கம் காட்டுவதன் வழியாக அவனது ஆளுமை பிறழ்வுக்குரியதொன்றாகி அந்நியமாதல் உணர்வுக்குட்படுகின்றான்.

2.3 திட்டமிடப்படாதா வகையில் வளர்ச்சி பெற்ற தொழிநுட்பம் அந்நியமாதலுக்குக் காரணமாகிறது தொழிநுட்பமும் அதன் பிரதியீடுகளும் மனிதனிடம் அறிதல் எவ்வாறு (Know How) ஏன் அறிதல் (Know why) என்கிற வினாக்களை எழுப்பி இறுதியில் அவனிடம் ஒருவிதபபட்ட இறுக்கத் தன்மையுடனும் முகாந்திர-மானதுமான நிலைப்பாடுகளைத் தோற்றுவித்துவிடும் இத்தகைய பாங்குகளால் பாதிக்கப்பட்ட மனிதனது மனநிலை, தான் ஈடுபடும் ஒவ்வொரு செயலிலும் ஒருவகை ஒழுக்கநிலைப்பட்ட முத்திரையைப் பொறித்துவிடும் இந்நிலை மனிதாயத்தைச் சாகடித்து அந்நியப்பட்டுப் போகிறதோர் மனப்பான்மைக்கு வழிவகுக்கும் (15) ஒரு நாடு தொழில் நுட்பங்களில் அதீத முன்னேற்றமடைகிற போது உண்மையில் அது தனது பிரச்சனைகளை மிகவுமாய் அந்நியப்படுத்தி விடுகிறது. (16) அதீத தொழிநுட்ப வளர்ச்சியென்பது உயர்ந்த நிபுணத்துவத்தையும் உயர்ந்த தனித்தனிப் பிரிவுகளையும் குறிப்பதாய் அமையும் தொழிநுட்ப வளர்ச்சி சந்தர்ப்பவசத்தால் அந்நியமாதலை உருவாக்குவதில்லை. அவை கட்டாய தேவையின் அடிப்படையிலேயே உருவாக்குகின்றன. இயற்கை ஒழுங்குகளுக்கு மேலாய் ஒருவித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யந்திரவயப்பட்ட ஒழுங்கினை நிலைநாட்டவே தொழில்நுட்ப வளர்ச்சிகள் உதவுகின்றன. இந்நிலை இயல்பான, இயற்கையான சூழலினைப் பின்தள்ளி சேர்கையான தொழில்நுட்பத்தால் உருவாக்கப்பட்ட சூழலினை உருவாக்கி விடுகின்றன. இவ்வாறாய் தொழில்நுட்பத்தால் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் வெறுப்பினை ஏற்படுத்தி மனிதனை தனது சொந்த சாராம்சத்திலிருந்து அந்நியப்படுத்தி விடுகிறது. யந்திரத் தேர்ச்சியின் சிறப்பு நிலைகளும், புறப்பொருளினை முதன்மைப்படுத்திய போக்கும் ஒன்றித்ததொரு நிலையிலிருந்தே அந்நியமாதல் தோற்றம் பெறுகிறதென்பதே யாக்கூஸ் இலூல் (Jacques Eulul) போன்றோரது நிலைப்பாடாகும்.

2.4 இருப்பியல் மெய்யியலாளர்கள் அந்நியமாதல். நிரந்தரமானதும் அமைப்பு வகைப்பட்ட தொன்றாகவும் மனித இருப்புடனாய் இருக்கிறதென்கின்றனர். மனிதன் உலகில் இருப்பினையும் தனது உள்ளாந்த இருப்பினையும் உணரும் போதே அவன் தன்னிருப்பினை உணர்கிறான் என்கிற கருத்தோட்டத்துடன் இருப்பியல் வாதத்தை ஆரம்பித்து வைக்கும் சோரன் கீர்க்ககாட், கைடேகர், ஜுன்போல்சாத்திரே போன்றோல் அந்நியமால் குறித்தும் அக்கறைப்பட்டார்கள், அந்நியமாதல் குறித்த இவர்களது விளக்கம் இருப்பியல் வாதத்திற்கு ஏற்புடைத்தவாறாகவே அமைகிறது. உள்பொருளும் காலமும் (Beingg and time) என்கிற நூலில் கைடேகர் அந்நியமாதல் குறித்துக் குறிப்பிடுகிறார். இவரைப் பொறுத்த வரையில் மனிதன் எப்போதுமாய் உலகத்தில் இருக்கிறான் மனிதன் இருப்பியலில் இல்லாதபோது உலகமென ஒன்றோ அல்லது உலகத்துப் பொருட்களென எதுவுமே இருக்க முடியாது. எனினும் அவை இல்லாதவிடத்தும் மனிதன் இருப்பில் இருக்க முடியும் பொருட்களெல்லாம் உண்மையில் பண்டங்கள் (Stuff) ஆகும். அவை உபயோகிக்கப்படுத்துவதற்கென்றே இருப்பில் இருப்பவை. அவை இருப்பியல் மெய்மையற்றவை. இத்தகைய யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாத மனிதன் யந்திரவயப்பட்டு தன் தனித்துவத்தை உணராது சமூகம், தேசம், அடுத்த மனிதன் என்கிறவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்தும் தேவையற்ற விழுமியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் போக்குமே மனிதனை அந்நியமாதல் நிலைக்குத் தள்ளிவிடுகின்றதென்கின்ற கருத்தாக்கமே பொதுவாக அந்நியமாதல் குறித்து இருப்பியல் வாதிகளிடம் காணப்-பெறுகிறது. எனினும் இருப்பியல்வாதிகளிடையே 'அந்நியமாதல்' என்கிற முடிவுநிலையை அடையும் போக்குகளில் சிறிய சிந்தனை வேறுபாடுகள் காணப்படுவதும் உண்மையே.

3.0 மாக்ஸ் அந்நியமாதல் என்கிற எண்ணக்கருவினை வரலாற்றின் குறிப்பிட்ட கட்டமொன்றின் நடுவன் பிரச்சினையாகக் கருதுகிறார். மாக்சியம். இயற்கையையும் அதன் பொருளண்மைத் தன்மையையும் விஞ்ஞான முறையியலுக்கு உட்படுத்த ி அதனையோர் அறிவியற் கோட்பாடாக விளக்க முற்படுகிறது. சமூகத்தை மாற்றுவதன் வழியாக தீமையைக் களைவதே என்பணி என்றவாறாக தத்துவப் போக்கினை முன்வைக்கும் மாக்ஸ் உலகினையோர் இலங்கியல் அடிப்படையில் காண்கிறார்.

மாக்சின் முதன்மைபெற்ற இளமைக்கால எழுத்தாக்கங்கள் 'அந்நியமாதல்' என்கிற கருத்தாக்கத்தினைப் பிரதிபலிப்பன அந்நியமாதல் அதன் இயல்பு அமைப்பு அதற்கான சமூகக் காரணிகள் மனித வரலாற்றில் அதனது தனித்துவம் குறித்து பிரஸ்தாபித்திருந்தன. நவீன சமுதாயத்தில் அந்நியமாதல் ஓர் கெடுதியென முந்திய எழுத்துக்களில் குறிப்பிட்டிருந்த மாக்ஸ் பாரிசில் வெளியிட்ட விஞ்ஞாபனத்தில் தொழிலாளர்கள் உழைப்பிலிருந்து அந்நியப்படுதலே சகல சமூகக் கேடுகளுக்கும் அடிப்படையாகிறதென்கிறார். (18) அந்நியாமாதல் என்கிற கெடுதிக்கு ஆண்களும் பெண்களும் இரையாகின்றனர். மாக்சினது 1844 க்கு பிற்பட்ட எழுத்துக்களில் அந்நியமாதல் அதிக முதன்மை பெறாதபோதும் இச் சொல்லாக்கம் தொடர்ந்து மாக்சினால் பிரயோகிக்கப்பட்டது. இச் சொற்பிரயோகம் பின்னைய எழுத்துக்களில் அருகிக் காணப்பெற்றிருந்தாலும் அந்நியமாதல் என்கிற எண்ணக்கரு மாக்சிச சிந்தனையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்திய தென்பதனை மறுப்பதற்கில்லை. பிற்கால மாக்சின் சிந்தனையில் அந்நியமாதல் வலிதானதும் குணாம்சங்களை குறிப்பதுமோர் பிரச்சனையாக இனம்காணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாளித்துவ சமூகவமைப்பில் 'நவீன உழைப்பாளி' அந்நியமாதல் உணர்விற்கு உந்தப்படுகிறதோர் பிரகிருதியாக-வேயிருப்பான் என மாக்ஸ் கருதினார் மனித சாரம்சம், மனித உழைப்பு, மனித உழைப்புக்குறித்த நிபந்தனைகள் சரிவர இனம்காணப பெறுகிறபோதே அந்நியமாதல் என்கிற பிரச்சினை முடிவுக்கு வரும் என்பதே மாக்சின் நம்பிக்கை

மாக்சின் 1843 - 1844 காலப் பகுதிக்குட்பட்ட கட்டுரைகளில் விஞ்ஞாபனங்களில் Etfremdung என்கிற பதத்தினை அந்நியமாதலுக்காக உபயோகிக்கிறார் (19) இதற்கு ஆங்கிலத்தில் ஒத்தசொற் பிரயோகமாக Alienation அமைகிறது தமிழில் அந்நியமாதல் என அமைகிறது பல்வேறுபட்ட விடங்களில் விடய-தானங்களில் அந்நியமாதல் என்கிற சொற் அர்த்தத்தை மையப்படுத் தியவாறாகவே உபயோகிக்கிறார். அதாவது இயல்பான ஒன்றினில் வித்தியாச மானதொரு மனப்பான்மையை ஏற்படுத்திக் கொள்வதையே அந்நியமாதல் குறிக்கிறது தொழிற்பாகுபாடே மனிதனை அந்நியப்படுத்தி, மனிதர்களிடையே இறுக்கமான வகுப்புக்களை உருவாக்குகிறது.

கெகலோ அன்றி மாக்கோ அந்நியமாதல் என்கிற கருத்தாக்கத்தினைக் கண்டுபிடிக்கவில்லை. வரலாற்றுக்தேடல் ஜுன்யாக் ருஸொாவினை (Jeen Jack Roussean) இதன் கர்த்தாவாக கண்டுகொண்டது மனித இனம் தனது கலாச்சாரத்திலிருந்து தன் சாராம்சத்திலிருந்தும், பின்நோக்கி எதிர்கணியமாய் போகிற நிலையினைக் கண்டு ருஸோ, அந்நிலை அந்நியப்பட்டதொரு நிலையெனச் சுட்டிக்காட்டியதுடன் இயல்பான கலாச்சாரத்திலிருந்தும், சாராம்சத்திலிருந்தும் மனிதன் அந்நியப்படாது நேர்க்கணியமாய் செல்லுங்கள் என மனிதகுலத்துக்கு முன்வைத்த விண்ணப்பததிலேயே இச் சொல்லாட்சியினைப் பயன்படுத்தி பொருள் பொழிந்ததொன்றாக்கினார்.[20] கெலினைப் பொறுத்தவரையில் அந்நியமாதலையோர் உண்மையில் எண்ணக்கருவாக (Ontological concept), வெறுமனவே அதுவோர் வளர்ச்சியடையும் பராதீனநிலையெனக் கண்டுகொண்டார்.[21] ரூஸோவினதோ அல்லது கெகலினது காலத்திலோ முதன்மைபெற்றிராத சடவயப்பட்ட உலக நோக்கு மாக்ஸினால் முதன்மைப் படுத்தப்பட்டு அந்நியமாதல் குறித்த பார்வை உலகியல் சார்ந்த பொருளுண்மை அடிப்படையில் இடம்பெற்றது.

3.1 மாக்ஸ் அன்னியமாதல் குறித்து லுட்விக் அன்ரூஸ் வெயர்பாக் (Ludiwig Andres Feurbach) (1804-74) கொண்டிருந்த கருத்துடன் ஈடுபாடுடையவராகக் காணப்பெற்றார். லுட்விக் அன்ரூஸ் வெயர்பாக்கினைப் பொறுத்தவரையில் கெகல் அந்நியமாதல் என்கிற கருத்தாக்கததினையோர் உண்மையியல் எண்ணக்கருவாகக் கண்டதைப் போலன்றி, இவர் இதனை மனித இருப்புக் குறித்த எண்ணக்கருவாகவும் அவ்வேளை சமயசார்பற்ற புறப்பொருள் வயத்ததொன்றாகவும் நோக்குகிறார். இக்கருத்து மார்க்ஸிற்கு உவந்ததாக அமைந்ததென்பதில் வியப்பில்லை. மாக்சின் பிரகாரம், மனிதன் தன்னிலும் உயர்ந்தவொரு உள்பொருள் ஒன்று உண்டு என உற்பத்தி செய்து கொண்டு தன்னை அதனிடம் பராதீனப்படுத்துகிறபோது, மனிதன் தன்னை தன்னிலிருந்து அந்நியப்படுத்துகிறான் என்கிறார். மேலும் கெகலினது மனிதனின் சுய உற்பத்தியே அந்நியமாதல் என்கிற மனிதனின் கருத்தாக்-கத்தினை மாக்சும் ஏற்றுக்கொண்டார். எனினும் கெகலினைப் போலல்லாது இதனை மாக்ஸ் புறவயப்பட்டதொன்றாகவே காண்கிறார். அவ்வாறே வெபர்பாக்கின் சமயம் குறித்த திறனாய்வுகளை ஏற்றுக்கொள்கிற மாக்ஸ், சமய அந்நியமாதலென்பது அந்நியமாதலின் ஒர வடிவம் என்கிறார்.

அந்நியமாதல் எத்தகைய அடிப்படை வடிவங்களில் விரவாகமாகின்றன என்பது குறித்தும் சமூக அரசியல் துறை அறிஞர்களிடையே வேறுபாடு காணப்படுகின்றது. ஏனெஸ்ட் சார்ச்ரெல் (Ernest Schachtel) நான்கு அடிப்படைகளில் வகையீடு செய்கிறார்.

I இயற்றையிலிருந்து அந்நியப்படல்.
II. தன்னோடானவர்களிலிருந்து அந்நியப்படல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III. தனது பணித்திறனிலிருந்து அந்நியப்படல்
IV தன்னிலிருந்து அந்நியப்படல் [22]

அந்நியமாதனை லூயிஸ்வெரஸ் (Lewis Feceres) ஆறு அடிப்படைகளில் வகைப்படுத்துகின்றார். அவை முறையே

1 தரச் சமூகத்திலிருந்து (Class society)
2 போட்டிச் சமூகத்திலிருந்து (Competitive So ciety)
3 கைத்தொழில் சமூகத்திலிருந்து (Industrial Society)
4 பொதுச் சமூகத்திலிருந்து (Mass Society)
5 இனங்களிலிருந்து (Race)
6 சந்ததியிலிருந்து (Generation)

3.2 மாக்ஸ் அந்நியமாதலை நான்கு அடிப்படைகளில் வகைப்படுத்துகின்றார் முறையே.

I மனிதன் தனது உற்பத்திச் செயற்றிறனிலிருந்து அந்நியமாதல் **(From the product of his activity)**
II உற்பத்தியிலிருந்து அந்நியமாதல் (From the productive activity itself)
III மனித சாராம்சத்திலிருந்து அந்நியமாதல் (From his human essence)
IV மற்றைய மனிதினிலிருந்து அந்நியமாதல் (From other men)

அந்நியமாதலுக்கான காரணம் எதுவாக இருந்தாலும், அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் பொதுவானவை. அந்நியமாதல் மனித சக்தி குறித்த மாக்சினது கருத்தாக்கம், ஏனைய துடிப்பான உணர்வு பூர்வமான ஆராய்சியாளர்களை இதில் அக்கறை காட்ட வழி செய்தது. முதலாளித்துவ போக்குடைய சமூகவியலாளர்களும், அந்நியமாதல் குறித்து வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் மூலதனமே (Capital)அந்நிய மாதலுக்கு மூலகாரணி எண்பதில் ஒருமித்த கருத்துடையோராய் காணப்பெறுகின்றனர். மேலும் மாக்சிச வாதிகள் அந்நியமாதலையோர் நியம எண்ணக்கருவாக (Nrmative concept) ஏற்றுக் கொள்கையில், அமெரிக்க அனுபவவாதிகள் சமூக உளவியல் பாக்கானதொன்றாக ஏற்றுக் கொள்கின்னர். உழைப்புச் செயலினையே மனிதசாரம்சம் எனக் கருதும்மாக்ஸ் அதனை அவன் இழப்பதையே அந்நியமாதலுக்கான அடிப்படையெனக் கருதுகிறார். மாக்ஸினைப் பொறுத்தவரை மனிதன் தனது ஆற்றல்களை இயற்கையினுள் செலுத்தி புறப்பொருளாக்கம் செய்வதே உழைப்புத் தொழில். இத்தகைய உழைப்புச் செயலே மனிதனை இயற்கையுடனும் சமூகத்துடனும் தொடர்புபடுத்துமொன்றாக அமைகிறது.

உழைப்பாளிக்கும், உழைப்புச் செயலுக்குமான உறவு, முதலாளித்துவ சமுதாயததில் உற்பத்தி செயல் உழைப்புச் செயல் என்கிற மானிட ஆற்றலை வளர்ப்பதற்கான சாதனமாக இருப்பதில்லை. மாறாக அவற்றின் பயன்பாட்டினையே பெருமளவு குறிப்பதாயுமுள்ளது. உழைப்பு பிரிவினையுள் ஏற்படும் வளர்ச்சி ஒரே மாதிரியான உழைப்புச் செயலினைச் செய்யக்கூடியதாக்கி வருகிறது. இதனால் **உழைப்பும் வேதனையாகி விடுகிறது.** இவ்வித உழைப்பு தொழிலாளிக்குச் சொந்தமற்றதாகி சுரண்டுபவர்களின் இன்பத்துக்கும் சுரண்டப்படுபவர்களின் துன்பத்திற்கும் காரணமாகி விடுகிறது. இவ்வாறாக மனிதன் தன் உழைப்பிலிருந் அந்நியப்படுத்துகிறான்.

முதலாளித்துவத்தில் உழைப்பாளிக்கும் உற்பத்தி பொருட்களுக்குமிடையிலான உறவு, உழைப்பு செயலிலிருந்து உழைப்பாளி அந்நியமாதல் போன்றே, உற்பத்திப் பொளினின்றும் அந்நிய மாகிறான். பொருள் என்பது திரட்டப்பட்ட உழைப்பாகும். உழைப்பாளி பொருள் மீதாய் சுதந்திரத்தினை ஏற்படுத்திக் கொள்வதற்குப் பதிலாக, அதன் அடிமையாகிறான். தன்னிடத்தான ஆற்றல்களை நிறைவு செய்து படைக்கும் செயல் தன்வயமாக்கும் செயலாக இருப்பதுபோய், அதுவே அந்நியமாக்கி விடுகிறது. இந்நிலை தன்வயப் படுத்தப்படவேண்டிய உலகம் பிறர் வசம் ஆக்கிவிடுகிறது. படைப்பினை உழைப்பாளி அதிகமாக வழங்குகிற போது, அவனுக்குரிய நுகர்வும் குறைந்த வண்ணமாகிறது. தனது படைப்புக்களை நாடத்தானும் அவனுக்கு உரிமையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாதுபோய், அவை முதலாளித்துவத்தின் கையகப்பட்டதாகி விடுகின்றன. இந் நிலையில் பொருட்கள் தன் படைப்புக்கள் என்பதனையுணரத் தவறுகிற உழைப்பாளி தனக்கு கிடைக்கிற அற்பமான கூலியினைப் பெற்றுக் கொண்டு, தன் உற்பத்தியிலிருந்து அந்நியப்படுகிறான்.

முதலாளித்துவ அமைப்பில் மனிதனுக்கும் அவனது சமூகத்திற்குமான உறவு நிலை அந்நியப்பட்டே காணப்பெறுகிறது. உழைப்பு மனிதனை அவனது உற்பத்திப் பொருளிலிருந்து பிரித்துவிடுவதன் காரணமாக, அவன் அவனது சமூக வாழ்விலிருந்து பிரிக்கப்படுகிறான். மேலும் முதலாளித்துவ அமைப்பில் உழைப்புச் செயலானது தனி மனிதனை மானிட ஜீவியாக காட்டும் பண்பைக் களைந்துவிடுகிறது. சமூக வாழ்வென்பது ஒருவன் மானிடத் தன்மைகளைக் கொண்டுள்ளானா, அல்லவா என்பதைச் சுட்டிக் காட்டும் இலக்கணமாகும். மேலும் மனிதன் சமூக வாழ்விலிருந்தே தோற்றம் பெற்றவன். அவன் பிறந்ததே கூட்டு வாழ்வின் பயனால் தான். தன் சமூகத்துடன் சேர்ந்து இயற்கையுடன் தொடர்பு கொள்வோரிலேயே தன் ஆற்றல்களை அவன் உணர்ந்து கொள்கிறான். இயற்கையின் இதரபுறப்பொருட்களை போல இதர மனிதர்கள் என்ற புறப்பொருட்களுமே இவனது ஆற்றல்கள் நிறைவு பெறுகின்ற இடங்களாகும். ஒருவன் தனிமனிதனாகச் செயல்பட்டாலும் சாரமாகவே சமூகத்தின் செயல்படுகிறான். இவ்விதம் செயல்படுவதால் மனிதன் சர்வவியாபகனாகவும் சுதந்திர ஜீவியாகவும் இருக்கிறான். எனினும் அந்நியமாக்கப்பட்ட உழைப்பானது மனிதர்களிடமிருந்து இயற்கையையும் பிறர் உடமையாக் கப்பட்ட புறப்பொருள் அவனையும் (இவனது செயல்கள்) அந்நியமாவதற்குக் காரணமாகி இனவாழ்விலிருந்தாய் இவனை அந்நியமாக்குகிறது. இந்நிலையில் மனிதன் மற்றைய மனிதர்களிடமிருந்து அந்நியப்படுகிறான். மார்க்ஸின் கருத்துப்படி முதலாளிததுவ அமைப்பில் மானிட பிரக்ஞையானது பெரும்பாலும் உயிர்பிழைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதிலேயே செயற்படுகின்றன, அக்கறை செலுத்துகின்றன. மனிதனை மனிதன் தின்னும் சமுதாயததில் இத்தகைய முனைப்பிருந்தால் தான் ஒருவன் ஓரளவேனும் தாக்குதலைச் சமாளிக்க முடியும் என்பது மாக்ஸின் கருத்து அந்நியமாக்கப்பட்ட உழைப்பு மானிட உறவுகளில் மிகக் கடுமையான தாக்கத்தினை விளைவிக்கிறது. அவன் தன்னினத்திலிருந்தும், ஏனைய மனிதரிடமிருந்தும் அந்நியப்படுகிறான். அந்நியமாக்கப்பட்ட உழைப்பு உறவுகளுக்குள்ளே தான் ஒவ்வொரு மனிதனும் தான் உழைப்பாளி என்ற வகையிலோ உழைப்பை சுரண்டுபவன் என்ற வகையிலோ இரண்டுக்கும் இடையில் உள்ளவன் என்ற வகையிலோ தனது தகுதிக்கும் உறவுக்கும் ஏற்றவாறாகவோ மற்றவனைப் பார்க்கிறான். அந்நியமான நிலையில் ஒரு மனிதன் பிறிதொரு மனிதனுடன் கொள்ளும் உறவு உண்மை உறவாக இருப்பதில்லை. இதுவொரு உழைப்பாளி முதலாளியுடனும், வீட்டுப் பணியாள் வீட்டு எசமானிடமும், சுரண்டப்படுகிறவன், சுரண்டப்படுபவனிடம், கீழ் அதிகாரி மேல் அதிகாரியுடனும், வாடிக்கையாளர் வர்த்தகரிடமும், பிச்சைக்காரன் பிச்சை பெறுவனிடமும் கொள்ளும் உறவுபோன்றதாகும்.

3.3 மாக்சினது அந்நியமாதல் குறித்த ஆய்வு முற்போக்கானதாய் காணப்பெறினும், அதற்கென அவர் முன்வைத்த தீர்வு பெரிதும் பயனளிக்கவில்லையெனலாம். மாக்ஸ் இளமைக்காலத்தில் அந்நியமாதல் குறைந்து கொண்டிருந்த நிலைப்பாடு வளர்ச்சி நிலையில் மாறுபடுகிறது. இவ் மாறுபாட்டிற்கு, ''எண்ணக்கருக்கள்'' குறித்துக் காலத்துக்கு காலம் அவர் ஏற்படுத்திக் கொண்ட சிரத்தை மாற்றங்களே அடிப்படையாகிறது. இளம் மாக்ஸ் இலட்சியவாத (Idealistic) சிந்தனைகளினாலும் ஒழுங்கு வயப்பட்ட (Moralistic) சிந்தனைகளினாலும் தாக்கமுற்றிருந்தார். வளர்ச்சி நிலையில் அவரிடம் ஏற்பட்ட சிந்தனை மாற்றங்கள் பொருளாதாரம், மூலதனம், உபரி வருமானம் என்கிற எண்ணக்கருக்களுக்கு முதலிடம் வழங்கியது. இதன் வழியாக அனைத்து உறவுகளையும் ஊழியத்தை வழங்குதல், வாங்குதல் என்கிற அடிப்பயைடிலே கண்டு கொண்டார். மாக்ஸின்காலம் வரை மனிதவாழ்வின் மையப்பிரச்சினையாக வைத்தெண்ணப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நியமாதல், மனித தேவைகளுள் ஓர் அலகான பொருளாதாரத்தை மையப்படுத்தியவாறாய் பிற்கால மாக்சினால் நோக்கப்பட்டது. பிற்காலத்தில் றோபொட்கே மேறொன் ((Robert K Merton) போன்றோர் அந்நியமாதலையோர் சமூக உளவியல் நேர்வாக தீவிரமாக நோக்கத் தலைப்பட்டனர்.

அடம் சேவ் (Adam Schaff) என்கிற முதன்மை வாய்ந்த மாக்சியவாதி 1970 ல் எழுதிய (Human Individual) என்கிற நூலில் அந்நியமாதல் என்கிற பிரச்சினை இன்னும் தீர்ந்து விடவில்லையென்றும் பல்வேறு வடிவங்களில் அந்நியமாதல் காணப்படுகின்றதென்றும் குறிப்பிடுவது இங்கு நோக்க வேண்டியதாகிறது[23]

4.0 திட்டமிடப்படாத நிலையில் வளர்ந்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சிகள் அதனைத் தொடர்ந்து ஏற்படும் தனித்தனித் தொகுதியாக்கங்களும் (Compartment alization)சமகால உலகில் அந்நியமாதல் பிரச்சினைகளுக்கு மேலும் தூபமிடுகின்றன என்பதும் சிந்திக்கத்-தக்கதொன்றாகும்.

சமய மெய்யியலாளர் அந்நிய-மாதலையோர், சுயதன்மையானதென அதாவது தனியாள் சம்பந்தப்பட்டதொன்றாகக் கருதுகிறார்கள். அந்நியமாதல் தனியாள் தனக்கென உரிய இயற்கையிலிருந்தும் தன் மூலமாயுள்ள முழுமையிலிருந்தும் அல்லது கடவுளிலிருந்தும் (கெகல் கருதுவதுபோல/ இருகெவர்ப்பட்ட வேறான நிலைகளில் அந்நியப்படலை அழுத்திக் குறிப்பிடுகின்றார்கள்.) சமய மெய்யியலாளர்கள் கண்டு காட்டிய வழியில் மேன் மேலும் ஆய்வுகள் இடம் பெறின் அந்நியமாதலைப் புரிந்துகொள்ள வாய்ப்புகள் ஏற்படும். மாக்ஸ் நியமப்படுத்தியவாறாய் அந்நியமாதலை நோக்கியது போலன்றி, மெய்யியல்சார், சமயம்சார், சமூகவியல்சார், சமூகஉளவியல்சார், பொருளாதாரம்சார், தொழில் நுட்பம்சார் எண்ணக்கருவாக நோக்குகையில் அந்நியமாதல் எனும் எண்ணக்கரு 01. மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையில் 02. மனிதனுக்கும் அவனது சிந்தனைக்கும் இடையில் 03.மனிதனுக்கு அவன் சார்ந்துள்ள **சமூகத்திற்கும் இடையிலான தொடர்புகளை மையப்படுத்திய ஆய்வில் பெறப்பட்ட உறவு** நிலையினைச் சுட்டுமோர் சொற்குறியாகக் கண்டுகொள்ளலாம்.

அடிக்குறிப்பு

I S.P. Dubey, The Problem of Alienation and the Technological society, Indian Philosophical annual, Vol 13, University of Madras, P. 57.

II John Dewey, Reconstruction in Philosophy. Beacon Press. 1963 P. 24.

III Paul Edward. The Encyclopedia of Philosophy. Vol 1 - Newyork P.76

IV Ibid, Paul Edward P.72

V Ibid, Paul Edward P. 72

VI மாடுண்டு கண்டுண்டு மக்களுண்டு என மகிழ்வதெல்லாம் கேடுண்டு எனும்படி கேட்டுவிட்டேன். இனிக்கேற்மனமே.....

(தேவாரம்-அப்பர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊன்கெட்டு உயிர் கெட்டு
உணர்வுகெட்டு, என் உள்ளமும்
போய் நான் கெட்டாவா பாடித்
தேள்ளேணம் கொட்டாமே.....

(திருவாசம் மாணிக்கவாசகர்)

விடப்படுமோ இப்பிரபஞ்ச வாழ்க்கை
விட்டு மனம் திடப்படுமோ நின்னருளின்றே
மாதா வுடல்சலித்தாள்! வல்வினையேன் கால்சலித்தேன்
வேதாவுங் கைசலித்து விட்டேனோ-நாதா
இருப்பையூர் வாழ்சிவனே! இன்னமோ என்னை
கருப்பையூர் வராமற்கா

(பட்டனத்தார் பாடல்)

VII நன்றாய் ஞானம் கடந்துபோய்
நல் இந்திரியம் எல்லாம் நீத்து
ஒன்றாய் கிடந்த அரும்பெரும் பாழ்
உவல்பில் அதனை உணர்ந்துணர்ந்து
சென்றாங் இன்பத் துன்பங்கள்
செற்றுக் களைந்து பசை அற்றால்
அன்றே அப்போதே வீடு
அதுவே வீடு வீடாமே.

(நம்மாழ்வார், திவ்வியப்பிரபந்தம்)

VIII **தனக்குவமை இல்லாதான்றாள் சேர்ந்தார்க்கல்லார்
மனக்கவலை மாற்றலரிது.**

அறவாழி யந்தணற் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவரி நீத்தலிரிது

(திருக்குறள்)

IX Pelix Ceyer, david Scheiszer. Alienation Problems of meaning theory and Mathod, Cambridge Print 1981 P 24.

X Ibid, Pelix ceyer, David Scheiszer. 1981 P 24.

XI "எம்மை நீர் உமக்கென்று உருவாக்கினீர்
எங்கள் இதயம் உம்மில் அமாந்திராவிடில்
என்றுமே அதற்கு இளைப்பாறுதல் இல்லை"

" பூமியிலே உங்களுக்கு பொக்கிஷங்களைச் சேர்த்து
வைக்கவேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அழத்துவிடும். இங்கே திருடா
கன்னமிட்டுத் திருடுவர்."

(மத்தேயு 6:19)

XII Opcit, S P Duby, 1980 P.61

XIII Rajaganesan, The Social order alienation and Education. Indian Philosophical annual University of Maddras 1980. P. 72.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

XIV Deisman. D The Colony crowd, Newharen 1950, P.29.

XV Opcit, S P. Duby 1980 p. 61

XVI H. Skolimowski, Technological Alienation Indian Philosophical annual Vol 13. University of Madras. 1980. P. 46.

XVII John Plamenatz, Karl Marx's Philosophy of man, Clarendon Press Oxford 1975 P 115

XIX Ibid, John Plamenatz 1975. P. 120

XX Opcit, H. Skolimowski, 1980. P. 48

XXI Opcit, S.P. Dubey, 1980. P. 59

XXII Ibid. S.P. Dubey 1980. P. 64

XXIII Opcit, H, Skolimowski, 1980.P. 49.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்முக நாடுகளில் பெண்கல்வி: விருத்திக்கான மீள் சிந்தனை

மா. சின்னத்தம்பி

அறிமுகம்

பெண்களுக்கு கல்வியூட்டுவதால் பெறக் கூடிய பொருளாதார மற்றும் சமூக நலன்கள் ஆண்களுக்கு கல்வியூட்டுவதை விடவும் பன்மடங்கு பரவல் விளைவுகள் கொண்டதாகும். எனினும் பெரும்பாலான வளர்முக நாடுகளில் இன்று வரை பெற்றோரும் சமுதாயமும் ஆண்களின் கல்வியில் முதலீடு செய்வதை விடவும் குறைவாகவே பெண்களின கல்வியில் முதலீடு செய்து வருகின்றனர். வளர்முகநாடுகளில் பெண்களின் கல்வி தொடர்பான தடைகள் பற்றியதாகவும் அவர்களின் முன்னேற்றத்திற்-குதவக் கூடிய கல்வி வாய்ப்புகளை அதிகரிப்பதற்குரிய அணுகுமுறைகளை அடையாளம் காண்பதாகவும் இவ் ஆய்வுக் கட்டுரை அமைகின்றது.

பெண் கல்வி முரண்நிலை

உலகளாவிய ரீதியில் கடந்த மூன்று தசாப்தங்களாக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி முயற்சிகள் நாடுகளின் அபிவிருத்தியிலான பெண் கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி-யுள்ளன. பெண்கல்வி விருத்தி பெண்களின் தனிப்பட்ட கல்விக்கான வருவாய்களை மாத்திரம் அதிகரிக்க உதவுவதில்லை. சிறிய மற்றும் வறிய குடும்பங்களின் முன்னேற்றங்களை பெண் கல்வி பெருமளவில் நிர்ணயிக்கின்றது. கல்விகற்ற பெற்றோரின் பிள்ளைகள் ஆரோக்கியமான குழந்தைகளாக வளர்வதில் தந்தையரின் கல்வியை விட தாயாரின் ஆரம்பமற்றும் இடைநிலைக் கல்வி பெரும் செல்வாக்குச் செலுத்தி வருகின்றது. ஊழியச் சந்தையில் கல்விகற்ற பெண்கள் அதிகளவு பங்கேற்பதனூடாகவும், அவர்களது வருமானம் கல்விகற்பதன் மூலம் உயர்ந்து செல்வதனூடாகவும் வளர்முக நாடுகளின் வறுமையை பெருமளவில் தணிக்க முடியும். இத்தகைய நலன்களை உறுதி செய்வதற்கு மனித வள முதலீடு என்ற நோக்கில் பெண்கல்விக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்று உலகவங்கி பத்தாண்டுகளுக்கு முன்பே உணர்ந்திருந்தது. [1] 1965- 87 காலப்பகுதியில் உலகளாவிய ரீதியில் ஆரம்ப மற்றும் இடைநிலைக்கல்வியில் மாணவர் சேரும் விகிதம் குறிப்பிடத்தக்களவில் முன்னேறியிருந்த போது, பெண்களின் இடைநிலைக் கல்வியில் சேரும் விகிதம் வேகமாக அதிகரித்திருந்தது. எனினும் ஆண்களைவிட குறைந்ததாகவே காணப்பட்டது. பிரதேசரீதியிலும் ஆண் - பெண் கல்விமட்டத்தில் வேறுபாடு காணப்படுகின்றது. மத்திய கிழக்கு, உபசகாரா, ஆபிரிக்கா, தென்னாசியா நாடுகளில் இத்தகையவேறுபாடு அதிகமாகும். இலத்தீன அமெரிக்காவில் பொலீவியா, குவாத்தமாலா, ஹெயிற்றி தவிர்ந்த ஏனைய நாடுகளில் இத்தகைய வேறுபாடு எதுவுமில்லை; அல்லது புறக்கணிக்கத் தக்க அளவிலேயே உள்ளது. [2]

வளர்முக நாடுகளில் பாடசாலையில் சேரும் விகிதம் உயர்ந்து செல்லும் போக்கு காணப்பட்டாதும் பால் ரீதியிலான சமமின்மை குறைந்து விடுவதில்லை. பெண்களின் பாடசாலை சேரும் விகிதம் கூட ஆரம்பக்கல்வியில் காணப்படும். அதிகரிப்பு விகிதத்தில் இடைநிலைக் கல்வியில் காணப்படவில்லை. நாடுகளின் தலாவருமானம் உயர்ந்து சென்றால் ஆண் பெண் சமமின்மை குறைந்து செல்லும் என்பதற்கு எவ்வித சான்றுகளுமில்லை. மத்தியகிழக்கு நாடுகளில் எல்லா மாணவருக்குமான பாடசாலை சேரும் விகிதம் மிகவும் உயர்ந்தபோதும் பெண்கள் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கவில்லை. கல்வி மீதான அரசாங்கத்தின் செலவுகள் மிகவும் உயர்வாக உள்ள நிலையிலும் பெண்களின் பாடசாலை சேர்வில் சமத்துவத்தை ஏற்படுத்தியிருக்கவில்லை. தமது தேசிய வருமானத்தின் 3-4 சதவீதம் வரை செலவிடுகின்ற நாடுகளில் இலங்கை, கொரியாக் குடியரசு போன்ற நாடுகளில் பெண்கள் தொடர்பாக சமத்துவம் உயர்வாக உள்ளபோதும் லைபீரியா, மாலி போன்ற நாடுகளில் பெண்கள் சேரும் விகிதம் மிகவும் மோசமாகவேயுள்ளது. அரசாங்கங்கள் கல்விச் செலவுகளை குறைக்கும் போதும் அது பெண்களின் கல்வி தொடர்பாகவே அதிகபாதிப்பை ஏற்படுத்தி விடுகிறது. [3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் உலக குடித்தொகையில் பெரும்பான்மையினராக உள்ள போதிலும், அபிவிருத்தி வாய்ப்புகளில் மிகவும் சிறிய பங்கினையே பெறுகின்றனர். உயர்வான கல்வி வாய்ப்புக்கள், உயர் கல்வி சார்ந்த சிறந்த தொழில்கள் அரசியல் முறைமை, போதுமான நலத்துறை வாய்ப்புக்கள் என்பவற்றிலிருந்து அவர்கள் பெருமளவுக்கு விலக்கப்பட்டு விடுகிறார்கள். உலக குடித்தொகையில் பெண்கள், சிறுமியர், பங்கு அரைவாசியாக உள்ளபோதிலும் உலக வேலை மணித்தியாலங்களில் மூன்றில் இரண்டு பங்கினை வழங்கும் போதும் அவர்கள் உலக வருமானங்களில் நூறில் ஒரு பங்கை மாத்திரம் பெறுகின்றனர். [3]

பெண்கள் எழுத்தறிவுடையோராக இருத்தலின் அவசியம் பெரிதும் விரும்பப்படுவதில்லை. சமூக அநீதியும், புறக்கணிப்பும் அவர்களது இயலுமையை அங்கீகரிக்கவிரும்பாமையும், சமபங்காளராக அங்கீகரிக்க முன்வராமையும் தொடர்ந்து நிலவுவதாக பெண்கல்வியலாளர் நீலு றோ மேத்ரா (Neelu Roh Metra) குறிப்பிடுகிறார். [4]

தென்னாசியாவில் ஆண்களின் எழுத்தறிவு விகிதத்திலும் 50 % மாகவே பெண்கள் எழுத்தறிவு காணப்படும் போது வேறுபல நாடுகளில் நிலைமை மேலும் மோசமாகவே காணப்படுகின்றது. நேபாளத்தில் 35% மாகவும் சியராலியோனில் 37% மாகவும் சுடானில் 27% மாகவும் ஆப்கானிஸ்தானில் 32% மாகவும் காணப்படுகின்றது.

உயர்கல்வியிலும் வளர்முக நாடுகளில் பெண்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றனர். உப- சகாரா நாடுகளில் ஆண்களின் உயர்கல்வி சேர்வு விகிதத்திலும் பார்க்க பெண்கள் விகிதம் மூன்றில் ஒன்றாகவே காணப்படுகிறது. விஞ்ஞான தொழில்நுட்ப கல்வியில் நன்மைகளும் அதிகாரமும், அந்தஸ்தும், உயர்வாக இருப்பதால் வளர்ச்சியடைந்த நாடுகளில் கூட அத்தகைய கல்வியில் பெண்கள் விகிதம் குறைவேயாகும். ஆண்களுடன் ஒப்பிடுமிடத்து பெண்கள் இக்கல்வியில் சேரும் விகிதம் ஸ்பெயினில் 28% மாகவும் அவுஸ்திரியாவில் 25% மாகவும் கனடாவில் 29% மாகவும் மாத்திரமே உள்ளது[5] வளர்முக நாடுகளில் இது மேலும் குறைவானதாகும்.

கல்வி வேறுபாடு தொடர்பாக வளர்முக நாடுகளில் தொழில் வாய்ப்புக்களிலும் உரிய வாய்ப்பு பெண்களுக்கு வழங்கப்படுவதில்லை. ஆண்கள் பெறும் தொழில் வாய்ப்பு அளவில் 50% வரையிலேயே பெண்கள் பெறுகின்றனர். இவ்வாறே கூலி மட்டத்திலும் சமமின்மை காணப்படுகின்றது. வளர்ச்சியடைந்த நாடுகள் பலவற்றிலும் பெண்கள் கூலி மட்டம் நியாயமற்ற முறையிலேயே பேணப்பட்டு வருகின்றது. [6]

பெண்கல்விக்கான தடைகள்

பல வளர்முக நாடுகளில், இலவசக்கல்வி வழங்கப்படுகின்ற போதிலும், பெரிய குடும்பங்களைக் கொண்டுள்ள வறிய பெற்றோர் தமது எல்லாப் பிள்ளைகளையும் குறிப்பாக பெண்களை பாடசாலைக்கு அனுப்ப முடியாதுள்ளனர். பெண்கள் ''வீடுகளில் உதவி செய்யக்கூடியவர்'' என்ற அடிப்படையில் அவர்கள் பாடசாலைக்கு செல்வதை பெற்றோர் விரும்புவதில்லை. பெண்கள் பாடசாலை செல்வதால் பாடசாலைக்கட்டணம், புத்தகங்கள், சீருடை, தொடர்பான செலவுகளை ஏற்படுமிடத்து அதனை தாங்கமுடியாத நிலையிலும் பெற்றோர் பெண்பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதில்லை. வீட்டில் துணை செய்யக் கூடிய பெண்பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதால், அவர்கள் செய்யும் வேலைக்காக வேறு ஆட்களை அமர்த்துவதால் புதிய செல்வுகள் ஏற்படும். இத்தகைய அமையச் செலவு (Opportunity Cost) பெற்றோரால் விரும்பப்படுவதில்லை. பெண் குழந்தைகளை தொழிலாளர்களாக அங்கீகரிக்கும் சமுதாயங்களில் பெண்பிள்ளைகளை பாடசாலைக்கு விடுவதால் ஊழியம் தொடர்பான நன்மைகளை இழக்க வேண்டி ஏற்படும் என பெற்றோர் தயங்குவதுமுண்டு. மிகவறிய விவசாயப் பொருளாதாரங்களில் வேதனம் பெறுகின்ற மற்றும் வேதனம் பெறாத பணிகள் ஊடான பெண்களின் பொருளாதார பங்களிப்பு மிகவும் உயர்வானதாகும். இதனடிப்படையில் பெற்றோர் மேற்கொள்ளும் முடிவு பெண்கள் தொடர்ந்து பாடசாலை செல்வதைத் தடைப்படுத்துகின்றது. வேலை தொடர்பான குடும்ப நன்மைகள் என்ற நோக்கத்திற்கு அப்பால் கலாச்சார மரபுகள், பெண்களின் பாதுகாப்பு என்ற நோக்கங்களினடிப்படையிலும் பெற்றோரின் தீர்மானம் பெண்கள் பாடசாலை செல்வதை தடைப்படுத்துகின்றன. தென்னாசிய நாடுகளிலும் இக்கலாசாரக் காரணிகள் பெண்கல்விக்கு தடையாக விளங்கி வருகின்றன.[7] வளர்முக நாடுகளில் காணப்படுகின்ற வரையறுக்கப்பட்ட பொருளாதார வாய்ப்புக்களும் பெண்களின் எதிர்கால உழைப்பாற்றலை பாதிக்கும் நிலை காணப்படுவதால், பெண்களின் கல்வியில் முதலீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதற்கு பெற்றோர் உற்சாக மற்றோராக காணப்படுகின்றனர்.

பெண்களின் கல்வினால் கல்வி வழங்கும் குடும்பத்திற்கு எந்தவித நன்மைகளும் ஏற்படமாட்டா என்ற அபிப்பிராயமும் பெற்றோர் மட்டத்தில் காணப்படுகிறது. பெண்கள் திருமணம் செய்து தனியாக செல்லுமிடத்து கல்வியினால் பெறக்கூடிய நன்மைகளையும் தம்முடன் எடுத்துச் சென்று விடுவர். ஆனால் ஆண் பிள்ளைகளானால் பெற்றோர் வயது முதிரும் காலம் வரை பெற்றோருடனிருப்பர். இதனால் ஆண்களுக்கு கல்வியூட்டுவதால் பெண்களுக்கு கல்வியூட்டுவதை விட பெற்றோர் அதிகம் நன்மையடைவதாக எண்ணுகின்றனர்.

பெண்கள் கல்விகற்றாலும் ஆண்கள் பெறும் அளவு கூலியை பெற முடியாது. ஊழியச் சந்தையில் பெண்களுக்கான கூலிமட்டம் ஆண்களுக்கு சமமானதாக காணப்படுவதில்லை. இதனால் பெற்றோர் பெண்களின் கல்விக்கு செலவிடும் பணத்தை நிறுத்தி தமது ஆண்பிள்ளைகளுக்கு கல்வியூட்டுவது அதிகளவு பயனுடையதென நம்புகின்றனர். இதனால் பெண் கல்வி தொடர்பான பெற்றோர் நோக்கும் சம்மதமும் பெண்கல்விக்கு தடையாகவேயுள்ளது. இத்தகைய நோக்கும் போக்கும் பெண்கல்வி மேம்பாட்டினால் நாடுகள் பெறக்கூடிய நன்மைகளை இல்லாமற் செய்து விடுகின்றன. பெண்களுக்கு போதியளவு கல்வியூட்டுவதால் குடித்தொகைவளர்ச்சி குறைவடையமுடியும்; வருமானம் உயர்வடைய முடியும்; நாட்டின் உற்பத்தித்திறன் அதிகரிக்க முடியும்; எல்லா மக்களினதும் வாழ்க்கைத் தரம் உயர முடியும். இத்தகைய எல்லா வகை அநுகூலங்களையும் நாடுகள் இழந்து விடுவது உண்மையில் வளர்முகநாடுகளைப் பொறுத்தவரை அபிவிருத்தி சார் இழப்பேயாகும். பெற்றோர் நோக்கில் மாத்திரம் பெண்கல்வி முன்னேற்றங்களும் வளர்ச்சிக்கான வாய்ப்புக்களும் தடைப்பட்டு நிற்கவில்லை. குடும்பமட்டத்தில் பெண்கல்வி தொடர்பாக நிலவி வரும் அபிப்பிராயங்களும் நம்பிக்கைகளும் மாத்திரம் அவர்களின் கல்விவளர்ச்சியை தடைப்படுத்தவில்லை.

பொருளாதார குறுக்கீடுகள்

பொருளாதார ரீதியிலான செயற்பாடுகளும் வளர்ச்சி மாற்றங்களும் கூட பெண்கல்விக்கு எதிரானதாகவே வளர்ச்சி பெற்றுள்ளன. கல்விகற்ற பெண்களுக்கு கிடைக்கக் கூடிய தொழில் வாய்ப்பு அவர்கள் பெறுகின்ற கல்வி எத்துறை சார்ந்தது என்பதிலேயே தங்கியிருந்தது. இலங்கையில் பொறியியல் துறையில் பெண்கள் சேரும் விகிதம் 10% வரையிலும் முகாமைத்துவத்தில் 30% வரையிலும் காணப்படும் போது கலைத்துறையில் 46% மாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. மென்பொருள் பொறியியல் (Software Engineering) கணக்கியல், ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் கையாளப்படும் உணவுத் தொழில் நுட்பம் (Food Technology) போன்றவற்றில் பெண்களுக்குரிய கல்வி வாய்ப்புகள் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளன. இதை விடவும் பெண்களின் முன்னேற்றத்திகுரிய அடிப்படைகளை உருவாக்கக் கூடிய ஊட்டம், குடும்பக்கட்டுப்பாடு, எயிட்ஸ் தடைமுறைகள், சூழல் பாதுகாப்பு தொடர்பான கல்வியும் அறிவும் கைத்தொழில் நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து வளர்முக நாடுகளில் குறிப்பாக கிராமியத்துறைப் பெண்களுக்கு திருப்திகரமாக வழங்கப்படவில்லை. கரீபியன்நாடுகளில் உயர் தொழில்நுட்பம், பேரளவு, மூலதனச் செறிவு கொண்ட தொழில்களுக்கு சார்பான கொள்கைகள் பின்பற்றப்படும் போதெல்லாம் பெண்கள் அவற்றிலிருந்து புறந்தள்ளப்பட்டுசிறிய தொழில்களிலும், பண்ணைகளிலும் தொழில் வாய்ப்பு வழங்கப்படுவதாக ஆய்வாளர் கண்டறிந்துள்ளனர்.[8] சம்பளத்துடனான லீவு. தொழிற்சங்க உரிமை தொழிசார் நலப்பாதுகாப்பு, போன்றவற்றை வழங்கக்கூடிய முறைசார்ந்த ஊழிய வாய்ப்புக்களில் அல்லாது ஊழிய நியமங்கள் பின்பற்றப்படாத - பாதுகாப்பற்ற - முறைசாராத் துறைகளிலேயே பெண்களுக்கான தொழில் வாய்ப்பு அதிகரித்துச் சென்றது. பெரு நாட்டில் முறைசாராதுறை (Informal Sectors) களிலான பெண்களுக்குரிய தொழில்வாய்ப்பு பங்கு 1983இல் 36.2% இலிருந்து 1987இல் 45% இற்கு உயர்ந்திருந்தது. தொழில் பயிற்சி எதுவுமற்ற, நிலமற்ற பெண்கள் பிச்சை எடுத்தல், விபச்சாரம் செய்தல், மற்றும் சட்டரீதியற்ற தொழில்கள் போன்ற-வற்றிலேயே வருமானம் ஈட்ட முனைந்தனர். அறிவு இடைவெளி (Knowledge Gap) பெண்களை நலன்மிக்க பொருளாதார வாய்ப்புக்களிலிருந்து புறந்தள்ளியிருந்தது.

சுயமாகத் தொழில் முயற்சிகளை நடாத்தக்கூடிய தொழில் முனைவோராக வளர்வதற்குரிய கல்வி வாய்ப்புக்கள் ஒழுங்கான முறையில் வழங்கப்படவில்லை. சொத்துக்களை வைத்திருக்கும் உரிமைகள் பல வளர்முக நாடுகளில் முழுமையாக வழங்கப்படாதிருப்பதுடன் கடன் பெறுவதற்கு ஆண்களின் பிணையும் வற்புறுத்தப்படுகின்றது. மிக அண்மைக்காலங்-களில் அரசாங்கங்களினால் வழங்கப்படும் பெண் தொழில் முயற்சியாண்மையினருக்கான கடன்கள் மற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதிவசதி பற்றிய அறிவு போதியளவில் பெண்களிடையே பரப்பப்படவில்லை. இந்தியாவின் அனுபவத்தில் பசுமைப்புரட்சி (Green Revolution) வெண்மைப்புரட்சி (White Revolution) நீலப்புரட்சி (Blue Revolution) ஏற்பட்ட போதெல்லாம் தீர்மானங்களை மேற்கொள்ளும் நிறுவனங்களின் தலைமைத்துவத்தை ஆண்கள் கைப்பற்றிக் கொண்டதால் அவற்றின் நலன்களில் பெண்கள் உரிமை கொள்ள முடியவில்லை.[10]

அரசியல் புறக்கணிப்புக்கள்

பெண்கள் கல்வி வாய்ப்புக்களை பெறுவதிலும் கல்வி வசதிகளை சமமாக பயன்படுத்துவதிலும் காணப்படும் தடைகள் வளர்முக நாடுகளில் தொடர்ந்தும் அகற்றப்படாது இருப்பதற்கு அரசியல் ரீதியிலான தலைமைத்துவம், மற்றும் உரிமைகள் பெண்களுக்கு போதியளவு வழங்கப்படாமை பிரதான காரணமாகும்.

எந்த ஒரு துறையிலும் பெண்களின் முன்னேற்றதுக்கான வாய்ப்புக்கள் மற்றும் வளங்கள் அனுமதிப்பது பற்றிய முடிவுகளை எடுப்பதில் பெண்களுக்குரிய இடம் வழங்கப்படாமையே அவர்களின் கல்வி ரீதியிலான நலக் கேடுகளுக்கு அடிப்படைக்காரணமாகின்றது. இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் குடும்பம் சார்ந்த எல்லா முடிவுகளையும் ஆண்களே தனியாக மேற்கொள்வதாக சுட்டிக்காட்டின.[11] பெண்கள் தொழில்துறை தொடர்பான முடிவுகளை மேற்கொள்வதற்குரிய முயற்சியாண்மை அனுமதிகளை பெற்றுக் கொள்வதும் தக்க வைத்துக் கொள்வதும் மிகவும் கடினமாயுள்ளது. ஆபிரிக்காவில் தன்சானிய நாட்டின் அனுபவம் இதனை தெளிவு படுத்துவதாயுள்ளது.[12] மிகவும் உயர்ந்த மட்டத்தில் முடிவுகளை மேற்கொள்ளும் பதவிநிலைகளில் பெண்களுக்கு உரிய இடம் வழங்கப்படவில்லை. உலக ரீதியாக நோக்கும் போது சில நாடுகளில் இன்றும் கூட பெண்களுக்குவாக்குரிமை வழங்கப்படவில்லை. அரசாங்கங்களில் அவர்களின் பிரதிநிதித்துவம் குறைவாகவேயுள்ளது. உலகின் பாராளுமன்ற மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் பெண்கள் 10 சதவீதத்தினராகவேயுள்ளனர். நாடுகளின் மந்திரி சபைகளில் இடம் பெறுவொர் 3..5 சதவீத எண்ணிக்கையினராவர். ஆசிய பசுபிக் நாடுகளில் இவர்கள் 1.6% னராகவும் ஆபிரிக்காவில் 2.5% னராகவும் இலத்தீன் அமரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளில் 4.0% னராகவும் காணப்படுகின்றனர்.[13] 1993ஆம் ஆண்டில் பெண்களைத் தலைவர்களாகக் கொண்டதாக ஆறு நாடுகள் மட்டுமே விளங்கின.

இவ்வாறு பெற்றோர், பொருளாதார முயற்சிகள், அரசியல் மட்டங்கள் என்ற பல நிலைகளிலும் பெண்களுக்கான வசதிகள் வரையறுக்கப்படும் போது அல்லது புறமொதுக்கப்படும்போது பெண்கள்கல்வி தொடர்பாக ஆண்களைவிட பலவீனமானவர்-களாகவும், சமஅந்தஸ்து அற்றவர்களாகவும் மாறிவிடுகின்றனர். இத்தகைய வலிமைமிக்க பின்னணி பெண்கள் புதியதும், மிகவும் பயனுறுதி மிக்கதுமான அறிவைப் பெறுதற்கான வாய்ப்புக்கள், சுதந்திரம் என்பவற்றையும், பெற்ற கல்வியறிவை வினைத்திறனுடன் உரிய இடங்களில் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள், பின்னணி வசதிகள் என்பவற்றையும் பலவீனப்படுத்தி அல்லது தடுத்து வருகின்றன.

முன்னேற்றுதற்கான அணுகு முறைகள்

சமுதாயம் முழுவதற்கும் நன்மை-தருகின்ற பெண்கல்வியை முன்னேற்றுதற்கு அதன் பாதையில் நீண்டகாலமாக பன்முகப்பட்ட வகையிலும் ஒன்றிணைந்தவாறும் காணப்படும் பல்வேறு தடைகளையும் இயன்றளவு குறைப்பது அல்லது முற்றாகவே அகற்றுவதற்கான கொள்கையும், அதன்படியான நடைமுறைகளும் அவசியம் வேண்டப்படுகின்றன.

பெண்கள் என்று பொதுவாக குறிப்பிட்டாலும் அவர்களுள்ளும் தீங்குறுகின்ற பிரிவினர் பற்றிச் சிறப்பாக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. கிராமிய பெண்கள் வறிய குடும்பத்து பெண்கள், தனிநிலைத்தாய்மார் (Single; Mothers) கைவிடப்பட்ட மனைவிமார் (Abandoned Wives) சமூக இனமற்றும் அரசியல் ரீதியில் ஒடுக்கப்பட்ட சமூக வகுப்புப் பெண்கள், உடல் ஊனமுற்றோர் உளரீதியில் பாதிப்புற்றோர், புவியியல் ரீதியில் துண்டிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் குடும்பப் பெண்கள், அகதிகளாக நாட்டின் உள்ளே அல்லது வெளியெ வாழும் பெண்கள் போன்ற பல பிரிவினரும் முன்னேறுதற்கேற்ற கொள்கைகள் கல்வி தொடர்பாக சர்வதேச மட்டத்திலும், பிராந்திய மற்றும் தேசிய மட்டத்திலும் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால் உள்ளூர் மட்டத்தில் - நுண்முறையில் பிரச்சினைகள் விளங்கிக் கொள்ளப்பட வேண்டும். அவற்றினடிப்படையில் பெண்கல்வி தொடர்பாக தெளிவான தொடர்ச்சியான செயல்சார் கொள்கைகள் நெகிழ்ச்சியுடையதாக மேற்கொள்ளப்படல் வேண்டும். உலகவங்கி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுனெஸ்கோ, கல்வித் திட்டமிடலுக்கான சர்வதேச நிறுவனம் (IIEP) சர்வதேச அபிவிருத்திச் சங்கம் என்பன சர்வதேச ரீதியில் பணியாற்றிவரும் மகளிர் மேம்பாட்டுக்கான அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் நாடுகளின் மகளிர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகாரத்துக்கான அமைச்சுக்களுடனும் கலந்துரையாடி அகல்விரிவுப்பண்புடைய (Comprehensive) நிகழ்ச்சித் திட்டங்கள், செயற்றிட்டங்கள், மற்றும் வேலைத் திட்டங்களைத் தயாரித்தல் வேண்டும். இவை குறுங்கால, இடைத்தரகால, மற்றும் நீண்டகால ஒழுங்குமுறையில் சிக்கனமாகவும், வினைத்திறனுடனும், பயனுறுதி மிக்கதாகவும் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். "உள்ளூர் மட்டததில் சிந்தித்து சர்வதேச மட்டத்தில் செயற்படுத்துதல்" என்ற தற்போதைய அணுகு முறையை பின்பற்றும் வகையில் கீழிருந்து மேல் நோக்கிய அணுகுமுறை (Botton Up approach) யில் நாடுகளின் கிராமிய மற்றும் உள்ளூர் மட்ட மகளிர் அமைப்புக்களை [14] பெண்கல்வியை முன்னேற்றும் வேலைத்திட்டங்களில் ஈடுபடுத்துதல், அவற்றுக்குவழிகாட்டுதல் உதவி வழங்குதல் மற்றும் அவற்றிடையிலான ஒருங்கிணைப்பை வலுப்படுத்துதல் போன்றவற்றிலும் சர்வதேச நிறுவனங்களும், நிகழ்ச்சி மற்றும் செயற்திட்டங்களும் கவனம் செலுத்த வேண்டும்.

வளர்முக நாடுகளில் பயன்விளை -வுகளை அதிகரிப்பதற்கு பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்துவது அவசியமாகும்.

1. கல்வி செலவைக் குறைத்தல்

பெண்கள் ஆரம்பக்கல்வி, இடைநிலை மற்றும் உயர்கல்வி கற்பதற்கு ஏற்படக்கூடிய நேரடி மற்றும் மறைமுக செலவுகளை தேசியரீதியல் குறைத்தல் வேண்டும். கல்வி கற்பதற்கான மற்றும் கல்வியறிவைப் பரப்புதற்கான செலவுகளையும் குறைப்பதன் மூலமாகவே பெண்களுக்கான கல்வி வாயில்களை அகலத்திறக்க முடியும் இதற்கு பெற்றோர் (குடும்ப) மட்டத்தில் செலவைக் குறைப்பது முதல் நிலைத் தேவையாகும.

-கொரியா தனது நாட்டில் படிப்புக் கட்டணங்களை அகற்றுதல், இலவசப்பாடநூல் வழங்குதல், மதியஉணவு பாடசாலைகளில் வழங்குதல், குறைந்த விலையில் பள்ளிச் சீருடை வழங்குதல் போன்வற்றின் மூலம் பெண்களின் கல்விக்கான பெற்றோர் செலவைக்கணிசமாக குறைப்பதன் மூலம் பெண்கள் மட்டத்தில் கட்டாயக்கல்வியை நடைமுறைப்படுத்தியது. இலங்கையிலும் அத்தகைய பள்ளிசார்ந்த நலன்புரி நடவடிக்கைகள் அரைநூற்றாண்டுகாலத்திலும் கூடுதலாக மேற்கொள்ளப்பட்டு வருவதால் பெண்கள் கல்வியில் பங்கேற்கும் விகிதம் இலங்கையில் பல்வேறு கல்விமட்டங்களில் சிறப்பானதாக [15] காணப்படுகின்றது. பெருநாட்டில் இத்தகைய நடவடிக்கைகள் ஆண்களை விட கூடுதலாக பெண்களின் பாடசாலை சேரும் விகிதத்தை உயர்த்தியிருந்தன.

-இதற்கு மேலதிகமாக பெற்றோருக்கான அமையச் செலவைக்குறைத்து ஊக்கமளிக்கும் வகையில் மானியங்களும் (Subsidies) புலமைப்பரிசில்களும் (Scholarships) வழங்கப்படல் வேண்டும். வங்காளதேசம், குவாத்தமாலா ஆகிய நாடுகளில் இத்தகைய முயற்சிகள் அதிகம் வெற்றியளித்துள்ளன.

-பெண்பிள்ளைகளின் நேரம் தொடர்பாக குடும்பங்களுக்கு ஏற்படும் நட்டங்களைக் குறைப்பதன் மூலம் அவர்களை பள்ளிக்கு அனுப்பும் பெற்றோர் விருப்பத்தை அதிகரிக்க முடியும் இதற்கு பின்வரும் நடவடிக்கைகளில் கவனம் செலுத்த முடியும்.

(அ). பாடசாலைநாட்கள் மற்றும் பாடசாலை மணித்தியாலங்களை நெகிழ்ச்சியுடையதாக மாற்றியமைத்தல்.
இந்தியாவிலும், சீனாவிலும் இவை அதிகபயனளித்துள்ளன.

(ஆ). கிராமங்களில் சிறு குழந்தைகளை பெண் பிள்ளைகள் தம்முடன் பாடசாலைக்கு எடுத்து வந்து அங்கு பராமரிகும் வசதிகளை வழங்குதல். சில நாடுகளில் இதுவும் வெற்றியளித்துள்ளது.

(இ) தண்ணீர், மற்றும் விறகு விநியோகம் தொடர்பாக சீரான, சிக்கனமான நுட்பங்களையும், வசதிகளையும் உருவாக்குதல், இதன் மூலம் பெண் பிள்ளைகள் கல்விகற்பதற்கான நேரத்தை அதிகரிக்கலாம்.

(ஈ). பாடசாலைக்கும் வீட்டுக்குமிடையிலான தூரத்தைக் குறைக்கும் வகையில் பெண்களுக்கான பாடசாலைகளை குறுகிய தூரத்தில் நிறுவுதல். எகிப்தில் பெண்கள் பாடசாலை - வீடுகள் தூரத்தை இரண்டு கிலோமீற்றரிலிருந்து ஒரு கிலோமீற்றராக குறைத்த போது பெண்கள் பாடசாலையில் சேரும் விகிதம் 64இலிருந்து 74ஆக அதிகரித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிஸ்தான், சிந்து மாகாணத்தில் இத்தகைய பாடசாலைகளின் தூரத்தை 1.5 கிலோமீற்றராக பேணுவதென்று பத்தாண்டுகளுக்கு முன்பே தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டது.

இத்தகைய நடவடிக்கைகள் பெற்றோர் செலவைக் குறைந்து பெண்களை கூடுதலாக கல்விகற்க அனுமதிப்பதற்கான தூண்டுதல்களை அதிகரிக்க நிச்சயம் உதவும்.

உ. கலாசாரக் பொருத்தப்பாடு

பெரும்பாலானவளர்முக நாடுகளில் கலாசார ரீதியில் பெண்கள் மீதான கட்டுப்பாடு, மேலாதிக்கம் ஓப்பீட்டு ரீதியில் அதிகமாக காணப்படுவதால், கலாசார ரீதியில் பொருத்தப்பாடான நடவடிக்கைகளை மேற்கொள்வதால் பெண்கல்வியை முன்னேற்ற முடியும். பல்வேறு நாடுகளின் அனுபவங்களை பொருத்தமான வகையில் வளர்முக நாடுகள் தம் நாடுகளில் பின்பற்ற முடியும்.

- பெண்கள் பாதுகாப்பு தொடர்பான உட்கட்டமைப்பை விருத்தி செய்தல் வேண்டும். பெண்கள் பாடசாலை சுற்றுப்புற சுவர்களை உயர்த்துதல், தனியான கழிவறைகளை அவர்களுக்கென நிர்மாணித்தல்,

- பெண்களுக்கென தனியான மகளிர் பாடசாலைகளை எல்லா கல்வி மட்டத்திலும் ஏற்படுத்தல். இது பாடசாலையில் சேரும் விகிதத்தை உயர்த்துவதற்கும், பெண்களின் சுயபுலக்காட்சியை விருத்தி செய்வதற்கும், அவர்களது கல்வி சாதனைகளை அதிகரிப்பதற்கும் உதவும். இடைநிலை மட்டத்தில் மொழி, கணிதம் போன்ற பாடங்களில் சிறந்த பெறுபேறுகளை ஏற்படுத்த இது உதவியுள்ளதாக ஆய்வுகள் காட்டுகின்றன.

3. கற்றல் – கற்பித்தல் விடய, முறைமாற்றங்கள்

பெண்கள் கல்வி கற்றல், பெண்களுக்குக் கற்பித்தல் தொடர்பாக வளர்முக நாடுகளில் நீண்டகாலமாக நிலவிவரும் மாயைக் கருத்துக்களை மாற்றியமைத்தல் வேண்டும்.

- பெண்களுக்கான பாகுபாடுகளை பலமிழக்கச் செய்யும் வகையிலும், அவர்கள் தொடர்ந்து கற்பதற்கு நாட்டம் பெறும் வகையிலும் பாட நூல்கள் திருத்தி எழுதப்படல் வேண்டும்.

வங்காளதேசம், மாலி, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இத்தகைய முயற்சிகளுக்கென உலக வங்கி உதவிச் செயற்திட்டங்களை நிறைவேற்றி வந்துள்ளது.

- விஞ்ஞானம், கணிதம், கணனிக்கல்வி. தொழில்நுட்பம், பொறியியல், சட்டம், முகாமைத்துவம் போன்ற துறைகளில் கூடுதலாக கல்வி கற்பதற்கு பாடசாலை மட்டத்திலிருந்தே வழி காட்டல்களும், உதவிகளும், ஊக்குவிப்புக்களும் வழங்கப்படல் வேண்டுதத்.

- பெண்கள் பாடசாலைகளில் கற்பிப்பதற்கென பெண் ஆசிரியர்களை அதிகம் நியமித்து அதற்கு ஏற்ற பயிற்சிகளையும் வழங்க வேண்டும். இயன்றவரை உள்ளூரிலிருந்து பெண் ஆசிரியர்களை நியமிப்பது அதிகளவு பயனுறுதியை ஏற்படுத்தும்.
- நேபாளம், யெமான் போன்ற நாடுகளில் இம் முயற்சிகள் அதிகம் வெற்றியளித்தள்ளன.

ஃ. உயர்கல்வி முன்னேற்றம்

நாட்டின் பல்வேறு துறைகளும் பெண்கல்வி தொடர்பாக செல்வாக்குச் செலுத்தி வருவதால், அத்தகைய துறைகளின் உயர் பதவிகளை பெண்கள் பெறுவதற்கு உதவும் வகையில் உயர் கல்வி வாய்ப்புக்களும் வசதிகளும் அதிகரிக்கப்படல் வேண்டும்.

விரிவுரையாளர், திட்டமிடுவோர், உயர் தொழில்நுட்பவினைஞர், விஞ்ஞானிகள், தொழில் நிறுவன இயக்குனர், முயற்சியாண்மையினர், சமுதாயத் தலைவர்கள் போன்ற பதவிநிலைகளில் பெண்களின் பங்கு அதிகரிக்கும் வகையில் உயர்கல்வி வாய்ப்புக்களை அதிகரிப்பதில் வளர்முக நாடுகள் கவனம் செலுத்த வேண்டும். இது தொடர்பாக பின்வருவனவற்றில் அக்கறை செலுத்த முடியும்.

அ.அருவநிலைப்பல்கலைக்கழகங்களை (Virtual Universities) உருவாக்குதல். கணனி மற்றும் இணையம் (Internet) மூலமாக எல்லா வளர்முக நாடுகளிலும் வாழும் பெண்கள் எல்லோரும் ஓரே தரமான உயர்கல்வி பெற உதவுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெச்சிக்கோ ஆபிரிக்க அருவநிலைப் பல்கலைக்கழகங்களின் அனுபவங்களைப் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

ஆ. மகளிர் பல்கலைக்கழகங்களை (Women Universities) வளர்முக நாடுகளில் இயன்றளவு கூடுதலாக உருவாக்கிக் கொள்ளுதல்
இந்தியாவில் இம் முயற்சி பெரிதும் வெற்றியளித்து வருகிறது.

இ. பெண்கல்வியாளர்கள் மற்றும் நிபுணர்-களை வளர்த்தெடுப்பதற்கென தேசிய ரீதியாகவும், பிராந்திய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் பல செயற்திட்டங்கள் உலக வங்கி மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிமற்றும் வழிகாட்டல்களுடன் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

ஈ சர்வதேச மகளிர் கல்வி உச்சி மகாநாடுகளை சிறப்பாக வடிவமைத்து விழிப்புணர்வையும் ஊக்கத்தையும் சர்வதேச ரீதியாக வளர்த்தல் வேண்டும்.

முடிவுரை

வளர்முக நாடுகள் இத்தகைய எல்லா முயற்சிகளையும் ஒன்றிணைந்த வகையில் நிறைவேற்ற தொகுப்பு (Package Approach) அணுகுமுறையை கையாள வேண்டும்.

கல்வி தொடர்பான தொகை ரீதியான விரிவாக்கம் மட்டுமன்றி தரரீதியான முன்னேற்றம் மற்றும் உயர்ந்த மட்ட பயனுறுதி என்பவற்றையும் ஏற்படுத்த வேண்டும்

இவ்வாறான முயற்சிகளில் செலவிடும் வளம் தொடர்பாக சிக்கனமும் வினைத்திறனும் பேணப்பட வேண்டும், வளவிரயம் ஏற்படாதிருக்க எல்லா நாடுகளும் உச்சமட்ட முயற்சிகளை மேற் கொள்ள வேண்டும்.

பொதுவாக மகளிர் கல்வி அபிவிருத்திச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது அந்தந்த நாடுகளின் சமூக பண்பாட்டு சூழலின் பொருத்தப்பாட்-டினையும் கவனத்திற் கொண்டு அதற்கேற்ற நெகிழ்ச்சி நடைமுறைகளையும் கையாள வேண்டும். திட்டம் என்பதை விட சாதனை என்பதில் கவனம் வைத்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

இத்தகைய விடயங்களை திறமையாகக் கையாண்டு, பெண்கல்வி தொடர்பாக காணப்படும் முரண்பட்ட நிலைகளினால் வளர்ந்துள்ள தடைகளை அகற்றி, பெண்களுக்கு வாய்ப்புக்கள், உரிமை என்பவற்றில் சமத்துவத்தையும், முன்னேற்றத்தையும் ஏற்படுத்துவதால், பெண்கள் தொடர்பாக சமூகமும் உலகும் பெறக்கூடிய நன்மைகளை புத்தாயிரம் ஆண்டில் உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும்.

Reference and notes

1. Bellew Rosemary, Laura Raney Subbarao, K.(1992) "Educating Girls" Finance and Development, March, World Bank, p 54.
2. Ibid p. 55
3. Bhatia , K.Gurbachan (1995), " Development process and Female Partici pation: Some Implications for HRD" Current Trends in Human Resource Development - Challanges and Strategies in a Changing Scenario, New Delhi, p.176.
4. Neelu. Rohmetra (1995) " Women as Human Resource," Ibid. p.89
5. DES(1995) Development and Co- operation , DSE, Berlin, P.13.
6. விளக்கத்திற்கு பார்க்க. மேலது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. விளக்கத்திற்கு பார்க்க
Sandresegaran, S. and Raja Guunawardhana (1997), Education of Disadvantaged Communities in South Asia, Colombo, pp.13-19.

8. UN (1990) Debt: A Crisis for Development, New york p.60

9. Ibid.

10. விளக்கத்திற்கு பார்க்க
Christa Wichterich,(1992) Progress in India but not for women" D+ C. Berlin. pp. 18-20.

11. விளக்கத்திற்கு பார்க்க
Horowitz, B and Madhu Kishwar (1982) " Family Life - The unequal Deal", MANUSHI 1982/ 11 New Delhi, p. 15.

12. விளக்கத்திற்கு பார்க்க
Marja - Liisa Swantz (1995) "Women Entrepreneurs in Tanzania: A path to Sustainable livelihoods" Development 1995/ 1 SID Rome pp. 55-60./

13. UN(1990), Opcit, P. 65.

14. இத்தகைய மகளிர் அமைப்புக்கள் பல வளர்முக நாடுகளில் பரவலாக வளர்ச்சி பெற்றுள்ளன. உதாரணமாக: இந்தியாவில் SEWA -Self Employed Women`s Association தன்சானியாவில் Tanzania Gender Network and Women`s Research and Documentation Group at the University of Dares Salaam.

15. இலங்கையில் பெண்களின்:
எழுத்தறிவு விகிதம் 85.
ஆரம்பக்கல்வியில் சேரும் விகிதம் 80
இடைநிலைக்கல்வியில் சேரும் விகிதம்
தரம் 6- 8 - 49.6
தரம் 9- 10 - 51.0.
உயர் கல்வியில் சேரும் விகிதம் 43%.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப் பிரதேசத்தில் குடியேற்றத் திட்டங்களும் அவற்றின் அரசியல் பரிமாணங்களும்

சந்தான்பிள்ளை சகாயசீலன்

இலங்கை இரு தேசங்களாகப் பிளவுபட்டு இருந்ததுடன் மூன்று இராச்சியங்களாகவும் காணப்பட்டன. இலங்கைத் தமிழர் வடக்கு கிழக்குப் பிரதேசங்களை பூர்வீகத்தாயகமாகக் கொண்டு தனியான தேசத்தவர்களாக வாழ்ந்து வந்தனர்.[1] 16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையை போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் கைப்பற்றி இப் பிரிவுகளை மூன்று இராட்சியங்களாக வேறாக நிர்வகித்து வந்தனர். குறிப்பாக ஒல்லாந்தர் தமது ஆட்சிக் காலத்தில் தமிழ்ப் பிரதேசங்களை தனியான நிர்வாக முறைமைக்குட்படுத்தியுள்ளனர்.[2] மேலும் ஒல்லாந்தர் காலத்தில் தமிழர் வேறான மொழி, கலாசாரம், பூர்வீகப் பிரதேசத்தை யுடையவர்கள் என்றும் இப்பிரதேசங்களை நிர்வகிப்பதற்கான சொத்துரிமை, விவாகம், முதிசம் போன்றவை தொடர்பாக நீண்ட பாரம்பரியங்களைக் கொண்டிருந்தனர்.[3] தமிழர்கள் வரலாற்று ரீதியாகவும், புவியல் அமைவிடத்தினாலும் தனியான எல்லாவகையிலும் வேறுபட்ட மொழி, கலாச்சாரப் பண்பாட்டம்சங்களைக் கொண்ட தேசிய இனமாக வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றனர் என்பதில் இரு வேறுபட்ட கருத்துக்கருக்கு இடமில்லை.

பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றிய போது நாட்டை இனரீதியாகப் பிரித்து வைத்திருப்பதை விரும்பவில்லை. இதனால் தனித்தனியான நிர்வாக முறைகளை நீக்கி 1833 ஆம் ஆண்டு கோல்புறூக் - கமறன் சீர் திருத்தத்துடன் அதிகாரங்கள் மையப்படுத்தப்பட்ட ஒற்றையாட்சி முறையும் அதன் கீழ் ஓரே நிர்வாக முறையும் அறிமுகப்படுத்தினர்.[4] இதனால் ஒவ்வொரு இனங்களும் தமது சொந்தப் பிரதேசங்களில் தனித்துவமாக வாழும் நிலையை இழந்ததோடு, பிரித்தானியரால் அறிமுகப் படுத்தப்பட்ட வர்த்தக முயற்சிகள், நிர்வாகமையம், வர்த்தகமையம் இவைகள் அனைத்தும் இலங்கையின் ஈரவலயம் என அழைக்கப்படுகின்ற தென்மேற்குப் பகுதியில் அமைந்திருந்தது. தமிழர்கள் தாம் பெற்ற ஆங்கில அறிவினால் இலங்கையின் பல பாகங்களிலும் அரச பணியாளர்களாக நியமனம் பெற்றனர். இதனால் தென் இலங்கையை நோக்கிய இடப்பெயர்வு காணப்பட்டது என்பதில் வியப்பில்லை.

கைத்தொழில் புரட்சியின் பின் ஏற்பட்ட நவீனமயமாக்கல் நடவடிக்கைகளினால் இனத்துவ சமூகங்களில் தோற்றம் பெற்ற உயர் குழாத்தினர் தமது அரசியல் அதிகாரங்கள், பொருளாதார நன்மைகள், சமூக அந்தஸ்து போன்றவற்றைப் பேணிக் கொள்வதற்கு பல்தேசிய இனங்களுக்கிடையே முரண்பாடுகளை ஏற்படுத்தி ஒவ்வொரு இனக்குழுக்களையும் ஓழுங்கமைத்துக் கொள்கின்றனர்.[5] இக்கருத்தானது இலங்கையின் அனுபவத்தைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. ஏனெனில் 20 ஆம் நூற்றாண்டின் முதல் இரு தசாப்த அரசியல் செயற்பாடுகள் உயர்குழாம் தலைவர்களுக்கிடையலான அதிகாரப்போட்டியை வளர்த்ததோடு தமது அரசியல் நலன்களுக்காக இனங்களுக்கிடையே பகையையுணர்வை ஏற்படுத்தியதோடு இனங்களை அரசியல் மயப்படுத்தும் நிறுவனங்களையும் அமைத்துக் கொண்டனர்.

1931ஆம் ஆண்டு டொனமூர் அரசியலில் சுதேசிகளின் பங்கு அதிகரித்ததமையால் முதற்தடவையாக அரசியல் அபிவிருத்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இராஜரட்டைப் பகுதியில் கைவிடப்பட்ட குளங்களையும், கால்வாய்களையும் புனருத்தானம் செய்யும் முயற்சி மேற்கொள்ளப்பட்டன. இவற்றை மையமாகக் கொண்ட குடியேற்றங்ள் அமைக்கப்பட்டன. ஆற்று படி நில அபிவிருத்தித்திட்டங்கள், ஆற்றுத்திசை திருப்புத் திட்டங்கள் என்பன முதற்கட்டப்பணிகளாக மேற்கொள்ளப்பட்டன.[6] இதே காலத்தில் காணிப்பங்கீடு, விவசாய அபிவிருத்தி என்ற நோக்கத்தை அடைவதற்காக பல சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. 1927 ஆம் ஆண்டு நில ஆணைக்குழு நியமிக்கப்பட்டு, 1935 ஆம் ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நில அபிவிருத்திச் சட்டம் உருவாக்கப்பட்டது. 1939ஆம் ஆண்டு நில அபிவிருத்திக்கு புதிய கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது.[7] இவ்வாறான சட்ட ஏற்பாடுகளுக்கும், குடியேற்றக் கொள்கைகளுக்கு முன்னோடியாக இருந்தவர். முதலாவது காணி, விவசாய அமைச்சராக இருந்த டீ.எஸ் சேனநாயக்கா. இவர் முன்னர் காணி ஆணைக்குழுவில் பணியாற்றிய அறிவும், அனுபவமும் உடையவராக இருந்தததமையால் தனது அமைச்சின் கீழ் விவசாயம், நீர்பாசனம், நிலஅளவை, காட்டுவளம், காணிக்குடியேற்றம் ஆகிய திணைக்களங்களை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார்.[8] இவருடைய அரசியல் நடவடிக்கைகளே நவீன குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதற்கும் குடியேற்றத்திட்டங்களை விரைவு படுத்துவதையும் ஊக்குவித்ததோடு குடியேற்றயுகம் ஒன்று ஏற்படவும் காரணமாயிற்று.

குடியேற்றதிட்டங்கள் என்பவை அபிவிருத்தியையும், சமூக மேம்பாட்டையும், தனியாள் விருத்தியையும் கொண்டதாக இருக்க வேண்டுமேயன்றி அரசியல் நோக்கம் கொண்டதாக அமையக்கூடாது. இலங்கை ஒற்றையாட்சி முறையின் கீழ் மத்தியமயமாக்கப்பட்ட அதிகாரங்களையும், மத்தியமயமாக்கப்பட்ட நிறுவனங்களையும் கொண்டுள்ள அரசாங்கமொன்று குடியேற்றங்களை உருவாக்குவதென்பது மிகவும் சுலபமான தொன்றாகும்.[9] இந்த வகையில் சுதந்திரத்தின் முன் ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றத்திட்டங்கள் பெரும்பான்மையினம் சார்பான மேம்பாட்டு நடவடிக்கைகளையே அரசாங்கங்கள் மேற்கொண்டு வந்தன. டொனமூர் சீர்திருத்தத்தைத் தொடர்ந்து அரசியல் பலமும், ஆதிக்கமும் பெரும்பான்மை யினரைச் சென்றடைந்ததோடு அவர்களின் எழுச்சியானது சிறுபான்மையினரின் பொருளாதார நலன்களுக்கெதிராகத் தோற்றம் பெற்றதோடு அவர்கள் அனுபவித்துவரும் பொருளாதார அனுகூலங்களை பெரும்பான்மையினமும் பெற வேண்டும் என்ற தொனியில் பொருளாதாரத் தேசிய வாதம் ஒன்றைக் கட்டியெழுப்ப முற்பட்டனர்.[10] டொனமூர் சீர்திருத்தத்தோடு இலங்கையில் தேசிய நோக்கோ, தேசிய பண்போ காணப்படாமல் வகுப்பு வாத சிந்தனைகளும், இனரீதியான உணர்வுகளும் மேலொங்கி முனைப்புடன் காணப்பட்டது. இது சர்வசன வாக்குரிமையோடு கூர்மையடைந்து காணப்பட்டது.[11] என்றும் அரசியல் அதிகாரம் பற்றிய அமைப்பிலும், சட்டவாக்கத்திலும் ஆதிக்கம் செலுத்துவதாக அமைந்துள்ளதோடு இதுதான் இனக்குரோதத்தின் அடிப்படையாக விளங்கியது.[12]

ஆகவே டொனமூர் காலத்தில் இருந்து ஒரு இன மேம்பாட்டிற்கான அரசியல் பொருளாதார சமூக நடவடிக்கைகள் ஆரம்பமாயிற்று எனலாம்.

பல் தேசிய இனங்கள் வாழுகின்ற நாடுகளில் மேற்கொள்ளப்படும் குடியேற்றத் திட்டங்களானது மிகவும் அவதானமாகவும் சமத்துவத்தோடும், சமசந்தர்ப்பத்தோடும் மேற்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் ஒரு குறிப்பிட்ட இனத்தவருக்கு ஆதரவாக அல்லது சாதகமாக குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுமாயின் அங்கு வாழும் ஏனைய இனத்தவர்கள் இலகுவில் உணர்ச்சி வசப்படவும், தாம் புறக்கணிக்கப்படுவதாக உணரவும் காரணமாகின்றது.[13] என்பதோடு ஆள்புலம் சார்ந்த தேசிய இனப்பிரச்சினை தோன்றவும் வழிவகுத்தது.

குடியேற்றம் என்பது ஓர் அரசியல் மட்டக் கொள்கையாக ஆரம்ப காலங்களில் இருந்தே பின்பற்றப்பட்டு வருகின்றன. இவை இலங்கையின் அரசியலில் பல பரிமாணங்களை ஏற்படுத்தி வருகின்றது.

ஈரவலயத்தில் இருக்கும் சனத்தொகை செறிவைக் குறைப்பது, உணவு உற்பத்தியை அதிகரிப்பதும் தான் அரசாங்கங்களின் முக்கிய நோக்கமெனக் கூறப்பட்டது. வரண்ட வலயத்தில் அரச ஆதரவோடு குடியேற்றங்கள் மேற் கொள்ளப்பட்டு வந்தன. 1930 களில் இருந்து அரசாங்க நிலங்களை காணிகளற்ற ஏழை விவசாயிகளுக்கு விவசாய நன்மைகளுக்காக வரண்ட வலயங்களில் குடியேற்றி வந்தனர்.[14] ஈரவலயத்தில் நிலப்பாற்றாக்குறை இருப்பதால் காணிகளற்ற விவசாயிகளுக்கு காணி வழங்குவது அதன் நோக்கமாக இருந்தது. ஆனால் உண்மை நிலையில் ஏற்கனவே வரண்ட வலயத்தில் காணிகளற்ற ஏழை விவசாயிகள் வேலையின்மை, நிர்ப்பானப் பற்றாக்குறை, மலேரியா தொற்றுநோயின் தாக்கம் ன்பவற்றால் அதிகளவு பிரச்சினைகளை எதிர்நோக்கினர்.

வரண்ட வலயத்தில் காணிகளற்றோர் வீதம் - 1946[15]

மட்டக்களப்பு	-57.8%
யாழ்ப்பாணம்	-31.7%
புத்தளம்	-27.2%
வவுனியா	-25.6%
திருகோணமலை	-20 %

(B.H. Famer 1957)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே வரண்ட வலயத்தில் காணப்பட்ட பிரச்சினைகளை தீர்க்கவோ, அம்மக்களுக்கு மாற்று வழிகளைப் பற்றிச் சிந்திக்காத தலைவர்கள் சிங்கள மக்களை வரண்ட வலயத்தில் குடியேற்றவும் அவர்களுக்கான பலவேறு அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கிக் கொடுப்பதிலும் அதிக அக்கறை காட்டினர் என்பதை அவர்களுக்கு கொடுக்கப்பட்ட குடியேற்றத் திட்டங்களே சான்றாகும்.[16]

இலங்கையின் வரலாற்றை எப்போதும் மிகைப்படுத்தி நோக்கிய சிங்களத்தலைவர்கள் சிங்கள பௌத்தத்தின் பொற்காலத்தை மீண்டும் ஏற்படுத்துவதற்கான அரசியல் செயற்பாடுகளில் அதிக ஆர்வம் காட்டி வந்தனர். 1930களில் அரசுக்கழகத்தில் சுதேசிகளின் பங்கு அதிகரித்தமையாலும் மந்திரிசபையில் மந்திரிகளாக இருந்த இலங்கையர்களை வரண்ட வலயக் குடியேற்றங்களை அமைப்பதன் மூலம் நீர்பாசனங்களைப் புனருத்தானம் செய்வதோடு இராஜரட்டையில் சிங்கள நாகரிகத்தின் மேம்பாட்டை மறுபடியும் ஏற்படுத்துவதை அரசியல் நோக்கமாகக் கொண்டிருந்தனர்.[17] சிங்கள இனத்தின் வரலாற்றை மிகைப்படுத்திய தலைவர்கள் இலங்கையின் புராதன நாகரிகத்தின் மிக உன்னத நிலையை [18] இராஜரட்டையில் மேற்கொள்ளப்படும் குடியேற்றத்திட்டங்களினால் அடைந்து கொள்ள முடியும், என நம்பினர். இதன் காரணமாக குறுகிய இனவாத சிந்தனைகளோடு குடியேற்றங்களை விரைவுபடுத்தியதோடு பிரதேசங்களின் கட்டமைப்புக்களையும் மாற்றியமைத்தனர்.

இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதியை வடக்கு கிழக்கு மாகாணங்கள் கொண்டுள்ளன. இங்கு தமிழ் பேசும்மக்கள் செறிவாக வாழ்வதோடு மிகத் தொன்மையான வாழ்விடமாக இப்பிரதேசங்கள் காணப்படுகின்றது. குடியேற்றத்திட்டங்களை ஆதரிப்போர் முன்வைக்கும் வாதம், இலங்கையில் விகிதாசாரமற்ற ஒரு பங்கையே வடக்கு, கிழக்கு மாகாணங்கள் கொண்டுள்ளன. மொத்த சனத்தொகையில் 14.7 சதவீதமானோர் மொத்த நிலப்பரப்பில் 28.4 சதவீதமான பிரதேசத்தில் வாழ்கின்றனர்.[19] எனவே பெரும்பானன்மையான மக்கள் மிகுதி மூன்றில் - இரண்டு பங்கு நிலப்பரப்பையே வாழ்விடமாகக் கொண்டுள்ளனர். இதில் எந்தவிதமான நியாயத்தன்மையும் காணப்படவில்லை என்பது அவர்களின் நியாயமாகும். ஆனால் உண்மை நிலை அதுவல்ல. வடக்கு கிழக்கு மாகாணங்களுக்குப் புறம்பாக வரண்ட வலயத்தாழ் நிலத்தில் காணப்படும் அனுராதபுரம், பொலநறுவை, மொனறாகல, அம்பாந்தோட்டை, மாவட்டங்கள் மொத்த சனத்தொகையில் 11.1 சதவீதத்தையும், மொத்த நிலப்பரப்பில் 28.5 சத வீதத்தையும் கொண்டுள்ளன.[20] ஆகவே சிங்களவர்களை செறிவு குறைவாக வாழ்கின்ற வரண்ட வலயங்களில் குடியேற்றங்களை மேற்கொள்ளாமல் திட்டமிட்ட வகையில் தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்ற மரபு வழிப்பிரதேசங்களில் அரச ஆதரவோடு திட்டமிட்ட குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவது அரசியலில் இன மேலாதிக்க வாதத்தின் நடவடிக்கையே அன்றி வேறு ஏதுவுமில்லை.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற குடியேற்றத் திட்டங்கள் மிகப்பெரியளவில் அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. பல்தேசிய இனங்கள் வாழுகின்ற நாடுகளில் மேற்கொள்ளப்படுகின்ற குடியேற்றத் திட்டங்கள் மிக நிதானமதாகவும், அரசியல் நோக்கம் அற்றதாகவும், இனப்பரம்பலில் மாற்றங்களை ஏற்படுத்தாமலும், இருப்பது இனங்களின் ஐக்கியத்திற்கும், தேசிய ஒருமைப்பாட்டிற்கும் உகந்ததாக அமையும். மாறாக இனப் பரம்பலில் மாற்றங்கள் ஏற்படுமாயின் தேசிய ஒருமைப்பாட்டிற்கான கட்டுமாணம் சிதைந்து விடும். குடியேற்றத்திட்டங்கள் அமைக்கப்படுவதை எதிர்க்க முடியாது. ஆனால் இனப்பரம்பலை மாற்றும் நோக்கோடு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைத் தடுத்தேயாக வேண்டும்.[21] இந்தியாவில் பஞ்சாப்பில் 1886இல் குடியேற்றத் திட்டங்களை ஆரம்பிக்கப்பட்டன. இவை இனப்பரம்பலில் மாற்றங்களை ஏற்படுத்தும் அரசியல் நோக்கம் கொண்டதல்ல.

இலங்கையரசியலில் சிங்கள மக்களின் வாதம் தென் இலங்கையில் இனப் பரம்பலை மாற்றும் நோக்கத்துடன் தமிழர்கள் அங்கு குடியேறுகின்றார்கள். தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களவர்கள் குடியேறுவதை தமிழர்கள் தடுக்க முடியாது.[22] ஆனால் இது உண்மைக்குப் புறம்பான வாதமாகும். ஏனெனில் தென் இலங்கையில் தமிழர்கள் குடியேறியதன் மூலம் இனப்பரம்பலில் பாரிய மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை, என்பதோடு, அரச பணியாளர்களும். வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டோரே தென் இலங்கை நோக்கிச் சென்றனர். ஆனால் தமிழ்ப் பிரதேசங்களில் மேற் கொள்ளப்பட்ட குடியேற்றத் திட்டங்கள் கொள்கை ரீதியாக அரசியல் நோக்கமும், இனத்துவ சிந்தனையும் கொண்டு அரசாங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவோடு பாரிய குடியேற்றங்களை அமைத்ததன் மூலமாக இனப்பரம்பலில் மாற்றங்களை ஏற்படுத்தினர். வடமாகணத்தை விட கிழக்கு மாகாணமே மிக மோசமாகப் பாதிக்கப்-பட்டுள்ளதுடன்[23] இனப்பரம்பல் சிதைக்கப்பட்டு சிங்களவர்களை பெரும்பான்மையாக கொண்ட மாவட்டங்கள் [24] உருவாக்கப்பட்டு வருகின்றன.

இரண்டாம் குடியரசு அரசியல் திட்டங்களின் அடிப்படையுரிமைகள் என்ற அத்தியாயத்தின் 14 (1) ஏ இல் இலங்கை முழுவதும் தடையின்றி நடமாடுவதற்கும் தான் விரும்பும் இடத்தில் வசிப்பதற்குமான சுதந்திரம்[25] வரையறை செய்யப்பட்டுள்ளது. இது ஒரு பிரசையினது சுதந்திரமாகும். ஆனால் பதவியில் இருக்கும் அரசாங்கங்களால் திட்டமிடப்பட்டு, அரச நிதியுதவியோடு அதிக எண்ணிக்கையிலானோரை அவர்களின் விருப்பங்களுக்கு மாறாக குடியமரச் செய்வது அடிப்படை மனித உரிமைமீறல்கள் என்பதோடு அரச இயந்திரத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கையுமாகும்.

கிழக்கு மாகாணத்தில் இனப்பரம்பலில் ஏற்பட்ட சிதையில் பரம்பலை பின்வரும் புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

கிழக்கு மாகாணத்தில் - 1921 -1981[26]

	சிங்களவர்		தமிழர்	
	1921	1981	1921	1981
திருகோணமலை	4.5%	33.6%	53.2%	33.8%
மட்டக்களப்பு	1.9%	03.2%	68.5%	70.8%
அம்பாறை	8.2%	37.6%	30.5%	20.1%

(S.Bastian -1997)

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில் 1946ஆம் ஆண்டில் 15.3 சதவீதமாக சிங்களவர் தொகை காணப்பட்டது. 1981இல் 33.6% அதிகரித்துள்ளது.[27] இதே போன்று அம்பாறை தனி மாவட்டமாக உருவாக்கப்பட்ட பின் சிங்களவர்களின் எண்ணிக்கை உயர்ந்தது. இங்கு அவதானிக்கக்கூடிய சிறப்பம்சம் ஒன்று தமிழர்களுக்கும் முஸ்லீம்களும் இயற்கையோடு இணைந்த சனத்தொகை அதிகரிப்பு வீதத்தினைக் கொண்டிருக்க, சிங்களவர்களின் சனத்தொகை அதிகரிப்பு வீதம் அபரிதமானதாக அதாவது செயற்கை அதிகரிப்பு காணப்படுகின்றது. மற்றையது கிழக்கில் சிங்களவரின் பரம்பலை அதிகரிக்க கிராமிய விஸ்தரிப்பு, மாவட்டங்கள், மாகாணங்கள் போன்வற்றின் எல்லைகளை மாற்றியமைத்தல் போன்ற தந்திரங்களைப் பயன்படுத்தி 1881இல் 4.5 சதவீதமாக இருந்த சிங்களவர்களை 1981இல் 24.9 சதவீதமாகவுள்ளர். தமிழர்கள் 61.3 சமவீதத்தில் இருந்து 41.9 சதவீதமாக குறைவடைந்துள்ளனர். 1980களின் பின் ஏற்பட்ட பல்வேறு அரசியல் அனர்த்தங்களால் கிழக்கின் சனத்தொகைப் பரம்பல் மேலும் மோசமடைந்தே காணப்படும் என்பது உறுதி.

தமிழ்ப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்த அரச ஆதரவுடனான குடியேற்றத் திட்டங்களினால் இங்கு பாரம்பரியமாக வாழ்ந்து வந்த தமிழ் பேசும் மக்களின் அரசியல் பலத்தையும், செல்வாக்கையும் அழிக்கும் மற்றுமோர் அரசியல் நடவடிக்கையாக வெவ்வேறு காலப்பகுதியில் கொண்டு வரப்பட்ட தேர்தல் தொகுதி நிர்ணயங்கள் அமைகின்றன. டொனமூர் சீர்திருத்தத்தின் கீழ் தமிழ்மக்களின் பிரதிநிதித்துவம் 5:1 என குறைக்கப்பட்டது.[29] பின்பு 1946 ஆம் ஆண்டு சுதந்திர இலங்கைக்காண தொகுதி நிர்ணயத்தின் போது வடக்கில் ஒன்பது தொகுதிகளும், கிழக்கில் ஏழு தொகுதிகளும் நிர்ணயிக்கப்பட்டன. இங்கு குறிப்பிடத்தக்க அம்சம் 1947இல் இருந்து 1956 வரை தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளே பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டனர்.[30] 1956 தேர்தலின் போது சிங்களம் மட்டும் என்ற கொள்கையால் வடக்கு கிழக்கில் எந்தவொரு சிங்கள வேட்பாளர்களும் போட்டியிடவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அரசியல் நலன்களுக்காக வாக்காளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது. புதிய தொகுதிகளை உருவாக்கி சிங்களப் பிரதிநித்துவத்தை அதிகரிப்பதும் அரசியல் தலைவர்களின் நீண்டகால அரசியல் கொள்கையாக இருந்து வந்துள்ளன. என்பதை அவர்களின் செயற்பாடுகள் நிரூபிக்கின்றன. 1959ஆம் ஆண்டு தொகுதி நிர்ணய ஆணைக்குழுவின் தொகுதி நிர்ணயத்தோடு அம்பாறை சிங்களவர்களின் தொகுதியாக மாறிவிட்டது.[31] 1974 தொகுதி நிர்ணயத்தின் பின் கிழக்கு மாகாணத்தின் பிரதிநிதித்துவத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. திருகோணமலை மாவட்டத்தில் 1977இல் சேருவெல என்ற தனிச்சிங்கள தொகுதி உருவாக்கப்பட்டது. அம்பாறை மாவட்டம் 1981ஆம் ஆண்டு திகாமடுவல்ல என்ற சிங்களத் தேர்தல் மாவட்டமாக உருவாக்கப்பட்டது. குடியேற்றத் திட்டங்களினால் வாக்களர்களின் பரம்பலிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இன்று கிழக்கில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் முழுமையாக அழியும் நிலையிலேயே காணப்படுகின்றது. திருகோணமலைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதி உருவாக்கப்பட்டதில் இருந்து தமிழ் பிரதிநிதித்துவத்தையே கொண்டிருந்த இத் தொகுதி[32] இன்று முதன் முறையாக ஒரு பிரதி நிதிகூட தெரிவு செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதென்றால் இது குடியேற்றத் திட்டங்களின் நீண்ட கால செயற்பாட்டின் வெற்றியென்றே கூற முடியும். இந்த அனுபவம் கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழர்களுக்கு மட்டுமல்ல முஸ்லிம் மக்களுக்கும் பேராபத்தாகவே அமையப்போகின்றது.

தமிழ்ப் பிரதேசங்களில் வெவ்வேறு பெயர்களினால் மேற்கொள்ளப்பட்டு வந்த குடியேற்றத்திட்டங்களினால் தமிழர்கள் மரபு ரீதியான வாழ்விடங்களில் சிறுபான்மையோராகி விடுவோமோ என அச்சம் கொண்டனர். இதன் அரசியல் பரிமாணம் தமிழர்கள் தமது இனத்துவ அடையாளங்களைப் பற்றியும், அதற்கான அரசியல் மட்ட அங்கிகாரம் பெறவும் நீண்டகாலம் போராடவேண்டியதாயிற்று, தமிழர்கள் ஒரு தனித்துவமான தேசிய இனம், அவர்களுக்கான மரபுவழி வாழ்விடம் என்ற கொள்கைகளை சிங்களவர்கள் நிராகரிக்கின்றனர். இலங்கையை சிங்களவர்கள் ஒரு தேசத்தின் தாயகமாகக் கருதுகின்றனர். ஏனெனில் சிங்களவர்களே ஆதியில் குடியேறியவர்கள், பௌத்தமே அவர்களுக்கு இத் தாயகத்தை வழங்கியது. ஆகவே தமிழர்களின் பூர்வீகத்தாயகக் கோட்பாட்டை நிராகரிக்கின்றனர்.

தமிழர்களின் பூர்வீகத் தாயகக் கோட்பாட்டை எல்லாச் சிங்களத் தலைவர்களும் நிராகரிக்கவில்லை.[33] பிரதான சிங்களத் தலைவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதற்கான அங்கிகாரத்தினையும் வழங்கியுள்ளனர். ஆனால் சிங்களத் தீவிரவாதிகளின் எதிர்பால் அவை நடைமுறைப்படுத்த முடியவில்லை. 1957ஆம் ஆண்டு பண்டா - செல்வா ஒப்பந்தத்தில் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் அமைக்கப்படும் பிராந்திய கழகங்களில் மேற்கொள்ளப்படும் குடியேற்றத் திட்டங்களுக்கான நபர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு இக் கழகங்களிடம் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. இவ்வொப்பந்தத்தில் தனியான பிராந்திய சபைகளால் நிருவகிக்கப்பட்ட பகுதிகளில் தமிழ் மொழி பயன்படுத்தப்பட்ட அனுமதித்ததன் மூலம் தமிழர் ஓர் தனித்துவமான தேசிய இனமாகவும் தமிழ்ப்பகுதிகளை பூர்வீகத்தாயகமாகவுதம் ஏற்றுப் கொண்டார்.

1965ஆம் ஆண்டு டட்லி சேனநாயக்கா - செல்வநாயகம் உடன்படிக்கை மேற்கொள்ளப் பட்டது. இந்த உடன்படிக்கையில் வடக்குகிழக்கு மாகாணங்களில் தமிழிலேயே நிர்வாகம் நடப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது. குடியேற்றத் திட்டங்களை கட்டுப்படுத்தவும், தமிழர்களின் பூர்வீகத்தாயகத்தைப் பாதுகாக்கவும், காணிப்பங்கீடு, காணிஅபிவிருத்தி விதி முறைகள் மாற்றியமைக்கவும் இணக்கம் தெரிவிக்கப்பட்டது. குடியேற்றத்திட்டங்களில் காணி வழங்கப்படும். போது

(அ) வடகிழக்கு மாகாணங்களிலுள்ள காணிகள் அம்மாகாணத்திலுள்ள காணியற்றவர் களுக்கே முதலிடம் வழங்கப்பட வேண்டும்.

ஆ). இரண்டாவதாக வடகிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கே வழங்கப்பட வேண்டும்.

இ). மூன்றாவதாக இலங்கையின் ஏனைய பகுதிகளிலுள்ள தமிழ் பேசும் இனத்தவர்களுக்கே முதலிடம் கொடுத்து ஏனையோருக்கு வழங்கலாம்.

குடியேற்றத் திட்டங்களினால் தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்பட்ட, ஏற்படப்போகின்ற அரசியல், பொருளாதார, சமூக விளைவுகளைப் பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வையும், அறிவையும் ஏற்படுத்தியவர்களை சமஸ்டிக்கட்சியினரே இவர்கள் கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து குடியேற்றத் திட்டங்களைக் கண்டித்தும், அதற்கு எதிராகப் பிரச்சாரங்களையும் போராட்டங்களையும் மேற்கொண்டு வடக்கு கிழக்கு பிரதேசங்கள் தமிழர்களின் பாரம்பரியத் தாயகம் என்ற கோட்பாட்டை பிரபலப்படுத்தியதோடு அதைப் பாதுகாக்கவும் முற்பட்டனர். செல்வநாயகம் கட்சியின் தலைமைப் பேருரையில்

''அரசாங்கத்தின் குடியேற்றக் கொள்கையானது எல்லாவற்றுள்ளும் பார்க்க தமிழ் பேசும் மக்களை கூடிய ஆபத்தை ஏற்படுத்தக் கூடியதாய் இருக்கிறது. தமிழ்பேசும் பிரதேசத்தை குறைப்பதற்கே அரசாங்கம் அநியாயமான முறையில் தன் அதிகாரத்தை உபயோகிக்கின்றது. சில வருடங்களுக்கிடையில் இந்நாட்டிலே தமிழ்ப் பிரதேசம் இல்லாதொழியும்''[34]

என்று கூறியதன் மூலம் குடியேற்றத்திட்டங்களினால் ஏற்படப் போகின்ற பாரிய தீய விளைவுகளை எதிர்வு கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்ஸ்டிக்கட்சியினர் தமது மாநாட்டுப் பேருரைகளிலும், மாநாட்டுத் தீர்மானங்களிலும், தேர்தல் பிரசாரங்களிலும் குடியேற்றத் திட்டங்கள் பற்றிய விடயத்திற்கு முன்னுரிமை வழங்கி வந்தனர். இதை பிரிதோர் வகையில் கூறுவதாயின் தனது கால் நூற்றாண்டு அரசியல் நடவடிக்கைகளின் போது தமிழ்த் தேசிய இனத்தின் பிரிக்க முடியாத அங்கமாக வாழ்விடத்தை பாதுகாக்கவே அதிக காலம் செலவிட்டது. ஆனால் அரச இயந்திரத்தினால் முடுக்கிவிடப்பட்டிருந்த குடியேற்றத் திட்டங்களை கட்டுப்படுத்த முடியாத நிலையில் தமிழர்களின் பாரம் பரியத் தாயகத்தைப் பாதுகாப்பதற்கு 'ஈழம்' என்ற தனிநாட்டுக் கோரிக்கை முன் வைக்கப்பட்டது. இது இலங்கையின் அரசியலில் வேறுபட்ட அரசியல் பரிமானத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது.

குடியேற்றப் பிரச்சினைக்கு ஒப்பந்தங்களின் அடிப்படையிலோ , புரிந்துணர்வின் அடிப்படையிலோ தீர்வு காண முடியவில்லை. தமிழர்கள் மத்தியில் பிரிவினைக் கோரிக்கை எழுந்த போது முதன் முறையாக சிங்கள அரசியல் கட்சியொன்று தேர்தல் விஞ்ஞானபனத்தில் குடியேற்றப் பிரச்சினைக்கு இடம் கொடுத்தது. 1977ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில்

> சிறுபான்மையோருக்குப் பிரச்சினைகள் உண்டு அவற்றுள் குடியேற்றம், காணிப் பகிர்வு என்பனவும் ஒன்றாகும்.[35]

என கூறியதன் மூலம் தேசிய அளவிலான பிரச்சினைகயாக மாறிவிட்டது.

பதவியியல் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் சிறுபான்மையோரின் பிரச்சினை களுக்குத் தீர்வாக மாவட்ட அபிவிருத்திச் சபைகளை அமைத்தது.[36] இச் சபைகள் மூலம் தமிழ் பிரதேச அபிவிருத்தியையும், தமிழ் பிரதேசப்பாதுகாப்பையும் ஏற்படுத்த முடியுமென்ற கருத்து தமிழ் மிதவாதத் தலைவர்களால் வலியுறுத்தப்பட்டு வந்து. இச்சபைகள் மூலம் பாரம்பரிய தமிழ்ப் பிரதேசத்தைப் பாதுகாப்பதும், மாவட்டமட்ட அபிவிருத்தியை ஏற்படுத்துவதும் இதன் இரு பிரதான நோக்கங்களாகும். ஆனால் உள்ளூர் மட்டப் பிரச்சினைக்கு மேலாக தேசிய மட்ட பிரச்சினை என்ற நிலையை அடைந்த போது சிறுபான்மையோர் பிரச்சனைக்கோ அல்லது குடியேற்றப் பிரச்சனைக்கோ தீர்வாக அமையமுடியவில்லை. என்பதை பிற்கால தோல்விகள் உணர்த்தி நிற்கின்றன.

இலங்கையின் இனப்பிரச்சினையானது தேசிய பிரச்சினை என்ற எல்லையைத் தாண்டி பிராந்திய மட்டத்திலான பிரச்சனையாக பிரிவடைந்த போது இந்திய அரசின் தலையீடு என்பது தவிர்க்க முடியாததாயிற்று. இந்திய அரசின் மத்தியஸ்த்தத்தோடு தீவிரவாத இளைஞர் அமைப்புக்களும், மிதவாத தமிழ்த் தலைவர்களும் இலங்கை அரசின் பிரதிநிதிகளோடு 1985ஆம் ஆண்டு திம்புவில் பேச்சுவார்த்தையின் போது நான்கு முக்கிய அம்சங்களை வலியுறுத்தினர். ஒன்று இலங்கைத் தமிழர்களின் பாரம்பரிய தாயகமாம் வடக்கு கிழக்கு பிரதேசங்களை அங்கரிக்க வேண்டும் என இந்திய மட்டத்தில் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டது. ஆகவே குடியேற்றத் திட்டங்களின் அரசியல் பரிமாணம் பிராந்திய மட்டத்தில் தாக்கங்களை ஏற்படுத்தியது.

இந்திய அரசின் நேரடி அரசியல் தலையீட்டினால் 1987 இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானது.[37] இவ் ஒப்பந்தத்தில் இலங்கைத் தமிழர்களை தேசிய இனமாகவும், பாரம்பரிய வாழ்விடம் வடகிழக்கு பிரதேசங்களே என்பதை இரு நாடுகளும் ஏற்றுக் கொண்டன. இலங்கை அரசாங்கம் இதே ஆண்டு அரசியல் யாப்பில் 13வது திருத்தச் சட்டத்தில் காணி அதாவது காணிமீதான உரிமை, காணிமாற்றம், காணி அபிவிருத்தி யென்பன மாகாண சபைகளுக்குரிய விடயமாக அதிகாரபரவலாக்கத்தினால் வழங்கப்பட்டது.[38] இதில் இலங்கை அரசாங்கத்தின் தேவைக்கான காணிகள் எவ்வித மட்டுப்படுத்தலுமின்றி அரசாங்கம் பயன்படுத்தும் மாகாணசபைகள் தமது தேவைக்களுக்காகக் காணிகள் பயன்படுத்தும் முன் ஜனாதிபதியின் சம்மதம் அவசியமானதென குறிப்பிட்டிருப்பதன் மூலம் தொடர்ந்தும் மத்திய அரசே காணிக்கொள்கைகளில் உறுதியாக இருப்பதை மீண்டும் வலியுறுத்துகின்றது. மாகாணங்களுக் கிடையிலான நீர்பாசனம், காணி அபிவிருத்தித் திட்டங்களும் மத்திய அரசிடமே இருக்கும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங் கத்தால் பிரேரிக்கப்பட்டிருக்கும் மாற்றீடு செய்வதற்கான சட்ட மூலத்தின்[39] அத்தியாயம் இருபத்து மூன்றில் அரச காணி, நீர்நிலைகள் மற்றும் கனிப்பொருட்கள் தொடர்பாக ஏற்பாடுகளை செய்துள்ளன. இச்சட்டத்திலும் பிராந்திய கழகங்களிடம் இருக்கும் அரச காணிகளையும், நீர்நிலைகளையும் மத்திய அரசே தொடர்ந்தும் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே இறுதியாக நோக்குகின்ற போது இருபதாம் நூற்றாண்டின் மூன்றாவத தசாப்பத்தில் தோற்றம் பெற்ற அரச ஆதரவோடான குடியேற்றத் திட்டங்களும் அவற்றின் அரசியல் பரிமாணங்களும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இலங்கையின் முதலாவது விவசாய காணியமைச்சராக இருந்த சேனநாயக்காவில் தொடங்கி இன்று பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தால் முன் வைக்கப்பட்டிருக்கும் யாப்புக்கான சட்டமூலம் வரை இப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேயில்லை.

உள்நாட்டு விவசாய அபிவிருத்தி, சுயதேவைப் பூர்த்தி என்ற இலக்கை அடையப் போவதாக கூறி, பொருளாதார, சமூக மட்டங்களில் நியாயங்களை முன்வைத்தாலும் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலங்களில் இருந்து எழுப்பப்படும். கேள்வி சமூக, பொருளாதார அபிவிருத்தியை அடைந்துனவா? என்றால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளுக்கு ஏற்ப அபிவிருத்தியடையவில்லை. என்பதே பதில். குடியேற்றத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலங்களில் இருந்து அரசியல் நோக்கங்களே இதற்குள் மறைந்திருந்தது. ஒற்றையாட்சின் கீழ் மத்தியமயமாக்கப்பட்ட அதிகார அமைப்பையும், ஆட்சியமைப்பதில் தனித்து ஒரு இனம் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்துவது, மிகைப்படுத்தப்பட்ட வரலாற்றை நியாயப்படுத்துவது, இனமேலாதிக்கத்தை ஏற்படுத்த ஏனைய இனத்தவர்களின் இனத்துவ அடையாளங்களை அழிப்பது போன்ற அரசியலில் குறுகிய சிந்தனைகளும், இனவாத நோக்கங்களுமே குடியேற்றத் திட்டங்களினால் எழுந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாத நிலையை ஏற்படுத்தி வருகின்றன. மறுபுறம் பாதிக்கப்பட்டோர், உரிமைகளை இழந்தோர் சனநாயக கட்டமைப்புக்குள் நின்று உரிமைகளை வென்றெடுக்க முடியாமல் தீவிர மார்க்கமான ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தன் மூலம் பிராந்திய அரசின் தலையீட்டிற்கும் பின்னர் சர்வதேச நாடுகளின் தலையீட்டிற்கும் பின்னர் சர்வதேச நாடுகளின் மத்தியஸ்தத்திற்குமான பிரச்சினையாக காணப்படுகின்றது.

NOTES AND REFEREENCES

01. Arasaratham. S ; Ceylon ,New Jersey, Princeton Hall, 1964, P: 124

02. Ibid ; P: 108

03. Manogaran. C ; Ethnic conflict and reconcilation in Srilanka, University of Hawai Press, Honolulu, 1987, P: 84]

04. Balakrishnsn. N ; `Some Issues of a Divided polity in Srilanka, Presidential Addresses - 1992, Jaffna Science Association, 1993, pp: 3-6

05. Brass, P.R ; Ethnicity and Nationalism, Theory and comparison. sage publication, New Delhi, 1991, pp: 69 -70

06. Famer, B.H ; Pioneer peasant colonization in Ceylon. Oxford University press, London, 1957, pp: 142 - 143.

07. Ibid ; pp: 146 - 147

08. Ibid ; pp:144 - 145

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. Bastian. S ; Control of state land - the Devolution debate; <u>Sri Lanka: the Devolution debate</u>, International Centre for ethnic sudies, Colombo, 1997, pp: 63 - 65.

10. Manogaran. S ; <u>Op cit</u>, p: 34.

11. Russell. J ; <u>Communal Politics under the Donoughmore constitution, 1931 - 1947</u>, Tisava Prakasakayo Ltd, Colombo, P: 19.

12. Balakrishnan. N. ; <u>Op . cit.</u> pp: 6-7.

13. Bastian. S ; <u>Op cit</u>, P: 67

14. Manogaran. S ; <u>Op. cit</u>, P: 88

15. Famer, B.H ; <u>Op cit</u>, P 66

16. வரண்ட வலயத்தில் அமைக்கப்பட்ட குடியேற்றத்திட்டங்களில் 44 குடியேற்றக் கிராமங்கள் அமைக்கப்பட்டன. இவற்றுள் 38 சிங்களக்குடியேற்றங்களும், 06 தமிழ் பேசும் மக்களின் குடியேற்றங்களுமாகும். சிங்களவர்களில் பெரும்பான்மையோர் வெளி மாவட்டங்களில் இருந்து குடியேற்றப்பட்டவர்கள்.

17. Manogaran. S ; <u>Op : cit</u> ,90

18. Bastion. S ; <u>Op cit</u>, P: 61

19. மார்க்கா நிறுவனம் : <u>காணியும் சனத்தொகையும்</u>, பத்திரம் 1, கொழும்பு, 19995, பக்கம்: 1

20. மேற்படி : பக்கம்: 2.

21. Famer. B.H. ; <u>Op : cit</u>, p:113.

22. Bastian. S. ; <u>Op cit</u>, pp: 86 - 87.

23. Bastian. S ; <u>Op: cit</u>, pp: 63-64.

24. மட்டக்களப்பு மாவட்டத்தில் தென்பகுதியான அம்பாறை 1961இல் தனி மாவட்டமாக மாற்றப்பட்டது. ஏனைய சிங்கள மாவட்ட எல்லைகளோடு விஸ்தரிக்கப்பட்டு சிங்கள நிர்வாக மாவட்டமாக உருவாக்கப்பட்டது.

25. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு - 1978, பக்கம் : 6.

26. Bastion .S ; <u>Op cit</u>, P: 67

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. Manogaran. S. ; Op cit , PP: 90 - 92

28. Ibid ; pp: 90 - 93

29. Arasaratnam. ; `Nationalism in Srilanka and the Tamils'; in M. Roberts (Ed) Collective Identities Nationlism and protest in Moderm Srilanka, Marge Institute, Colombo, 1979, pp: 501 -502.

30. Kearney, Robert.il ;Communalism and Ianguge iun the politics of ceylon, Duke Universily Priss, Darham, 1967, P: 91

31. I bis ; p: 92

32. திருகோணமலைத் தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்ட காலங்களில் இருந்து தமிழ் பிரதிநிதியே பாராளுமன்றங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டு வந்தனர். 2000ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் ஒரு தமிழ் பிரதிநிதி கூட தெரிவு செய்யப்படவில்லை.

33. 1957 பண்டா - செல்வா ஒப்பந்தம்
1965 டட்லி - செல்வா ஒப்பந்தம்
1987 இந்திய - இலங்கை ஒப்பந்தம் இவை இலங்கைத் தமிழர்களை தேசிய இனமாகவும் வடக்கு கிழக்கு மாகாணங்களை மரபு வழித் தாயகமாகவும்: ஏற்றுக்கொள்ளப்பட்டன.

34. செல்வநாயகம், எஸ். ஜேவி, 'தீர்க்க தரிசனமிகு தலைலதைப் பேரூரை-1949, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வெற்றி விழாமலர், 1974, பக்கங்கள்: 8-9

35. ஐக்கிய தேசியக் கட்சி வெளியீடு; நீதியும் சுதந்திரமும் நிலவும் ஒரு சமுதாயத்தை சிருஷ்டிப்பதற்கான செயற்திட்டம், கொழும்பு-1977, பக்கம்: 10

36. Balakrishnan, Distrct Dlvelopment Councils and Tamil Politics (Srilanka) The Srilanka Journal of South Asian Studies, Vol; 2 No:2 December, 1982, pp:54-56

37. Indian and foreign Review. vol:20 No23, September, 1987. pp 6-7

38. 13வது அரசியல் திருத்த சட்டம்
1978 ஆம் அண்டு இரண்டாம் குடியரசு அரசியல் திட்டம்

39. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பை நீக்குவதற்கும் மாற்றீ மாற்றீடு செய்வதற்குமான சட்டமூலம். (நீதி அரசியலமைப்பு அலுவல்கள் இன அலுவல்கள், தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரும் பிரதியமைச்சருமானவரால் 2000 ஒகஸ்ட் மாதம் 03ம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது) பக்கங்கள்: 107-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் - குடாநாட்டில் மீன்பிடித்தடைகளும் மீனவர் எதிர்நோக்கும் பிரச்சினைகளும்

கலாநிதி. ஏ. எஸ். சூசை,

கடந்த பதினைந்து வருடங்களுக்கும் மேலாக இலங்கையின் வடக்குக் கிழக்குக் கரையோரப் பகுதிகளில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்டு வருகின்ற பல்வேறு தடை நடவடிக்கைகளின் விளைவாக இப்பிரதேசத்தின் கடல் வளத்துறையானது. மோசமாகப் பாதிக்கப்பட்டு மிகவும் நலிவடைந்த நிலையில் காணப்படுகின்றது. குறிப்பாக, இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய மீன்பிடிப் பிரதேசங்களில் இத்துறையில் தங்கி வாழ்கின்ற கிட்டதட்ட ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் மீனவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருப்பதுடன் இவர்களில் ஐம்பது சதவீதத்திற்கும் அதிகமானோர் மாற்றுத் தொழில் ஏதுமின்றி அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளவர்களாகவும் அரைகுறை நிவாரணத்தை நம்பி வாழ்வோராகவும் காணப்படுகின்றனர். வேறு வழியின்றிகரையோரங்களில் இன்று மீன்பிடியில் ஈடுபடுவோர் சுதந்திரமாக தமது தொழில் நடவடிக்கைகளை முன்னெடுத்துச்செல்ல முடியாதவர்களாகவும் உயிரைப்பணயம் வைத்துத் தமது தொழில் முயற்சிகளை மேற்கொள் வோராகவும் காணப்படுகின்றனர்.

இந்தப் பின்னணியில் வடபகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணக் குடா நாட்டில் இலங்கை அரசு மேற்கொண்டுள்ள மீன்பிடித்தொழில் தொடர்பான பல்வேறு தடைகள், கட்டுப்பாடுகள், மீன்பிடித்துறையில எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பதையும், இத்துறையில் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஈடுபடுவோர் மற்றும் இவர்களில் தங்கி வாழ்வோர் எதிர்நோக்குகின்ற பல்வேறு பிரச்சினைகளை வெளிக்கொண்டுவரும் நோக்குடனும் இப்பகுதியில் பல்வேறு பகுதிகளுக்கும் நேரடியாகச்சென்று அவதானித்ததுடன், மீனவர்கள் பலரையும் செவ்விகண்டு மற்றும் மீன்பிடித் திணைக் களத்திலிருந்து பெறப்பட்ட தகவல்கள் அடிப்படையிலும் இவ் ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

யாழ் குடாநாட்டின் கடல்வள வாய்ப்புக்கள்.

யாழ் குடாநாடு அதன் அமைவிடம், அமைப்புக் காரணமாக இலங்கையின் ஏனைய பிரதேசங்களைவிட மீன்பிடித் தொழிலுக்கு வாய்ப்பான சமுத்திரச் சூழலைக் கொண்டதாக விளங்குகின்றது. யாழ் வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்குக் கரையோரங்கள், கரையோர தூரக்கரை, ஆழ்கடல் மீன்பிடிப்புக்கும், யாழ் தெற்குப்பகுதியானது ஏரிப்பகுதி மீன்பிடித்தொழில் செய்யக் கூடிய வாய்ப்பினையும் கொண்டதாகவும் உள்ளது. இதனால் இலங்கையின் மொத்த மீன் உற்பத்தியில் 25 சதவீத பங்கினை இப்பிரதேசம் 1983ம் ஆண்டுவரை வழங்கிவந்துள்ளது. அத்துடன் அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தருகின்ற இறால், கடலட்டை, சங்கு, நண்டு கணவாய், போன்ற கடலுணவு வகைகளை உற்பத்தி செய்யும் களஞ்சியமாகவும் விளங்கிவந்துள்ளது. யாழ் மாவட்டக் கடற்றொழிலாளர் விரிவாக்க அலுவலர் பிரிவில் 14 மீன்பிடி பரிசோதகர் பிரிவுகள் உள்ளன. இங்கு ஏறக்குறைய 107 மீன்பிடிக் கிராமங்கள் காணப்படுகின்றன. 1989ஆம் ஆண்டு கணிப்பீட்டின் பிரகாரம் 22568 மீனவக் குடும்பங்களும், 102808 மொத்த மீனவர்களும் காணப்பட்டனர். நேரடியாக மீன்பிடியில் ஈடுபடுவோர் தொகை 26009 பேராகும். 1983ஆம் ஆண்டுவரை மீன் உற்பத்தியில் முதலிடத்தைப் பெற்றுவந்த இப்பகுதி அக்காலப் பகுதியில் ஏற்பட்ட இனக்கலவரத்தினாலும், அரசு மேற்கொண்ட பல்வேறு மீன்பிடித் தடைகள் காரணமாகவும், இராணுவம் மேற்கொண்ட பல அட்டுழியங்களினாலும் இத்துறை பெரும் பாதிப்படைந்து நலிவடைந்து போயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை இல.1

மீன்பிடிக்கான நீரியல் வளங்கள்

மா.க.வி. அலுவலர் பிரிவு	கரையோர நீளம் (கி.மீ)	உவர்நீர் நிலைகள் (ஹெக்)	நன்னீர்நிலைகள் (ஹெக்)	சதுப்புநிலத்தாவரம் (ஹெக்)
யாழ்ப்பாணம்	392.6	45525	6711	2276
கிளிநொச்சி		11917		7070

மூலம்:- Sri Lanka Fisheries Year Book, 1997.

மீன்பிடி தொடர்பான தடைகள்:

மீன்பிடித்தொழில் தொடர்பாக 1983களைத் தொடர்ந்து அரசு மேற்கொண்ட பல்வேறு தடைகள் பின்வருமாறு அமைகின்றது.

1. கடலில் பாதுகாப்பு வலயமும், கடல்வலயத் தடையும்
2. இராணுவ முகாம் விஸ்தரிப்பும் - இராணுவக் காவலரண்களும்
3. நேரமும் - தூரமும் கட்டுப்பாடு
4. உபகரணங்கள் - மற்றும் இயந்திரப்பாவனைத் தடைகள்
5. போக்குவரத்து - சந்தைப்படுத்தல் தடைகள்
6. 'பாஸ்' நடைமுறைகளும் - அன்றாட கெடுபிடிகளும்.

கடலில் பாதுகாப்பு வலயம்:

பாதுகாப்பு என்ற போர்வையில் வடபகுதியில் கடலில் முதன் முதலில் பாதுகாப்பு காவல் வலயம் ஒன்று 18-11-1985 அன்று பிரகடனப்படுத்தப்பட்டது. இது பின்வருமாறு அமைந்திருந்தது. "தலைமன்னாரிலிருந்து மேற்கே ஐந்து மைல் தூரத்திலுள்ள ஒரு புள்ளிக்கு நேராக நெடுந்தீவின் வடகிழக்கு, வடக்குக் கரையோரத்திற்கும், மேற்குக் கரையோரத்திற்கும் நெடுகே அளக்கப்படுவதும் கரையிலிருந்து ஐந்து மைல் தூரத்திற்கு சுண்டிக்குளத்திலிருந்து யாழ்ப்பாண வடகரையோரமாக தலைமன்னார் வரை நீடித்திருப்பதும் ஆகும். "இந்த கரையிலிருந்து ஐந்து மைல்களுக்கப்பால் இலங்கை- இந்திய ஆள்புல எல்லைக்குட்பட்ட பகுதியே காவல் வலயமாகவும் இங்கு மீன்பிடித்தொழில் உட்பட சகல நடவடிக்கைகளும் தடைசெய்யப்பட்டன. இதன் விளைவாக இப்பகுதியினுள் நடைபெற்றுவந்த இழுவை வலை, கில்வலை மீன்பிடிமுறைகள் முற்றாகத் தடைப்பட்டன. இந்த நடைமுறையானது. 1987இல் இந்திய இராணுவம் இலங்கைக்கு வரும்வரையில் இருந்தது. இந்திய இராணுவம் இலங்கையிலிருந்து 1990 இல் திரும்பிச்செல்லும் காலம் வரையிலும் வடபகுதிக் கடலில் மீன்பிடித்தொழில் குறிப்பிடத்தக்க அளவில் நடைபெற்றுவந்தன. பின்னர் இரண்டாவது ஈழப்போர் ஆரம்பித்ததும் சிறிலங்கா அரசினால் வடபகுதி முழுவதும் உள்ள கடல் பிராந்தியம் தடைசெய்யப்பட்ட வலயமாகப் பிரகடனப் படுத்தப்பட்டது. இதன் விளைவாக சகல மீன்பிடி முறைகளும் பாதிப்புக்குள்ளாகின. மூன்றாவது ஈழப்போர் ஆரம்பித்து 1995இன் பிற்பகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டை சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமிக்கும் வரை கடல்வலயத்தடை அமுலில் இருந்தது. பின்னர் இராணுவம் வடபகுதிக் கரையோரம் முழுவதும் இராணுவ வேலிகளையும், காவலரண்களையும் ஏற்படுத்தியதுடன் சில குறிப்பிட்ட கரையோரங்களில் மக்களை மீளக்குடியேற அனுமதிக்கவில்லை. இங்கு வழமை நிலை திரும்பிவிட்டது என்பதை வெளியுலகிற்குக் காட்ட வரையறுக்கப்பட்ட பிரதேசங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கரையிலிருந்து சில மீற்றர் தூரம் வரை சிற்றளவிலான மீன்பிடியில் ஈடுபட மீனவர்கள் அனுமதிக்கப்பட்டனர். இதற்கென பாதுகாப்பு அமைச்சினால் பிரகடனப்படுத்தப்பட்ட கடல் மீன்பிடி அனுமதி பெற்ற வலயம் பின்வருமாறு அமைந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் - ஏரிப்பகுதி - மீன்பிடிக்க இரவுநேரம் தடைசெய்யப்பட்டது. பகலில் மட்டும் அனுமதி. அதிகாலை 4.00 மணிமுதல் பி.பகல் 3.00 மணிவரை. எல்லையானது, கரையிலிருந்து 500 மீற்றர் தூரம் வரை. (பாஷையூருக்கு அப்பால் தடைசெய்யப்படடுள்ளது)

யாழ் - தீவகப் பகுதிகள் - இடுப்பளவு நீரில் வீச்சுவலை மட்டும் வீசுதல் பகலில் மட்டும் அனுமதி

நெடுந்தீவு - தீவைச் சூழ்ந்து 1 மைல் தூரம் வரை மீன் பிடிக்கலாம்.

மாதகல் தொடக்கம் பருத்தித்துறை வரை. - பலாலி விமானத்தள ஓடுபாதையைப் பாதுகாக்கும் நோக்குடன் இக்கரையோரம் மீன்பிடிக்க முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. எனினும் தொண்டைமானாறு- பருத்தித்துறை வரை 500 மீற்றர் தொடக்கம் 1 கி.மீ. தூரம் வரை அனுமதிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை - தாளையடி - இப்பகுதியிலும் கரையிலிருந்து 500 மீற்றர் முதல் 1. கி.மீ. வரை மீன்பிடிக்க அனுமதி.

இவ்வடிப்படையில் தூரக்கரை, ஆழ்கடல் மீன்பிடி முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

மன்னார் - தீவுப்பகுதியில் பகலில் மட்டும் மீன்பிடிக்க அனுமதி, பெருநிலப்பகுதி கரையோரம் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி - முற்றாகத்தடை செய்யப்பட்டுள்ள பகுதி.

நேரக்கட்டுப்பாடு:

யாழ் குடாநாட்டின் சூழவரையுள்ள கரையோரங்களில் மீன்பிடித்தொழில் நடைபெற்றுவருகின்றபோதிலும் உற்பத்தி யிலீடுபடும் நேரம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக ஏரிப்பகுதியிலும், தீவகப்பகுதியிலும், அதிகாலை 4.00மணி முதல் பி.ப 3.00 மணிவரையும் வடமராட்சி வடக்கு, கிழக்குக் கரையோரங்களில் அதிகாலை 2.00 மணிமுதல் அதிகாலை 6.00 மணிக்கு இடையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஏரிப்பகுதியில் இரவுநேரம் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. மன்னாரில் தீவுப்பகுதி மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளது. மன்னார் பெருநிலப்பரப்பு பிரதேசப் பகுதி முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. (தெற்கே வங்காலை முதல் - முள்ளிக்குளம் வரை, வடக்கே தள்ளாடி முதல் வெள்ளங்குளம் வரை)

இராணுவ முகாம் விஸ்தரிப்பும் தொடர் காவலரண்களும்

ஆரம்பக்காலங்களில் யாழ் குடாநாட்டில் கரையோரப் பிரதேசங்களில் ஆனையிறவு, பலாலி, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் மட்டுமே இராணுவ முகாம்கள் அமைந்திருந்தன. 1983களைத் தொடர்ந்து ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத்தின் விளைவாக யாழ் குடாநாட்டு கரையோரப் பிரதேசங்கள் தோறும் இராணுவ முகாம்களும், இராணுவக் காவலரண்களும் தொடர்ச்சியாக இடம் பெறலாயின. குறிப்பாக 1995 இன் பின்னர் யாழ் குடாநாடு பூரண இராணுவ மயமாக்கப்பட்ட பின்னர் முழுக் கரையோரப் பிரதேசமும் இராணுவ முகாம்களும் இராணுவத் தொடர் காவலரண்களும் விஸ்தரிக்கப்பட்டுவிட்டன. இதன் விளைவாக மாதகல் முதல் தொண்டை மானாறு வரையிலான வலிகாமம் வடக்குக் கரையோரப் பிரதேசமும், ஆனையிறவுக்கு கிழக்கு -மேற்கு ஏரிக்கரையோரப் பகுதிகளும் வடமராட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கில் வெற்றிலைக்கேணி முதல் சுண்டிக்குளம் வரையிலான கரையோரப்பகுதிகள் யாவும் மீன்பிடித்தொழில் முற்றாகத் தடைசெய்யப்பட்டு விட்டன. இதனால் இப்பகுதிகளில் உள்ள மீன்பிடிக்குடியிருப்புக்கள் யாவும் வெறிச்சோடிக் கிடக்கின்றன. இப்பகுதிகளில் இன்று எவ்வித மீன்பிடித்தொழில் வாய்ப்புக்களும் இல்லை. இவை தவிர்ந்த ஏனைய கரையோரப் பிரதேசங்களில் ஆங்காங்கே சிதறலாக மீன்பிடிக் குடியிருப்புக்களில் மிகக்குறைவான எண்ணிக்கையுடைய மீனவர்கள் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுவருவதை அவதானிக்கமுடிகிறது. இவ்வருட நடுப்பகுதியில் கொழும்புத்துறை, அரியாலைப் பகுதிகளிலிருந்தும் மக்கள் முற்றாக வெளியேறியுள்ளனர். இதனால் அப்பகுதிகளில் மீன்பிடி முற்றாக நடைபெறுவதில்லை.

மீன்பிடி உபகரணங்களுக்கான தடை:

யாழ் குடாநாட்டின் கரையோரப் பகுதிகளில் மீன்பிடித்தொழிலில் அரசு விதித்துள்ள தடைகளுள் மீன்பிடி உபகரணங்கள் பாவனைத் தடையும் ஒன்று. குறிப்பாக உள்இணை, வெளியிணை இயந்திரங்களும், இயந்திரப் படகுகளும் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. கண்ணாடி நாரிழையினாலான படகுகளுக்கான இரசாயனப் பொருட்களும் இயந்திர உதிரிப்பாகங்களும் கொண்டுவரவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. மீன்பிடிக்குத் தேவையான வலைகள் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் விநியோகிக்க அனுமதிக்கப்பட்டுள்ளபோதிலும் தேவையான வலைகள், கயிறுகள், நூல்கள் போன்றன உரிய வேளைகளில் கொழும்பிலிருந்து இங்கு கொண்டுவருவது போக்குவரத்துச் சீர்கேடுகளினால் தடைப்பட்டும் உள்ளது. கட்டுமரங்கள், வள்ளங்கள் மட்டும் கைகளினால் வலித்துச் செல்ல மட்டும் அனுமதி உண்டு. பாய்மரங்கள் பயன்படுத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. மண்ணாரில் 9. (HP) குதிரைவலுக் கொண்ட வெளியிணை இயந்திரப்படகும் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்துத் தடையும் சந்தைப் படுத்தல் தடையும்

யாழ் - குடாநாட்டிலிருந்து பிரதான நிலப்பகுதிக்கான போக்குவரத்துப்பாதை பலவருடங்களாகத் தடைப்பட்டுள்ளது. பயணங்கள் யாவும் விமானமூலமும், கப்பல்கள் மூலமும் சீரற்ற முறையிலேயே நடைபெற்றுவருகின்றது. போக்குவரத்துச் செய்வதற்காக "பாஸ்" அனுமதி நடைமுறைகள் சொல்லமுடியாத அளவிற்கு சீரழிந்துள்ளது. இந்நிலையில் மீன்பிடி உபகரணங்களை வெளியிருந்து இப்பகுதிக்குக் கொண்டுவருவதும், இங்குள்ள கடலக ஏற்றுமதி களான இறால், கடலட்டை, சங்கு மற்றும் மீன்பொருட்களை உரிய நேரத்தில் வெளியிடங்களுக்குக் கொண்டுசெல்வதென்பதும் நடைமுறையில் சாத்தியமற்ற ஒன்றாகவே இதுவரை உள்ளது. இதனால் உற்பத்தி செய்யப்படும் பெறுமதி மிக்க கடலுணவுகள் இங்கு தேங்கி வீணாக அழியும் நிலை காணப்படுகின்றது. பதனிடல் வசதிகளோ அல்லது கடலுணவுகளைச் சந்தைப் படுத்துவதற்கான வசதிகளோ இதுவரையில் எவராலும் ஏற்படுத்திக்கொடுக்கப் படவில்லை. இங்கு பல்வேறு அரச சாராத நிறுவனங்களும் தொண்டர் நிறுவனங்களும் இருந்தபோதிலும் மீன் பொருட்களைக் கொண்டு செல்வதற்கான போக்குவரத்துக்கான வாய்ப்புக்கள் எதுவும் இவர்களால் முன்னெடுக்கப்படவில்லை. என்பதும் குறிப்பிடத்தக்கது.

"பாஸ்" நடைமுறைகளும் அன்றாட தொழிற்கட்டுப்பாடுகளும்:

மீனவர்கள் கடலுக்குச் செல்வேண்டுமாயின் அவர்களுக்கெனத் தனியான "பாஸ்" நடைமுறைகள் அமுலில் உள்ளன. இவர்களுக்கெனத் தனியான ஆள் அடையாள அட்டைகள் அவ்வப் பகுதிக்கும் பொறுப்பாகவுள்ள இராணுவ அதிகாரிகள் மூலம் வழங்கப்படுகின்றன. இவ் அடையாள அட்டைகள் அடிக்கடி மாற்றப்படுகின்றன. உதாரணமாக குருநகர் பகுதியில் இதுவரை ஏழாவது தடவையாக புது அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது. பொறுப்பதிகாரிகள் மாற்றப்படும்போது இவ் அடையாள அட்டைகளும் மாற்றப்படுகின்றன. அத்துடன் வெவ்வேறு வகை மீன்பிடித்தொழிலில் ஈடுபடுவோருக்கு வெவ்வேறு நிறங்களில் அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன.

வள்ளங்களில் பாய்மரங்கள் கட்டிச்செல்ல ஏரிப்பகுதிகளில் தடை விதிக்கப்பட்டுள்ளது. 1999 மே மாதத்தில் இத்தடை நீக்கப்படும் என அறிவிக்கப்பட்டபோதிலும் நடைமுறையில் இது இல்லை. அத்துடன் சாரத்துடன் மீன்பிடிக்கச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லவும் ஒரு கட்டத்தில் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. ஆனால் நீளக்காற்சட்டையுடன் இறால் பிடிக்க சிறுத்தீவுக்குச் சென்ற இரண்டு மீனவர்கள் 1999 ஆகஸ்டில் சுட்டுக் கொல்லப்பட்டனர். பாய்களையோ அல்லது சாரத்தையோ பாயாகப் பயன்படுத்தி இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு மீனவர்கள் சென்று திரும்புவதாலேயே பாய்கள் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இதனால் மீனவர்கள் நீண்ட தூரத்திற்கு கூடியநேரம் உடல் வலுவைப் பயன்படுத்தி கோல்கள் அல்லது தண்டுகளின் உதவியுடன் படகினை வலித்துச் செல்லவேண்டிய கஷ்டமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். மனச்சோர்வுடன் செல்லும் மீனவர் உடற்சோர்வையும் அனுபவிக்க வேண்டியுள்ளது.

கடலுக்குச் செல்லும் மீனவர்கள் இராணுவம் குறித்துள்ள குறிப்பிட்ட நுழை வாயினுடாகவே கடலுக்குள் நுழைதல் வேண்டும். இதனால் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் அவ்விடத்தில் ஒன்றுகூடி அடையாள அட்டைகள் பரிசீலனையின் பின்னர் ஒவ்வொருவராக அனுமதிக்கப்படுகின்றனர். எல்லைகளைத் தாண்டினாலோ குறிப்பிட்ட நேரத்திற்குச் சற்றுப் பிந்தி கரை திரும்பினாலோ கடுமையாகத் தண்டிக்கப்படுகின்றனர். உடைமைகள் பறிமுதல் செய்யப்பட்டுவதுடன் அவர்கள் தொழிலுக்குச் செல்வதும் தடுக்கப்படுகின்றது. மொத்தத்தில் மீனவர்கள் அடிமைகள் போலவே நடத்தப்படுகின்றனர்.

மீன்பிடித் தடைகளின் விளைவுகள்

கடலில் ஏற்படுத்தப்பட்டுள்ள காவல் வலய எல்லைகளும், இதன் தூரமும் மீன்பிடியில் ஈடுபடுகின்ற நேரமும் கட்டுப்படுத்தப் பட்டுள்ளமையினால் இயல்பான மீன்பிடி முறைகளில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. முக்கியமாக துரக்கரை ஆழ்கடலில் பயன்படுத்தப்பட்டுவந்த கில்வலை மீன்பிடி முறைகளும், இழுவைவலை மீன்பிடிமுறைகளும், சுழியோடி மீன்பிடித்தல் முறைகளும் முற்றாகச் செயலிழந்துவிட்டன. உள் இணை வெளியிணை இயந்திரப்படகுகள் பாவனை தடுக்கப்பட்டமையும். இத்தகைய பிரசித்திபெற்ற மீன்பிடிமுறைகள் தடைபடக்காரணமாகியது. இத்தடையின் விளைவாக 1983 காலப்பகுதிகளில் பயன்படுத்தப்பட்டுவந்த $3^1/_2$ தொன் நிறையுடைய 569உள் இணை இயந்திரப்படகுகளில் ஆக 27 மட்டும் எஞ்சியுள்ளதாகவும் இதுவும் இன்று பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதாகவும், $17^1/_2$ அடி நீளமான 1852வெளியிணை இயந்திரப் படகுகளில் ஆக 90 மட்டும் எஞ்சியுள்ளதாகவும் இதுவும் பயன்படுத்த முடியாது கரையில் இழுத்துவைக்கப் பட்டுள்ளதாகவும் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. இத்துடன் 3813 கட்டுமரங்களில் இன்று ஆக 1119 கட்டுமரங்களும் 1545 வள்ளங்களில் 1096 வள்ளங்களும் பயன்படுத்தப்படுவதாகவும் அறிக்கைகள் கூறுகின்றன. பெரும்பாலான படகுகள் அழிக்கப்பட்டும், எஞ்சியவை விறகுக்காகவும் பயன்படுத்தப்பட்டுவிட்டன.

1983இன் பின்னர் இராணுவ நடவடிக்கைகளின் விளைவாக 705 மில். ரூபா பெறுமதியான உள்இணை இயந்திரப்படகுகளும், 408.72 மில். ரூபா பெறமதியுடைய வள்ளங்கள், கட்டுமரங்கள் என்பனவும் 27.5மில். ரூபா பெறுமதியான வலைகளும் சேதமடைந்ததாகவும் இவற்றின் மொத்தப்பெறுமதியின் இழப்பு 1824.678 மில் ரூபாவாகும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

துரக்கரை ஆழ்கடல் மீன்பிடி பாதிப்படைந்தமையும், பெரும்பாலான மீனவர்கள் இடம்பெயர்ந்தமையாலும் மீன் உற்பத்தி சடுதியாக வீழ்ச்சியடைந்தது. 1983இல் அதிஉச்ச உற்பத்தி 49721 தொன்னாகவிருந்து, 1984இல் 23157 தொன்னாகவும், 1987இல் 1981 தொன்னாகவும் வீழ்ச்சிகண்டது. 1991இல் இது 1191 தொன்னாகவும், 1998இல் 2420 தொன்னாகவும் அமைந்திருந்தது. (அட்டவணை-2) 1984முதல் 1997 வரை கிட்டத்தட்ட 549375.2 தொன்வரையில் மீன் உற்பத்தி வீழ்ச்சி கண்டிருப்பதாகவும், இழந்த இதன் மொத்தப் பெறுமதி அண்ணளவாக 55,000 மில் ரூபா எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

தூரம் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதனாலும், சில குறிப்பிட்ட பகுதிகள் மட்டும் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டிருப்பதனாலும் இன்று மீன்பிடியில் ஈடுபடுவோர் குறிப்பிட்ட பகுதிகளுக்குள்ளேயே தமது வலைகளைப் பயன்படுத்தவேண்டியுள்ளது, இதனால் தொழில் அலகுகளின் எண்ணிக்கை அதிகரித்து மீன்பிடித்தலுக்கான இயல்பான சூழ்நிலை குழம்பிவிடுகின்றது. உதாரணமாக யாழ் ஏரிப்பகுதியில் சிறகு வலைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்மையினாலும், சிறகுவலை பயன்படுத்தும் பகுதிகளுக்குள்ளேயே முப்புரிவலைகள் (டிஸ்கோவலை) மற்றும் இழுவை மடிகள், சுற்றிவளைக்கும் வலைகள், தூண்டில்கள் போன்றவற்றையும் பயன்படுத்துவதினாலும் மீனவர்களிடையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை இல 2

மீன்உற்பத்திப்போக்கு - யாழ் மாவட்டம் 1980 - 1998 மெ.தொன்னில்

வருடம்	கிடைத்த உற்பத்தி	கிடைக்க வேண்டிய உற்பத்தி 1983 தொடக்கம் 1% அதிகரிப்பு	இழப்பு அளவு
1980	40018	-	-
1981	43798	-	-
1982	42677	-	-
1983	49721	-	-
1984	23157	50715	18142
1985	23775	51729	27954
1986	13053	52764	39711
1987	11981	53819	41838
1988	24702	54896	30194
1989	25075	55993	30918
1990	21369	57113	35744
1991	1191	58256	57065
1992	1327	59421	58094
1993	1514	60609	59895
1994	3112	61821	58709
1995	2263	63058	60795
1996	1540	64319	62779
1997	2762	65605	62843
1998	2420	66917	64497

மூலம்:- மா.க.வி.அலுவலகம், யாழ்ப்பாணம்.

கசப்புணர்வு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உண்டாகின்றன சிலர் தவிர்க்கமுடியாத காரணத்தினால் பொருத்தமற்ற, தவறான மீன்பிடிமுறைகளை மேற்கொள்ளவும் காரணமாக அமைந்துவிடுகின்றன. இவை வளச்சுரண்டலுக்குக் காரணமாகவும் அமைகின்றன.

மேலும் இரவுநேரத்தடை காரணமாக பகலில் மீன்பிடியில் ஈடுபடவேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது. இரவுநேரமே மீன்பிடித் தொழிலுக்கு வாய்ப்பான நேரமாகும். அதிலும் குறிப்பாக இறால் உற்பத்திக்கு இருட்டு நேரமே மிகப் பொருந்தமானதாகும். இவற்றைவிட ஏரிப்பகுதிகளில் வற்றுப்பெருக்கு ஓட்டத்தை மையமாக வைத்து சிறகுவலை மீன்பிடியில் ஈடுபடுவோர் இரவு நேரத்தடை காரணமாக பருவம் தப்பிய மீன்பிடியில் ஈடுபடவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகின்றனர். இதனால் இயல்பான உற்பத்தி பெரிதும் பாதிப்படைகின்றன.

வடமராட்சி, வடக்கு - கிழக்கு கரையோரங்களில் கட்டுமரங்களில் மிக குறைவான எண்ணிக்கை கொண்ட கில்வலைத்துண்டுகளையே கொண்டுசெல்லும் நிலை காணப்படுகின்றது. தூரக்கரையில் இயந்திரப்படகுகளில் 30-40 துண்டு கில் வலைகளைக் கொண்டு மீன்பிடியில் ஈடுபட்டோர் இன்று கட்டுமரத்தில் 5-10 துண்டு வலைகளைக் கொண்டு மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். விடியற்காலையில் 500மீ முதல்-1 கி.மீ தூரம் வரையிலும் உடல் வலுவைப் பயன்படுத்தி தண்டுகள் உதவியுடன் படகினைச் செலுத்தி அவசரஅவசரமாக மீன்பிடியில் ஈடுபட வேண்டியுள்ளது. காலை 6.00 மணிக்கு முன்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைதிரும்பவேண்டிய கட்டாயம் இருப்பதினால் மிகுந்த பயத்துடன் தொழிலில் ஈடுபடவேண்டியுள்ளனர். சில சந்தர்ப்பங்களில் திருக்கை பிடிக்கும் கில் வலைகளை முதல் நாள் கடலில் படுத்து, அடுத்தநாள் சென்று எடுக்கவேண்டியும் உள்ளது. சில சந்தர்ப்பங்களில் இவ்வலைகள் நீரோட்டத்தால் அடித்துச் செல்லப்படுவதுமுண்டு.

எனவே மீன்பிடியில் செல்வாக்குச் செலுத்துகின்ற சமுத்திரவியற் காரணிகளைக் கருத்திற்கொள்ளாமல் இராணுவம் தமது பாதுகாப்புக்குக் கருதி தாம் நினைத்தவாறு விதித்துள்ள கட்டுப்பாடுகள் மீன்பிடித்தொழிலைப் பொறுத்தவரையில் முற்றிலும் பொருத்தமற்ற ஒன்றாகவேயுள்ளது. எனவே சமுத்திரவியற் காரணிகள் கருத்திற் கொள்ளப்படவேண்டியது. அவசியமாகின்றது.

மீனவர் இடப்பெயர்வுகள்

கரையோரப் பிரதேசமெங்கும் இராணுவம் முகாம்கள் அமைத்தும், தொடர் காவலரண்களை ஏற்படுத்தியும் உள்ளமையினால் சில கரையோரங்களில் இருந்து மீனவர்கள் முற்றாக வெளியேறியுள்ளனர். குறிப்பாக வலிகாமம் வடகரையோரம், ஆனையிறவு ஏரிக்குக் கிழக்கு, மற்றும் மேற்கு ஏரிப்பகுதி, வெற்றிலைக்கேணி, தீவகப்பகுதிகள் என்பவற்றிலிருந்து மீனவர் பெரும்பாலும் இடம்பெயர்ந்துவிட்டனர். 1989ஆம் ஆண்டு கணிப்பீட்டின்படி 22568 குடும்பங்களும் 102808 மீனவர்களும் யாழ் குடாநாட்டில் காணப்பட்டனர். நேரடியாக மீன்பிடியில் ஈடுபட்டோர் தொகை 26009 ஆகும். 1995இன் பின்னர் இராணுவம் யாழ் குடாநாட்டினை ஆக்கிரமித்த

அட்டவணை இல 3

மீன்பிடி பரிசோதகர் பிரிவு அடிப்படையில் மீனவர் விபரம் 1985 - 1999

மீன்பிடி பரிசோதகர் பிரிவு	மொத்த குடும்பம்		நேரடி ஈடுபாடு	
	1995	1999	1995	1999
யாழ்ப்பாணம் மேற்கு	2670	1930	4050	2100
யாழ்ப்பாணம் கிழக்கு	1051	426	1317	435
பருத்தித்துறை மேற்கு	2000	1100	2750	1200
பருத்தித்துறை கிழக்கு	1140	1143	1384	1548
தாளையடி	1157	423	1424	434
காங்கேசன்துறை கிழக்கு	1391	657	1620	646
காங்கேசன்துறை மேற்கு	535	118	356	110
சண்டிலிப்பாய்	1576	870	2946	890
சுழிபுரம்	3046	1624	3508	1542
ஊர்காவற்றுறை	1361	843	-	856
நெடுந்தீவு	425	287	-	300
வேலணை	1069	559	1340	605
சாவகச்சேரி	591	418	900	526
மொத்தம்	17751	10698	22289	11192

மூலம்:- மா.க.வி.அலுவலகம், யாழ்ப்பாணம், 1999.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் ஆக 10698 குடும்பங்களும் மொத்த மீனவர்கள் 47734 பேராகவும் நேரடியாக ஈடுபட்டோர் தொகை 11192 ஆகவும் குறைந்துவிட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மீன்பிடி பரிசோதகர் பிரிவு அடிப்படையில் 1995 இன் முன்பும் அவ்வாண்டின் பின்பும் மீனவர் விபரம் அட்டவணை 3இல் தரப்பட்டுள்ளது. அட்டவணையின் பிரகாரம் காங்கேசன்துறை மேற்கு மீன்பிடிபரிசோதகர் பிரிவில் 23 சதவீதத்தினரும் தாளையடி மீன்பிடி பரிசோதகர் பிரதேசத்தில் 40 ச.வீதத்தினரும் வேலணை மீன்பிடி பரிசோதகர் பிரிவில் 50 சதவீதத்தினருமே திரும்பியுள்ளனர். பொதுவாக 50 சதவீதமானோர் சொந்த இருப்பிடம் திரும்பவில்லை. அவர்கள் வன்னியிலும், தமிழ் நாட்டிலும் அகதிகளாகவே வாழ்ந்து வருகின்றனர்.

உயிரிழப்புக்கள்

கடல்வலயத்தடை காரணமாக வடபகுதி கரையோர மீனவர்கள் எதிர்கொண்ட மிக மோசமான விளைவு உயிரிழப்புக்கள் ஆகும். கடலில் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டோர் மட்டுமல்ல கரையோரங்களில் வாழ்ந்த மக்களும், கடலில் பயணம் செய்த சாதாரண பொதுமக்களும் உயிரிழப்பினைச் சந்தித்துள்ளனர். வடபகுதி மீனவர்கள் மட்டுமல்ல தமிழ்நாட்டு மீனவர்களும் இத்தகைய உயிரிழப்புக்களைச் சந்தித்ததுடன் இன்னும் சந்தித்து வருகின்றனர். அத்துடன் பலர் படுகாயமடைந்தும், கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைத்து வைக்கப்பட்டும் சித்திரவதை செய்யப்பட்டும் உள்ளனர். இன்னும் பலர் காணாமல் போயும் உள்ளனர். மிகமோசமான படுகொலைகளில் 15-05-1985 அன்று வடபகுதிக்கடலில் நடைபெற்ற குமுதினி படகு கோரப்படுகொலையும், 10-06-1986இல் மண்டைதீவுக்கடலில் கொல்லப்பட்ட 31 குருநகர் மீனவப்படுகொலைகளும், 1990 இன் பின்னர் நடைபெற்ற கிளாலிப்படுகொலைகளும் எவராலும் மறக்கமுடியாத சம்பவங்களாகும்.

1990-1994ம் ஆண்டு வரையில் வடபகுதியைச் சேர்ந்த 266 மீனவர்கள் கொல்லப்பட்டும், 14 பேர் கைதுசெய்யப்பட்டும், 81 பேர் காணாமலும் போயுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் பின்னர் இன்றுவரையும் வடபகுதிக் கடலில் துயரச் சம்பவங்கள் தொடர்ந்தவண்ணமேயுள்ளன. 1999 ஆகஸ்ட் முதல் வாரத்தில் குருநகரில் நடைபெற்ற இரண்டு மீனவர் படுகொலைகள் இன்னும் கொலைகள் தொடரும் என்பதையே காட்டுகின்றது.

தமிழ்நாட்டு அரசு வெளியிட்டுள்ள புள்ளிவிபரங்களின் பிரகாரம் 1983 தொடக்கம் 1991 ஆகஸ்ட வரையிலும் 236 தடவைகள் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதாகவும் 486 மீனவர்கள் பாதிக்கப்பட்டதாகவும், 135 மீனவர்கள் படுகாயங்களுக்குள்ளாகியதாகவும, 50 க்கும் மேற்பட்ட மீனவர்கள் கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது. 1993 இல் மட்டும் 42 மீனவர்களும், 1994இல் 08 மீனவர்களும் கொல்லப்பட்டதாக அறிக்கைகள் சுற்றுகின்றன.

இவற்றைவிட இராணுவ முகாம்களில் இருந்து ஏவும் ஏவுகணைகள் கரையோரங்களில் வீழ்ந்து உடமைகளுக்கும், உயிருக்கும் சேதம் விளைவிக்கும் சம்பவங்களும் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. மீன்பிடிக் குடியிருப்புக்களில் பெரும்பாலான வீடுகள் கடுஞ்சேதமடைந்த வையாகவே காணப்படுகின்றன. இவர்கள் இழந்த சகல உடமைகளுக்கும் இதுவரை எவ்வித இழப்பீடுகள் வழங்கப்பட்டதாகக் தகவல் இல்லை.

இன்று குடாநாட்டில் கரையோரப் பகுதிகளில் வாழ்கின்ற மீனவ குடும்பங்கள் அரைகுறை உலர்உணவு நிவாரணத்தை நம்பியே வாழ்கின்றனர். இவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற உலர் உணவானது அவர்களது வயிற்றுப் பசியைத் தீர்ப்பதற்குப் போதாது. மேலும் கல்வி, சுகாதாரம், உடைகள் போன்ற தேவைகளுக்கும் அத்தியாவசியத் தேவைகளான விறகு, போன்ற மற்றும் தேவைகளுக்கும் பணவசதி அவசியமானதாகும். சராசரி 5 அங்கத்தினர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு அடிப்படை வசதிகளைத் தீர்க்க மாதம் 5000 ரூபா முதல் 7000 ரூபா வரையில் தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மீன்பிடியில் ஈடுபடும் பெரும்பாலான மீனவர்களுக்கு இத்தகைய வருமானம் நிச்சயமாகக் கிடைப்பதில்லை. இதனால் இவர்களது. வாழ்க்கைத்தரம் மேலும் சீரழிந்த நிலையிலேயே காணப்படுகின்றது.

பலர் உயிர்களை இழந்து, உடமைகளை இழந்து அடிமைகளாக சொல்லொண்ணாத் துயரங்களின் மத்தியில் வாழும் இம் மீனவர்களின் பிரச்சினைகளை எடுத்துச்சொல்லவும் தட்டிக்கேட்கவும் இங்குள்ள தமிழ் அரசியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதிகள் முதல் அதிகாரிகள் வரையில் உருப்படியான எதையும் இதுவரையில் செய்யவில்லை என்பது கசப்பான உண்மையாகும்.

உடனடித் தீர்வுகள்:

- ✔ நேரத்திலும், தூரத்திலும் உள்ள கட்டுப்பாடுகள் - ஓரளவிலேனும் தளர்த்தப்படல் வேண்டும்.
- ✔ பகல் வேளைகளில் சுழியோடிப்பிடித்தல் முறை அனுமதிக்கப்படல் வேண்டும்.
- ✔ குறைந்த குதிரை வலுக்கொண்ட வெளியிணை இயந்திரங்களையும், இயந்திரப் படகுகளையும் தொழிலில் பயன் படுத்த அனுமதித்தல் வேண்டும்.
- ✔ உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்த போக்குவரத்துவசதிகள் ஒழுங்கு செய்யப்படல் வேண்டும்.
- ✔ தொடர்ந்தும் நிவாரணம் வழங்கப்படல் வேண்டும்.
- ✔ தேவையான மீன்பிடி உபகரணங்களை தடையின்றிப் பெற்றுக்கொள்ள ஆவன செய்யப்படவேண்டும்.
- ✔ இழப்பீடுகளுக்கு நியாயமான நஷ்டஈடு வழங்கப்படல் வேண்டும்.
- ✔ 'பாஸ்' நடைமுறைகளிலுள்ள கெடுபிடிகள் தளர்த்தப்படல் வேண்டும்.

உசாத்துணை

1. ஆனந்தன், ஏ.எஸ். (1995) கச்சதீவு - அன்றும் இன்றும் நடமாடும், துவிச்சக்கரவண்டி மீன் வணிகர்மன்றம்., யாழ்ப்பாணம்.

2. சூசை ஏ.எஸ் (1993) இலங்கை மீன்பிடித்துறையின் இன்றைய நிலை. ஒரு நோக்கு, சிந்தனை V.III 79-85 யாழ். பல்கலைக்கழகம்.

3. Council of NGOO, Jaffna District. (1998) Reciew of Resettlemen and Rehabilitation programme. Jaffna Peninsula, May 1996 June 1998.

4. Department of Fisheries (1999): Administeration Report, DFEO office. Jaffna.

5. இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி இல. 376/11 நவம்பர் 18, 1985.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைஉணர்வுத் தொழில்நுட்பம் ஊடாக மேற்பரப்பு நீர்நிலைகளைப் படமாக்கல்

கருணாகரன் சுதாகர்

சுருக்கம்

மேற்பரப்பு நீர்நிலைகளைத் தொலைஉணர்வுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி துல்லியமாகப் படமாக்குவதை நோக்கமாகக் கொண்ட இவ் ஆய்வானது, யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஓர் பகுதியான வலிகாமம் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. செய்மதி மற்றும் களவாய்வுத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு கணணிப் பகுப்பாய்வின் மூலம் மேற்பரப்பு நீர்வளங்களான நன்னீர்க்குளங்கள், உவர்நீர்த்தேக்கங்கள், வழுக்கையாற்று வடிநிலம் என்பன படமாக்கப்பட்டுள்ளன. சிறியதும் பெரியதுமாக 127 நீர்நிலைகள் இங்கு அடையாளம் செய்யப்பட்டுள்ளன. ஆய்வுப்பிரதேசத்தில் ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 0.4 நீர் நிலைகள் காணப்படுகின்றபோதும் ஆய்வுப் பகுதியினுள் நீர்நிலைகளின் பரம்பலில் கணிசமான வேறுபாடுகள் காணப்படுகின்றன.

அறிமுகம்

நீர் மூலவளங்கள் சம்பந்தமாக உரிய நேரத்தில் கிடைக்கும் நம்பிக்கையானதும் துல்லியமானதுமான தகவல்கள் நீர்வள முகாமைத்துவத்திற்கும் திட்டமிடலுக்கும் அவசியமாக இருக்கின்றன. இவ் வளங்கள் சம்பந்தமான மரபுரீதியான தகவல் சேகரிப்பு வழிமுறைகள் பணம் மற்றும் நேர விரயத்தை ஏற்படுத்துவதுடன் இவ்வழிமுறைகள் ஊடாக கிடைக்கும் தகவல்களில் நம்பகத்தன்மை குறைவாக இருப்பதுடன் தேவைப்படும் நேரத்தில் கிடைக்காமலும் போகின்றது. இதனால் இவ்வாறான தகவல்களை வழங்குவதில் நவீன தொழில்நுட்ப முறைகள் பெரும்பங்கு வகித்துவருகின்றன. அண்மைக்காலங்களில் விண்வெளித் தொலை உணர்வு நீர் மூலவளங்கள் சம்பந்ததமான இடம்சார் தகவல்களை வழங்கும் ஓர் சக்திமிக்க தொழில்நுட்பமாக வளர்ச்சியடைந்துள்ளது. நீர்வளங்களின் பரப்பு, தன்மை பரம்பல் பற்றிய நம்பிக்கையான, துல்லியமான தகவல்களை விரைவாகவும் தொடர்ச்சியாகவும் தொலை உணர்வுத் தொழில்நுட்பம் வழங்கிவருகின்றது. இத் தகவல்கள் நீர் வளத்துடன் தொடர்புபட்ட ஒவ்வொரு துறையினருக்கும் மிகவும் இன்றியமை யாதவையாக இருப்பதுடன் நிலைத்து நிற்கும் அபிவிருத்திக்கான பிரதான அடித்தளமாகவும் இருக்கின்றது.

விண்வெளியில் வலம்வரும் செய்மதிகள், அவற்றில் காணப்படும் உணர்திறன்கருவிகள், பகுப்பாய்வு நுட்பங்கள் என்பவற்றில் ஏற்பட்ட தொழில்நுட்ப அபிவிருத்திகள் காரணமாக நீர்வளங்கள் சம்பந்தமான மிகப்பரந்த, நுட்பமான தரவுகள் கிடைக்கப்பெற்று வருகின்றன. இத்தரவுகள் மூலம் மேற்பரப்பு நீர் நிலைகளைப் படமாக்கல், வெள்ள இடர் மதிப்பீடு, வெள்ள அபாயப் பகுதிகளை படமாக்கல், கழுவு நீர் எதிர்வுகூறல், நீர்த்தேக்கங்களில் வண்டல் படிதல் ஆய்வுகள், தரைக்கீழ் நீர் எதிர்பார்ப்பு வலயங்களை வரையறை செய்தல் போன்ற பல்வேறு செயற்காடுகளை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறு பல்வேறு செயற்பாடுகளை தொலை உணர்வுத் தரவுகள் மூலம் நிறைவேற்றக்கூடியதாக இருப்பினும் அவை செய்மதிகளின் குணாதிசயங்கள், ஆய்வுப் பிரதேசம், தரவுகள் பெற்றுக்கொள்ளும் காலம் என்பவற்றில் பெருமளவு தங்கியுள்ளன.

ஆய்வுப்பகுதியின் தரையமைப்பு மற்றும் புவிச்சரித்திரவியல் அமைப்புக்கள் காரணமாக இங்கு பருவகாலச் சிறுகுளங்களையும், வெள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்க்கால்களையும் தவிர மேற்பரப்பு நீர்நிலைகள் எதுவும் விருத்தி பெற்று இருக்கிவில்லை. இதனால் மக்களின் வீட்டு, விவசாயத் தேவைகளுக்கான நீர் தரைக்கீழ் நீர்வளத்தில் இருந்தே கிடைக்கப் பெறுகின்றது. எனினும் இங்கு பரம்பிக் காணப்படும் பருவகால மேற்பரப்பு நீர்நிலைகள் மூலம் அப்பகுதி வாழ்மக்களுக்கு கணிசமான நன்மைகள் கிடைத்துவருகின்றன. நீர் நிலைகளை அண்டியுள்ள பகுதிகளில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளவும், கால்நடைகள் நீர் அருந்தவும், தரைக்கீழ் நீதாங்கு படுகைக்கு நீரை வழங்கவும் மேற்பரப்பு நீர் நிலைகள் பெருமளவு பயன்படுத்தப்படுகின்றன. இவற்றைவிட மீன்பிடி, பொழுதுபோக்கு, உவப்பான நுண்காலநிலைச் சூழல் உருவாக்கம் போன்ற செயற்பாடுகளுக்கும் இந்நீர்லைகள் பங்களிப்புச் செய்கின்றன. ஆனால் நீண்டகாலமாக இந்நீர்நிலைகள் முறையான பராமரிப்பு மற்றும் முகாமைத்துவத்திற்கு உட்படாமல் காணப்படுகின்றன. இதனால் நீர் நிலைகளின் அடிப்பாகத்தில் வண்டல்கள் படிந்து நீர் நிலைகளின் நீர் கொள்ளவு ஆற்றல் குறைவடைவதோடு, மக்களின் சில அத்துமீறல் செயற்பாடுகளால் நீர் நிலைகள் மாசுபடுத்தப்பட்டு வருதோடு அவற்றின் பரப்பளவும் குறைவடைந்து வருகின்றன. இவ்வாறான செயற்பாடுகள் காரணமாக மழைக் காலங்களில் வெள்ளப் பெருக்கும், தொற்று நோய்களும் ஏற்படும் அதே நேரம் வரட்சிக் காலங்களில் தரைகீழ் நீர்மட்டம் பெருமளவு குறைவடைந்தும் வருகின்றது.

ஆகவே மேற்பரப்பு நீர் நிலைகளை சிறந்த முறையில் பராமரிப்பதற்கும், முகாமைசெய்வதற்கும் இன்றுள்ள நீர் நிலைகள் சம்பந்தமான துல்லியமான அடிப்படைத் தகவல்கள் அவசியமாகின்றன. மேற்பரப்பு நீர்நிலைகள் சம்பந்தமாக ஏற்கனவே இருக்கின்ற தகவல்கள் பழமையானவையாக இருப்பதுடன் அவற்றின் பரம்பல், பரப்பு என்பவற்றில் துல்லியம் குறைந்தவையாகவும் காணப்படுகின்றன. எனவேதான் இவ்வாய்வானது மேற்பரப்பு நீர் நிலைகளின் இடம்சார்பரம்பலை செய்மதித் தொலைஉணர்வுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி படமாக்கல் எனும் பிரதான நோக்கத்தைக் கொண்டதாக யாழ்ப்பாணக் குடாநாட்டின் வலிகாமம் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வுப் பிரதேசம்

இவ்வாய்வானது யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஓர் பகுதியான வலிகாமம் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வலிகாமம் பிரதேசம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஓர் தனித்துவமான புவியற் பிரதேசமாக காணப்படுகின்றது. ஏறத்தாள 330 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட இப்பிரதேசமானது வடக்கே பாக்கு நீரினையையும், கிழக்கே தொண்டைமானாறு, உப்பாறு, ஏரிகளையும், தெற்கேயும் மேற்கேயும் யாழ்ப்பாண ஏரியையும் எல்லைகளாகக் கொண்டமைந்துள்ளது. வலிகாமம் பிரதேசம் ஓர் இடைவரட்சிப் பிரதேசமாக இருப்பதால் ஆண்டுச்சராசரி வெப்பநிலை 27.6^0 ஆகவும் ஆண்டுச் சராசரி மழைவீழ்ச்சி 1200 மில்லி மீற்றராகவும் காணப்படுகின்றது. தாழ்ந்த சமநிலமாகக் காணப்படும் வலிகாமத்தில் கல்சியம் கொண்ட செம்மஞ்சலல்ற்றசொல், கார-அமில மண்கள், மணல் மண்கள் ஆகிய மண்தொகுதிகள் மயோசின் சுண்ணக் கற்பாறைகளுக்கு மேல் வேறுபட்ட ஆழங்களில் பரந்து காணப்படுகின்றன. வலிகாமம் பிரதேசமானது 7 பிரதான நிர்வாக அலகுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், நல்லூர், வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு, வலிகாமம் தெற்கு, வலிகாமம் மேற்கு, வலிகாமம் தென்மேற்கு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளே இப்பிரதான நிர்வாக அலகுகளாகும்.

தரவுகளும் முறையியலும்

செய்மதித் தரவுகள், இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் 1:50,000 எனும் அளவுத்திட்டத்தில் அமைக்கப்பட்ட தரையமைப்ப படங்கள், களவாய்வில் சேகரிக்கப்பட்ட விபரங்கள் என்பன இவ்வாய்வினை மேற்கொள்வதற்கான பிரதான தரவுத் தொகுதிகளாக பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுடன் ஒருங்கிணைக்கப்பட்ட நில நீர் தகவல் ஒழுங்கு (ILWIS 2.2) எனும் கணனி மென்தளம் தரவுப் பகுப்பாய்வு மற்றும் விம்ப விளக்கமளிப்பு (Image interpretation) செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேற்பரப்பு நீர்நிலைகளைப் படமாக்கம் செய்யும் இவ்வாய்வானது கணனிப் பகுப்பாய்வுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரு: 1 மேற்பரப்பு நீர்நிலைகளைப் படமாக்குவதற்கான படிமுறைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படம்-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 1, பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக நீர்நிலைகளின் பரம்பல், வலிகாமம் பிரதேசம்

பிரதேச செயலாளர் பிரிவு	நீர் நிலைகளின் இலக்கம்	பரப்பு (கெக்டயர்)	பிரதேச செயலர் பிரிவு	நீர்நிலைகளின் இலக்கம்	பரப்பு (கெக்டயர்)
யாழ்ப்பாணம்	1	0.06	வலிகாமம் கிழக்கு	9	0.69
	2	0.12		10	0.75
	3	0.17		11	0. .75
	4	0.29		12	1.15
	5	0.29		13	1.33
	6	0.35		14	1.61
	7	0.52		15	2.25
	8	0.58		16	3.11
	9	0.75		17	3.40
	10	0.92		18	4.90
	11	1.10		19	7.55
	12	1.15		20	8.47
	13	1.21		21	8.99
	14	1.79		22	11.87
நல்லூர்	1	0.17		23	12.51
	2	0.17		24	16.60
	3	0.35		25	17.47
	4	0.46		26	18.10
	5	0.52		27	20.41
	6	0.69		28	29.97
	7	0.75		29	41.16
	8	9.28		30	105.83
	9	16.20		31	166.76
வலிகாமம் கிழக்கு	1	0.06	வலிகாமம் மேற்கு	1	0.17
	2	0.12		2	0.29
	3	0.12		3	0.35
	4	0.17		4	0.35
	5	0.17		5	0.35
	6	0.29		6	0.35
	7	0.52		7	0.46
	8	0.63		8	0.46

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 1 இன் தொடர்ச்சி

பிரதேச செயலாளர் பிரிவு	நீர் நிலைகளின் இலக்கம்	பரப்பு (கெக்டயர்)
வலிகாமம் மேற்கு	9	0.58
	10	0.63
	11	0.63
	12	0.63
	13	0.69
	14	0.98
	15	0.98
	16	1.04
	17	1.04
	18	1.15
	19	1.15
	20	1.38
	21	1.95
	22	2.88
	23	3.23
	24	4.03
	25	6.40
	26	6.86
	27	9.22
	28	36.95
வலிகாமம் வடக்கு	1	0.06
	2	0.17
	3	0.23
	4	0.29
	5	0.35
	6	0.69
	7	0.69
	8	0.75
	9	0.86
	10	2.25
	11	9.91
	12	10.55
வலிகாமம் தெற்கு	1	0.06
	2	0.12
	3	0.29

பிரதேச செயலர் பிரிவு	நீர்நிலைகளின் இலக்கம்	பரப்பு (கெக்டயர்)
	4	0.98
	5	0.98
	6	1.04
	7	1.15
	8	7.38
	9	14.06
வலிகாமம் தென்மேற்கு	1	0.06
	2	0.06
	3	0.06
	4	0.12
	5	0.17
	6	0.23
	7	0.23
	8	0.23
	9	0.23
	10	0.23
	11	0.46
	12	0.52
	13	0.52
	14	0.52
	15	1.10
	16	1.10
	17	1.15
	18	1.33
	19	1.79
	20	2.13
	21	3.23
	22	5.42
	23	5.71
	24	8.13

தொடர்பான பல்வேறு படிமுறைகளைக் கொண்டது (உரு 1). செய்மதித் தரவுகளைச் சீரமைத்தல், புவிநிலையத்திற்கு இசைவாக ஆள்கூறாக்கல், ஆய்வுப்பிரதேச எல்லை வரைலயறை, கணனிசார் விம்ப விளக்கமளிப்பின் மூலம் நீர் நிலைகளை அடையாளம் செய்தல், நீர் நிலைகளுக்கான பரப்புக்கணிப்பீடு போன்றன இவ்வாய்வின் பிரதான கட்டங்களாக உள்ளன.

மேற்பரப்பு நீர்நிலைகள்

ஆய்வுப்பகுதியின் மேற்பரப்பு நீர்நிலைகளான நன்னீர்க் குளங்கள், உவர்நீர்த் தேக்கங்கள், வழுக்கையாற்று வடிநிலம் என்பன இங்கு படமாக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் மொத்தமாக 127 மேற்பரப்பு நீர்நிலைகளை தொலை உணர்வுத் தொழில்நுட்ப ஊடாக அடையாளம் செய்யமுடிந்துள்ளது (படம் 1, அட்டவணை 1) படமாக்கப்பட்ட மிகச்சிறிய நீர் நிலையின் பரப்பு 0.06 கெக்யராகும். செய்மதித் தரவுகளின் வீச்சுத்திறனின் (Resolution) கட்டுப்பாடு காரணமாக மேற்படி பரப்பிற்கு குறைவான நீர்நிலைகள் படமாக்கலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 2: பிரதேச செலாளர் பிரிவு ரீதியாக ஆய்வுப்பிரதேச நீர்நிலைகளின் எண்ணிக்கையும் பரப்பும்

பிரதேச செயலர் பிரிவு	நீர்நிலைகளின் எண்ணிக்கை	நீர்நிலைகளின் மொத்தப்பரப்பு (கெக்டயர்)	நீர்நிலைகளின் அடர்த்தி (ஒரு சதுரகிலோ மிற்றருக்கு)
யாழ்ப்பாணம்	14	9.30	0.98
நல்லூர்	09	28.59	0.30
வலி.வடக்கு	12	26.80	0.20
வலி.கிழக்கு	31	487.71	0.32
வலி. தெற்கு	09	26.06	0.23
வலி.மேற்கு	28	85.13	0.60
வலி.தென்மேற்கு	24	34.73	0.48
மொத்தம்	127	698.32	0.4

படம்-2



செய்மதித் தரவுகளின் அடிப்படையில் படமாக்கப்பட்ட மேற்பரப்பு நன்னீர்க் குளங்கள் வலிகாமம் பிரதேசம் - யாழ்ப்பாணக் குடாநாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 3, பிரதேச செயலாளர் பிரிவு அடிப்படையில் நன்னீர் குளங்கள் (ஒரு கெக்டயர் பரப்பிற்கு மேற்பட்டவை)

பிரதேச செயலர் பிரிவு	குளங்களின் இலக்கம்	பரப்பு (கெக்யர்)
யாழ்ப்பாணம்	1	1.10
	2	1.15
	3	1.21
	4	1.79
நல்லூர்	1	9.28
	2	16.20
வலிகாமம் கிழக்கு	1	1.33
	2	1.61
	3	17.47
வலிகாமம் மேற்கு	1	1.04
	2	1.04
	3	1.15
	4	1.15
	5	1.38
	6	1.90
	7	2.88
	8	3.23
	9	4.03
	10	6.40
	11	6.86
	12	9.22
	13	36.95

பிரதேச செயலர் பிரிவு	குளங்களின் இலக்கம்	பரப்பு (கெட்டயர்)
வலிகாமம் கிழக்கு	1	2.25
	2	9.91
	3	10.55
வலிகாமம் தெற்கு	1	1.04
	2	1.15
	3	7.38
	4	14.06
வலிகாமம் தென்மேற்கு	1	1.10
	2	1.10
	3	1.15
	4	1.33
	5	1.79
	6	2.13
	7	3.23
	8	5.42
	9	5.71
	10	8.13

தவிர்க்கப்பட்டுள்ளன. இங்குள்ள நீர்நிலைகள் யாவும் பருவகாலத்தன்மை கொண்டவையாகும். வடகீழ் பருவக்காற்றுக்காலம் (நவம்பர் -பெப்ரவரி) மற்றும் அதற்கு முந்திய பருவப்பெயர்ச்சி இடைக்காலம் (செப்ரம்பர்- நவம்பர்) என்பவற்றின் ஊடாக பெறப்படும் மழைவீழ்ச்சியினை தேக்கிவைக்கும் இந்நீர்நிலைகளில் இருந்து நீண்ட வரட்சிக் காலத்தில் ஏற்படும் அதிகமான ஆவியாக்கம், தரைகீழ் நீர்வடிதல் என்பன காரணமாக நீர் வற்றிவிடுகின்றன. அதிகளவான நீர் நிலைகளில் சராசரியாக 6-9 மாதங்கள் வரையே நீர் காணப்படுகின்றது. ஒரு சில நீர்நிலைகளில் மாத்திரம் 9 மாதங்களுக்கு மேலும் நீரை அவதானிக்கலாம்.

ஆய்வுப்பிரதேசத்தின் மொத்தப் பரப்பில் 2.0 வீதமான பங்கில் இந்நீர்நிலைகள் பரம்பியுள்ளன. ஏறத்தாள ஒரு சதுர கிலோமீற்றருக்கு 0.4 நீர்நிலைகள் இங்கு காணப்படுகின்றன. எனினும் ஆய்வுப் பகுதியினுள் இந்நீர்நிலைகன் பரம்பலில் கணிசமான வேறுபாடுகள் காணப்படுகின்றன. அட்டவணை 2 இல் பிரதேச செயலாளர் பிரிவுரீதியாக நீர் நிலைகளின் எண்ணிக்கை, அவற்றின் பரப்பு, அடர்த்தி என்பன கொடுக்கப்பட்டிருக்கின்றன. வலிகாமம் கிழக்கு, வலிகாமம் மேற்கு, வலிகாமம் தென்மேற்கு ஆகிய பிரதேச செலாளர் பிரிவுகளில் அதிகளவிலான நீர்நிலைகள் இடவமைவு பெற்றுள்ளன. நல்லூர், வலிகாமம் தெற்கு ஆகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிகளில் மிகவும் குறைவான நீர்நிலைகள் காணப்படுகின்றன. ஆககக்கூடுதலான நீர்நிலைகளைக் கொண்டுள்ள வலிகாமம் கிழக்கில் பெரும் பாலானவை உவர்நீர்த்தேக்கங்களாகும். வலிகாமம் கிழக்கின் கிழக்குப்பகுதி எல்லையாக தொண்டை மானாறு கடனீரேரி காணப்படுவதால் இவ்வேரியினை அண்டி ஆனால் ஏரியில் இருந்து தொடர்பற்று பல உவர் நீர்தேக்கங்கள் காணப்படுகின்றன. குளங்கள் வடிவிலும், பெரிய கால்வாய்கள் வடிவிலும் இந்நீர் நிலைகள் அமைவுற்றுள்ளன. மிகப்பெரிய உவர்நீர்த் தேக்கத்தின் பரப்பு 1.7 சதுரகிலோமீற்றராகக் காணப்படுகின்றது. வலிகாமம் கிழக்கு தவிரந்த ஏனைய பிரதேச செயலாளர் பிரிவுகளில் படமாக்கப்பட்ட நீர்நிலைகள் யாவும் நன்னீரையே கொண்டள்ளன. இவற்றுள் வழுக்கையாற்று வெள்ள வடிநிலம் தவிர்ந்த நீர்நிலைகள் யாவும் நன்னீர் குளங்கள் என அழைக்கப்படுகின்றன. வலிகாமம் மேற்கில் எண்ணிக்கையிலும் பரப்பளவிலும் அதிகமான குளங்கள் காணப்படுகின்றன. ஒரு கெக்டயர் பரப்பிற்கு மேற்பட்ட நன்னீர் குளங்கள் மட்டும் பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக படம் 2 இலும் அட்டவணை 3 இலும் காட்டப்பட்டுள்ளன.

ஆய்வுப்பகுதியின் தென்மேற்கே வழுக்கையாறு எனப்படும் ஒர் பருவகால வடிநிலம் காணப்படுகின்றது. பிரதான வடிநிலமும் அதனோடு தொடர்பு பட்டதாக பல உப வடிநிலங்களும் காணப்பட்ட போதிலும் பிரதான வடிநிலம் மட்டுமே இங்கு படமாக்கப்பட்டுள்ளது. வலிகாமம் மேற்கு, வலிகாமம் தென்மேற்கு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு இவ்வடிநிலம் ஓர் எல்லையாக காணப்படுகின்றது. மழைகாலங்களில் பெறப்படும் மேலதிக நீர் உப வடிநிலங்களுக்கூடாக பிரதான வடிநிலத்திற்குச் சென்று பின்னர் பிரதான வடிநிலங்த்தின் ஊடாக கடலை அடைகின்றது. பிரதான வடிநிலமானது ஏறத்தாள 4 கிலோமீற்றர் நீளத்தையும் சராசரியாக 75 மீற்றர் அகலத்தையும் கொண்டுள்ளது. எனினும் வடிநிலம் கடலை அண்மிக்கும் பகுதிகளில் அது ஏறத்தாள 140 மீற்றர் அகலம் கொண்டதாக காணப்படுகின்றது. மழைக்காலங்களில் கழிமுகத்தை அண்டிய பகுதிகளில் வடிநிலத்தின் இருபக்கமுமாக ஏறத்தாள 0.75 கி.மீற்றர் தூரத்திற்கு வடிநிலம் விஸ்தீரணம் பெறுகின்றது.

முடிவுரை

செய்மதித் தரவுகளின் துணைகொண்டு மேற்பரப்பு நீர்நிலைகளை துல்லியமாக படமாக்கம் செய்யலாம். என்பதை இவ்வாய்வு தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றது. நீர்வளம் சம்பந்தமாக பல்வேறு தகவல்களை தொலை உணர்வுத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தாலும் ஆய்வுக்காலம், தரவுகளில் உள்ள சில கட்டுப்பாடுகள் காரணமாக மேற்பரப்பு நீர் நிலைகளின் இடம்சார் பரம்பல் மற்றும் அவற்றின் பரப்பு என்பன மட்டுமே இவ்வாய்வில் தரப்பட்டுள்ளன. எனினும் இத்தரவுகள் மேற்பரப்பு நீர்நிலைகளை முகாமைத்துவம் செய்வதற்கான அடிப்படைத் தரவுகளாக இருப்பதுடன் நீர்வளம் சம்பந்தமான எதிர்கால ஆய்வுகளுக்கும் சிறந்த உள்ளீடாக விளங்குகின்றன.

REFERENCES

Bhan, S.K (1999) ***Remote Sensing and GIS for Natural Resources Mapping and Inventory.*** In Rao, D.P.et al (ed), Trends in Geoinformatics Technology and application, Deharadun, India.

Clayton, K (1995) ***The land From space*** In Oriordan, T (ed), Environmental Science for Environmental Management, Longman geoup Limited., Singapore.

Lillesand, T.M. and Kiefer, R.W. (1994) Remote Sensing and image interpretation. John wiley and Sons, New york.

Nag, pand Kodrat, M (1998) Digital remote sensing. Concept published Company, New Delhi.

Wilde, H., Jessen, M.and Stephens, P (1996) Land Use Mapping Satellite data of manawathy, New Zealand, ***ITC JOurnak Z: 149-155***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தில் தமிழ்மொழி பெயர்ப்பும் - கலைச் சொல்லாக்கமும்.

செல்வி. செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்

தோற்றுவாய்:

உலகு தழுவிய அறிவினை அதன் விளைவுகளான தகவலறிவு, தொடர்பாடல், பண்பாடு, ஆகியனவற்றை உலகளாவியன வாக்குவதற்கும் மக்கள் உறவையும் மானிட முன்னேற்றத்தையும் வளர்ப்பதற்கும் மொழிபெயர்ப்பு அவசியமானதாகும். கிரேக்கக் கவிஞர்களுடைய செழுமையான கவிதைகளையும் சேக்ஸ்பியருடைய கவிநயமுடைய பாடல்களையும் பிறநாட்டு நல்லறிஞர் அறிவியல் தகவல்களையும் தமிழ்மொழியிலே அறிவதற்கு மொழி பெயர்ப்புத்தான் துணை செய்கின்றது. மொழி பெயர்க்கும் முயற்சிக்கு தமிழ் மொழிக்குப் புதியது அன்று.

"தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்
ததர்ப்பட யாத்தலோடணை மரபினவே"

என்று சூத்திரஞ் செய்துள்ளார். மொழி பெயர்ப்பு என்பது அப்படியே பெயர்த்தல் என்ற கருத்தையே தொல்காப்பியர் கொண்டிருந்தார். ஈழத்துத் தமிழ்மொழி பெயர்ப்பு வரலாறு இதுவரை எவராலும் விரிவாக ஆராயப்படவில்லை. ஏறக்குறைய ஐந்து நூற்றாண்டுப் பாரம்பரியமுடையதாக அது அமைகிறது. பல்வகைப்பட்ட மொழிபெயர்ப்பு வகைகளை அது உள்ளடக்கியுள்ளது. கலைச் சொற்கள் பல்வேறு அறிவியல் தேவைகளுக்கு வேண்டப்படுகின்றன. மொழிபெயர்ப்புப் பிரச்சினைகளுக்கு அடிப்படையாகக் கலைச் சொல்லாக்கம் அமைகின்றது. தமிழில் மொழி பெயர்ப்புக்குத் தகுந்த கலைச் சொற்கள் அமைக்கப்படுவது இன்றியமையா-ததாகும். மொழிபெயர்ப்பும் கலைச் சொல்-லாக்கமும் பின்னிப் பிணைந்துள்ளன. எனவே ஈழத்திலே நடைபெற்ற தமிழ் மொழிபெயர்ப்பு முயற்சிகளையும் கலைச் சொல்லாக்க முயற்சிகளையும் வரலாற்றடிப்படையிலும் மதிப்பீட்டடிப்படையிலும் நோக்கி ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1. மொழிபெயர்ப்பு - கலைச் சொல்லாக்கம் என்ற பதங்கள் சுட்டி நிற்கும் பொருள்.

மொழிபெயர்ப்பு என்றால் என்ன என்ற வினாவுக்கு எவராவது சரியான விடை இன்றுவரை கூறியதாயில்லை. எனினும் அதற்கு விடை காணுவது அவசியமாகும். ஒரு மொழியில் இருக்கின்ற செய்திகளை அல்லது கருத்துக்களை வேறொரு மொழியில் பொருள் மாறுபாடு ஏற்படாதவாறு மூலத்திலுள்ள சுவையும் தன்மையும் சற்றும் குறையாமல் மூலத்திலுள்ளது போன்று அமைப்பது தான் மொழி பெயர்ப்பு என்று ஓரளவு கூற முடியும். மொழிபெயர்ப்பில் பல வகைகள் காணப்படுகின்றது. பெரும்பாலும் அறிவியல் நூல்களை மொழிபெயர்க்கும் போது மூலத்தின் சொல்லமைப்புக்களை ஒன்றும் விடாமல் அறிவியல் தமிழ் மொழியிலே பெயர்ப்பது தான் பொருத்தமானது. மூலக் கருத்தை ஒரு வகையிலே தழுவி தன்னுடைய விளக்கத்தையும் இடையிடையே பெய்து அமைத்தல் தழுவல் மொழி பெயர்ப்பு வகையைச் சார்ந்ததாகும். மொழிபெயர்ப்பு வகைகளைப் பாகுபாடு செய்யும் போது பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள்.

1). சொல்லுக்குச் சொல் மொழிபெயர்த்தல்,
2). விரிவான மொழி பெயர்ப்பு
3). முழுமையான அல்லது சரியான மொழிபெயர்ப்பு
4). முந்து நூற் செய்திகளைச் சுருக்கமாக மொழி பெயர்த்தல்.
5). தழுவல் மொழி பெயர்ப்பு
6). மொழியாக்கம் (2)

என ஆறு வகையாக நோக்குவது குறிப்பிடத்தக்கது. ஈழத்தைப் பொறுத்த வரையில் எல்லா மொழிபெயர்ப்பு வகைகளும் கையாளப்பட்டுள்ளனவா என்பதை நோக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ரெக்னிக்கல் ரேம்'' (Technical Term) என்ற ஆங்கிலப் பதத்தின் தமிழாக்கமே கலைச் சொல் என்று வழங்கப்பட்டு வருகின்றது. கலைச்சொல் என்றால் நுட்பச் சொல் என்று பொருள் கொள்ளலாம்.

2. ஈழத்தில் மொழி பெயர்ப்பு முயற்சிகள்

இலங்கையில் முதல் மொழி பெயர்ப்பு முயற்சி ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சிக் காலத்திலேயே நடைபெற்றது. அவ்வாட்சிக் காலத்திற் சிறப்புற்று விளங்கியவராகிய அரசகேசரி என்னும் அரசவைப் புலவர் வடமொழியிலேயே காளிதாசன் என்னும் பெரும் கவிஞன் இயற்றிய ரகுவம்ச என்னும் காவியத்தை இரகுவம்சம் என்று தமிழிலே மொழி பெயர்த்தார். இதுவே ஈழத்து முதல் தமிழ் மொழி பெயர்ப்பு நூலாகும். பொதுவாகத் தமிழ் மொழியிலே தொடக்க காலங்களில் வடமொழியிலிருந்து தமிழ் மொழிக்குப் பெயர்க்கும் நிலையே இருந்து வந்தது. இந்நிலையே ஈழத்திலும் தொடக்க காலத்திலே காணப்பட்டது. பின்னர் சிங்களமொழி நூல்கள் சிலவற்றைத் தமிழ் மொழிக்குத் திருப்புவதும் ஆங்கில, ஜேர்மன், பிரெஞ்சு போன்ற மேற்குலக மொழி நூல்களை மொழிபெயர்ப்பதும் கீழைத்தேய மொழிகளுள் ஒன்றாகிய யப்பானிய மொழி நூல்களை மொழிபெயர்ப்பதும் ஆகிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

2.1 வடமொழியிலிருந்து

மேலைத்தேயத்தவர்களுடைய வருகைக்கு முன்னர் ஈழத்திலே வடமொழியிலமைந்த நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்கும் நிலையே நிலவியது. காளிதாசன் என்னும் வடமொழிப் பெருங் கவிஞன் இயற்றிய நூல்களுள் ஒன்றாகிய ரகுவம்ச காவியத்தை அரசகேசரி இரகுவம்சம் எனத் தமிழில் மொழி பெயர்த்தது பற்றி முன்னர் குறிப்பிடப்பட்டது. இம்மொழி பெயர்ப்பு நூல் பற்றிய பல அரிய செய்திகளை ஆ.வேலுப்பிள்ளை அவர்கள் அரசகேசரியின் இரகுவம்சமும் அது எழுந்த இந்துப் பண்பாட்டுச் சூழலும் என்னும் சிறு நூலிலே (1988) குறிப்பிடுகிறார். ''தமிழ் இரகுவம்சம் வடமொழி இரகுவம்சத்தின் மொழி பெயர்ப்பா, தழுவலா என்பதும் ஆராயப்பட வேண்டும் [3] என்று கூறியமை இங்கு நோக்கத்தக்கது. கம்பர், கச்சியப்பசிவாச்சாரியார் போன்ற கவிஞர்கள் போன்று அரசகேசரியும் வடமொழி இரகுவம்சத்தைத் தழுவி இயற்றினார் என்றே கொள்ளலாம். அரசகேசரி புதிதாக சில மாற்றங்களைச் செய்துள்ளமையை நோக்கலாம். கதை அமைப்பு, நாட்டு நகர வர்ணனை படல அமைப்பு, யாழப்பாண சமூகத்தை நோக்காகக் கொள்ளும் தன்மை என்பவற்றை தனது நோக்கிலே அரசகேசரி அமைத்துள்ளார். அரசகேசரி இயற்றிய இரகுவம்சம் தழுவல் மொழி பெயர்ப்பு வகையைச் சார்ந்தது. என்று கூறுவதே பொருந்தமானது. காளிதாசப் பெருங்கவிஞன் இயற்றிய மேகதூத என்னும் இலக்கியம் நாகநாதப் புலவரினால் (1814-1884) மேகதூதம் என மொழி பெயர்க்கப்பட்டது. இக்கவிஞனுடைய ருதுசம்ஹர காவியம் தி.சதாசிவ ஐயரால் ருது சங்காரம் என மொழி பெயர்க்கப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வடமொழியிலிருந்து பல நூல்களை மொழி பெயர்த்தவரென சுன்னாகம் சு.நாகநாத பண்டிதர் அவர்களைக் குறிப்பிடலாம். **கீதோபதேசம், சிசுபாலவதம், சாந்தோக்கிய உபநிடதம், சாங்கியம்** என்பவற்றை வடமொழியிலிருந்து மொழி பெயர்த்தார். ஆங்கில மொழி பெயர்ப்போடிருந்த **மாவை தரும சாத்திரம், பகவத்கீதை, மேகதூதம்** முதலிய வடமொழி நூல்களையும் தமிழிலே மொழி பெயர்த்தார். [4] புலோலி வ. கணபதிப்பிள்ளை (1845- 1895) **பில்கணீயம், இரகுவம்சம், ஆலாசிய மான்மியாவாதபுரேசர்கதை** ஆகிய வடமொழி நூல்களைத் தமிழிலே பெயர்த்து உரைவடிவில் எழுதினார். [5] இருபதாம் நூற்றாண்டிலும் வடமொழியிலிருந்து தமிழுக்குப் பெயர்க்கும் முயற்சி தொடர்ந்தது. நவாலியூர் சோ.நடராசன் காளிதாசனுடைய மேகதூதத்தை மொழி பெயர்த்தார். இவருக்குப் பின்னர் பேராசிரியர். க. கணபதிப்பிள்ளை ஹர்ஷவர்த்தனனுடைய **ரத்னாவலி** என்னும் நாடகத்தை **மாணிக்கமாலை** எனத் தமிழிலே மொழி பெயர்த்தார். இதனை மொழிபெயர்ப்பு நாடகம் என்பதை விட தழுவல் மொழிபெயர்ப்பு நாடகம் என்று கூறுவதே பொருத்தமானதாகும். இது பற்றிப் பிறிதோரிடத்தில் விளக்கமாக எழுதியுள்ளேன். [6] ஈழத்து முன்னோடிச் சிறுகதை எழுத்தாளர் சம்பந்தன் காளிதாசனின் வடமொழிச் சாகுந்தல நாடகத்தை மொழி பெயர்த்து சாகுந்தல காவியம் என இயற்றியுள்ளார். இது தழுவல் மொழி பெயர்ப்பு வகையைச் சார்ந்தது என்றே கொள்ளலாம்.

2.2 சிங்கள மொழியிலிருந்து

தமிழ் மொழியிலே பாண்டித்தியம் பெற்ற பல சிங்கள அறிஞர்கள் வாழ்ந்துள்ளனர். [7] எனினும் சிங்கள நூல்கள் தமிழிலே மொழி பெயர்க்கப்பட்டதற்குச் சான்றுகள் காணப்படவில்லை. 18ஆம் நூற்றாண்டில் புகழ் பெற்ற சிங்களப் பண்டிதராகிய யாகோமே கொண்ஸாஸ்வெஸ் என்பவர் தமிழ், சிங்களம், ஆகிய இரு மொழிகளிலும் நூல்கள் எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்பிராப்தி பிரசங்கம் என்னும் நூல் அவராலே முதலிற் சிங்களத்தில் எழுதப்பட்டதன் தமிழ் மொழி பெயர்ப்பு ஆகும். இருபதாம் நூற்றாண்டில் சிங்கள நவீன இலக்கிய ஆக்ககாராகிய மார்ட்டின் விக்கிரம சிங்காவினுடைய கம்பெறலிய என்னும் நாவல் மிகவும் பிரசித்தி பெற்றதாயமைந்தது. இச் சிங்கள நாவலை அல்ஹாஜ் டாக்டர், எம்.எம். உவைஸ் கிராமப் பிறழ்வு எனத் தமிழிலே மொழி பெயர்த்துள்ளார். கி.பி. பதினாறாம் நூற்றாண்டளவில் இயற்றப்பட்ட **செலலிஹீனி சந்தேஸ** என்னும் சிங்கள இலக்கியத்தை நாவலியூர் சோ.நடராஜன் **பூவை விடுதூது** எனத் தமிழிலே மொழி பெயர்த்துள்ளார் முனிதாஸ குமாரதுங்காவின் சிறுகதைகளை சோ.நடராஜனின் மகள் திருமதி சறோஜினி அருணாசலம் **கலியாணச் சாப்பாடு, செத்துப் பிழைத்த சின்னச்சாமி** என்ற பெயரில் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். ஸ்ரீராகவதேரரின் **காவியசேகரம்** என்னும் நூல் திரு.த.கனகரத்தினம் அவர்களாலே மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

2.3 ஆங்கில மொழியிலிருந்து

ஆங்கில இலக்கியங்களைத் தமிழிலே மொழிபெயர்க்கும் வரலாற்றினை நோக்கின் இம்முயற்சியின் முன்னோடியாக இருப்பவராக சுவாமி விபுலாநந்தரே திகழ்கிறார். சுவாமி விபுலாநந்தர் மேலைப்புல இலக்கியங்களை மொழி பெயர்க்கும் போது மொழியாக்கம் என்னும் (மொழி பெயர்ப்பு) வகையினையே பின்பற்றினார். எடுத்துக்காட்டாக மில்றன் என்னும் புலவனின் **சுவர்க்க நீக்கம்** நூலில் ஒரு பகுதி சாத்தானின் சோதினையால் சுவர்க்கமிழந்த ஆதாம் ஏவாளும் இராப் பொழுதினை நிந்திரையிற் கழித்தனர். ஆதாம் அதிகாலையில் எழுந்து துயின்று கொண்டிருந்த ஏவாளை மெல்லத் துயில் எழுப்புகிறான்.

Awake;
My Fairest my expoused, my latest found
Heavens lest, best gift, my ever - new delight
Awake, the morning shines, How nature
paints her colours how the sits on the bloom
extracting liguid sweet."

ஆண்டாளின் திருப்பாவையும் தொண்டரடிப் பொடியின் திருப்பள்ளி யெழுச்சியையும் மாணிக்கவாசகரின் பாவையையும் பள்ளியெழுச்சியையும் நன்கு அறிந்த சுவாமி விபுலானந்தர் இந்த ஆங்கிலப் பகுதியின் பொருளை தனக்குள் வாங்குகிறார். மலரிலுள்ள இனியநீர் தேனீயின் உட்பையிற் சென்று வெளியே வரும் போது தேனாவது போல உள் வாங்கிய ஆங்கிலப் பகுதிகளை சுவாமி தமிழிலே தேனாகத் தருகிறார். அவருடைய மொழி பெயர்ப்பு வருமாறு.

" என் ஆருயிர்த் துணையே
ஈசன் எனக்களித்த
செல்வநிதியே செழுந் துயில்
நீத்தே எழுவாய் புத்தமிழ்தே
அன்பே புலரிப் பொழுதினிலே
வாசமலர்க் கொடியில்
வண்டினங்கள் தேன்
விந்தையினைக் காண்போம்
விழிதுயில் நீத்தே எழுவாய்.
வண்ண வண்ணப் பூக்கள்
மலர்ந்தன காண்"

இவ்வாறு சுவாமியினுடைய மொழி யாக்கப்போக்கு அமைகின்றது. இவருடைய மொழி பெயர்ப்புத் திறன் பற்றி பேராசிரியர் அ. சண்முகதாஸ் [8] சோ.பத்மநாதன் [9] செ.யோகராசா[10] ஆகியோர் விரிவாக எழுதியுள்ளனர். சுவாமி விபுலாநந்தருடைய மொழி பெயர்ப்பிலே காணப்படும் மிகச் சிறந்த பண்பு எளிமையான யாப்பினையும், எளிமையான சொல்லினையும் பயன்படுத்தினமையே ஆகும். அடிகளாருடைய மொழி பெயர்ப்புக்கள் தழுவல் மொழியாக்க வகையைச் சார்ந்தனவாகும்.

சொக்கனுடைய நெடும்பா [3] ஒரு தனித்துவமான கவிதை நூல். இதிலே கிரேக்க உரோம தொன்மங்களில் 'Orpheus and Eurydice' என்னும் கதை ஆங்கில மொழியிலே உண்டு. சொக்கன் இக்கதையினை அப்படியே தமிழிலே மொழிபெயர்க்காமல் அக்கதையைத் தழுவி 'ஓபியசு' என்னும் நெடும்பாவாக எழுதியுள்ளார் . அப்பலோ தெய்வத்துக்குப் பிறந்த ஓபியசு மணம் புரிந்த சுந்தரப்பத்தைக் கூறும் ஆசிரியர்

" வந்தாள் ஒருத்தி வசந்தத்தின் தென்றலெனத்
தந்தாள் பரவசமும் தண்ணளியும் அன்புமே
ஒன்றாய் உருவாய் உதயத்துக் கன்னியென
ஒன்றி உயிரால் இருவர் அவர் ஒருவர்
என்னவோ ஓபியசை ஏக்கம் கொளவைத்துத்
தன்னுள் இருத்தித் தருக்கினான் அன்னவளே
யூரிடசு நாம் யுவதியவள் வெற்றிப்
பேரிகை கேட்டுப் பிறங்கியே ஓபியசு
கண்ணாலம் என்ற கயிற்றில் தளைப்பட்டுப்
பண்ணானான் நற்சுருதி பாவையும் ஆயினளே"

என்று பாடுகின்றார்.

இப்பாடல் தழுவல் மொழிபெயர்ப்பு வகையைச் சார்ந்தது என்றே கொள்ளலாம் ஹோசிமின் கவிதைகள் பல மொழிகளிலே பெயர்க்கப்பட்டு உலகமெங்குமுள்ள விடுதலை வேட்கை மிக்க மக்களால் படிக்கப்பட்டு வந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீன மொழியிலே அமைந்த இக்கவிதைகள் ஆங்கில மொழியில் பெயர்க்கப்பட்டு பல பதிப்புக்களிலே வெளிவந்தன. ஆங்கில மொழியிலிருந்து ஹோசிமின்னுடைய கவிதைகள் கே. கணேஸ் ஹோசிமின் சிறைக் குறிப்புகள் (கரந்த கொல்லா எஸ்டேட், தலாத்து ஒய 1973) என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டார்.

குளிர் காலத் தனிமையும்
கூதலும் இலையெனில்
இளவேனில் வெதுப்பும்
இன்காட்சி இனிக்குமோ
இன்னலும் எந்தனை
இறுக்கிப் பதத்துடன்
திண்ணெனும் உருக்கெனச்
செய்தது உளத்தையே

என்று தழுவல் மொழி பெயர்ப்பாகத் தருகிறார்.

2.4 யப்பானிய மொழியிலிருந்து:

பல வருடங்களாக யப்பான் நாட்டுக் கச்சுயின் பல்கலைக்கழகத்திலே தமிழ் யப்பானிய ஒப்பிட்டு ஆய்விலே ஈடுபட்ட மனோன்மணி சண்முகதாஸ் யப்பானிய பண்டைய பாடல் தொகுதியாகிய மன்யோசு என்னும் நூலைத் தமிழிலே மொழி பெயர்த்து வருகிறார். 1992ஆம் ஆண்டில் வெளிவந்த மன்யோசு என்னும் மொழி பெயர்ப்பு நூல் 155 பாடல்களைக் கொண்டு அமைகின்றது. அவருடைய மொழி பெயர்ப்பு சொல்லுக்குச் சொல்லமைந்த நேரடி மொழி பெயர்ப்பாக உள்ளது. யாப்பானிய மொழி இலக்கியமொன்றினை எங்கள் நாட்டிலே மனோன்மணி சண்முகதாஸ் அவர்களே முதன்முதல் மொழி பெயர்த்துள்ளார். மன்யோசு என்னும் தலைப்பிலமைந்த மொழி பெயர்ப்புப் பாடல் தொகுதியில் அமைந்த பாடல்களை விட இன்னும் 30 பாடல்களைத் தமிழிலே மொழி பெயர்த்து அவற்றுக்கு நிகரான சங்கத்தமிழ்ப் பாடல்களுடன் அவற்றை ஒப்பிட்டு ஆராய்ந்து மன்யோசு காதற் காட்சிகள் என்னும் இன்னொரு நூலையும் வெளியிட்டுள்ளார்.

2.5 அறிவியல் தொடர்பான மொழி பெயர்ப்பு:

அறிவியல் தமிழ் மொழி பெயர்ப்பு 19 ஆம் நூற்றாண்டில் டாக்டர் எஸ். எவ். கிறீன் போன்றவர்களாலே மேற்கொள்ளப்பட்டது. அங்காதி பாத சுகரணவாத உற்பாத நூல் (1855) மருத்துவ வைத்தியம், (1857) கெமிஸ்தம் போன்ற நூல்கள் சில உள்ளூர் அறிஞர்களுடைய உதவியுடன் (டி.டபிள்யூ சப்மன், எஸ் சுவாமிநாதன் போன்றோர்) டாக்டர் கிறீனினாலே மொழி பெயர்க் கப்பட்டதாகும்

3. மொழி பெயர்ப்பின் தேவை உணரப்பட்டமை:

மேலைத்தேயவர் வருகையுடன் கிறிஸ்தவ சமயமும் இங்கு வந்து சேர்ந்தது. பிறமொழி பேசுபவர்கள் பிற பண்பாடுடையவர்கள் பிறசமயத்தவர்கள் இங்கு வாழத் தலைப்பட்டபோது ஒருவரையொருவர் விளங்கிக் கொள்ள மொழிபெயர்ப்பு இன்றியமையாததாயிற்று. கிறிஸ்தவமிசனரிமார் தம்முடைய சமயத்தைப் போதிக்கவும் பரப்பவும் மொழி பெயர்ப்பு உயர் தேவையாக அமைந்தது. இத்தேவையின் விளைவாக அமைந்ததே பைபிள் மொழி பெயர்ப்பாகும். பதினெட்டாம் நூற்றாண்டில் புரட்டஸ்தாந்து மதத் தொண்டர்களுள் ஒருவரான பிலிப்பு த. மெல்லோ (1723- 1790) என்னும் பாதிரியார் புதிய ஏற்பாட்டினைத் தமிழிலே மொழி பெயர்த்தார். இவருடைய இம்மொழி பெயர்ப்பு 1759 இல் ஒல்லாந்த அரசினாற் பிரசுரக்கப்பட்டது. இவர் மொழி பெயர்த்த இன்னொரு நூல் சத்தியத்தின் ஜெயம் என்பதாகும். மெல்லோப் பாதிரியாரின் பைபிள் மொழி பெயர்ப்புப் பற்றி அருட் கலாநிதி எஸ். ஜெபநேசன் பின்வருமாறு கூறுகிறார்.

"அமெரிக்க மிஷனரிமார் கிறிஸ்தவர்கள் உருவாக்கிய இம் மொழி பெயர்ப்பு நூல்களையும் ஆராய்ந்து பார்த்தனரெனத் தெரிகிறது. அமெரிக்க இலங்கை மிஷனின் முன்னோடியான சாமுவேல் நியூவெல் தன்னை அனுப்பிய மிஷன் சங்கத்திற்கு 1813 இல் எழுதிய கடிதத்தில் இலங்கையிற் பேசப்படும் மொழிகளில் ஒன்றான தமிழ் பைபிள் முழுவதும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது என்று எழுதியுள்ளார். 11 கிறிஸ்த வேதாகமத்தின் மொழி பெயர்ப்புப் பற்றி முன்னை நாள் தென்னிந்திய திருச்சபை ஆயர் டாக்டர் சபாபதி குலேந்திரன் மிக விரிவான ஆய்வு நூல் ஒன்றினை எழுதியுள்ளார். 12 அதில் இலங்கைக் கிறிஸ்தவ மிஷனரிமார்கள் மேற்கொண்ட பைபிள் தமிழ் மொழி பெயர்ப்புப் பற்றிய வரலாற்றினையும் அதன் குறைநிறைகளையும் மதிப்பிட்டுள்ளார். பிலிப் பபரிஷயன் என்பவர் பைபிளை மொழி பெயர்த்தார். கிறிஸ்தவர்கள் மத்தியில் பிரபல்யமாக இருந்த இம்மொழி பெயர்ப்பை அமெரிக்க மிசனரிமார் அவ்வளவு பாராட்டவில்லை ஓரளவு செந்தமிழ் நடையில் எழுதப்பட்ட யாழ்ப்பாண மொழி பெயர்ப்புகள் அவர்களாலே ஓதுக்கிவிடப்பட்டிருக்கலாம் 13 எனக் குறிப்பிடுகிறார். மொழிபெயர்ப்பு முயற்சிகள் நடைபெறுவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ மிசனரிமாரின் வருகையும் ஒரு காரணமாகும்

மொழி பெயர்ப்பு முயற்சிகள் பெரும்பாலும் பெருமளவில் 40 களில் மேற்கொள்ளப்பட்டன. ஆங்கிலம், ஜேர்மன், பிரெஞ்சு என்பவற்றில் தாம் அவ்வப்போது கற்றவற்றை வெளிப்படுத்த முனைந்ததன் விளைவாகவும் தமிழ் மொழி பெயர்ப்பின் தேவை உணரப்பட்டதும் ஒரு காரணமாகலாம். சம்ஸ்கிருதக்கல்வி, சிங்களம் என்பவற்றில் அறிஞர்கள் பாண்டித்தியம் பெற்றிருந்தமையும் தமிழ்மொழி பெயர்ப்பு ஏற்படக் காரணமாகலாம்.

1960 ஆம் ஆண்டு உயர்கல்வி தமிழ் மொழியில் கற்றுப் பல்கலைக்கழகத்துக்கு மாணவர்கள் சென்றனர். உயர் கல்வியும் பல்கலைக்கழகக் கல்வியும் தமிழிலே படிப்பதற்கு நிறைய மொழி பெயர்ப்பு நூல்கள் தேவைப்பட்டன. சோ.செல்வநாயகம் அது பற்றிய ஆங்கிலத்தில் கூறியதைத் தமிழில் கீழே தருகின்றேன்.

தாய்மொழி மூலம் பல பாடங்களைக் கற்கும் மாணவர்கள் சிறப்பாக உயர்வகுப்பில் கற்கும் மாணவர்கள் பலவிதமான பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள். இந்த நிலமை வருவதற்குப் பல காரணங்கள் உண்டு. பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் போதிய ஆசிரியர்கள் இல்லாமல் இருப்பது முதலாவது கஷ்ட நிலையாகும். மற்றது சில ஆங்கிலச் சொற்களுக்கு பொருந்தமான தமிழ்ச் சொற்களும் எண்ணங்களும் கருத்துக்களும் இல்லாமையும் பொருத்தமான பாட நூல்கள் இல்லாமையும் முக்கியமான கஷ்ட நிலையை உண்டாக்குகின்றன ஆயினும் அறிவியல் சார்ந்த அருஞ் சொல் அகராதி முயற்சியும் சில அடிப்படை ஆங்கில நூல்களின் மொழி பெயர்ப்பு நடவடிக்கைகளும் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. என்பதும் உண்மையே [14]

இதன் காரணமாக புவியியல், வரலாறு, அரசியல், பொருளியல் தொடர்பான பல ஆங்கில நூல்கள் தமிழ் மொழிக்குப் பெயர்க்கப்பட்டன.

4.ஈழத்து மொழி பெயர்ப்பாளர்கள் கொண்டிருந்த கொள்கையும் - ஏனையோர் மொழி பெயர்ப்புப் பற்றிய கொள்கையும்.

சுவாமி விபுலாநந்தர் மொழி பெயர்ப்பு கொள்கையை நோக்கும் போது அவர் ஆங்கிலத்திலும், தமிழிலும் புலமை பெற்றிருந்தவராகையால் தழுவல் மொழியாக்க வகையையே மேற்கொண்டார். ஆதலால் மூலத்தை தேவைக்கேற்ப மாற்றியும் சில மூல நூலின் கருத்தினை மட்டும் பெற்றுக் கொண்டும் ஏனைய நிகழ்வுகள், கதை மாந்தர்கள், நிகழ்ச்சி மாற்றங்கள் என்பவற்றை தமிழ் மொழிக்கு ஏற்றபடி தனது மொழிபெயர்ப்பு முயற்சியை மேற்கொண்டுள்ளதை நோக்கலாம். மொழி பெயர்க்கும் போது நுண்ணிய கருத்துக்களை தூய தமிழிலே எழுதுவதே அவரது நோக்காக இருந்தது.

அறிவியல் தொடர்பான மொழி பெயர்ப்பில் ஈடுபட்ட டாக்டர் சாமுவேல் பிஸ்கிறீன் தமிழ் மொழிக்குப் பொருத்தமான சொற்களை உபயோகித்தும் தமிழ் மொழியில் சொற்கள் அரிதாக உள்ளபோது வடமொழியில் உள்ள சொற்களை அப்படியே கையாண்டும் மொழி பெயர்ந்துள்ளமையே நோக்கலாம். இவருடைய மொழி பெயர்ப்பினை கூர்ந்து நோக்கினால் அது பெரும்பாலும் வடமொழிச்சொற்களைப் பெருந்தொகையாகக் கொண்டதொன்றாகவே அமைந்தது எனலாம். பிறமொழிகளில் இருந்தும் சொற்களைக் கடன் வாங்கலாம் என்பதும் அவரது கொள்கையாகும்.

மொழி பெயர்ப்புக்களை பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கின அவற்றுட் சிலவற்றைச் சோ. செல்வநாயகம் எடுத்துக் காட்டி அவற்றுத் தீர்ப்பதற்குச் சில ஆலோசனைகள் கூறினார். அவை வருமாறு (ஆங்கிலத்திற் குறிப்பிட்டவற்றை .இங்கு தமிழில் தருகிறேன்)

1. இதுவரைக்கும் வெளியிட்ட அருஞ்சொல் களஞ்சியத்தில் ஒரு சிலவே தெளிவான பொருத்தமான சொற்களாகப் பயன்படுத்தக் கூடியதாயிருக்கின்றன. தெளிவற்றனவும் பொருத்தமில்லாதனவுமான சொற்களைத் தமிழில் தெளிவான முறையில் திருத்தியமைக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழிலே ஒத்த பொருத்தமுடைய சொற்கள் இல்லாவிடின் வெளிநாட்டு மொழிகளிலிருந்து தகுதியான சொற்களைத் தங்குதடையின்றி எடுத்துப் பயன்படுத்த வேண்டும். இந்த விடயத்தில் ஓரளவு எளிதில் ஏற்றுக் கொள்ளும் தன்மை இருக்க வேண்டும்.

2. வழமையான இலக்கண மரபைப் பேணவேணும் என்பதற்காக மக்களினதும் இடங்களினதும் பெயர்களை அமைக்கும் போது தமிழ் உருவம் கொடுத்து எழுதக் கூடாது. அதற்குப் பதிலாக அவற்றின் சொந்த வடிவங்களிலேயே எழுத வேண்டும்.

3. கிரந்த எழுத்துக்களைத் தேவையான இடங்களில் பயன்படுத்த வேண்டும். இந்த எழுத்துக்களைப் பயன்படுத்தினால் அது நிச்சயமாக வெளிநாட்டு மொழி ஒலிகளைத் தமிழிலே பயன்படுத்த எளிதாக்கும். வெளிநாட்டு மொழிகளில் உள்ள fbz போன்ற எழத்துக்களின் ஒலிகளைத் தமிழிலே அமைப்பதற்கு போதிய வசதியில்லை என்பது உண்மை. ஆகவே வெளிநாட்டு மொழி ஒலிகளைச் சரியான முறையில் தமிழ் மொழியில் அமைப்பதற்கு தமிழ் எழுத்தக்களில் சில மாற்றங்களைக் கொண்டு வர வேண்டியிருக்கும்.

4. அதிகமான மொழி பெயர்ப்புக்களில் உள்ள மொழி மிகவும் கடினமான தன்மை கொண்டதாக காணப்படுகின்றது. அந்த மொழியில் வழக்கற்றுப் போன, கருத்து இல்லாத இலக்கண விதிகளை இறுக்கமாகக் கடைப்பிடிப்பதும் ஒரு காரணமாகும். செயற்கை முறையில் மாற்ற முடியாத தன்மையில் அதை அமைக்கக் கூடாது தற்காலத்துக்கு ஏற்ற முறையில் அதை மாற்றியமைக்கக் கூடியதாக இருக்க வேண்டும். இவ்வாறு கூறும் கருத்துக்களிலிருந்து மொழி பெயர்ப்புப் பிரச்சினைக்கு அடிப்படையாகக் கலைச் சொல்லாக்கம் அமைகின்றது. எனலாம். [15]

இவருடைய கருத்தினை நோக்கும் போது வெளிநாட்டு மொழி ஒலிகளை தேவையான போது பயன்படுத்தலாம் என்பதாகும்.

இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் Problems of official Transiation என்னுந் தலைப்பில் கட்டுரை படித்த திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்களும் மொழி பெயர்ப்புத் தொடர்பான பல சிக்கல்களை எடுத்துக் காட்டியுள்ளார். 16 அவரும் தமிழ் மொழி பெயர்ப்புக்குத் தகுந்த கலைச்சொல் தொகுதிகள் அமைக்கப்பட வேண்டும் என்ற உண்மையை வலியுறுத்தினார். தமிழிலே மொழி பெயர்க்கும் போது பிறமொழிச் சொற்களை (வடமொழி, ஆங்கிலச் சொற்களை)ப் பெய்து ஆக்குவதா அல்லது தனிச் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துவதா என்பது தொடர்பாக அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுண்டு. ''தமிழ் மொழி வளம் நிறைந்த மொழியானதால் வேற்று மொழிகளிலிருந்து சொற்களைக் கடன் வாங்கத் தேவையில்லை. தேவையேற்படின் புதுக்கருத்துக்களைக் கூறுவதற்குத் தமிழ் மொழியிலுள்ள அடிச்சொற்களிலிருந்து புதுச் சொற்களை உருவாக்கலாம் என்றுகூறும் செல்வச் சந்திரன் மொழி பெயர்ப்பிலே தனித்தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துதல் தமிழ் மொழிபெயர்ப்பிலே தனித்தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துதல் தமிழ் மொழிக்கு அழகையும் எழுச்சியையும் கொடுக்கும் என்பது திண்ணம்" என்று கூறுகின்றார். சட்டமொழி பெயர்ப்பிலே தன்னிச்சையான நடையைக் கையாள முடியாது. சொல்லுக்குச் சொல் மொழி பெயர்க்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. சட்டமொழி பெயர்ப்பிலே தன்னிசையான நடையைக் கையாண்டால் கருத்து மாறுபடலாம்'' என்று கூறி அது தொடர்பான சிக்கல்களை விவரிக்கின்றார். 17 அவரும் இத்தகைய மொழி பெயர்ப்புக்களுக்கு நல்ல கலைச் சொல் அகராதிகள் தேவையென்பதை வலியுறுத்துகின்றார். "Discrepencies in Translation of Zoological Literature" [18]

என்னும் கட்டுரையில் கே. சச்சிதானந்தனும் அறிவியல் மொழி பெயர்ப்பில் தகுந்த பொருத்தமான தமிழுலகுக்குப் பொருத்தமான கலைச்சொல் தொகுதிகள் உருவாக்கப்பட வேண்டிய அவசியத்தினை வலியுறுத்தியுள்ளார்.

5. இலங்கையில் கலைச் சொல்லாக்கம்

இலக்கிய நூல்களை மொழிபெயர்க்குமிடத்துத் தோன்றாத சில சிக்கல்கள் அறிவியல் நூல்களை மொழிபெயர்க்குமிடத்துத் தோன்றின. அச்சிக்கல்களுள் முதன்மையானது கலைச்சொற் பயன்பாடாகும். கலைச் சொற்களை எவ்வாறு அமைக்க வேண்டும் என்பது தொடர்பாகப் பல சிந்தனைகள் உருவாகின. கலைச்சொல்லாக்கம் தொடர்பாக ஈழத்திலே ஏற்பட்ட முயற்சிகளையும் அவர்கள் முன்வைத்த கொள்கைகளையும் நோக்கலாம்.

5.1 கலைச்சொல்லாக்க முயற்சிகள்

மேலைத்தேய அறிவியல் மொழிபெயர்ப்பு முயற்சிகள் தொடங்குகின்றபோதே கலைச்சொல்லாக்க முயற்சி பற்றிய சிந்தனை உருவானது. 19ஆம் நூற்றாண்டில் கலைச்சொல்லாக்க முயற்சியில் அடியெடுத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்த முதல்வர் டாக்டர் சாமுவேல் பிஸ்கிறீன் என்பவராவர். அவரது முயற்சியால் 1875ஆம் ஆண்டு 'அருஞ்சொல்லாகராதி' என்ற பெயரில் நூல் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது. கலைச்சொல் ஆக்கம் பற்றி எம்முடைய நாட்டவரான அருட்டிரு சுவாமி விபுலானந்தர் அவர்கள் இந்த நூற்றாண்டின் முப்பதுகளிலே சிந்தித்துள்ளார். 1936ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 20 ஆம் நாள் சென்னை பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் சென்னை மாகாணத் தமிழர் சங்க கலைச்சொல்லாக்கம் பற்றிய மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய அடிகளார் கலைச்சொல்லாக்கம் பற்றிய தன் கருத்துக்களை வெளியிட்டார்.

அரச கரும மொழியலுவலகம் ஐம்பதுகளிலிருந்தே அறிவியல் கலைச்சொல்லாக்க முயற்சியிலீடுபட்டது. அப்பொழுது அவ்வலுவலகத்திலிருந்து தமிழ் அறிஞர் திரு.அ.வி.மயில்வாகனன் தலைமையிலே டாக்டர் வ.பொன்னையா, திரு.பொ.சங்கரப்பிள்ளை, திரு.சோ.வண்ணியசிங்கம் அருட்கலாநிதி தனிநாயகம் அடிகள். திரு.கு. நேசையா. ஆகியோருடன் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையும் பேராசிரியர்.கா.குலரத்தினமும் இணைந்து பல்வேறு அறிவியல் துறைகளில் கலைச்சொல்லாக்கத்திலே ஈடுபட்டனர். மேலும் இலங்கை அரசு சுயமொழி அலுவலகம் என ஒன்றை அமைத்து கலைச்சொல்லாக்க முயற்சிகளை முன்னெடுக்க வழிசமைத்தது. கல்வி வெளியீடுத் திணைக்களம் என்பனவும் இத்தகைய முயற்சியில் ஈடுபட்டன.

பேராசிரியர் க. கைலாசபதி பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகிய இருவரும் பல ஆங்கிலச் சொற்களின் பொருண்மைகளைத் தமிழுக்கு அறிமுகம் செய்துள்ளனர். இவர்களுடைய கலைச்சொல்லாக்க முயற்சி பற்றிக் கூறும் போது. நா. சுப்பிரமணியம் அவர்கள் "மொழியியல் , சமூகவியல், மானிடவியல் பொருளியல், அரசறிவியல், முதலிய பல்வேறு துறைகளின் சங்கமாக இவர்களின் கலைச்சொற் பரப்புத் திகழ்கின்றது.'' என்று கூறியமை இங்கு குறிப்பிடத்தக்கது. கா. இந்திரபாலா "விஞ்ஞானக் கலைச்சொல்லாக்கம் என்ற தலைப்பில் விஞ்ஞானக் கலைச்சொற்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என குறிப்பிடுகின்றார். நா. சுப்பிரமணியம் அவர்கள் தமிழிற் கலைச்சொல்லாக்கம் இலங்கை அனுபவங் களினூடாக ஒரு பார்வை என்ற தலைப்பில் கருத்தரங்குக் கட்டுரையொன்றினை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் இவர் அறிவியற் தமிழ் என்ற தலைப்பின் கீழ் கலைச்சொல்லாக்க முயற்சிகளும் அவை எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் என்ற தலைப்பில் நடைபெற்ற கலைச்சொல்லாக்க முயற்சிகளை பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிட்டு அவை எதிர் கொள்ளும் பிரச்சினைகளை விமர்சன நோக்குடன் எழுதியுள்ளமை நோக்கத்தக்கது. கலைச் சொல்லாக்க முயற்சி பற்றி ஆர். அம்பிகைபாகர் "Scientific Nomenclatuire in Tamil" என்ற தலைப்பில் இரண்டாவது உலக தமிழாராய்ச்சி மகாநாட்டில் கட்டுரை சமர்ப்பித்தார். இவர் இக் கட்டுரையினூடாக இலங்கையில் ஆக்கப்பட்ட கலைச்சொற்களுக்கு இந்தியாவில் ஆக்கப்பட்ட கலைச்சொற்களுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டினை எடுத்துக் காட்டுகின்றார்.

5.2 கலைச் சொல்லாக்கம் பற்றி அறிஞர்கள் கொண்டிருந்த கொள்கைகள்

கிறீன் அவர்களது கலைச் சொல்லாக்கம் பற்றிக் கொண்டிருந்த கருத்தினை நோக்கும் போது புதுச் சொல்லாக்கத்திற்குப் பேருதவி புரிவன, இலக்கண நூலார் ஆராய்ந்தமைந்த விதிகளுக்கு இசைவாகச் சொற்களை ஆக்கிக் கொள்ளுதல் முறையாகும். உயிருள்ள மொழியானது பிறமொழித் தொடர்பு கொண்டு தனக்குரிய சொற்களஞ்சியத்தைப் பெருக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

இவ்வாறு அடிகளால் தெரிவித்த கருத்துக்கள் தொடக்க காலத்தில் ஈழத்திலே கலைச் சொல்லாக்கத்தில் ஈடுபட்டவர்களாலே பெரிதும் பின்பற்றப்பட்டன.

கா. இந்திரபாலா ''சிறப்பாக நாட்டு வைத்தியத்தில் வரும் கலைச்சொற்கள் நோய்கள் பெயர்கள் ஆகியவை தற்காலத்திலும் சமஸ்கிருத அடிகளாகப் பிறந்த சொற்களே. இவை சமஸ்கிருதச் சொற்கள் என்ற காரணத்தினால் அவற்றைவிடுத்து புதிதாக வழக்கில்லாத கலைச் சொற்களை ஆக்கிக் கொள்ளுதல் ஆதரிக்கத்தக்க செய்கையன்று. இதே போலவே தான் தற்காலத்தில் எத்தனையோ ஆங்கிலச் சொற்கள் தமிழில் கலைச்சொற்களாக இடம்பெற்றுள்ளன. அவை பெருவழக்கில் இருந்தால் அவற்றை மறந்து எவருமே அறியாத புதுச்சொற்களை ஆக்கிகொள்ளுதல் நம் குறுகிய மனப்பான்மையை வளர்த்து அபிவிருத்-தியைத்தடை செய்யும் வழக்கிலுள்ள பிறமொழிச் சொற்களை கூடியவரை பயன்படுத்த முயற்சி எடுக்கப்பட வேண்டும்'' என குறிப்பிடுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞர்களுடைய கலைச்சொல்லாக்கம் பற்றிய கருத்தில் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன.

ஆர். அம்பிகைபாகர் கலைச் சொல்லாக்கம் பற்றி ஆங்கிலத்திற் கூறியவற்றைத் தமிழிலே கீழே தருகிறேன்.

1. தமிழ்ச் சொற்களை உச்சரிக்கும் போது குரலில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளைப் பாதுகாக்க வேண்டும்.
2. அடிப்படை இலக்கண விதிகளை அவதானித்துப் பாதுகாக்க வேண்டும்
3. கிரந்த எழுத்துக்களைத் தவிர்க்க வேண்டும்.

தமிழ்ச் சொற்களின் அடிப்படை உருவத்தை மாற்றலாகாது என்ற கொள்கை ஏற்கப்பட்டு வந்திருக்கின்றது. ஆகவே பழைய தமிழ்ச் சொற்களின் உச்சரிப்புக்கும் தற்காலத் தமிழ்ச் சொற்களின் உச்சரிப்புக்கும் இடையே சிறிதளவு மாற்றமும் ஏற்படவில்லை. இந்திய அரசாங்கத்திற்கு உபகுழு அறிவியல் சார்ந்த சொற்களைச் சேகரித்து ஆங்கில உச்சரிப்பையும் ஒலியையும் நுணுக்கமாக பிரயோகித்து நேரடியாக மொழிபெயர்த்து வெளியிட்டது. ஆகவே இலங்கையில் பிரயோகிக்கும் கருத்து முறைக்கும் இந்தியாவில் பிரயோகிக்கும் கருத்து முறைக்கும் வேறுபாடு உண்டு. சொற்களின் அமைப்பில் உள்ள இப்பெரும் வேறுபாடு எதிர்கால அறிவியல் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு இது விரும்பத்தக்கதல்ல ஓரே மொழிகளைப் பேசும் மக்கள் கூட்டத்தினரிடையே அறிவியல் சார்ந்த சொற்களைப் பிரயோகிக்கும் முறையில் கருத்து வேறுபாடு ஏற்படாது பாதுகாக்காவிட்டால் அந்த மொழியில் உள்ள விடயம் வளர்ச்சியடைய தடையாக இருக்கும். அறிவியல் சார்ந்த சொற்கள் கொண்ட அகராதி ஒன்று தமிழில் விஞ்ஞான வளர்ச்சி ஏற்படுவதற்கு இன்றியமையாதது. இவ்வளவு காலமும் மிகத் தேவையான அருஞ்சொல் அகராதியை உருவாக்காமல் விட்டமை வருந்தத்தக்கது.” 19

இவ்வாறு ஆர். அம்பிகைபாகர் அன்று கூறிய குறை இன்று வரையும் இருந்து கொண்டே வருகிறது. கலைச் சொற்களிலே காணப்படும். வேறுபாடுகளை நீக்குவதற்கு இன்றும் உலகு தழுவிய ஒரு பொது அமைப்பு இன்று வரை ஏற்படவில்லை. இது தொடர்பாகப் பேராசிரியர். அ. சண்முகதாஸ் அவர்கள் 'இருபத்தோராம் நூற்றாண்டுக்கான தமிழ்மொழி' என்னும் கட்டுரையில் 1968இல் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது” இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாட்டுத் தமிழறிஞர் ஒன்று கூடி ஒரு பொதுக் கலைச்சொல்லாக்கத் திட்டம் வகுக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது என்று கூறி அது இன்னும் சாத்தியமாகவில்லை. என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் கலைச்சொல்லாக்கம் தொடர்பாகப் பல சிக்கல்கள் உள்ளன. என்று கூறும் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் மேலும் இவை உடனடியாகத் தீர்மானிக்கப்பட வேண்டியன. ஓரே சொல்லுக்குப் பல சொற்களைக் கையாளுதல் ஒரு பெரிய சிக்கலாயுள்ளது” 20 என்று கூறுவது நோக்கத்தக்கது. எடுத்துக்காட்டாக evolution ' என்னும் சொல்லுக்கு 'பரிமாணம்', 'கூர்ப்பு' 'படிமலர்ச்சி', என்ற சொற்கள் பயன்படுகின்றன. இவ்வாறு பல சொற் பிரயோகம் தகவல் அறிவியல் தேவைகளுக்கு உதவக்கூடியதல்ல. தமிழ்மொழி கணிப் பொறியுடன் உரையாடக் கூடிய பொறித்தமிழாக மாறும் பொழுது கணிப்பொறி ஆற்றலை விரயமாக்காமல் அத்தமிழ் பயன்பட வேண்டும். அப்பயன்பாட்டுக்குத் தமிழ்க் கலைச் சொற்கள் எளிமையானவையாகவும் கூர்மையானவையாகவும் அமைய வேண்டும். நா. சுப்பிரமணியம் அவர்கள் புதிய புதிய சிந்தனைகள் தோன்றும் போதும் அறிமுகமாகும் போதும் அவற்றுக்கியையக் கலைச் சொற்கள் புதிது புதிதாக உருப்பெறவேண்டிய தேவை ஏற்படும் என்று கூறுவது இங்கு நோக்கத்தக்கது.

இதுவரையும் மேற்கொண்ட கலைச் சொல்லாக்க முயற்சிகளில் பொருள் சுட்டி நிற்கும் தன்மையையே நோக்காகக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் ஒரு மொழியில் ஒரு குறிப்பிட்ட பொருளைக் குறிப்பதற்குப் பல கலைச்சொற்கள் பயன்படுவது பற்றிய தன்மை நீக்கப்படவில்லை. அறிவியலைத் தமிழ் மொழியூடாக உலகில் எங்கிருப்பவரும் பெற்றுக்கொள்ள ஓரே வகையான கலைச்சொற்கள் உருவாக்கப்பட வேண்டும். உலகளாவிய நிலையில் பொதுமொழி பற்றி எண்ணுவதற்கு முன்னர் தம்முடைய நாட்டின் தூய சமூக அறிவியல் துறைகளாகிய வர்த்தகம், முகாமைத்துவம் பொருளியல் புவியியல் கணினியறிவியல் முதலாயவற்றிலே நாம் பயன்படுத்தும் கலைச் சொற்களுக்கிடையே காணப்படும் வேறுபாடுகளை நீக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இது தொடர்பாக முன்னின்று வழிகாட்டலாம். அண்மையில் கணினியறிவியலுக்கான ஒரு கலைச் சொற்றொகுதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூதவை உறுப்பினர்களின் ஆலோசனையுடன் துறைசார் நிபுணர்களின் துணையுடன் தயாரிக்கப்பட்டது. இது போன்று சமூக விஞ்ஞானத்துறை ஒவ்வொன்றுக்கும் பௌதீக விஞ்ஞானம் உயிரியல் விஞ்ஞானம் ஆகியவற்றின் துறை ஒவ்வொன்றுக்கும் மூதவையின் பணிப்புரையிலே கலைச்சொற்றொகுதிகள் தயாரிக்க வேண்டும். இவ்வாறு இத்தொகுதிகளைத் தயாரிக்கும் போது தமிழ் நாட்டிலே இத்துறைகள் சார்பாக வெளியிடப்பட்டுள்ள கலைச்சொற்றொகுதிகளுடன் ஒப்பீடு செய்து முடிந்தளவில் உலகளாவிய பொதுச் சொற்களை அமைத்துக் கொள்ளமுயல வேண்டும்.

முடிவுரை.

ஈழத்து தமிழ் மொழியானது மொழிபெயர்ப்பு முயற்சியை பெருமளவில் பெற்றுள்ளது. என்றே கொள்ளலாம். ஏறக்குறைய ஐந்து நூற்றாண்டு பாரம்பரியமுடையதாக இம்மொழிபெயர்ப்பு முயற்சி நடைபெற்றிருக்கின்றது. மொழிபெயர்ப்பில் காவியம், கவிதை, நாவல், சிறுகதை நாடகம் என்ற இலக்கிய வடிவங்கள் மொழிபெயர்க்-கப்பட்டுள்ளன மொழிபெயர்ப்பின் எல்லா வகையான மொழிபெயர்ப்பு வகைகளும் மொழிபெயர்ப்பாளர்களால் கையாளப்பட்டி-ருக்கின்றது. மொழிபெயர்ப்பில் அறிவியல் நூல்களை மொழி பெயர்க்கும் போது முக்கிய பிரச்சினையாக கலைச் சொல்லாக்கம் அமைகின்றது. மொழிபெயர்க்கும் பொழுது தமிழில் தகுந்த கலைச் சொற்கள் இல்லாமையும் முக்கிய பிரச்சினையாக அமைகின்றது. மொழிபெயர்க்கும் போது பிறமொழி சொற்களைக் கையாளுவது பற்றி கருத்து வேறுபாடுகள் அறிஞர்களிடையே காணப்படுகின்றது. தமிழ் மொழி சொல் வளம் நிறைந்தது. ஆகையினாலே பிறமொழி பதங்களை (சொற்களை) நாம் பயன்படுத்த வேண்டியதில்லை. அவ்வாறு புதுக்கருத்துக்களை கூறவேண்டுமாயின் தமிழ் மொழியில் உள்ள அடிச்சொற்களில் இருந்து புதுச்சொற்களை உருவாக்குவது சிறந்த முறையாகும். கலைச் சொல்லாக்க முயற்சியில் பொருள் சுட்டிநிற்கும் தன்மையே முதன்மை நோக்காகக் கருதப்பட்டது. ஆனால் ஒரு பொருளுக்கு பல கலைச் சொற்கள் பயன்படுகின்றன. ஒரு பொருளுக்கு பல கலைச் சொற்கள் பயன்படும் தன்மை நீக்கப்படவேண்டும். புதுச்சொல் கலைச் சொல்லாக்கம் உருவாக்கப்பட வேண்டிய அவசியம் உணரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பியம், மரபியல், சூ.652.

2. சண்முகதாஸ், அ.விபுலாநந்த அடிகளாரும் இலக்கியமும், கிறிஸ்தவக் கல்லூரி மலர், கோப்பாய் 1994.

3. வேலுப்பிள்ளை. ஆ. "அரசகேசரியின் இரகுவம்சமும் அது எழுந்த இந்துப்பண்பாட்டுச் சூழலும்" "தொடக்கப் பேருரை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1998.

4. குமாரசுவாமிப் புலவர், தமிழ்ப்புலவர் சரித்திரம், சுன்னாகம் 1951 (இரண்டாம் பதிப்பு), ப.198.
5. மேற்படி ப. 74.
6. செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம், பேராசியரியர். கணபதிப்பிள்ளை அவர்களின் நூல்கள் பற்றிய ஆய்வு, தமிழ்த்துறை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், 1988. ப. 43-45.
7. பார்க்கவும், த.கனகரத்தினம். "பாளி சிங்கள இலக்கியங்களுடன் தமிழ் இலக்கிய உறவு" நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு மலர். தொகுதி 1, ப .228- 244.

8. சண்முகதாஸ், அ. மு.கு.

9. பத்மநாதன். சோ."அடிகளாரைக் கவர்ந்த ஆங்கில இரங்கற்பா" விபுலானந்த அடிகளார் நூற்றாண்டு விழா சிறப்பு மலர், தமிழ் மன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1992.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. யோகராசா செ. "விபுலானந்தர் கவிதைகள் ஒரு கண்ணோட்டம் " சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு நினைவு மலர், மட்டக்களப்பு, 1992.

11.ஜெபநேசன், எஸ். இலங்கையிலே பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழர் சிந்தனை வளர்ச்சி அமெரிக்க மிஷனரிமாரின் உயர்கல்வி முயற்சிகளின் தாக்கம், யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை, 1992. ப. 241.

12. குலேந்திரன் சபாபதி. கிறிஸ்தவ தமிழ் வேதாகமத்தின் வரலாறு, கிறிஸ்தவ இலக்கிய சங்கம். சென்னை 1967.

13. ஜெபநேசன், எஸ். மு.கு.நூல் ப. 242.

14. Selvanayagam, S. The Tamil Language and problems of Translation", Proceedings of the Frist Internatinal Conference/Seminar of Tamil Studies, Kuala Lumpur, 1966. pp. 829-32.

15. ibid.

16. Maheswari Balakrishnan, 'Problems of Official Translation" Proceedings of the Second International Conference/ Seminar or Tamil Studies, Vol. I Madras, 1968.

17. செல்வச்சந்திரன், கு."மொழிபெயர்ப்பும் தனித்தமிழ் சொற்களும்" Proceedings of the Fouth International Conference/Seminar of Tamil Studies, Vol .II Jaffna. 1974.

18. Satchithananthan, K. " Discrepencies in Translation of Zoological Literature" Pro ceedings of the Second International Conference/Seminar of Tamil Studies, Vol .I Ma dras, 1968.

19. Ambikaipakar, R. "Scientific Nomenclature in tamil" Proceedings of the Second International Conference / Seminar of Tamil Studies, Vol. 1 Madras, 1968.

20. சண்முகதாஸ் அ." இருபத்தோராம் நூற்றாண்டுக்கான தமிழ்மொழி" கலப்பை, தமிழ் சங்க இதழ், அவுஸ்திரேலியா சிட்னிப் பல்கலைக்கழக வெளியீடு, 1997.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து மரபுக் கல்வியின் ஆன்மீக சிந்தனைகள்

திருமதி ஜெ. இராசநாயகம்

ஆன்மீக ஞானத்தில் சிறந்து விளங்கிய பலர் ஆன்மீக வாழ்விலே இலயித்து அவை பற்றிய பல கருத்துக்களையும் அவ்வப்போது வெளியிட்டுள்ளார்கள். விஞ்ஞானம், கலை, பொருளாதாரம், அரசியல், பொறியியல் போன்ற அறிவு முன்னேற்றத்துடன் ஆன்ம முன்னேற்றத்தையும் இணைத்துக் கொண்டு போக முடியும் என்று அவர்கள் நம்பினார்கள். இன்று பிரத்தியட்ச உண்மையாக விளங்கும் விஞ்ஞானமானது எவ்வளவு தூரம் மக்கள் மத்தியில் கலந்து விட்டதோ அதே போல் ஆன்மீக விழுமியங்களும் காலத்தால் அழிய முடியாதனவாய் அழிக்க முடியாதனவாய் செல்வாக்குப் பெறுகின்றன.

இயந்திரமான உலகிலே விஞ்ஞானம். தொழில்நுட்பம் ஆகிய துறைகளிலே ஏற்பட்ட மனித அடைவுகள் பொருள்சார் நிலைமைகளிலே முன்னேற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. இன்றைய நிலையில் ஆன்மா சார்ந்த நிலைமாற்றமே உடனடித் தேவையாக உள்ளது. இந்த நிலை கல்வியின் மூலம் ஏற்படலாம். கல்வியின் மூலம்வளர்ந்து வருகின்ற விழுமியங்களிலே ஆன்மீக விழுமியங்கள் முக்கியமானவை கல்வி என்பது ஒருவரது நுண்மதியாற்றல்களையும் திறன்களையும் விருத்தி செய்கின்றது. மனிதன் ஒருவன் தான் வாழும் சமூகத்திற்கும், பரந்த உலத்திற்கும் பயன்படும் வண்ணம் கல்வி நடவடிக்கைகள் அமைகின்றன. பௌதீக விஞ்ஞானக் கல்வியுடன் இணைந்த வகையில் ஆன்மாவைப் பயன்படுத்தி மேம்படுத்துவதன் வாயிலாகவே இது சாத்தியமாகும். ஆன்மீக சிந்தனைகள் ஒழுக்கமுள்ள வாழ்க்கையை நோக்கி ஒருவர் செல்வதற்குரிய பயிற்சியைத் தருகின்றன.

ஒருவன் தான் வாழும் சமூகத்திற்கும் பரந்த உலகத்திற்கும் பயன்படும் வண்ணம் அவனது கல்வி நடவடிக்கைகள் அமைதல் வேண்டும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நிலைகளில் நின்று ஆன்மீக இன்பம் பெறும் வழி கல்வியின் மூலம் ஏற்படுகின்றது. ஆன்மீக உளப்பயிற்சியோடு உடற்பயிற்சியும் முக்கியமாகக் கொள்ளப்பட வேண்டும். ஒருவன் பெறுகின்ற உண்மைக் கல்வியானது தன்னை உணரும் தன்மையை ஒருவனிடத்தில் ஏற்படுத்துகின்றது. **1** அத்தோடு மனிதன் கருணையும் மானிடப் பண்பும் உள்ளவனாகிறான். தன் நலம் நோக்காது சமூகத்திற்குப் பணி செய்யும் ஆர்வம் கல்வியின் மூலம் வளர்க்கப்படுவதனால் ஆன்மீக இன்பத்தைப் பெற்று மனிதன் சிறப்படைய இந்து மரபுக் கல்வி வழிகாட்டுகின்றது எனலாம்.

இந்துக் கல்வி மரபிலே ஆன்மீகம் இழையோடாத இடமே இல்லை எனக் கூறலாம். அக் கல்வி மரபிலே அத்தகைய ஆன்மீகம் சார்ந்த சிந்தனைகள் தொன்று தொட்டே வந்துள்ளன. கல்வியின் மூலம் உண்மை, நன்மை, அழகு என்னும் தத்துவங்கள் வளர்க்கப்பட வேண்டும். அவைகள் சிறந்த கல்வித் தத்துவங்கள் ஆகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற் கூற்றிலே பாரதம் உலக வரலாற்றிலே மதிக்கத்தக்க பல சிந்தனையாளர்களை உலகிற்கு அளித்துள்ளது. சுவாமிஇராம கிருஷ்ணர் (1836 – 1886) , சுவாமி விவேகானந்தர் (1863 – 1902) இரவீந்திரநாத்தாகூர் 1863 – 1941) மகாத்மா காந்தியடிகள் (1869 – 1948) மகான் அரவிந்தர் (1872) பகவான் ஸ்ரீ சத்தியாசாயிபாப போன்றோர்களது ஆன்மீகக் கல்வி சார்ந்த சிந்தனைகள் இந்தியக் கல்வி வரலாற்றிலே முக்கிய இடம் பிடித்துக் கொண்டன. இவர்கள் அரசியல் உணர்வும், ஆன்மீக உணர்வும், சமுதாய உணர்வும் கொண்ட தத்துவஞானிகளாவர்.

ஈழத்திலும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் [1822 – 1879] சுவாமி விபுலானந்தர் [1832 –1925] சேர் பொன் இராமநாதன் [1851 – 1930] சேர் பொன் அருணாசலம் [1853 – 1924] போன்றோர்களது கல்விச் சிந்தனைகளும் ஆன்மீக சிந்தனைகளுக்கு அழுத்தம் கொடுத்திருப்பதை அறிய முடிகின்றது.

மகான் இராமகிருஷ்ணரினதும் [1836 – 1886] சுவாமி விவேகானந்தரினதும் [1863 –1902] ஆன்மீகச் சிந்தனைகள் பாரத நாட்டின் கல்வி வரலாற்றைக் கட்டியெழுப்பும் ஆத்மீக பலங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

கொண்டவை ஆத்மீக ஞானம் என்பது ஒரு தனிமனிதனுக்கு மட்டும் உரியதன்று. முழுச் சமுதாயத்திற்குமே உரியதாகும். இருவரது சிந்தனைகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு.

மனிதனை அறியாமையில் இருந்து அறிவுக்கு இட்டுச் செல்வது கல்வியின் நோக்கமாகும். கல்வியானது மனிதனின் ஆன்மீக ஒளியைப் பெருக்கி மிளிரச் செய்தல் வேண்டும் என்பது சுவாமி இராமகிருஷ்ணரின் கருத்தாகும். உலகத்தில் வாழும் மனிதரிடையே எவ்வித பேதமும் இல்லை. சமயங்களும் ஒன்றாகவே மதிக்கப்படல் வேண்டும். அவற்றினிடையே ஒருமைப்பாடு காணப்பட வேண்டும் என்று ஆன்மீக அடிப்படையில் பணிகள் பல புரிந்தார். கல்வியின் மூலமே இவ்வகையான மனப்பக்குவம் வளரும் என்று சுவாமி இராமகிருஷ்ணர் கருதினார். இவ்வகையில் பாரத நாட்டின் தலை சிறந்த தேசியவாதியாகவும். அனைத்துலகவாதியாகவும், சிறந்த, கல்விமானாகவும் விளங்கினார். அவருடைய கல்வி நெறி பாரத நாட்டிற்கு மட்டமன்றி அகில உலகிற்கும் பொதுவானதாகக் காணப்படுகின்றது. 2

ஒரு நாட்டின் சிறப்பு அந்த நாட்டின் ஆன்மீக வலிமையில்தான் உள்ளது. ஆன்மீக வலிமை கொண்டவர்களாகப் பாரதத்தில் பலர் காலத்திற்குக் காலம் தோன்றிய போதிலும் அந்த ஆன்மீக அறிவெல்லாம் மண்டியிட்டுக் கொண்டது ஸ்ரீ இராமகிருஷ்ணரின் உத்தம சீடனாகிய விவேகானந்தரின் முன் என்றே கூறலாம். சுவாமி விவேகானந்தர் அவர்கள் ஆன்மீகம் பற்றிய பல கருத்துகளை தெளிவாக எடுத்துரைத்தார். ஆன்மீக அடிப்படையில் விளக்கமளித்து இந்து மதத்தின் பெருமையை உலக நாடெங்கிலும் பரப்பியவராவர். அந்நிய நாகரீக மோகத்தில் இருந்த மக்களை ஆன்மீக நெறியின்பால் ஈர்த்தவராவர். இதன் அடிப்படையில் பல சீர்திருத்த இயக்கங்கள் தோற்றம் பெற்றன.

இன்றைய கல்விச் சிந்தனையுடன் அவர் கருத்துக்கள் ஒன்றுபடுகின்றன. புத்தர், யேசுநாதர் போன்று அன்புவழி நின்று மக்களுக்குச் சேவை செய்தார். ஏழைகளின் கண்ணீரிலே கடவுளைக் கண்டார். வைதீகக் கொடுமை, பாரபட்சம் என்னும் துன்பங்களால் நசுக்கப்பட்டு உயிர் வாழும் ஏழை மக்களுக்காக ஒவ்வொரு இரவு பகல் பிரார்த்தனை செய்தார். "பிறருக்குச் சேவை செய்வதில் ஆனந்தம் கொள்ள வேண்டும்" என்றார். "உன்னுள்ளே இருக்கும் ஆன்மாவை நீ உணர்ந்தால் உலகையுணர அதிக காலம் தேவையில்லை" என்ற வாக்கியத்திற்கேற்பச் செயற்பட்டார். அவ்வகையில் அவருடைய சிந்தனைகளிலே ஆன்மீகம் கலந்திருப்பதை அறிய முடிகின்றது.

அத்தோடு "ஒவ்வொருவரும் பெறும் கல்வியானது உள்ளத்தின் ஆற்றலை அதிகப்படுத்தக் கூடியதாகவும், அறிவினை விரிவாக்கக் கூடியதாகவும் தத்தம் வாழ்க்கையை நன்கு அமைத்துக் கொள்ளக் கூடிய திறமை படைத்ததாகவும் அமைய வேண்டும்" என்ற கருத்தினைக் கொண்டிருந்தார். அன்று சுவாமி அவர்கள் கூறிய இக் கருத்தினை இன்று கொத்தாரிக் கல்விக் குழுவும் குறிப்பிட்டுள்ளது. உள்ளம் ஒரு முனைப்பட்டு குவிந்து தன் முழு ஆற்றலுடன் செயலாற்றுதல் தான் அறிவு எழ வழியாகும். 3 இக்கருத்துகள் எல்லாம் கல்வியின் மூலம் வளருகின்ற ஆன்மீக விழுமியங்களை எடுத்துக் காட்டுவனவாய் அமைந்துள்ளன. கீழைத்தேயக் கல்வி மரபிலே இத்தகைய ஆன்மீகச் சிந்தனைகள் கல்விச் சிந்தனையாளர்களினுடைய எண்ணத்திலே தோன்றி இன்று வரை நிலை பெற்றதெனலாம்.

ஆன்மீக உணர்வினை முருகியல் உணர்வு முழுமையாக்குகின்றது. இந்த அடிப்படையில் கவியரசர் இரவீந்திரநாத்தாகூரின் (1863 – 1941) கல்விச் சிந்தனையில் முருகியற் கல்விக்கும் பெருமளவு பங்குண்டு. ஆன்மீக திருப்தியை மனிதரிடத்தில் உண்டாக்கும் முருகியற் கல்வி பற்றிய கருத்துக்கள் கவியரசர் இரவீந்திரநாத்தாகூர் அவர்களின் ஆன்மீகம் பற்றிய விழுமியக் கருத்துகளுடன் தொடர்புபடுவதை பெருகியிருந்த மக்களுக்குத் தாய் நாட்டின் உ்ளார்ந்த பெருமையையும் வலிமையையும் எடுத்து விளக்கினார். கவியரசரின் இலக்கியப் பணியும், கல்வித்தொண்டும் தத்துவப் போதனையும், நன்முறைத் தேசியமும் அவரை உலகப் பெரியாராக விளங்கச் செய்தது. இயற்கை, சமூகம், அன்பு சேவை ஆகியன ஒன்றிணைந்து கல்வியாக உதயமாக வேண்டும் எனக் கருதினார் 4. ஆன்மீக விடுதலையே உண்மையான விடுதலையென்று கண்ட தீர்க்கதரிசியாவார். இயற்கையழகில் மயங்கிய தாகூர் இயற்கைக்கு ஓர் ஆன்மீகத் தன்மையுண்டு என நம்பினார். இத்தகைய ஆன்மீகம் சார்ந்த சிந்தனைகளை உள்வாங்கிய நிலையில் இன்றைய கல்வி முறைகளும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி விவேகானந்தரின் கல்விச் சிந்தனைகளைப் போன்று மகாத்மாகாந்தி [1869–1948] அவர்களின் கல்விச் சிந்தனைகளும் ஆன்மீகம் சார்ந்தனவாய் விளங்குவது குறிப்பிடத்தக்கது. தேசபக்தி, தேசவிடுதலை வழிவந்த இந்து தர்மம், சீர்திருத்தம் என்பவற்றை உள்ளடக்கிய செயற்பண்பு வாய்ந்ததாகக் காணப்படும் அதே வேளை ஆன்ம ஈடேற்றம் பற்றிய கல்வியையும், பயிற்சியையும் ஆழ்ந்து மொழிந்தார். சத்தியம், அகிம்சை என்பன அவரது வாழ்க்கைத் தத்துவத்தின் ஆதாரங்களாக மிளிர்ந்தன. ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் ஏதோ ஒருவிதமான இலக்கு உண்டு. இந்த இலக்கை அடைய ஒவ்வொருவரும் மேற் கொள்ளும்வழிகளும் தூய்மையானதாக இருத்தல் வேண்டும் என்ற உண்மையை காந்தி அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்த போதிலும் அதனைத் தம் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்து வந்தார். காந்தி மகான் வாழ்ந்த காலம் நாடு ஆங்கிலேயரது ஆளுகைக்குள் அடங்கியிருந்த காலமாகும். கல்வி முறையானது பெருமளவு ஆங்கிலேயரின் கல்விக் கருத்துக்களின் அடிப்படையிலும் அவர்களது ஆட்சித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும் அமைந்திருந்தது அவற்றைத் தவிர்த்து அவர் சிந்தித்துப் பெற்ற முடிவுகளின் அடிப்படையில் அப்போதைய நிலைமைக்குப் பொருத்தமான கல்வி முறை ஒன்றை உருவாக்க விரும்பினார். காந்தியடிகளின் இக்கல்விக் கருத்துக்களை உருவாக்கியதில் ரஸ்கின், டால்ஸ்டாய் போன்றோரது நூல்களும் வாழ்க்கையும் பெருமளவு உதவின.5

காந்தி அவர்களுடைய கல்விச் சிந்தனைகளும் உடல், உள்ளம் ஆன்மா ஆகியவற்றோடு நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தன. கல்வி என்பது ஆன்மப் பயிற்சி பெறல் என்று காந்தியடிகள் கருதினார். காந்தியடிகளின் சர்வோதயக் கல்வித்திட்டம் ஆன்மீகத்திற்கு மட்டுமல்லாமல் பொருளாதார அரசியல் விடுதலைக்கும் வித்திட்டது. கல்வியானது எவ்வகையில் செயற்பட்டாலும் கல்வியின் இறுதி நோக்கம் ஆன்மீக விடுதலை என்பதில் இறுக்கமான நம்பிக்கை கொண்டிருந்தார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற் கூற்றின் உலக வரலாற்றில் மதிக்கத்தக்கவர்களாக விளங்கிய ஞானிகளின் வரிசையில் ஆன்மீகம் பற்றிய கருத்துக்களை அள்ளிச் சொரிந்து ஆன்மீகவாதிகளாக விளங்கிய மகான் ஸ்ரீ அரவிந்தர் (1872) அரசியல் உணர்வும், சமுதாய உணர்வும் கொண்ட தத்துவஞானியாவர். அரசியல் வேதாந்தத்தில் மூழ்கி, ஆன்மீக வேதாந்தத்தை வாழ்வின் இலட்சியமாகக் கருதியவராவர். தனது ஆன்மீக உணர்வினால் ஓர் உலகத்தத்துவத்தை மனித குலத்தின் முன் வைத்தார். தேசியத்தை மதிக்கும் அரவிந்தர் அவர்கள் அகில உலக உணர்வை நேசித்தவர். மேனாட்டு பௌதிக பரிணாமவாதத்தின் சாரத்தைப் பாரத நாட்டின் ஆன்மீகக் கொள்கையுடன் இணைத்து தனது தத்துவத்தை உலகிற்கு அளித்துள்ளார். இத்தகைய தத்துவக் கருத்துக்கள் அவர் வாழ்க்கையின் அடி நாளிலிருந்து உருவாகின்றன. 6

ஸ்ரீ அரவிந்தர் கண்ட சமூகக் கருத்துக்களும் ஆன்மீக அடிப்படையானவை. சமுதாயம் என்னும் கட்டுக் கோப்பு மனிதன் தன்னையும் இறைவனையும் புரிந்து கொண்டு வாழ்வதற்குப் பயிற்சி தருகின்றது. தனிப்பட்டவர்கள் தனிவழியிற் சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் முன்னேறுவதற்கு வழிகள் செய்து தரப்பட வேண்டும். பின்பு கூட்டுப் பொறுப்பு எற்பட வேண்டும் இதன் தேவை கருதி அவர் அனைத்துலகக் கல்வி நிலையத்தைத் தனது கொள்னையாகக் கொண்டிருந்தார். அனைத்துலகக் கல்லூரியின் இலக்கு எல்லாத் தேசிய இனங்களின் வாழ்வு முறை கலாச்சாரம் போன்றவைகளை அறிந்து மற்றவர்களோடு தொடர்பு வைக்க உதவுவதாகும். உலகில் வாழ்கின்ற ஒவ்வொரு மகனும் இன, சமய , வர்க்க நாட்டு பிரதேச வேறுபாடின்றி ஏழ்மை, தாழ்மை என்றின்றி எவ்வகைக் கல்வியையும் எந்நிலையிலும் பெற வேண்டும். கல்வியின் மூலம் உலக நெறி வளர வேண்டும். அறிவு, தெளிவு ஒளி என்ற படிமுறையே கல்வியாகும்.7 ஆன்மீக அடிப்படையில் மனித குலத்தை கல்வியின் மூலம் இணைக்க வேண்டும் என்று தன் கல்விச் சிந்தனைகளை வகுத்துள்ளதன் மூலம் இந்துக் கல்வியிலே ஆன்மீக சிந்தனைகளின் அழுத்தத்தைப் புரிய வைத்தார்.

கல்வியானது புறத்தோற்ற ஒருமைப்பாடல்ல. அகத்தோற்ற ஒருமைப்பாடாகும். ஆசிரியராக பேராசிரியராக அவர் வகித்த பதவிகள் கல்வியியல் சிந்தளைகளை வகுத்துக் கொள்ளப் பெரிதும் உதவியது.8 சமூக விடுதலையும் ஆன்மீக ஈடேற்றமும் காணத் துடிக்கும் ஒரு சமுதாயத்திற்கு அவரின் கல்வியியற் சிந்தனைகள் வழிகாட்டியாக அமைகின்றன. பாரதம் ஆன்மீக உணர்வுடன், தியாக உணர்வும், அறிவும், நல்ல உளமாட்சியும் உடையதாக அமைதல் வேண்டும்.9 என்பது மகான் அவர்களின் பெரு விருப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகானின் இத்தகைய ஆன்மீகம் சார்ந்த இந்துக் கல்விச் சிந்தனைகள் ஸ்ரீ சத்தியசாயிபாபா அவர்களின் சிந்தனைகளோடு தொடர்பு கொள்கின்றன. சமூகத்தின் அன்பின் முக்கியத்துவத்தை நல்லொழுக்கத்தை தற்கட்டுப்பாட்டை வெளிப்படுத்தும் சாயியின் கல்விச் சிந்தனைகள் ஆன்மீகத்தை விட்டு வெகு தூரம்செல்லவில்லை. தர்மம், சத்தியம் பிரேமை போன்ற விழுமியங்களை எல்லோரும் பின்பற்ற வேண்டும் என்பது பகவானின் பெருவிருப்பமாகும்.

இருதயம் என்பது மிகப் பரந்த புலம் எனக் கருத வேண்டும். அந்தப் புலத்தை உழும் கலப்பையாக மனதைப் பயன்படுத்த வேண்டும். குணங்களை எருதுகளாகக் கொள்ள வேண்டும். இவற்றையெல்லாம் பயன்படுத்துவதன் மூலமே இருதயத்தைப் பண்படுத்தலாம். இவ்வகையில் பண்படுத்தப்பட்ட இருதயத்திலே சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை போன்ற பயிர்களை வளர்க்க வேண்டும்.10 இக்கருத்துகளை பகவானின் சிந்தனைகளிலும் காண முடிகின்றது. நாட்டிலே உண்மையான சிறப்புமிக்க இலட்சியப் பாங்கான குடிமக்களை உருவாக்குவதற்குமே முக்கியமாக சாயி நிறுவனங்கள் உருவாக்கப்பட்டன. மனிதர்கள் மனித மேம்பாட்டுக்கான பாதையிலும், இலட்சிய வழியிலும் செல்லல் சிறந்ததாகும்.

மனிதனுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கணத்தையும் வினைத்திறன் மிக்கதாகப் பயன்படுத்துவதற்குக் கல்வியறிவு இன்றியமையாதது. இதற்காகவே அவர்களுக்கு உடல் தரப்பட்டுள்ளது. இத்தகைய மனிதன் மகிழ்ச்சியுடனும் சுதந்திரத்துடனும் இருக்க வேண்டுமானால் தங்களிடையே குடிகொண்டுள்ள கெட்ட எண்ணங்களையும், பழக்கவழக்கங்களையும் அகற்றிவிட வேண்டும். கல்வியானது அறம், ஒழுக்கம், தெய்வீகம் சார்ந்த பாதைகளிற்கு எல்லோரையும் அழைத்துச் செல்கிறது.11 ஆன்மீ உணர்வைத் தவிர்த்துப் பொருளாதார சுகபோகங்களை தேடி மனிதர்கள் தத்தமது வாழ்க்கையை வீணாக்கக் கூடாது என்பது பகவான் கருத்தாகும்.

மனித இனமானது சுயநலம், பொறாமை சுகம் தேடிஅலைதல் போன்ற சக்திகளில் சிக்குண்டுள்ளது. கல்வியின் மூலம் இவற்றை அகற்றி மனிதர்கள் ஆன்மீக இன்பம் பெறலாம். புத்தகங்களில் இருந்து பெற்ற அறிவை அனுபவங்களால் உறுதிப்படுத்திப் பார்ப்பதுடன் இந்தச் செயல் முறையின் வழியாக மேலும் மானுடப்பண்பை வளர்த்து இறையருள் பாலிக்கும் நிலையை எய்தலாம். இவ்வாறு தெய்வ சக்தியை நம்பவைத்து அதிலிருந்து படிப்படியாக ஆன்மீகத்தில் உயர்த்துவதே பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபா அவர்களின் அசையாத நம்பிக்கையாக இருந்தது. பாமர மக்களை மட்டுமல்லாமல் மாபெரும் விஞ்ஞானிகளையும் ஆன்மீகத்தின் பக்கம் திருப்பிய பெருமை அவருக்குண்டு. பிழை மலிந்த மானுடரை முதலில் தர்மவழியில் திருப்பி பிழைகள் குறைந்தவர்களாகத் திருத்துவது. பின் அவர்களைப் பக்தர்களாக்கி தெய்வீக அனுபவங்களை வழங்குவது யோகம், ஞானம் முதலிய மார்க்கங்களில் உயர்த்துவது. முடிந்த முடிபாக ஆத்மானுபவம் என்ற மோட்சத்தை அருள்வது போன்ற ஆன்மீக விழுமியக் கருத்துக்கள் சத்திய சாயிபாபாவின் கல்விச் சிந்தனைகளாக அமைகின்றன. அமைதியும் மகிழ்ச்சியும் மனிதர்களுக்குள்ளே இருந்த போது அவை மாயையால் மறைக்கப்படும் நிலையில் மனிதன் அவற்றை உணர முடியாமல் தடுமாறுகின்றான். அவன் இவற்றை உணர வேண்டுமானால் தனது உண்மையான தத்துவத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.12 ஆன்மீகம் அறிவினால் உணரப்பட வேண்டுமானால் மனிதன் தொடர்ந்து கற்க வேண்டும். தொடர்ந்து கற்கும் போது மனிதனின் மனம் தூய்மையடைகின்றது. மனிதனுள் மறைந்து கிடக்கும் பூரணத்துவத்தை வெளிக் கொணர்தல் கல்வி என்று கூறப்படுகினறது.

இத்தகைய சிந்தனையாளர்களைப் போன்று இலங்கையிலே யாழ்ப்பாணத்து நல்லூரிலே தோன்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் (1822 – 1879) அவர்களின் சிந்தனையிலும் ஆன்மீகக் கல்வி பற்றிய பல கருத்துக்களை அவதானிக்க முடிகின்றது. நல்லொழுக்கத்திற்கும் ஆன்மீக ஈடேற்றத்திற்கும் வழி வகுப்பதே கல்வியின் நோக்கமாக இருக்க வேண்டும் என விரும்பினார். சைவமும் தமிழும் மறுமலர்ச்சி பெறுவதன் மூலம் வேத நெறிப்பட்ட வாழ்வின் விழுமியங்களை மக்கள் பெறக் கல்வியினைக் கருவியாகக் கருதித் தேசிய பண்பாட்டு மறுமலர்ச்சிக்குக் கல்விப் பணியிலே முழு மூச்சாக ஈடுபட்டார். கல்விக்குப் பயன் அறிவு; அறிவுக்கு பயன் ஒழுக்கம்; கல்வியென்பது அறமும் முத்தியுமாகும்; கல்வி என்றென்றும் இளமை பொருந்தியது; உண்மைதான் கல்வியின் அணிகலன் என்று எண்ணிச் செயற்பட்டார். எந்த நாட்டையும் எந்த ஊரையும் தன் நாடும் தன் ஊரும் ஆக்குவது கல்வி என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி விபுலானந்தர் (1832- 1925) அவர்களும் ஆன்மீக தத்துவத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார். கல்வியின் மூலம் ஆன்மீகப்பயன் பண்பாட்டு பயன் உண்மை, அழகு, நன்மை என்ற மூன்றும் கல்வியின் மூலம் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என்று சுவாமி அவர்கள் கருதினார்கள்.14

இதே போன்று சேர் பொன் இராமநாதனின் கல்விச் சிந்தனையிலும் ஆன்மீக அழுத்தம் இருப்பதனை அவதானிக்க முடிகின்றது. பல்கலைக்கழகச் சிந்தனையில் பாரத நாட்டுச் சிந்தனையாளர்கள் ஆன்மீகத்திற்குத் தந்த முக்கியத்துவத்தை சேர் பொன் இராமநாதனும் தனது பல்கலைக்கழகச் சிந்தனையில் காண்கிறார். ஆன்மீக நெறியை வலியுறுத்தும் இந்து தர்மம் வாழ்க்கை நெறியையும் வலியுறுத்தும் எனக் கொண்டு வாழ்வை வளம்படுத்தி அதன் விழுப்பயனாய் வீடுபேற்றினைத் தரும் உயர்ந்த நிலைக்கு உயர்த்தும் மெய்யறிவாக வேண்டும் என்பதே அவரது கல்வி இலக்காகக் கொள்ளலாம். ஆன்மீக விருத்திக்குச் சிறந்த சூழலாகிய கல்வி தேசிய சமய ஒழுக்க அடிப்படையில் அமைவதன் மூலமே சாதியமாகும் என்பது அவரது சிந்தனையாகும். ஒருவனது இயல்பான பண்பாட்டுச் சூழலிலேயே ஆன்மீக விருத்தி சீராக அமையும் எனக் கருதிப் பண்பாட்டுக் கருவூலமாய் அமையத்தக்க சமயநெறிப்பட்ட கல்வியே வழங்கப்பட வேண்டும் என்பது சேர். பொன் இராமநாதன் அவர்களது விருப்பாய் இருந்தது. சமய அடிப்படையிலான ஒழுக்க வாழ்விற்கு கல்வி உதவ வேண்டும் என்று கருதினார். ஒழுக்கமே மனித வாழ்வை மாண்புறுத்தும் மருந்து என்ற அவருடைய சிந்தனை எக்காலத்திற்கும் பொருந்தக் கூடியதாயுள்ளது.

ஆகவே தொகுத்து நோக்கும் போது இக் கல்விச் சிந்தனையாளர்கள் யாவரும் தேசிய பண்பாட்டு அடிப்படையிலான ஆன்மீக இலக்குள்ள கல்வியினையே வலியுறுத்தி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மனிதன் தன்னுள் உள்ள ஆன்மாவை அறியவும், உணரவும் துணை செய்வதை இந்து மரபுக் கல்வி இந்து மரபின் பரம்பரைச் சொத்து எனலாம். இந்தியக் கல்வி மரபில் ஆன்மீகம் இழையோடாத இடமில்லை எனக் கூறுமளவிற்கு ஆன்மீகம் இந்து மரபின் உயிர்நாடியாக உள்ளது. இந்த ஆன்மீகம் என்பது தனித்துறையாகவும் வளர்ச்சி கண்டுள்ளது.

அடிக்குறிப்புகள்

1. லொறென் பறோஸ், மனித விழுமியத்துக்கான சத்தியசாயி கல்வி, பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையம் 1992 பக்கம் 7
2. தர்மலிங்கம் கே. கீழைத்தேயக் கல்வியியற் சிந்தனைகள், திருமதி சுபலட்சுமி தர்மலிங்கம் யாழ்ப்பாணம் 1987 பக்கம் 5
3. சந்தானம் எஸ் இந்தியக்கல்வி வரலாறு, முதல் பகுதி, தமிழ் நாட்டு பாட நூல் நிறுவனம் 1966, பக்கம் 103
4. சந்திரசேகரம் ப கல்வித்தத்துவம் யாழ்ப்பாண கூட்டுறவு தமிழ்நூற்பதிப்பு விற்பனைக்கழகம் 1975 பக்கம் 104
5. சந்தானம் எஸ் இந்திய கல்வி வரலாறு, மு.சு.நூல, பக்கம் 112
6. கோதண்டராமன் பி. அரவிந்தர் வாழ்க்கை வரலாறு பாகம் 1, பழனியப்பா பிரதர்ஸ் சென்னை 1964 பக்கம் 7
7. சந்திரசேகரம். ப கல்வியிற் சிந்தனைகள் சிவஜ்தானம, இணுவில், பக்கம் 33 – 34
8. மிராசங்கரநாராயணன் அரவிந்தர் நசனல் புக் கிரஸ்ட், இந்தியா, சென்னை, பக்கம் 153.
9. Sri Aurabindo ashram, Sri aurobindoand the mother on education Sri aurobindo ashramtrust pandichery 1978 p.p 5-6
10. Saini S.K. Developemnt of Education in India, Rani kapoor, Cosma publicaton new Delhi 1980.
11. லொறோன் பறோஸ் மனித விழுமியத்துக்கான சத்தியசாயி கல்வி, மு.சு.நூல் பக்கம் 22ல்.
12. கணபதி ரா. ஸ்வாமி பூம்புகார் பிரசுரம் 1977 பக்கம் 134
13. லாறோன் பறோஸ், மனித விழுமியத்துக்கான சத்தியசாயி கல்வி மு.சு.நூல் பக்கம் 88
14. சந்திரசேகரம் ப. கல்வித் தத்துவம், மு.சு.நூல் பக்கம் 82

2793 PL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CINTANI

Vol XII 2000 I

1. Sri Lanka and the Urn burial of the Sangam Period : An analysis 01
Prof. S.K.Sitrampalam.

2. The Source of Maxist Philosophy and the Thesis on Feurbach 14
Prof. S. Krishnaraja

3. Critical Works on Elam Fiction 24
Dr. M. Ragunathan

4. The Origin of Tamil- Sinhala Novels in Sri Lanka. 35
Saminathan- Wimal

5. The Problem of Alienation : A review 42
K.Sivananthamoorthy

6. Women Education in Developing Countries: Rethinking for Development. 52
M.Sinnathamby

7. The Political implication of Land Settlement in Tamil Areas 60
S. Sahayaseelan

8. The Ban of Fishing in Jaffna Peninsula and
the Problem faced by fishermen 69
Dr. A. Soosai

9. Mapping of Surface water Bodies through Remote Sensing Technology. 78
Karunagaran- Suthakar

10. Tamil Translation and Coining of Technical Terms in Ealam. 87
Selvaranjitham- Sivasupramaniam

11. Spiritual Thoughts in Traditional Hindu Education 97
J. Rasanajakam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org